# எங்களுக்கு மட்டும் தெரிந்த வெளி

## இலங்கையில் இணையத்தில் பால்நிலை, பாலியல்புகள் மற்றும் பாலியல் நடத்தை



சச்சினி பெரேரா மற்றும் சயனப் இப்ராஹிம்

முதலாவது பிரசுரிக்கப்பட்டது 2021

எழுத்தாளர்கள்: சசினி பெரேரா(sachiniperera@gmail.com) மற்றும் ஸெ
ய்னப் இப்ராஹிம் (zainab.ibrahim@gmail.com)

பரிந்துரைக்கப்பட்ட உசாத்துணை: Perera.S, & Ibrahim. Z, (2021). Somewhere Only We Know: Gender, sexualities, and sexual behaviour on the internet in Sri Lanka. Association for Progressive Communications. https://erotics.apc.org/wp-content/uploads/2021/03/Somewhere-only-We-Know-Online.pdf

கருத்து, எடுத்துக்காட்டுகள் மற்றும் அட்டை வடிவமைப்பு:இசுரி (https://artofisuri.com/)

தளவமைப்பு மற்றும் தகவல் வடிவமைப்பு: ஹானிம் அப்துல் காதர்

சிங்கள மொழிபெயர்ப்பு: புசதி லியனாரச்சி

தமிழ் மொழிபெயர்ப்பு: ரவீந்திரன் சிவதர்ஷினி

குறிப்பிடப்பட்ட இடங்களைத் தவிர, இந்த ஆவணத்தில் உள்ள உள்ளடக்கம் பகிரக்கூடிய உரிமை பெற்றுள்ளமையின் (Creative Commons) கீழ் உரிமம் பெற்றுள்ளது (பண்புக்கூறு, வணிகரீதியற்றது, தழுவல்களை உருவாக்க முடியாது (ழெ னநசளையவளைநள), இன்டர்நெ'னல் 4.0)
https://creativecommons.org/ licenses/by-nc-nd/4.0/legalcode

# எங்களுக்கு மட்டும் தெரிந்த வெளி

இலங்கையில் இணையத்தில்
பால்நிலை, பாலியல்புகள்
மற்றும் பாலியல் நடத்தை

# உள்ளடக்கம்


**சுருக்கங்கள்** **1**

**ஏற்புரை** **2**

**முன்னுரை** **5**

**இவ்வாய்வில் ஆராயப்படுகின்ற தலைப்புக்களுக்கான திறவுகோல்** **6**

**இந்த ஆய்வில் நோக்கப்படுகின்ற மக்களுக்கான திறவுகோல்** **7**

**கண்டுபிடிப்புக்களின் மேலோட்டம்/பார்வை** **8**

**அறிமுகம்** **16**

**ஆராய்ச்சி முறைமைகள்/நுட்பங்கள், மட்டுப்பாடுகளும் சவால்களும்** **19**

அளவுசார் ஆய்வு 20

பண்புசார் ஆய்வு 21

மட்டுப்பாடுகள்/வரையறைகள் மற்றும் சவால்கள் 23

**கண்டுபிடிப்புக்கள்** **25**

ஆய்வில் பதிலளித்தோர் யார்? 26

- வயது 26
- தொழில் 27
- பாலியலீர்ப்பு/பாலியல் நாட்டம் மற்றும் பால்நிலை அடையாளம் மற்றும் வெளிப்பாடு (SOGIE) 28
- பிரதேசம்/இடம் 29

ஒன்லைன் (Online) எதிர் ஓவ்லைன்(Offline): பொய்யான இருமைநிலையா இல்லையா? 30

**இணையப்பாவனை மற்றும் இணையவழியில் வெளிப்பாடு** **33**

- அடையாளம், வெளிப்பாடு, நடத்தை வெளிப்பாடுகள் 33
- பாலியல் அடையாளம் மற்றும் பாலியல்பு 34
- சுய-வெளிப்பாடு மற்றும் சுய-தணிக்கை 36
- வெளிப்பாடு மற்றும் நடத்தைவெளிப்பாடு 44
- வன்முறை, தொல்லை, துஷ்பிரயோகம் 45

**சமூகம் மற்றும் வாழ்வாதாரத்தினைக் கண்டுபிடித்தல்** **54**

சமூகத்தினைக் கண்டுகொள்ளல் மற்றும் செயல்வாதத்திற்கான தளத்தை இனங்காணல் 54

விடயங்கள்: நுகர்வோரும் தயாரிப்பாளர்களும் 64

**அணுகக்கூடியதன்மையும் விதிமுறைகளும்** **70**

- அணுகக்கூடியதன்மை 70
- கட்டுப்பாடு 71
- விலை 73
- அரசினதும் இணையத்தளங்களினதும் விதிமுறைகள் 75
- விரும்பப்படுகின்ற தளங்களும் பயனர் கலாசாரமும் 77

மொழியும் கலைச்சொற்களும்/பதங்களும் 86

- இணையத்தில் பயன்படுத்தப்படும் மொழிகள் 88
- பால்நிலை மற்றும் பாலியல்பு தொடர்பிலான சொற்களை திசைப்படுத்தல் 92

**பரிந்துரைகள்** **97**

**உசாத்துணைகள்** **104**

**இணைப்புக்கள்** **111**

இணைப்பு 1 - சொற்களஞ்சியம் 112

இணைப்பு 2 - அளவுசார் கருத்தாய்வு 115

இணைப்பு 3 - இரண்டாம்நிலை திறனாய்வு 124

இணைப்பு 4 - சட்டக்கட்டமைப்புக்கள் குறித்த மேலோட்டம்/பார்வை 125

# சுருக்கங்கள்

| | |
|---|---|
| APC: | முற்போக்கு தொடர்பாடலுக்கான கூட்டமைப்பு |
| CERT: | கணினி அவசர தயார் அணி |
| CSO: | சிவில் சமூக அமைப்பு/க்கள் |
| FGD: | இலக்கு குழு உரையாடல் |
| ICT: | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்/கள் |
| IT: | தகவல் தொழில்நுட்பம் |
| INGO: | சர்வதேச அரசசார்பற்ற நிறுவனம் |
| ISP: | இணைய சேவை வழங்குனர் |
| LBQ: | பெண்தன்பாலீர்ப்பாளர் ஈர்பாலீர்ப்பாளர் குயர் |
| LGBTQ+: | பெண்தன்பாலீர்ப்பாளர் ஆண்தன்பாலீர்ப்பாளர் ஈர்பாலீர்ப்பாளர் திருநர் குயர் |
| NCPA: | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை |
| NGO: | அரசசார்பற்ற நிறுவனம் |
| SMS: | குறுஞ்செய்திச் சேவை |
| SOGIE: | பாலியல் நாட்டம் மற்றும் பால்நிலை அடையாளமும் வெளிப்பாடும் |
| WSG: | பெண்களுக்கான ஆதரவுக் குழு |
| Online | ஒன்லைன/இணையவழி(நிகழ்நிலை) |
| Offline | ஓவ்லைன் (முடக்கலை) |
| Blog | ப்ளொக் (வலைப்பதிவு) |
| Chatting | ச்சற்றிங் |
| Forums | மன்றங்கள்/அமைப்புக்கள் |
| Whatsapp | வட்ஸ்அப் (புலனம்) |
| Facebook | பேஸ்புக் (முகநூல்) |
| Twitter | ட்விட்டர் |
| Emails | ஈமெயில் (மின்னஞ்சல்கள்) |
| Search engines | தேடல்இயந்திரங்கள் |
| Video streaming | வீடியோ ஸ்ரீமிங் |
| IMO | ஐஎம்ஓ |
| Smartphones | திறன்பேசி |
| Youtube | யூரியுப்/வலையொளி |
| Drag | ட்ராக் |

# உருக்களின் பட்டியல்


உரு 1: உங்களுக்கு எத்தனை வயது? 26

உரு 2: தொழில் 27

உரு 3: பாலியல் நாட்டம் 28

உரு 4: பால்நிலை அடையாளம் 28

உரு 5: இடம் 29

உரு 6: மாகாண மற்றும் இனத்துவ அடிப்படையில் சனத்தொகை 2012 30

உரு 7: நாம் Offline உலகில் காண்கின்ற அதே வன்முறைகள் இணையவழி மேற்கொள்ளப்படுகின்றன. 31

உரு 8: உங்களது பால்நிலை அடையாளம் நீங்கள் இணையத்தினைப் பயன்படுத்தும் முறையினைப் பாதித்துள்ளதா? 35

உரு 9: உங்களது பாலியல் அடையாளம் நீங்கள் இணையத்தினைப் பயன்படுத்தும் முறையினைப் பாதித்துள்ளதா? 35

உரு 10: இணையத்தை அணுகக்கூடியதன்மையானது வேறுபட்ட பால்நிலை மற்றும் பாலியல் அடையாளங்களினைக் கொண்டிருப்போர் பற்றிய உங்களது புரிதலில் ஏதாவது மாற்றத்தினை உண்டுபண்ணியதா? 36

உரு 11: இணையத்தை அணுகக்கூடியதன்மையானது பால்நிலை மற்றும் பாலியல் அடையாளம் பற்றிய உங்களது புரிதலில் ஏதாவது மாற்றத்தினை உண்டுபண்ணியிருக்கின்றதா? 36

உரு 12: வயதினடிப்படையில் சுயவெளிப்பாட்டிற்கு இணையப்பாவனையின் அவசியம் 1-10 வரையான அளவீட்டில் 38

உரு 13: வயதினடிப்படையில் சுயவெளிப்பாட்டிற்கு இணையப்பாவனையின் அவசியம் 1-10 வரையான அளவீட்டில் 38

உரு 14: துஷ்பிரயோகத்திற்குட்படுத்துகின்ற விதத்திலான கருத்துக்கள் 47

உரு 15: சம்மதமின்றி தனிப்பட்ட தகவல்களைப் பகிர்தல் 47

உரு 16: பெண்களை இழிவுபடுத்துகின்ற விதமான நாகரீகமற்ற வன்முறையான படங்களைப் பயன்படுத்தல் 47

உரு 17: பெண்கள் மட்டுமே இணையத்தில் தொல்லைகளுக்குட்படுத்தப்படுகின்றார்கள் 48

உரு 18: புறக்கணித்தேன் 51

உரு 19: அந்தத் தளத்திற்கு அறிக்கையிட்டேன் 51

உரு 20: சட்டக்கட்டமைப்பொன்றிற்கு அறிக்கையிட்டேன் 51

உரு 21: மறுத்துப்பதிலளித்தேன் 51

உரு 22: துஷ்பிரயோகத்திற்குட்படுத்துகின்ற விதத்திலான கருத்துக்கள் 53

உரு 23: பாலியல் அல்லது உடல்ரீதியான வன்முறை அச்சுறுத்தல்கள் உட்பட நேரடி வன்முறை அச்சுறுத்தல்கள் ("நான் உன்னை பாலியல் வன்கொடுமை செய்யப்போகின்றேன்" என்பது போன்ற அச்சுறுத்தல்கள்) 53

உரு 24: அடையாளத்தினைக் குறிவைத்து நிகழ்த்தப்படும் வெறுப்பு பேச்சு, சமூகவலைத்தள பதிவுகள் மற்றும்/அல்லது மின்னஞ்சல்கள் 53

உரு 25: பால்வாத மற்றும் பால்நிலையுடன் தொடர்புடைய கருத்துக்களைப் பயன்படுத்தல் அல்லது பெயர் சூட்டி அழைத்தல் 53

உரு 26: இணையம் இலகுவாக மக்களுடன் என்னைத் தொடர்புபடுத்துகின்றது. 56

உரு 27: இணையத்தில் வேறுபட்ட மக்கள் உரையாடல்களிலும் விவாதங்களிலும் ஈடுபடுகின்றார்கள் 56

உரு 28: நீங்கள் இணையத்தினை வாழ்வாதாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு பயன்படுத்துகின்றீர்களா? 61

உரு 29: இணையத்தில் விடயங்களை நுகர்வோராக எத்தனை தடவை இணையத்தினை பயன்படுத்துகின்றீர்கள்? 66

உரு 30: இணையத்தில் விடயங்களை உருவாக்குவோராக எவ்வளவு காலத்திற்கொருமுறை இணையத்தினைப் பயன்படுத்துகின்றீர்கள்? 66

உரு 31: சமூகத்தால் விலக்கப்பட்டதாகக் கருதப்படுகின்ற அல்லது பிரச்சனைக்குரியதாகக் கருதப்படுகின்ற தலைப்புக்கள் தொடர்பிலான தகவல்களை இணையத்தில் கண்டுபிடிக்க முடியும். 67

உரு 32: இணையத்தினுள் நுழைவதற்கு நீங்கள் அதிகளவில் உபயோகிக்கின்ற சாதனம் எது? 72

உரு 33: இணையப் பயன்பாட்டிற்கு நீங்கள் பயன்படுத்தும் உங்களது பிரதான சாதனத்தின் மீது எந்தளவிற்கு கட்டுப்பாட்டினைக் கொண்டிருக்கின்றீர்கள்? 73

உரு 34: நீங்கள் பயன்படுத்தும் அனைத்து தளங்களுக்குள்ளும் சுயவெளிப்பாட்டிற்கான வெளியினை அதிகளவில் வழங்கும் தளம் என நீங்கள் கருதுவது எது? உங்களது பதிலை சுருக்கமாக வழங்கவும் 82

உரு 35: இணையத்தளமொன்றினை உருவாக்க முடியும் 85

உரு 36: நிரலாக்கம் செய்ய முடியும் 85

உரு 37: தேடல் இயந்திரங்களைப் பயன்படுத்த முடியும் 85

உரு 38: சமூக வலையமைப்புக்களில் பங்குபற்ற முடியும் 85

உரு 39: வலைப்பதிவிட முடியும் 85

உரு 40: இணையத்தில் அமைப்புக்களிலும் குழுக்களிலும் பங்குபற்ற முடியும் 85

உரு 41: கருத்தாய்வு பூர்த்திசெய்யப்பட்டது 88

உரு 42: பேசுகின்ற மொழிகள் மற்றும் இணையத்தில் பயன்படுத்தப்படுகின்ற மொழிகள் 89

# ஏற்புரை

பலரது நேரம் மற்றும் உழைப்பின் விளைவாக உருவாகிய இந்த ஆய்விற்காக நாம் பெற்றுக்கொண்ட அனைத்து ஆதரவுகளுக்கும் நன்றியுடையவர்களாக இருக்கின்றோம்.நேரத்தினை ஒதுக்கி கருத்தாய்வில் பங்குபற்றிய அனைவருக்கும், சமூக உரையாடல்கள் மற்றும் நேர்காணல்களில் பங்கெடுத்தமைக்காகவும், எமது இந்த ஆராய்ச்சியினை எந்தவிதத்தில் மேம்படுத்தலாம் என்பதற்கான சிந்தனைகளை பகிர்ந்துகொண்டமைக்காகவும் எமது நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளவிரும்புகின்றோம்.

உடட தேஷப்பிரிய மற்றும் தரிந்தி தேவசுரேந்ரா ஆகியோர் வெவ்வேறுபட்ட காலங்களில் இந்த ஆய்வின் பல விடயங்களை இணைப்பாக்கம் செய்துள்ளனர். உங்களது அனைத்து உதவிகளுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.இந்த ஆய்வினுள் உள்வாங்கப்பட்டிருக்கின்ற மிகச்சிறப்பான சில உரையாடல்கள் சில சமூக அமைப்புக்களால் நடாத்தப்பட்டவை. எம்மை அவர்களது வெளிகளுக்கும், நிகழ்வுகளுக்கும் வரவேற்ற Heart 2 Heart, வெனச, தேசிய திருநர் வலையமைப்பு, அபிமனி, சத்ர போன்ற அமைப்புக்களுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம். மஞ்சு ஹெமல்,ஜெர்ஷ் நடேசராஜா, தேனு ரங்கெத், பூமி ஹரீந்திரன். பபா தேஷப்பிரிய, காலஞ்சென்ற குசும் ஜெயலத், கௌஷல்யா பெரேரா, ஜமுனா குருகே, ஹசனாஹ் செகு இஸ்ஸதீன் மற்றும் காயத்ரி டிவகலால போன்றோர் எம்முடனிணைந்து இவ்வுரையாடல்களை இலகுபடுத்துனர்களாகவும் அல்லது இணைப்பாக்கம் செய்பவர்களாகவும் செயற்பட்டிருந்தனர்.அவர்களுக்கு எமது நன்றிகள். சில மொழிபெயர்ப்பாளர்களும் எடுத்துரைப்பாளர்களும் இந்த ஆய்வு முழுவதும் எமக்கு ஆதரவளித்திருந்தனர்.அவர்களில் சிலர் இந்த அறிக்கையில் உரையாடப்படுகின்ற மொழியரசியல் குறித்த தமது பிரதிபலிப்புக்களையும் மேற்கொண்டிருந்தனர். அந்தவகையில் மைக்கல் மெண்டிஸ், ஹசனாஹ் செகு இஸ்ஸதீன், சிவதர்ஷினி ரவீந்திரன், புசாதி லியனராச்சி. ஈப்ரம் ஷட்ரக், அம்பிகை போர்மன் ஆகியோருக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

கிளர்ச்சியத்தின் (Erotics) பகுதியாக நாமும் அமைய எமக்கு அழைப்புவிடுத்த முற்போக்கு தொடர்பாடலுக்கான கூட்டமைப்பின் பெண்கள் உரிமை நிகழ்ச்சித்திட்டத்திற்கு, விசேடமாக எமக்குத்தேவையான போது “அன்பிற்குரிய விசேட ஆற்றல்களைக்கொண்ட மனிதர்களே” என எம்மை ஊக்குவித்த வேலிற்கும் மிக்க நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.நாமும் எமது சக விசேட ஆற்றல்களைக் கொண்ட மனிதர்களான கிளர்ச்சியத்தின் தெற்காசிவிற்குரிய பங்காளர்களான: நேபாளத்தின் Body and Data, இந்தியாவின் Point of View, வங்காளதேசத்தின் பர்சா சாஜிட், இலங்கையின் பெண்கள் மற்றும் ஊடகவலையமைப்பு போன்றோருக்கும் எமது நன்றிகள்.இந்த அறிக்கை வரைவின்போது தொடர்ச்சியான பின்னூட்டல்களை அளித்த வேல் மற்றும் (Editing) ராகவன் அவர்களுக்கும் நாம் நன்றியுடையவர்களாக இருக்கின்றோம். இந்த அறிக்கையை மீள்பார்வை செய்தது மட்டுமல்லாது இவ்வறிக்கைக்கான முன்னுரையையும் எழுதிய பஸான் ஜெயசிங்கவிற்கும், சிந்தனாபூர்வமான முறையில் தரவுச்சீரமைப்புச் (Editing) செய்துதவிய சுனிதா களபதி மற்றும் இந்த அறிக்கையின் பல்வேறு வரைபுகளையும் பக்கவடிவமைப்புச்செய்த ஹனிம் அப்துல் காதர் மற்றும் இசுரி ஆகியோருக்கும் மிக்க நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

இறுதியாக, இந்த ஆய்வினை மேற்கொள்வதற்கான நிதி வளங்களை அளித்த Amplify Change அமைப்பிற்கும், இதில் பங்காளர்களாவதற்கு எமக்கு அழைப்புவிடுத்த முற்போக்கு தொடர்பாடலுக்கான கூட்டமைப்பிற்கும், இத்திட்டத்திற்குரிய எமது நிதி பங்காளர்களும், எமது சார்பில் பணத்தை விடுவிப்பவர்களுமான பெண்கள் மற்றும் ஊடகவலையமைப்பிற்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**சச்சினி பெரேரா மற்றும் சய்னப் இப்ராஹிம்**

# முன்னுரை

நாம் ஒருவரை ஒருவர் எவ்வாறு கண்டடைகின்றோம் என்கின்ற கேள்வி எப்போதும் குயர் மக்களை ஆக்கிரமித்திருக்கின்றது.இணையம் இக் கேள்வியினை பெரிதாக்கியிருக்கின்றது - முன்னர் கற்பனைசெய்திராதளவிற்கு எம்மைக் கண்டடைவதற்கு எண்ணிலடங்காத வழிகள் தற்போது காணப்படுகின்றன. அடையாளத்தினையும் சமூகத்தினையும் கட்டியெழுப்புவதற்கும், பழைய இன்பங்களைக் கண்டடைவதற்கும், புதியவற்றை உருவாக்குவதற்கும், அநேக, புதிய, இலகுவான வழிகள் உள்ளன. அதேவேளை, நாம் ஒருவரை ஒருவர் கண்டடைய இணையத்தினைப் பயன்படுத்தும் போது, அதேயளவிலான சிக்கல்களும் காணப்படுகின்றன.அவற்றில் சில நாம் உலகில் பெருமளவில் எதிர்கொள்கின்ற அதே பதட்டம், அவமதிப்பு, வன்முறை போன்றவற்றினை பிரதிசெய்பவைகளாகவும், ஏனையவை முற்றுமுழுதாகவே புதிய சங்கடமான நிலைகளாகவும் காணப்படுகின்றன. குயர் அடையாளங்கள் குற்றமானவையாக்கப்பட்டிருக்கின்ற இலங்கை போன்றதொரு நாட்டில், பின்வருகின்ற இரண்டு சமன்பாடுகளும் உயர்ந்திருக்கின்றன: இணையம் வீசுகின்ற நிழலானது இருளானதாகும், அங்கு கண்டடையப்படும் ஆச்சரியத்துடனான மகிழ்ச்சி மிகவும் தீவிரமானதாகும்.

எங்களுக்கு மட்டும் தெரிந்த வெளியானது இலங்கையிலுள்ள குயர் மக்கள் எவ்வாறு ஒருவரையொருவர் கண்டடைகின்றார்கள் என்கின்ற கேள்விக்கான ஒரு சில பதில்களை கண்டடைவதற்கான ஒரு முயற்சியாக அமைகின்றது.குயர் மக்கள் தம்மை இணையவழியில் எவ்வாறு வெளிப்படுத்துகின்றார்கள், அத்துடன் பிறர் அவர்களை எவ்வாறு உள்வாங்கிக்கொண்டிருக்கின்றார்கள் என்பதன் பயனாக அவர்கள் எதற்கு முகங்கொடுக்கநேர்கின்றது போன்ற பலவற்றை இது வெளிக்காட்டுகின்றது. குயர் மக்களுக்கெதிராக இலங்கை அரசினாலும், சமூகத்தினாலும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற இறுக்கமான ஒழுங்குகளின் பின்னணியில் இக் கற்கையானது அப் பதில்களை தீவிரமாகசிந்தனை செய்கின்றது.ஒட்டுமொத்தமாக இக்கற்கை வரைகின்ற படமானது, சிக்கலானதும் சிலவேளைகளில் முற்றிலும் மாறுபட்ட வழிகளிலும் குயர் மக்கள் தம் வாழ்வினைத் திசைப்படுத்துவதனையும், எல்லையற்றவர்களாக இணையமாக தாமே இருப்பதனூடாக உலகிற்கான நுழைவாயிலாகவும் அவர்கள் அர்த்தத்தினைக் காண்கின்ற வேறுபட்ட வழிகளையும் நிழற்படுத்துகின்றது.

சச்சினி மற்றும் சயன்ப எங்களுக்கு மட்டும் தெரிந்த வெளியினூடாக இலங்கையிலும் மிகவும் பரந்தளவில் தெற்காசியாவிலும் LGBTQ+ மக்களின் இணையவழி அனுபவங்கள் தொடர்பிலான பெருகிவரும் செயற்பாடுகளுக்கு பங்களிப்புச்செய்கின்றனர். குயர் அடையாளத்தின் பல்வகைமைத்தன்மை மற்றும் அவர்களுடைய இடம், இனத்துவம், வயது மற்றும் வாழ்வாதாரம் போன்றவற்றினடிப்படையில் பரந்தவீச்சினையுடைய குயர் இலங்கையர்களின் குரல்களை திசைப்படுத்துவதில் இவர்களின் பதிவுகள் விரிவானவையாக உள்ளன.இக்கற்கை சுயபிரதிபலிப்பினை ஆழமாகசிந்தனை செய்வதானது இவ்விரிவானதன்மைக்கு இருமடங்கு முக்கியத்துவத்தினை அளிக்கின்றது. இறுதியாக, இக்கற்கை பூகோள தெற்கினை அமைவிடமாகக் கொண்டிருந்தாலும் அது பெரும்பாலும் வடக்கினால் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்ற கட்டமைப்புக்களையும் விழுமியங்களையுமே கொண்டிருக்கின்ற ஒரு பகுதியினையே ஆய்வுசெய்கின்றது என்பதில் இக்கற்கையினுடைய முக்கியத்துவமானது தங்கியிருக்கின்றது. இதுபோன்ற பங்களிப்புக்களின் மூலம் குயர் மக்கள் தம்மை விடுவித்துக்கொள்வது மட்டுமன்றி, அதனை வெளிகள், உடல்கள் மற்றும் மனங்கள் மீது நிகழ்த்தப்பட்டுவருகின்ற காலணித்துவத்தினை கட்டுடைப்புச்செய்து நீக்குவதற்கான வழிகளிலும் மேற்கொள்வதற்கான சாத்தியப்பாடுகளை கற்பனைசெய்யத் தொடங்கமுடியும்.நாம் மிகவும் விழிப்புடையவர்களாகவும், கருத்தில்கொள்பவர்களாகவும், இறுதியாக நாம் ஒருவரை ஒருவர் எவ்வாறு கண்டடைகின்றோம் என்பது தொடர்பில் நம்பிக்கைகொண்டவர்களாகவும் இருக்கமுடியும்.

**பசான் ஜயசிங்க**
**கொழும்பு, இலங்கை**
**யூலை 2020**

## இவ்வாய்வில் ஆராயப்படுகின்ற தலைப்புக்களுக்கான திறவுகோல்

### இணையப்பாவனையும் இணையவழி வெளிப்பாடும்




அடையாளம், வெளிப்பாடு,
நடத்தை வெளிப்பாடுகள்



வன்முறை, தொல்லை,
துஷ்பிரயோகம்


### சமூகம் மற்றும் வாழ்வாதாரத்தினைக் கண்டுபிடித்தல்



சமூகம் மற்றும் வாழ்வாதாரத்-
தினைக் கண்டுபிடித்தல்



வாழ்வாதாரம்




விடயங்கள்: நுகர்வோரும்
தயாரிப்பாளர்களும்

### அணுகக்கூடியதன்மையும் விதிமுறைகளும்



அணுகக்கூடியதன்மை




விரும்பப்படுகின்ற தளங்களும்
பயனர் கலாசாரமும்



மொழியும் கலைச்சொற்களும்/
பதங்களும்

## இந்த ஆய்வில் நோக்கப்படுகின்ற மக்களுக்கான திறவுகோல்


ஷிராணி


ஹிரண்


செல்வி


ஹாசினி


திவ்யா


ஆர்யா


லக்ஷ்மி


விஜய்


மெலனி


கிறிஷானி


ஷாமல்


விரான்


ஸாரா

# கண்டுபிடிப்புக்களின் முன்னோட்டம்/பார்வை

இலங்கையில் ஆகஸ்ட் 2019 இலிருந்து ஏப்ரல் 2020 வரையான காலப்பகுதியில், பெண்தன்பாலீர்ப்பாளர், ஆண்தன்பாலீர்ப்பாளர், ஈர்பாலீர்ப்பாளர், திருநர், குயர் மற்றும் ஏனைய பால்நிலை அடையாளங்களையும் வெளிப்பாடுகளையும், பாலியல்புகள் மற்றும் பாலியல் நடத்தைகளையும் (LGBTQ+) கொண்டவர்களால் இணையம் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது என்பதைப் புரிந்துகொள்ளவிழைந்தோம்.

34% இணையஊடுருவலையும் 40% டிஜிட்டல்(எண்மின்) அறிவையும் (சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியம், 2017) கொண்டிருக்கின்ற இலங்கையில் இணையத்தை அணுகுவதற்கான வாய்ப்பும் அதன் பாவனையும் குறைவாக இருக்கின்ற அதேவேளை இலங்கையில் இணையத்தைப்பயன்படுத்துபவர்களில் ஏறக்குறைய அனைவருமே சமூகவலைத்தளபாவனையாளர்களாக இருப்பதாகவும் ஆய்வுகள் காட்டுகின்றன (Galpaya et al., 2019). மூன்று தசாப்தங்களாக இடம்பெற்ற யுத்தத்தின் பின்னரான தசாப்தத்தில் இலங்கையில் பல அரசாங்கங்கள் மாறியமை, நவதாராளவாத பொருளாதாரக் கொள்கைகள் பெருக்கமடைந்தமை, இன-மத பிற்போக்குவாதம் அதிகரித்தமை போன்றன குறிப்பாக பெருகிவந்த போக்குகளுள் அடங்குகின்றன. சிங்கள-பௌத்த தேசியவாதம் சட்டபூர்வமாக்கப்படல், பாலியல் பிற்போக்குவாதம் அதிகரிக்கின்றமை, உயர்ந்த அளவிலான கண்காணிப்பு போன்ற இவையனைத்தும் குறிப்பாக இலங்கையில், இணையத்தினை அணுகக்கூடியதன்மையினையும்/அல்லது இணையப்பாவனையையும் குறிப்பாக சமூகவலைத்தள பாவனையை வடிவமைத்திருக்கின்றன. மக்கள் தம் அரசியல் மற்றும் சமூக வாழ்க்கையை வாழ்வதில் இணையமும் அதன் நீட்சியாக அமையுமாயின் LGBTQ+ மக்களுக்கும் சமூகத்தால் கட்டமைக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படுகின்ற/சமூகவிழுமியங்களுடன் ஒத்திசைபவையாகக் கருதப்படுகின்ற பால்நிலை அடையாளங்களையும், பாலியல் நடத்தைகளையும் கொண்டிராதவர்கள் போன்றோருக்கும் இவை இதேமாதிரியாக தான் இருக்கின்றன. இந்தக் கற்கையில் இலங்கையில் உள்ள இச் சமூகத்தினருக்கு செயல்வாதத்திற்கு அப்பால் அன்றாட இணையப்பாவனை எவ்வாறாக இருக்கின்றது என்பதையும், இணையத்தில் தமது தொழில் குறித்து அவர்கள் எத்தகைய செயலாளுமையை உள்வாங்கிக்கொள்கின்றார்கள் என்பதையும் ஆராய முற்பட்டுள்ளோம்.

சமூகத்தினால் கட்டமைக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படுகின்ற எதிர்ப்பாலீர்ப்பு அல்லாத அனைத்துவிதமான பாலியல்பு மற்றும் பாலியல் நடத்தைகள் இலங்கைச் சட்டத்தின்படி குற்றமானவையாகவே இருந்துவருகின்றன. இது இணையத்தை அணுகுவதிலும், இணையவழி பாதுகாப்பிலும், வன்முறை மற்றும் வெறுப்புப்பேச்சு முதலான அனுபவங்கள் மீதும், சுயதணிக்கை மற்றும் விதிமுறைகள் போன்றவை மீதும் செல்வாக்குச்செலுத்துகின்ற அதேவேளை- இவையனைத்தும் சமூக-பொருளாதார வகுப்பு, மொழி, இனம் மற்றும் வயது போன்ற மற்றும் ஏனைய காரணிகளால் தோற்றுவிக்கப்படும் பிரச்சனைகளுடனும் பின்னிப்பிணைந்து காணப்படுகின்றன. அதேவேளை இந்த ஆய்வில் நாம் கண்டடைந்ததன்படி, Offline வாழ்வில் உள்ள வெளிப்படுத்துவதற்கான வெளியினைவிடவும், இணையத்தை அணுகக்கூடியவர்களுக்கு, அது தம்மை விடுவித்துக்கொள்வதற்கான ஒரு வெளியினை வழங்குகின்ற அதேவேளை, சிலசமயங்களில் மிகவும் வெளிப்படையானவிதத்தில் வெளிப்படுத்தலை மேற்கொள்ளக்கூடிய தளமாகவும் அமைவதுடன், வாழ்வாதாரத்தை பெருக்கிக்கொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பாகவும், LGBTQ+ சமூகத்திலுள்ள ஏனைய ஒத்த சிந்தனையுடைய நண்பர்களையும், சமூகத்தையும் கண்டுபிடிக்கக்கூடிய ஒரு வாய்ப்பாகவும், இலங்கைச் சமூகங்களின் பல பகுதிகளிலும் விலக்கப்பட்டவையாகக் கருதப்படுகிற பல தலைப்புக்கள் குறித்து கற்றுக்கொள்ளக்கூடிய வெளியாகவும் அமைகின்றது.

இதன்போது எழுந்த பிரதான தலைப்புக்களை நாம் தொடர்கின்றோம். இத் தலைப்புக்கள் ஒன்றுடனொன்று தொடர்புபட்டவையாக இருப்பதுடன் அந்தவகையில் அவை மிகச்சிறப்பாக விளங்கிக் கொள்ளக்கூடிய வகையிலும் அமைந்துள்ளன. உதாரணமாக, சாதனங்களையும் இணையப்பாவனையையும் அணுகுதல் மற்றும் கட்டுப்படுத்துதல், இணையவழியில் சுதந்திரமான வெளிப்பாட்டினையும் சுய-தணிக்கையின் அளவினையும் பாதிக்கின்றது. ஆயினும், பின்வரும் தலைப்புக்களுடான இணைப்புக்களைப்பயன்படுத்தியும் அறிக்கையினை அணுகமுடியும்.

1) இணையப்பாவனையும் இணையவழி வெளிப்பாடும்
2) சமூகத்தையும் வாழ்வாதாரத்தினையும் கண்டுகொள்ளல்
3) அணுகக்கூடியதன்மையும் விதிமுறைகளும்

# 1. இணையப்பாவனையும் இணையவழி வெளிப்பாடும்

இந்தக்கற்கை இணையப்பாவனை மற்றும் இணையவழி வெளிப்பாடு குறித்து பல வழிகளில் ஆய்வு செய்கின்றது:

### a) ஒருவரின் பால்நிலை மற்றும் பாலியல் அடையாளம் போன்றனவும், ஏனைய அடையாளங்களான இனம் போன்றனவும் எவ்வாறு அவர்களது இணையப்பாவனையுடன் தொடர்புபடுகின்றன

இணையத்தில் சுய-வெளிப்பாடு மற்றும்/அல்லது சுய-தணிக்கை செய்வதற்கான காரணங்கள் நபருக்கு நபர் அவர்களின் அடையாளங்களுக்கேற்பவும், அவற்றுடன் இடைத்தொடர்புள்ள சலுகைகள், ஒடுக்குமுறைகள், அசமத்துவம் போன்றவற்றிற்கேற்பவும் வேறுபடுவதுடன், அவை சிக்கலானவையாகவும் உள்ளன. உதாரணமாக, ஒரு சிஸ் பெண்ணாக இருப்பவருக்கு உள்ள வெளிப்படுத்துவதற்கான வெளியானது ஒரு திருநராக இருப்பவரை விடவும் அதிகமானதாக இருக்கலாம். ஒரு சிஸ் பெண்ணும், ஒரு சிஸ் ஆணும் வெளிப்படுத்ததுவதற்கு ஏதுவான நிலைகள் கூட வேறுபடலாம். அது வர்க்கம் மற்றும் இனத்துவம் போன்ற வேறு பல காரணிகளாலும் செல்வாக்குச் செலுத்தப்படும்.

இந்த கற்கையில், பதிலளித்த அநேகர் தமது தனிப்பட்ட இணையப்பாவனையானது நிச்சயமாக அல்லது சில சமயங்களில் தமது பால்நிலை மற்றும் பாலியல்பு போன்றவற்றால் செல்வாக்குச்செலுத்தப்பட்டதாகவும், பதிலளித்தவர்களில் அரைவாசிக்கும் அதிகமானோர், தம்முடைய மற்றும் பிறருடைய பால்நிலை மற்றும் பாலியல்பு பற்றி தாம் எவ்வாறு விளங்கிக்கொண்டிருந்தார்கள் என்பது இணையப்பாவனையின் மூலம் அநேகமாக, நேர்மறையான முறையில் மாற்றமடைந்ததாகவும் தெரிவித்திருந்தார்கள். சிஸ் ஆண் மற்றும் சிஸ் பெண்ணைத் தொடர்ந்து சுயவெளிப்பாட்டில் இணையத்தின் பங்கு திருநர்களுக்கு உயர்வாக இருந்தது. மேலும் தமது சுய-வெளிப்பாட்டிற்கு இணையம் இன்றியமையாதது எனக்கூறியவர்களில் 71% ஆனவர்கள் 30 வயது அல்லது அதைவிடக் குறைந்த வயதினராக இருந்தனர். ஆயினும், சுவாரஸ்யமானவகையில் இணையத்தைப்பயன்படுத்துவதனால் உண்டான இன்ப உணர்வு பல வயதுக்குழுவைச் சேர்ந்தோரிடத்திலும் கலவையாக் காணப்பட்டது. சிலர் இணையவழியில் வெளிப்படுத்துவதனை 'நடிப்பு' ஆக பார்க்கின்ற அதேவேளை, பல்வகைமையான பால்நிலை வெளிப்பாடுகளைக் கொண்ட சிலர், Offline வாழ்வில் மற்றவர்களுடன் ஒத்துப்போவதற்காக பால்நிலைசார் நடத்தைகளை 'வெளிப்படுத்தியதை/நடித்ததை' விடவும் Online மிகவும் நேர்மையாக தமது பால்நிலை வெளிப்பாட்டினை மேற்கொள்ளக்கூடிய ஒரு வெளியினை வழங்குவதாகக் கருதுகிறார்கள்.

### b) விடயங்களை நுகரும் மற்றும் உருவாக்கும்/தயாரிக்கும் பாங்குகள்

இந்தக் கற்கையில் பதிலளித்தோரில் 82% ஆனவர்கள் தம்மை விடயங்களை நுகர்வோராகக் கருதினர். ஆனால் 33% ஆனவர்கள் மட்டுமே தம்மை விடயங்களை உருவாக்குவோராகக் கருதினர். சுயமாக செய்யப்படும் வேலைப்பாட்டிற்கு, ஒரு வகையான சமூகபெறுமதி அல்லது பெறுமானம் இருப்பதாகக் கருதுவதே பலர் விடயங்களை உருவாக்குவதற்குக் காரணமாக அமைகின்றது. தனிப்பட்ட தம் புகைப்படங்களை இணையவழியில் பதிவேற்றுவதை அதாவது, சமூகப் பெறுமதியைக் கொண்டிராதவற்றைப் பதிவிடுவதனை அநேகர் விடயங்களாகக் கருதவில்லை.

அனைவரிடமும் விடயங்களை அணுகக்கூடிய/பெற்றுக்கொள்ளக்கூடிய தன்மை குறித்து வினவப்பட்டது. குறிப்பாக பால்நிலை, பாலியல்பு, பாலியல் மற்றும் மீளுற்பத்தி சுகாதாரமும் உரிமைகளும் போன்ற -சமூகத்தால் விலக்கப்பட்ட, முறைசார் அல்லது இலகுவில் பெறக்கூடிய வேறு எந்த கற்றல் வளங்களுமற்ற தலைப்புக்கள் குறித்த விடயங்களை அணுகக்கூடிய தன்மை குறித்து ஆராயப்பட்டது. அநேகர் ப்ளொக் (Blog), அழைப்புக்களை மேற்கொள்ளல், ச்சட்டிங் (Chatting), உடனடி செய்திகளை அனுப்பல், மின்னஞ்சல்கள் (Emails), ஆய்வு, தேடல் இயந்திரங்கள், சமூகவலையமைப்பாக்கம் (Social networking), காணொளி ஸ்ரீமிங் (Video streaming), வேலை போன்றவற்றிற்காக எப்போதும் இணையத்தை பயன்படுத்துகின்றனர் என்பதையும், சிலசமயங்களில் வங்கிச்சேவைகள், வலைப்பதிவு

(Blog), மன்றங்கள்/குழுக்கள் (Forums), விளையாட்டு, சுகாதாரம் பற்றிய தகவல்கள், வாழ்வாதாரம், பாலியல் காணொளிகள் மற்றும் பாலியல் இன்பம் போன்றவற்றிற்காக இணையத்தை பயன்படுத்துகின்றனர் என்பதையும் டேட்டிங் (Dating) மற்றும் செக்ஸ்ரிங் (Sexting) போன்றவற்றிற்கு அரிதாகவே இணையத்தை பயன்படுத்துகின்றனர் என்பதையும் இக்கருத்தாய்வு காட்டுகின்றது. வெளிப்பாட்டிற்கான அதிக சுதந்திரத்தினை வழங்கும் தளங்களாக வட்ஸ்அப், முகநூல், இன்ஸ்ராகிராம், ஜஎம்ஓ (IMO) மற்றும் ட்விட்டர் (Twitter) என்பன காணப்பட்டன.

### c) இணையவழியில் துஷ்பிரயோகம், வன்முறை மற்றும் வெறுப்பு பேச்சு தொடர்பான அனுபவங்கள்

கருத்தாய்வில் பங்குபற்றியவர்களில், 62% ஆனவர்கள் இணையவழியில் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தும் விதமான பின்னூட்டங்களையும், 56% ஆனவர்கள் தேவையற்ற பாலியல் விளக்கக் குறுஞ்செய்திகளையும், பெண்களை இழிவுபடுத்துகின்ற வகையிலான வன்முறையான படங்களையும், பெற்றிருந்தனர். கேட்கப்பட்டவர்களில் அரைவாசிக்கும் அதிகமானோர் இணையவழியில் பெண்கள் மட்டுமே தொல்லைகளுக்குள்ளாக்கப்படுவதில்லை எனவும், அது ஒவ்வொருவருக்கும் இருக்கின்ற சலுகைகளின் அளவுடன் இணைந்திருக்கின்றதெனவும், இச்சலுகைகளைப்பொறுத்தவரை சமூகவிழுமியங்களுக்கமைவாக ஏற்றுக்கொள்ளப்படுகின்ற பால்நிலைகள் மற்றும் பாலியல்புகளுக்குள் அடங்காதவர்களாயிருப்பின், அவர்களின் நிலை பலசமயங்களில் மேலும் பின்தங்கியநிலையில் இருப்பதுடன், அது சிலசமயங்களில் பரவலாக பெண்களையே உள்ளடக்குகின்றதாக இருக்கின்றது எனவும் கூறியிருந்தனர். குறிப்பிட்ட சிலவகையான விடயங்களை பகிர்கின்ற பெண்கள் மீது நிச்சயமாக அநேக எதிர்வினைகளாற்றப்பட்டிருந்தன - அத்தகைய எதிர்வினையைப் பெற்ற விடயங்களாக கூறப்பட்டவைகளுள் பெண்களின் உடலுடன் தொடர்புபட்ட விடயங்கள், பாலியல்பு மற்றும் பால் போன்றவை சில பொதுவான தலைப்புக்களாகும். அத்துடன் துஷ்பிரயோகம், வன்முறை மற்றும் வெறுப்புப்பேச்சு தொடர்பான அனுபவங்கள் போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் ஒன்றில் உரிய தளத்தில் முறைப்பாடு செய்கின்றனர், அல்லது கண்டும் காணாதது போல் அதை விட்டுவிடுகின்றனர் எனவும், 90% ஆனவர்கள் எந்த சட்டப்பொறிமுறைகளுக்கோ அல்லது கட்டமைப்புக்களுக்கோ இவைகுறித்து முறைப்பாடுசெய்வதில்லை எனவும் அதில் கூறப்படுகின்றது.

### d) சுய-தணிக்கை மற்றும் விதிமுறைகள்

இணையவழியில் தம்மை வெளிப்படுத்துவது குறித்து மக்கள் எந்த அளவிற்கு சுதந்திரமாக உணர்ந்தார்கள் என்பதைப்பொறுத்து, அவர்களின் அனுபவங்களும் குறிப்பிடத்தக்களவிற்கு மாறுபட்டிருந்தன. பலர் தம்முடைய பாதுகாப்பு மற்றும் மனநிம்மதியைக் கருத்தில் கொண்டு தாமாகவே இவற்றை சமரசம் செய்துகொண்டிருந்தனர். மேற்குறிப்பிட்டது போல தம்மை வெளிப்படுத்துவதற்கான விருப்பம் வன்முறை, தொல்லை, துஷ்பிரயோகம் போன்றவற்றுடனான அவர்களது கடந்தகால அனுபவங்களுடன் பிணைந்திருந்தது. சிலசமயங்களில் இணையம் ஒரு நபருக்கு சுதந்திரத்திற்கும், சுயவெளிப்பாட்டிற்குமுரிய ஒரு இடமாக இருக்கின்ற அதே நேரத்தில், அதே நபருக்கு அது கடினமான, சிலசமயங்களில், அதைத் திசைப்படுத்துவதற்காக சுயதணிக்கைக்கு இட்டுச்செல்கின்ற கண்டிப்பான இடமாகவும் இருக்கின்றது. மக்கள் இணையவழியிலும், Offline, லும், பொதுவாழ்க்கை மற்றும் தனிப்பட்டவாழ்க்கை குறித்து தாம் எதை உள்வாங்கிக்கொண்டிருக்கின்றார்களோ அதனையும், மற்றவர்களை விடவும் சிலருக்கு அதிக சுதந்திரத்தை அனுமதிக்கின்ற அதேவேளை, பாதுகாப்பற்ற நிலையையும் அளிக்கின்ற இணையவழிச்சூழலில் எப்படி சமநிலையைப் பேணுவது என்பது குறித்து தாம் எந்த நிலைப்பாட்டிலிருக்கின்றார்களோ அதையும் இறுகப்பற்றிக்கொண்டிருந்தார்கள். பலர் நேரடி ஊடாட்டங்களுக்கு வலுச்சேர்க்கும் முகமாக, பிரதான வெளிப்பாட்டிற்கான தளமாக இணையத்தைப் பயன்படுத்தாமலிருக்கவோ அல்லது அவர்கள் எந்த அளவிற்கு பாதுகாப்பற்றநிலையை உணர்கின்றார்கள் என்பதைப்பொறுத்து தம் இணையப்பாவனையை மட்டுப்படுத்தவோ தீர்மானிக்கின்றார்கள். திருமண உறவினால் உண்டான உறவுகள் மற்றும் காதலர்கள் உட்பட குடும்பம், இணையவழியில் சுய-தணிக்கை செய்துகொள்வதற்கான தேவையினை ஏற்படுத்துவதில் முக்கிய பங்காற்றியிருந்தது.

## 2. சமூகத்தையும் வாழ்வாதாரத்தினையும் கண்டுகொள்ளல்

இணையத்தின் மூலம் அணுகக்கூடிய தளங்கள் வாழ்வாதாரத்தினை நடத்திச்செல்வதற்கும், அதை வளர்த்துக்கொள்வதற்குமான வாய்ப்புக்களையும், உத்திகளையும் வழங்குகின்றன. குறிப்பாக, திருநர் மக்களைப்போன்ற சமூகவிழுமியங்களுக்கமைவானவையாக அங்கீகரிக்கப்படாத பால்நிலை அடையாளங்களைக் கொண்டவர்கள் அதிகளவிலான வாய்ப்புக்களையும், ஏற்றுக்கொள்ளப்படுதலையும் பரந்தளவிலான இணையவழிப் பார்வையாளர்களையும் கண்டடைந்திருந்தனர். தொழில்நுட்பமானது, பாலியல் தொழிலாளர்கள் தமது வாடிக்கையாளர்களை இலகுவாக முகாமைசெய்யக்கூடிய நிலையினையும், அதிகளவில் பொதுவெளிகளில் அலைந்துதிரிய வேண்டிய தேவையில்லையாகையால் அதிகரித்த பாதுகாப்பினையும், வழங்கியிருக்கின்றது. ஆகவே, வருமானம், வாடிக்கையாளர்களை கண்டடைதல், பாதுகாப்பு போன்ற விடயங்களில் அவர்கள் சாதகமான ஆதாயத்தினை பெற்றிருக்கிறார்கள். ஆயினும், இணையத்தில் தங்கியிருக்கின்ற வாழ்வாதாரத்தில் ஒரு நிச்சயமற்ற தன்மையும் காணப்படுகிறது. இது மக்களுடைய தனிப்பட்ட அடையாளத்துடனும், பொதுமக்களின் குறைந்தளவிலான ஏற்றுக்கொள்ளும் தன்மை போன்றவற்றுடனும் தொடர்புபட்டிருக்கின்றது. ஆனால், இணையத்தளங்கள் மீது மூன்றாம் தரப்பினரால் ஏற்படுத்தப்படும் விதிகள் மற்றும் கட்டுப்பாடுகளினாலும் இது இடம்பெறலாம். சில சமயங்களில் இந்த மூன்றாம் தரப்பினரின் கொள்கைகள் திட்டமிட்டவகையிலோ அல்லாமலோ, LGBTQ+ மக்களுக்கு பாரபட்சமானவையாக இருக்கின்றன.

அநேகருக்கு, இணையம் மற்றையவர்களுடன் தம்மை மிகவும் இலகுவாக தொடர்புபடுத்தியதுடன் 'சமூகத்தினை' - யாரிடம் தாம் தாமாக இருக்க முடியுமோ அவர்களையும், தம்மை ஏற்றுக்கொள்பவர்களையும், ஆதரவளிக்கக்கூடிய பலரையும், கண்டுபிடிக்கவும் உதவியது. சிலருக்கு, மற்றையவர்கள் தமக்கு தேவையேற்படும்போது பிறரை நாடுவதற்கும், பிறருடன் இணைப்பினை ஏற்படுத்துவதற்கும் தேவையான தன்னம்பிக்கையைப் பெற்றுக்கொள்வதற்கு, அவர்களுக்குத் தாம் உதவிசெய்யவும், தம்முடைய சமூகத்திலுள்ள ஏனையவர்களுக்குப் பயன்படக்கூடிய தகவல்களைப் பகிர்ந்துகொள்வதற்குமுரிய ஒரு வழியாக இணையம் அமைந்துள்ளது.

## 3. அணுகக்கூடியதன்மையும் விதிமுறைகளும்

பின்வரும் வழிகளில் அணுகக்கூடியதன்மை கருத்தில்கொள்ளப்பட்டது: a) சாதனங்களின் மீதான கட்டுப்பாடு மற்றும் இணையத்தை அணுகுதல் b) சாதனங்கள் மற்றும் இணைய இணைப்பினைப் பெற்றுக்கொள்வதற்கான செலவு c) அரசினதும் இணையத்தளங்களினதும் விதிமுறைகள் d) இணையத்தளங்களில் பிரதானமாக பயன்படுத்தப்படுகின்ற மற்றும் அனுமதிக்கப்பட்ட மொழி(கள்)

ஏனைய ஆய்வுகளில் கூறப்பட்டதுபோல, Smartphone களே இணையப்பாவனையை முன்நகர்த்திச்செல்பவையாக இருக்கின்றன. இந்தக்கற்கையில் பதிலளித்த 88% ஆனோர் அவர்களது தொலைபேசியினையே இணையத்தைப் பயன்படுத்துவதற்கான பிரதான சாதனமாக பயன்படுத்துகின்றனர். அதேவேளை, குறைந்தது 60% ஆனோருக்கு அதன்மீது முழுமையான கட்டுப்பாடு இருக்கின்றது. கட்டுப்படுத்தப்பட்ட அல்லது வரையறுக்கப்பட்ட பயன்பாட்டினை எதிர்கொள்பவர்கள் இணையவழியில் சுய-தணிக்கை செய்துகொள்கின்றார்கள். ஆயினும், இந்த அறிக்கையின் ஏனைய பகுதிகள் வெளிக்காட்டுவதைப்போல்,ஏனைய சமூக, அரசியல் மற்றும் சட்டரீதியான காரணிகளும் தாக்கம்செலுத்துவதனால், இணையத்தினைப் பயன்படுத்தக்கூடிய அல்லது அணுகக்கூடிய தன்மை மற்றும் பயன்பாடு ஆகியன சுதந்திரமான வெளிப்பாட்டினைக் காட்டுவதற்கான அளவுகோல்கள் அல்ல. எவ்வளவு காலத்திற்கொருமுறை, எந்த அளவிற்கு இணையப்பாவனையை மேற்கொள்ளமுடியும் என்பதனைத் தீர்மானிக்கும் காரணிகளாக சாதனங்களின் பெறுமதியும், இணைய இணைப்பினைப் பெற்றுக்கொள்வதற்கான செலவும் காணப்படுகின்றது. சுதந்திரமான வெளிப்பாட்டை மேற்கொள்வதனால், அரசினால் ஏற்படுத்தப்படுகின்ற விதிமுறைகளினாலும் இணையமுடக்கங்களினாலும் இணையவழி வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது. பாலியல் தொழிலாளர்கள் போன்ற நலிவடைந்த குழுவினர்களுக்கு, அவர்களது இணையவழி வாழ்வாதாரம் தொடர்பிலான குறைந்தளவிலான நெறிப்படுத்தல்கள் சட்டப்பாதுகாப்பினைப் பெற்றுக்கொள்வதற்குப் போதுமானதாக இல்லை. சுயவெளிப்பாட்டிற்காக விரும்பப்படுகின்ற தளங்களான, Facebook, Whatsapp போன்ற தளங்களின் மீது பயனர்களுக்கு அதிகளவு கட்டுப்பாடு இருப்பதில்லை. பெரும்பாலும் பயனர்கள் இத் தளங்களில் பகிர்ந்து கொள்ளும் அவர்களது தகவல்கள் மீதே அவர்களுக்கு முழுமையான கட்டுப்பாடு இருப்பதில்லை. இணையவழிப் பாதுகாப்பு குறித்த பயம் - அவர்களது சுய-பாதுகாப்பு அல்லது அவர்களது தகவல்கள் மீதான பாதுகாப்பு குறித்த அச்சம் மக்களை சுய-தணிக்கை மேற்கொள்ளவதற்கு இட்டுச்செல்கின்றது.

இலங்கையில் மொழிப்பயன்பாடானது வரலாற்றுரீதியாக சிக்கலானதாகவும், அரசியல் பிரச்சனையாகவும் இருந்துவருகின்றது. இக்கருத்தாய்வின்படி, பதிலளித்தோரில் அநேகர் தமது வாழ்விலும், இணையவழியிலும் இருமொழிப்பாவனையாளர்களாக இருக்கின்றார்கள். தமிழ் மற்றும் சிங்கள உச்சரிப்புக்களுக்கு ஆங்கில எழுத்துக்களை பயன்படுத்துபவர்களையும் உள்ளடக்கியதாக, 30% இற்கும் அதிகமானோர் இணையத்தில் ஆங்கிலத்தினை மட்டுமே பயன்படுத்துகின்றனர். அண்மைக்காலத்தில் ஏற்பட்ட முன்னேற்றங்களினால் இணையத்தளங்களில் பல மொழிகளைப் பயன்படுத்தக்கூடியதாயிருப்பினும், நம் கருத்தாய்வில் பங்குபற்றியவர்களில் பலர் இணையப்பாவனையை நெறிப்படுத்துவதற்கு இன்னும் கொஞ்சமாவது தமது ஆங்கிலத்திறனை அதிகரித்துக்கொள்ள வேண்டிய தேவை இருப்பதாகக் குறிப்பிட்டனர். அநேகமான வளங்கள் ஆங்கிலத்திலேயே இருப்பதால் ஆங்கிலத்தில் கற்காதவர்களுக்குத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதில் பாரியதோர் இடைவெளி காணப்படுகின்றது. குறிப்பாக பால்நிலை மற்றும் பாலியல்பு குறித்த துறைச்சொற்களைத் திசைப்படுத்துவதனை கருத்திற்கொண்டால், பூகோள LGBTQ+ செயல்வாத பேரகராதியிலுள்ள சொற்கள், தமிழ் அல்லது சிங்களத்திற்கு மொழிபெயர்க்கப்படும் போது அவை பொருத்தமற்றவையாக இருப்பதனால் அல்லது உள்ளூர்ச் சூழலில் அர்த்தத்தினை இழப்பதனால் அவை எப்போதும் அச்சொற்களைக் குறிப்பனவாகவோ அல்லது பொருத்தமானவையாகவோ இருப்பதில்லை.

## இந்த அறிக்கை பின்வரும் பரிந்துரைகளை மேற்கொள்கின்றது:

### அரசதரப்பினருக்கான பரிந்துரைகள்:

- மக்களை பால்நிலை, பாலியல்பு, பாலியல் நடத்தை போன்றவற்றினடிப்படையில் குற்றவாளிகளாக்குகின்ற சட்டங்களை ரத்துச்செய்து, சட்டத்திருத்தத்தினை மேற்கொள்ள வேண்டும்.
- தேசிய தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ICT) மற்றும் டிஜிட்டல் கொள்கை உருவாக்க செயன்முறைகளில் LGBTQ+ மக்களை உள்வாங்குதல்.
- சமூகத்தினால் வழிநடத்தப்படுகின்ற தொலைத்தொடர்பு உட்கட்டுமான வலையமைப்புக்களை விருத்திசெய்தல்.
- தொழில்நுட்பம் தொடர்பான வன்முறைகள் இடம்பெறுகின்றன என்பதனை அங்கீகரிப்பதற்கும், அவற்றினை வன்முறைகளாகக்கருதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், சட்டஅமுலாக்கத் திறன்களையும், தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய வன்முறைகளைக் கையாளுகின்ற ஏனைய முன்னணி தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப அதிகாரிகளுடைய ஆற்றல்களையும், பலப்படுத்தல். தீங்கினைவிடவும், இணக்கம/சம்மதம் மற்றும் தனிநபர் அந்தரங்கம் போன்ற சட்டகத்திற்குள் வழக்குகளை கையாள்வதற்கான பயிற்சியினை உறுதிப்படுத்தல் பால்நிலை மற்றும் பாலியல்பு குறித்த உரிமையை அடிப்படையாகக்கொண்ட புரிதலைப்பற்றிய கூருணர்வினை உறுதிப்படுத்தல்.
- வெறுப்புப்பேச்சு மற்றும் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய வன்முறைகளுக்கு அரசு பதிலிறுக்கும்போது, பாதிக்கப்பட்டவர்களுக்கு/ பாதிக்கப்பட்டு உயிர் பிழைத்திருப்பவர்களுக்கு பின்வருவன உள்ளடங்கலான தீர்மானங்களை மேற்கொள்வதற்கான தெரிவுகள் இருக்க வேண்டும்: நடப்பிலிருக்கின்ற சட்டங்களை முழுமையாக நடைமுறைப்படுத்தல் தீர்ப்பிடலற்ற, இலவசமான உளநல மற்றும் உளசமூக ஆதரவினை பெற்றுக்கொடுத்தல் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய வன்முறைச் சம்பவங்கள் குறித்து எவ்வாறு அறிக்கையிடமுடியும், சிவில் சமூக அமைப்புக்களை எவ்வாறு அணுகமுடியும், எவ்வாறு சட்ட உதவியினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பது குறித்த தகவல்களை பெற்றுக்கொள்ளக்கூடியதாயிருத்தல்.
- டிஜிட்டல் பாதுகாப்பு, ஊடக அறிவு மற்றும் விரிவான பாலியற் கல்வி/உறவுகள் தொடர்பான கல்வி தொடர்பில் பாடசாலைமட்ட நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைத்தலும் நடைமுறைப்படுத்தலும்.
- இணையமுடக்கம் என அறியப்படுகின்ற, திட்டமிடப்பட்டமுறையில் மேற்கொள்ளப்படும் இணைய அல்லது இலத்திரனியல் தொடர்பாடல் தடைகளால் தகவலுக்கான உரிமை மீறப்படுவதையும், மக்களின் வாழ்வில் ஏற்படுத்தப்படும் பொருளாதார சமூக விளைவுகளையும் கருத்திற்கொண்டு திட்டமிடப்பட்ட இணைய அல்லது இரத்திரனியல் தொடர்பாடல் தடைகள் நிறுத்தப்படவேண்டும்.

### சிவில்சமூக தரப்பினருக்கான பரிந்துரைகள்

- மக்களை பால்நிலை, பாலியல்பு, பாலியல் நடத்தை போன்றவற்றினடிப்படையில் குற்றவாளிகளாக்குகின்ற சட்டங்களையும் கொள்கைகளையும் ரத்துச்செய்வதற்காக ஆதரித்துவாதாடல்.
- பாலியல் மற்றும் மீளுற்பத்தி சுகாதார உரிமைகள் தொடர்பிலான இணையவழி தகவல்களையும், வளங்களையும் தமிழிலும் சிங்களத்திலும் விருத்திசெய்தல். இவற்றை இணையவழியில் பகிர்வதற்கும், உரையாடுவதற்கும் ஏதுவான சூழலினை உருவாக்குதல்.
- LGBTQ+ மக்களுடைய தனிப்பட்ட கதைகளை அவர்களுடைய மொழியில் சொல்வதற்கான வளங்களை ஒதுக்குதல், அவற்றைப் பகிர்வதற்கு ஆதரவளித்தல்

- டிஜிட்டல் பொருளாதாரம், டிஜிட்டல் அறிவு, LGBTQ+ மக்களுடைய இணையத்தினை அணுகக்கூடியதன்மை போன்றவற்றை ஊக்குவிக்கின்ற தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர்களுடனான பயிற்சிகள் உட்பட பயிற்சிகளுக்கும், நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் ஆதரவளித்தல்.

- வெறுப்புப்பேச்சு மற்றும் வன்முறைகளை எதிர்கொள்கின்ற சந்தர்ப்பங்களில் தீர்வினைப் பெறுவதற்காகவும், இணையவழியில் அவர்களின் உரிமைகளுக்காகவும், LGBTQ+ மக்களின் அறிவையும் விழிப்புணர்வையும் வலுப்படுத்தல்.

- சிவில்சமூக அமைப்புக்களின் ஆதரித்து வாதாடல், பிரச்சாரங்களில் ஈடுபடல், பாதிக்கப்பட்டு உயிர்பிழைத்தோருக்கான ஆதரவினை வழங்கல் செயற்பாடுகளில், தொழில்நுட்ப ரீதியான வன்முறையையும் உள்ளடக்கக்கூடியவகையில் சிவில் சமூக அமைப்புக்கள் பால்நிலைசார் வன்முறையாகக் கருதுபவற்றின் எல்லையை விரிவுபடுத்தல்.

- வெறுப்புப்பேச்சு மற்றும் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய வன்முறைகளுக்கு பதிலிறுக்கும்போது, பாதிக்கப்பட்ட/பாதிக்கப்பட்டு உயிர் பிழைத்தவர்களுக்கு பின்வருவன உள்ளடங்கலான தீர்வுகளுக்கான தெரிவுகள் இருக்க வேண்டும்: நடப்பிலிருக்கின்ற சட்டங்களை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்காக ஆதரித்து வாதாடல் பாதிக்கப்பட்ட/உயிர் பிழைத்தவர்களுக்கு தீர்ப்பிடலற்ற, இலவசமான உளநல மற்றும் உளசமூக ஆதரவினைப் பெற்றுக்கொடுத்தல் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய வன்முறைச் சம்பவங்கள் குறித்து எவ்வாறு அறிவிக்கமுடியும், இந்த விடயம் தொடர்பில் செயற்படுகின்ற சிவில் சமூக அமைப்புக்களை எவ்வாறு அணுகமுடியும், எவ்வாறு சட்ட உதவியினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பது குறித்த தகவல்களை வழங்குதல்.

- டிஜிட்டல் பாதுகாப்பு, ஊடக அறிவு மற்றும் விரிவான பாலியற் கல்வி/உறவுகள் தொடர்பான கல்வி தொடர்பில் பாடசாலைமட்ட நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைக்க ஆதரவளித்தலும், அதற்காக ஆதரித்து வாதாடலும்.

## இணையத்தளங்களுக்கான பரிந்துரைகள்

- மனிதஉரிமைகள் தரநிலையுடன் ஒத்துப்போகின்ற அதேவேளை, தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய வன்முறைகளுக்கு பதிலிறுக்கக்கூடியவாறான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளையும் தெளிவான சமூகவழிகாட்டல்களையும் உள்வாங்கிக்கொள்ளல்.

- தமிழிலும் சிங்களத்திலும் விடயங்களை மிதமாக்குவதற்கான திறனை இணையத்தளங்கள் கொண்டிருக்க வேண்டும். அத்துடன் LGBTQ+ மக்களுக்கெதிரான வன்முறைகள் உள்ளடங்கலாக, இணையத்தளங்களுக்கு முறைப்பாடுசெய்யப்படும் வன்முறைச்சம்பவங்களை எதிர்கொள்வதற்கான வலுவான திறன்களையும் அவை கொண்டிருக்க வேண்டும்.

## ஊடகங்களுக்கான பரிந்துரைகள்

- இணையவழியிலான அனைத்து (டிஜிட்டல் மற்றும் எனைய) ஊடகநிறுவனங்களும் LGBTQ+ மக்கள் ஊடகத்தளங்களில் எவ்விதமாக பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறார்கள், எவ்விதமாக அறிவிக்கப்படுகிறார்கள் என்பதில் பாரபட்சமின்மையை உறுதிப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

## கல்வியியலாளர்களுக்கான பரிந்துரைகள்

- கருத்தாய்வுகள் மற்றும் ஆராய்ச்சிகளை உள்ளூர்மயமாக்கும் செயற்பாடானது, மொழிபெயர்ப்பிற்கும் அப்பால் உள்ளூர் மொழிக்குச் செல்ல வேண்டும். எந்த சமூகத்தின் அனுபவங்கள் ஆவணமாக்கப்படுகின்றனவோ, அவர்களின் ஆலோசனையுடன் உள்ளூரில் பயன்படுத்தப்படுகின்றதும், புரிந்துகொள்ளக்கூடியதுமான துறைச்சொற்கள் பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

- LGBTIQ+ மக்களின் உளசுகாதாரத்திற்கும, இணையத்திற்கும் இடையிலான தொடர்புகள் குறித்து மேலும் ஆராயப்படவேண்டும். இது இக் கற்கையின் நோக்கங்களுக்குப் புறம்பானதாகும்.

# அறிமுகம்

நாம் 2019, லிருந்து 2020 வரை, இலங்கையிலுள்ள LGBTIQ+ மக்களும், பல்வகையான பால்நிலை அடையாளங்கள், வெளிப்பாடுகள், பாலியல் நடத்தைகள் போன்றவற்றைக் கொண்டிருப்போரும் எவ்வாறு இணையத்தை பயன்படுத்துகின்றார்கள் என்பது குறித்து புரிந்துகொள்ளவிழைந்தோம். சமூகத்தினால் கட்டமைக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படுகின்ற எதிர்ப்பாலீர்ப்பு அல்லாத அனைத்துவிதமான பாலியல்புகள் மற்றும் பாலியல் நடத்தைகள் போன்றவை இலங்கைச் சட்டத்தின்படி குற்றமானவையாகவே இருந்துவருகின்றன. பெரும்பாலும் இது தண்டனைச்சட்டக்கோவையின் 365 மற்றும் 365(A) பிரிவுகளின் படி "இயற்கை ஒழுங்கிற்கு எதிரான உடல் பற்றிய அறிவு" எனவும் "இழிவானசெயல்" எனவும் பிரிவு 399இன் படி "ஆள்மாறாட்டத்தின் மூலம் ஏமாற்றுதல்" எனவும் குறிப்பிட்டு இவற்றை தடைசெய்கின்றது. 2016இல் இலங்கையின் உச்சநீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்ட ஒரு தீர்ப்பில் "சமகால சிந்தனையின்படி வயதுவந்தவர்களுக்கிடையில் அவர்களது இணக்கத்துடன் நடைபெறும் பாலுறவு குற்றமாகக் கருதப்படவோ அதற்கெதிராக அரசினால் நடவடிக்கை எடுக்கப்படவோ கூடாது" என்பதனை ஏற்றுக்கொண்டிருந்தது. பாலியல் நடவடிக்கைகள் வயதுவந்தவர்களுக்கிடையே இணக்கத்துடன் இடம்பெறுமாயின் அவர்களுக்கு தடுப்புக்காவல் தண்டனை வழங்கப்படவேண்டிய தேவையில்லை எனக்கொண்டதுடன் தண்டனை விலக்கல் மட்டுமே அளிக்கப்பட்டது. குற்றவியல் தண்டனைச் சட்டக்கோவையும், அலைந்துதிரிதல் கட்டளை, ஆபாச வெளியீடுகள் சட்டம் போன்ற சட்டங்களையும் தேவைக்கேற்றாற் போல திருத்த வேண்டும் அல்லது ரத்து செய்ய வேண்டும் என்கின்ற நிலைப்பாட்டினைக்கொண்ட LGBTIQ+ மக்களுக்கும் அவர்களது நட்பாளர்களுக்கும் இது சார்பாக அமைந்தது.

LGBTQ+ சமூகம் எதிர்கொண்டு வருகின்ற பாரபட்சம், களங்கப்படுத்தப்படல், வன்முறை போன்றவற்றை மேற்கொள்ளும் அரசு உள்ளடங்கலாக எவருமே தண்டனைகள் எதுவுமற்றிருப்பது தொடர்ச்சியாக ஆவணப்படுத்தப்பட்டு வருகின்றன (மனித உரிமைகள் கண்காணிப்பு, 2016). தன்பாலினச் சேர்க்கையை குற்றநீக்கம் செய்யக்கோரி, தொடர்ச்சியான முயற்சிகள் (Sri Lanka Brief) மற்றும் அழைப்புக்கள் (பெண்கள் மற்றும் ஊடக வலையமைப்பு, 2016) விடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், ஜனாதிபதி தேர்தல் வேட்பாளரொருவர் முதல் முறையாக LGBTQ+ மக்களின் உரிமைகளை பாதுகாக்க வேண்டிய அவசியம் குறித்து வெளிப்படையாக ஏற்றுக்கொண்டமை (Ceylon Today, 2019) போன்ற சில சிறிய முன்னேற்றத்திற்கான அறிகுறிகளும் காணப்படுகின்றன. ஆயினும் LGBTQ+ சமூகத்தினரின் வாழ்க்கை மற்றும் இருப்பின் பெரும்பகுதி வெளித்தெரியாதவகையிலேயே இருந்துவருகின்றன (Jayasinghe, 2019).

30 வருட இனமுரண்பாட்டைத் தொடர்ந்து வந்த யுத்தத்திற்கு பின்னரான தசாப்தத்தில, இலங்கை இரண்டு அரசாங்க மற்றும் ஆட்சி மாற்றங்களையும், நவதாராளவாத பொருளாதாரக்கொள்கைகளின் பெருக்கத்தினையும் (Kadirgamar, 2013), அதிகரித்த கண்காணிப்பு (மனிதஉரிமைகள் கண்காணிப்பு, 2020), அதிகரித்த பாலியல் பிற்போக்குவாதம் (Wickramasinghe, 2020), அதிகரித்துவருகின்ற இன-மத தேசியவாதம் (Perera, 2016) போன்றவற்றினையும் கண்டுள்ளது. இக்காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க விடயம் எதுவென்றால், மேற்குறிப்பிட்ட அனைத்து விடயங்களிலுமே இணையம், குறிப்பாக சமூகவலைத்தளங்கள் பங்காற்றியிருந்தன. குறிப்பாக சிங்கள பௌத்த தேசியவாதத்தின் அதிகரிப்பு மற்றும் அதை நிறுவனமயப்படுத்தல்/சட்டபூர்வமாக்கலில் (Ivarsson, 2019) இவை பங்களிப்புச் செய்துள்ளன. உண்மையில் இலங்கையில் இணையத்தை அணுகக்கூடியதன்மை மற்றும் இணையப்பாவனை குறைவாக இருக்கின்ற அதேசமயத்தில், இலங்கையிலுள்ள அனேகமான இணையப்பாவனையாளர்கள் சமூகவலைத்தள பாவனையாளர்களாக இருப்பதாக ஆய்வு முடிவுகள் காட்டுகின்றன (Galpaya et al., 2019). மக்கள் தம் சமூக மற்றும் அரசியல் வாழ்க்கையை வாழ்வதில் இணையமும் அதன் தொடர்ச்சியாயின் இது LGBTQ+ மக்களுக்கும் உண்மையானதாகும். செயல்வாதத்தினை மேற்கொள்வதில் அவர்களுடைய இணையப்பயன்பாடு குறித்து முன்னரே ஆவணப்படுத்தப்பட்டு வருகின்றபோதும் (Deshapriya et al., 2017), இந்தக் கற்கையில் நாம் செயல்வாதத்திற்கு அப்பால் அன்றாட வாழ்வில் இணையப்பயன்பாடு LGBTQ+ சமூகத்தினருக்கு எத்தகையதாக இருக்கின்றதென்பதனையும், இணையத்தில் அவர்களது தொழில் குறித்து எவ்வகையான செயலாளுமையை இவர்கள் உள்வாங்கிக்கொள்கிறார்கள் என்பது குறித்தும் புரிந்துகொள்ளவிழைகின்றோம்

இவ் அறிக்கையானது, இணையம், பால்நிலை, பாலியல்பு, இனத்துவம் மற்றும் ஏனையவை போன்றவற்றிற்கிடையிலான குறுக்குவெட்டுத்தன்மை தொடர்பில் இலங்கையில்

**எமது கண்டுபிடிப்புக்களும், இக்கற்கையில் ஆவணப்படுத்தப்பட்டுள்ள LGBTQ+ மக்களினதும் ஏனையவர்களினதும் அனுபவங்களும, பிரதிபலிப்புக்களும், பல்வகையான பாலியல் நாட்டங்களையும், பால்நிலை அடையாளங்களையும், வெளிப்பாடுகளையும் (SOGIE) குறித்து சமூகத்தில் நிலவுகின்ற களங்கத்தினை நீக்குவதற்குப் பங்களிப்பினைநல்கும் என நாம் நம்புகின்றோம்.**

மேற்கொள்ளப்பட்ட ஆய்வறிக்கைகள் மற்றும் கற்கைகள் போன்றவற்றை துணையாகக்கொள்கின்றது (இணைப்பு 2). எமது கண்டுபிடிப்புக்களும், இக்கற்கையில் ஆவணப்படுத்தப்பட்டுள்ள LGBTQ+ மக்களினதும் ஏனையவர்களினதும் அனுபவங்களும், பிரதிபலிப்புக்களும், பல்வகையான பாலியல் நாட்டங்களையும், பால்நிலை அடையாளங்களையும், வெளிப்பாடுகளையும் (SOGIE) குறித்து சமூகத்தில் நிலவுகின்ற களங்கத்தினை நீக்குவதற்குப் பங்களிப்பினைநல்கும் என நாம் நம்புகின்றோம். இந்தக்கற்கை கிளர்ச்சியம்:பாலியல்பும் இணையமும் தொடர்பிலான தேடலாய்வுத் திட்டத்தின் ஒரு பகுதியாக முற்போக்கு தொடர்பாடலுக்கான கூட்டமைப்பின் பெண்கள் உரிமைகள் நிகழ்ச்சித்திட்டத்தினால் நடாத்தப்பட்டது. இது AmplifyChangeஇனால் ஆதரவளிக்கப்பட்டது. இறுதியாக இந்தக்கற்கை கொவிட்-19 பெருந்தொற்றிற்கும் அதனுடன் தொடர்புடைய பொது சுகாதார நடவடிக்கைகளுக்கும் முன்னதாக நிறைவுசெய்யப்பட்டது. எனவே, இந்தப் பெருந்தொற்றுக்காலத்திற்கு மட்டுமுரிய இணையப்பாவனை குறித்த கண்ணோட்டங்கள் இந்தக்கற்கையின் நோக்கங்களுக்கு புறம்பானதாகையால், அவை இந்த அறிக்கையில் உள்வாங்கப்படவில்லை.

# ஆராய்ச்சி முறைமைகள்/ நுட்பங்கள், மட்டுப்பாடுகள்/ வரையறைகள் மற்றும் சவால்கள்

இந்தக் கற்கை இரு பகுதிகளாக மேற்கொள்ளப்பட்டது: முதலாவதாக அளவுசார் கருத்தாய்வு (இணைப்பு 1), இரண்டாவதாக இக்கருத்தாய்வில் பதிலளித்தவர்களில் தெரிவுசெய்யப்பட்டவர்களுடன் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான ஆழமான பண்புசார் கலந்துரையாடல்களின் தொகுதி.

## அளவுசார் ஆய்வு

ஆரம்பத்தில் இக் கருத்தாய்வு இணையவழிக் கருத்தாய்வாக மட்டுமே மேற்கொள்ளப்படவிருந்தது. ஆனால் அதில் பல சவால்கள் காணப்பட்டன: இணையவழிக் கருத்தாய்வு உத்தியின் மூலம் இலகுவில் கண்டுபிடிக்க முடியாத, உதாரணமாக, செயற்பாட்டாளர்கள் வெளியினுள் இல்லாத LGBTQ+ சமூகத்தினர் மற்றும் சமூகத்தினால் கட்டமைக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படுகின்ற எதிர்ப்பாலீர்ப்பு அல்லாத பாலியல் நடத்தைகளைக் கொண்டிருக்கின்ற பாலியல் தொழிலாளர்கள் போன்றோரை அடைய முடியுமென எம்மால் நம்பமுடியவில்லை. மேலும், பதிலளித்தோரில் சிலருக்கு தொழில்நுட்பரீதியாக இணையவழிக் கருத்தாய்வினை அணுகுவதிலும், அதைப் பூர்த்திசெய்வதிலும் வரையறைகள் காணப்பட்டன. அத்துடன் கருத்தாய்வில் பயன்படுத்தப்பட்ட உள்ளூர் மொழிகளான தமிழ் மற்றும் சிங்களத்தில் துறைச்சொற்கள் தொடர்பில் சவால்கள் காணப்பட்டன (இவை கீழ்வருகின்ற வரையறைகள் பகுதியில் மேலும் விவரிக்கப்படுகின்றன). அதனால் நாம் சமூகங்களால் வழிநடத்தப்படுகின்ற வெளிகளினுள் தனிநபர் சந்திப்புக்களை ஏற்படுத்த முடிவுசெய்தோம். அதன்போது, இந்த கருத்தாய்வின் காகிதப்பிரதியை விநியோகித்தோம். ஒட்டுமொத்தமாக அத்தகைய ஐந்து சந்திப்புக்கள் இடம்பெற்றன. பதிலளித்தோர் கருத்தாய்வினைப் பூர்த்திசெய்யக்கூடியதாகவும், கருத்தாய்வின் உள்ளடக்கம் மற்றும் அமைப்பு குறித்த பின்னூட்டங்களை வழங்கக்கூடியதாகவும், LGBTQ+ மக்களுடன் தொடர்புடைய மொழியரசியல் குறித்த இலக்குகுழு உரையாடல்களிலும் பங்குபற்றக்கூடியதாக இருந்தது. இந்த நேரடி சந்திப்புக்களில் கிடைத்த பதில்கள் இறுதிப் பகுப்பாய்விற்காக இணையவழிக் கருத்தாய்வு வடிவத்திற்கு மாற்றப்பட்டன. LGBTQ+ மக்கள் தொடர்பிலான மொழியரசியல் குறித்து இடம்பெற்ற உரையாடல்களிலிருந்து உருவான பால்நிலை, அடையாளம், பாலியல் நாட்டம் குறித்த துறைச்சொற்கள் தொடர்ச்சியான கூட்டுச்சேகரிப்புச் சொற்களஞ்சியமாக தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலத்தில் தொகுக்கப்பட்டுள்ளன.

**பதிலளித்தோருடன் எம்மால் நம்பிக்கையையும், இணைப்பையும் ஏற்படுத்தக்கூடியதாயிருந்தமையானது, இதுவரை இடம்பெற்ற இணையவழிக் கருத்தாய்வுகளில் இதுவும் ஒன்றாக அமைவதாகவல்லாமல், மேலான உரையாடல்களுக்கு வித்திட்டிருந்தது.**

கருத்தாய்வு ஆங்கிலத்தில் உருவாக்கப்பட்டு பின்னர் தமிழ் மற்றும் சிங்களத்திற்கு மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டது. இதுவும் உள்ளூர் மொழியில் சொற்கள் குறித்த சவால்களை உருவாக்கியது. இவை கீழ்வரும் பகுதியில் உரையாடப்படுகின்றன. இணையவழிக் கருத்தாய்வின்

இணைப்பானது, மூன்று மொழிகளிலும் Whatsapp குழுக்கள் மற்றும் முகநூலில் தனிப்பட்ட மற்றும் பொதுவான பக்கங்களிலும், Twitter மற்றும் மின்னஞ்சலூடாகவும், உள்ளூர் சமூகங்களால் வழிநடத்தப்படும் அமைப்புக்களூடாகவும் விநியோகிக்கப்பட்டன. இத்தகைய பரிமாற்ற உத்தி பல நன்மைகளை அளித்தது. பதிலளித்தோருடன் எம்மால் நம்பிக்கையையும், இணைப்பையும் ஏற்படுத்தக்கூடியதாயிருந்தமையானது, இதுவரை இடம்பெற்ற இணையவழிக் கருத்தாய்வுகளில் இதுவும் ஒன்றாக அமைவதாகவல்லாமல், மேலான உரையாடல்களுக்கு வித்திட்டிருந்தது. திட்டநிதியைப் பயன்படுத்தி சமூக வழிகாட்டலில் இயங்கும் வெளிகளுக்கும், அமைப்புக்களுக்கும் எம்மால் ஆதரவளிக்கக்கூடியதாக இருந்ததுடன், அந்த சமூகத்திடமிருந்து பெற்றுக்கொண்டு எதையும் மீள அளிக்காத வகையிலான ஒரு வழி முயற்சியாக இது இல்லாதிருப்பதனையும் எம்மால் உறுதிப்படுத்தக்கூடியதாக இருந்தது.

மொத்தத்தில் இக் கருத்தாய்வானது, அதனை முழுமையாகப் பூர்த்திசெய்த 103 பதிலாளர்களைக் கொண்டிருந்தது. பதிலளித்தோரில் 09 பேர் கட்டாயமாக பதிலளிக்கப்பட வேண்டிய கேள்விகளுக்குப் பதிலளிக்காமையால் அக் கருத்தாய்வுகளை இந்த இறுதிப் பகுப்பாய்வில் எம்மால் இணைத்துக்கொள்ளமுடியவில்லை.

## பண்புசார் ஆய்வு

முன்னர் குறிப்பிட்டது போல, நாம் ஒழுங்குசெய்த/இணைந்த ஐந்து சந்திப்புக்களில் பதிலளித்தோரினால் பண்புசார் கருத்தாய்வு பூர்த்திசெய்யப்பட்டது. நாம் எந்த சமூக அமைப்புடன் அல்லது குழுவுடன் இந்த சந்திப்பை ஏற்படுத்தினோம் என்பதைப்பொறுத்து சில சந்திப்புக்கள் குறிப்பிட்ட குழுக்களால் உருவாக்கப்பட்டிருந்தது. ஒரு சந்திப்பு திருநங்கை மற்றும் திருநம்பிகளை மட்டும் கொண்டிருந்ததுடன் மற்றுமொரு சந்திப்பு சிஸ் பெண் மற்றும் பாலியல் தொழிலாளர்களை மட்டும் கொண்டிருந்தது. அதேவேளை மற்றைய சந்திப்புக்கள் LGBTQ+ மக்களை உள்ளடக்கியதாக இருந்தது. ஒவ்வொரு சந்திப்பும் இலக்கு குழு உரையாடலைக்கொண்டிருந்தது. அதன்போது பங்குபற்றுனர்கள் தமக்கு தெளிவற்றவைகளையும், சொற்களையும், மொழிபெயர்ப்புக்களையும் குறித்து எம்முடன் வினவி சந்தேகங்களை தீர்த்துக்கொண்டு கருத்தாய்வினை பூர்த்திசெய்யக்கூடியதாயிருந்ததுடன், கருத்தாய்வு குறித்து நாம் மேலதிகமாக எதனை இன்னும் ஆழமாக அறிந்து கொள்ளலாம், மொழியரசியல் குறித்து உரையாடல்களை ஏற்படுத்தல் போன்றவை குறித்த பின்னூட்டங்களை வழங்கியதுடன், பாதுகாப்பாகவும் மகிழ்வூட்டக்கூடியவகையிலும் இணையத்தைப் பயன்படுத்துவதற்கு திறன்விருத்தி செய்யப்படவேண்டும் என்பதுபோன்ற தமது சில தேவைகளையும் எம்முடன் பகிர்ந்து கொண்டனர்.

இந்த இலக்குகுழு சந்திப்புக்களை நடாத்தும் போது அமைப்பு ரீதியான சந்திப்புக்கள், ஒன்றாக நேரத்தைச் செலவிடும் முறைசாரா குழுக்களைச் சேர்ந்த குயர் மக்களை சென்றடைவதற்குச் சிறந்ததல்ல என்பதை நாம் உணர்ந்துகொண்டோம். இதிலிருந்து கற்றுக்கொண்டதன்படி, ஒரு சமூக ஒன்றுதிரட்டலை குயர் நட்பு இடமொன்றில் ஏற்பாடு செய்தோம். இங்கு பங்குபற்றியவர்கள் கருத்தாய்வினைப் பூர்த்திசெய்து, சொற்களஞ்சியத்திற்கு புதுச்சொற்களை இணைத்ததுடன், ஒருவருடன் ஒருவர் பழகிக்கொண்டு சொற்களஞ்சியத்திலுள்ள சொற்கள் பற்றியும் உரையாடினர். “ஏனைய இடங்களைப்போல இலங்கையிலும் குயர் அசைவியக்கங்களின் வரலாறுகள் ஆண்தன்பாலீர்ப்பாளர்களின் வரலாற்றுக் கண்ணோட்டத்துடன் கூறப்படுகின்றன” (Wijesiriwardena, 2017) என்பதையும் பெண்களதும், பெண்தன்பாலீர்ப்பாளர்களில் பெண்மை அடையாளத்தையேற்பவர்களதும், ஒன்றுகூடுவதற்கும் மற்றையவர்களுடன் பழகுவதற்குமான வாய்ப்புக்கள், அவர்களது அசைவு மற்றும் ஏனைய சுதந்திரங்கள் மீதான ஆணாதிக்கக் கட்டுப்பாடுகளால் மட்டுப்படுத்தப்படுகின்றமையைக் கருத்தில் கொண்டு இந்த சந்திப்பினை பெண்களுக்கும, பெண்தன்பாலீர்ப்பாளர்களில் பெண்மை அடையாளத்தையேற்பவர்களுக்குமாக மட்டுப்படுத்திக்கொண்டோம். இந்த சமூக ஒன்றுகூடல் உட்பட இலக்குகுழு கலந்துரையாடல்கள் பெண்தன்பாலீர்ப்பாளர்கள், ஈர்பாலீர்ப்பாளர்கள், குயர் (LBQ) பெண்கள் போன்றோரின் தலைமுறைகளுக்கிடையிலான தொடர்புகளை ஏற்படுத்த அவசியமானதாக இருந்தது. 2010இல் பெண்கள் ஆதரவுக்குழு (WSG) கலைக்கப்பட்ட பின் LBQ பெண்கள் தம்மை அமைப்பாக்குவதில் ஒரு இடைவெளி ஏற்பட்டது. கடந்த சில வருடங்களில் இளம் LBQ பெண்கள் தம்மை முறைசாரா விதத்தில் அமைப்பாக்கிக்கொண்டபோதும், முந்தைய தலைமுறைகளுடன் தொடர்பினை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்பு மிகவும் குறைவாகவே காணப்பட்டது. அதனால் இத்தகைய ஒன்றுகூடல்கள்,

சந்திப்பதற்கும், தொடர்புகொள்வதற்கும், கதைகளையும் அனுபவங்களையும் பகிர்ந்துகொள்வதற்கும் ஒரு வாய்ப்பாக அமைந்ததையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

கருத்தாய்வில் பங்குபற்றிய 103 பேரில், 50 பேர் இணையப்பாவனை குறித்த தமது மேலதிக அனுபவங்களை எம்முடன் பகிர்ந்துகொள்வதில் ஆர்வத்தை வெளிப்படுத்தினர். பல்வேறுபட்ட அடையாளங்களைக் கொண்டிருப்போரினையும் உள்ளடக்கியிருப்பதனை உறுதிப்படுத்திக்கொண்டு, நாம் ஆழமாக ஆய்வுசெய்யக்கூடிய விடயங்களில் அவர்களின் பதில்கள் இருக்கக்கூடியவகையிலும், மொழியினடிப்படையிலும், 13 பேரை நேர்காணலுக்காகத் தெரிவுசெய்தோம் (தமிழ் - 5 சிங்களம் - 4ஆங்கிலம் - 4). இந்த நேர்காணலில் பங்குபற்றியவர்களின் அந்தரங்கத்தினைப் பேணும் பொருட்டு அவர்களின் பெயர்கள் இவ்வறிக்கையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. நேர்காணலில் பங்குபற்றியவரின் தெரிவினைக் கருத்தில் கொண்டு இந்தக் கருத்தாய்வு தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்பட்டதுடன் தமிழ் மற்றும் சிங்களத்தில் மேற்கொள்ளப்பட்ட நேர்காணல்கள் ஆங்கிலத்திற்கு மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டன.

**கருத்தாய்வில் பங்குபற்றிய 103 பேரில், 50 பேர் இணையப்பாவனை குறித்த தமது மேலதிக அனுபவங்களை எம்முடன் பகிர்ந்துகொள்வதில் ஆர்வத்தை வெளிப்படுத்தினர்.**

கீழே காட்டப்படுகின்ற கண்டுபிடிப்புக்கள், கருத்தாய்வில் கிடைக்கப்பெற்ற தரவுகளைப் பகுப்பாய்வு செய்யும்போது தோன்றிய தலைப்புக்களை அடிப்படையாகக்கொண்டவையாகும். இவை பண்புசார் நேர்காணலல்களினூடாக மேலும் விவரிக்கப்படுகின்றன அல்லது ஆதரவளிக்கப்படுகின்றன. இக் கருத்தாய்வில் பங்குபற்றியவர்களின் அடையாளங்களைப் பிரதிபலிப்பதற்கு, 'LGBTQ+' என்கின்ற பதம் பயன்படுத்தப்படுகின்றது. இது இருமையல்லாதவர்களையும், ஒரு குறிப்பிட்டவிதத்தில் தம்மை அடையாளப்படுத்த விரும்பாதவர்களையும் உள்ளடக்குகின்றது. இக் கருத்தாய்வும், அதனுடன் தொடர்புடைய உரையாடல்களும், சமூகத்தால் இயல்பானதாகக் கருதப்படாத பாலியல்பு மற்றும் பாலியல் நடவடிக்கைகளைக்கொண்ட எவருக்குமுரியதாக இருந்தது. உதாரணமாக பாலியல் தொழிலாளர்கள் - இந்த அறிக்கையில் அது பொருத்தமானதாகவும் குறிப்பிடப்பிடப்பட்டிருக்கின்றது.

## வரையறைகளும் சவால்களும்

இந்த ஆய்வின் முடிவுகள் பல வரையறைகளையும், சவால்களையும் கொண்ட சூழமைவினைக் கருத்தில் கொண்டே பார்க்கப்படவேண்டி இருக்கின்றது. கருத்தாய்வு இற்றைப்படுத்தப்படுவதற்கு முன்னதாக முதலாவது வரைவினை உள்ளூர் LGBTQ+ சமூகத்துடன் பகிர்ந்து, அவர்களது பின்னூட்டங்களைப்பெற நாம் நேரத்தினை ஒதுக்கியிருந்த போதும், எமது கட்டுப்பாட்டிற்கப்பாற்பட்ட காரணங்களினால் ஏற்பட்ட காலதாமதத்தினால் இதனைச் செய்யமுடியாமற்போனமை, எமக்கேற்பட்ட பிரதான சவாலாகும். அதன்விளைவாக இக் கருத்தாய்வில் வழங்கப்பட்டிருந்த அடையாளத்திற்கான தெரிவுகளில் மட்டுப்பாடுகள் காணப்பட்டன. சில பங்குபற்றுனர்கள் அதில் எந்த அடையாளத்தினையும் தெரிவுசெய்யமுடியவில்லை. உதாரணமாக சில திருநர்கள் அவர்களுடைய அடையாளங்கள் கருத்தாய்வில் பிரதிபலிக்கப்படவில்லையாதலால் சிஸ் பால்நிலைக்கான தெரிவுகளைப் பயன்படுத்தினர். சில தமிழ் பதிலாளர்கள் இன அடையாளக் கட்டமைப்புடன் தம்மை அடையாளப்படுத்தவில்லை.

சமூகத்தில் கருத்தாய்வினை விநியோகிப்பதற்கு மிகச்சிறந்த வழி சமூக அமைப்புக்களும் அவர்களது வலையமைப்புக்களுமாகும். ஆயினும் செயற்பாட்டாளர் வெளியினுள் வராத, ஆனால் முறைசாராவிதத்திலும், சமூகமாகவும் தம்மை ஒழுங்குபடுத்தியிருக்கிற LGBTQ+ மக்களும் உள்ளனர். அல்லது பாலியல் தொழிலாளர்கள் போன்ற குழுக்களின் அனுபவங்களும், நடத்தைகளும் சமூகத்தால் இயல்பானதாகக் கருதப்படுகின்ற பாலியல் இருமைக்குப் புறம்பானதாக இருக்கின்ற போதும் இவை LGBTQ+ என்கின்ற குடையின் கீழ் உள்வாங்கப்படுவதில்லை. அதனால் இவர்கள் சமூக அமைப்புக்களின் தொடர்புகளிலோ அல்லது வலையமைப்புக்களிலோ எப்போதும் உள்வாங்கப்படுவதில்லை (சில மேற்பொருந்துகைகள் இருக்கின்ற போதும்). மக்களைச் சென்றடையும் எமது திட்டத்தில் இதனையும் கருத்திற்கொண்டு, இக் கற்கையின் பரப்பினுள் உள்ளடங்கக்கூடியளவிற்கு இச் சவாலினை எதிர்கொள்ள பல வழிகளிலும் எம்மால் அணுகக்கூடியளவிற்கு முடிந்தவரை அதிகளவிலான குழுக்களைத் தொடர்புகொண்டோம். ஆயினும் இது ஒரு வரையறையாகவே இருக்கின்றது.

தமிழிலும் சிங்களத்திலும் கருத்தாய்வினை மொழிபெயர்ப்புச் செய்யும் போது சில சவால்களை நாம் எதிர்கொண்டோம். ஆங்கிலத்தில் உள்ள queer அல்லது non-binary போன்ற சில சொற்கள் உள்ளூர் சொற்களுக்கோ, விளக்கத்திற்கோ ஏற்ப மொழிபெயர்ப்புச் செய்யப்படுவதில்லை என்பது எமக்கிருந்த பிரதான சவாலாகும். இது கருத்தாய்வினை இற்றைப்படுத்த முன்னதாக சமூகத்தின் மீள்பார்வையின் மூலம் மட்டுப்படுத்தியிருக்கக்கூடியதாகும். கருத்தாய்வின் தமிழ் மொழிபெயர்ப்பில் ஒரு தொழில்நுட்ப வழு காணப்பட்டது. ஒரு கேள்வியினைத் தவறவிட்டு மற்றுமொரு கேள்வி இருதடவை மீள அச்சிடப்பட்டிருந்தது. அதனால் பதிலளித்தோரில் 30 பேர் அளவிலானவர்கள் தமக்கு சாதனங்களின் மீது எவ்வளவு கட்டுப்பாடு இருக்கின்றது என்ற கேள்விக்கு பதிலளித்திருக்கவில்லை.

ஆரம்பத்தில் நாம் இக்கருத்தாய்வினை இணையவழியில் நடாத்தவே திட்டமிட்டோம் ஆயினும் மேற்குறிப்பிட்ட காரணங்களினாலும், சில பதிலாளர்களின் தொழில்நுட்பத்தை அணுகுவதற்கான மற்றும் இணையவழிக் கருத்தாய்வினை நிரப்புவதற்கான திறனினைக் கருத்தில்கொண்டும், நாம் சமூகத்தால் வழிநடத்தப்படுகின்ற வெளிகளில் தனிநபர் சந்திப்புக்களை ஏற்படுத்தவும், அதன்போது கருத்தாய்வின் காகிதப் பிரதிகளை விநியோகிக்கவும் முடிவுசெய்தோம். பதிலளித்தோர் கருத்தாய்வினைப் பூர்த்திசெய்து கருத்தாய்வின் அமைப்பு மற்றும் உள்ளடக்கம் குறித்த தமது பின்னூட்டங்களை அளித்து, LGBTQ+ மொழியரசியல் பற்றிய இலக்கு குழு உரையாடல்களிலும் பங்குபற்றக்கூடியதாக இருந்தது.சமூக ஒன்றுகூடல்கள் யார் உரையாடல்களில் பங்கெடுக்க விரும்புகிறார்கள் என்பதற்கேற்பவும், பாதுகாப்பு காரணங்களைக் கருத்தில்கொண்டும் வரையறுக்கப்பட்ட அளவிலானவர்களையே கொண்டிருந்தது. ஆயினும் இணையவழிக் கருத்தாய்வு பரந்தளவிலான மக்களைச் சென்றடைவதற்காக சமூகவலைத்தளக் குழுக்களிலும், வலையமைப்புக்களிலும் பரவலாகப் பகிர்ந்துகொள்ளப்பட்டது.

இவ் உரையாடல்களின் போது கருத்தாய்வின் மேலதிக வரையறைகள் வெளிப்படுத்தப்பட்டன. பதிலளித்தோரில் சிலர், இக் கருத்தாய்வில் பால்நிலையானது சிஸ் அல்லது ட்ரான்ஸ் என குறிப்பிட்டிருந்தபோதும், தாம் சிஸ் பால்நிலையாக இல்லாதிருந்த போதும், பெண் அல்லது ஆண் என தம்மை அடையாளம் காண்பதாக குறிப்பிட்டிருந்தனர். அத்துடன் கருத்தாய்வில் அவர்களது

அடையாளத்திற்கென ஓர் இடமிருக்கவில்லை எனவும் உணர்ந்தனர். கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற ஒரு இலக்கு குழு கலந்துரையாடலின் போது, ஒரு கேள்விக்குத் தெரிவுசெய்யப்பட வேண்டிய பதில்களில் வழங்கப்பட்டிருந்த அடையாளங்களில் பதிலாளர்கள் ‘இனச்சிறுபான்மையினர்’ என்று குறிப்பிடப்பட்டிருப்பது பிரச்சனைக்குரியதாக இருப்பதாக கூறினர். அத்துடன் ‘இனஅடிப்படையில் பாரபட்சப்படுத்தப்படுகின்ற அல்லது ஒடுக்குமுறைக்குள்ளாக்கப்படுகின்ற’ என்ற பதத்தை தாம் விரும்புவதாகவும் கூறியிருந்தனர். அதனால் அநேகர் இனச்சிறுபான்மையினர் என்பதாக தம்மை அடையாளப்படுத்தாமலிருந்தனர். அத் தீர்மானத்தினை நாம் மதிப்பதுடன், இக் கண்டுபிடிப்புக்களில் வேறுபட்ட இனப்பிரதிநிதித்துவங்கள் முழுமையாகப் பிரதிபலிக்கப்படாது என்பதனையும் ஏற்றுக்கொள்கின்றோம்.

கையினால் கருத்தாய்வு பூர்த்திசெய்யப்படுவதில் நாம் எதிர்கொண்ட பிரதான சவால் அனைத்து கட்டாயக் கேள்விகளும் பூர்த்திசெய்யப்படுவதை உறுதிசெய்வதாகும். நாம் இது குறித்து பதிலளித்தோருக்கு அடிக்கடி நினைவுபடுத்தியபோதும், எவ்வாறு LGBTQ+ சார்ந்த துறைச்சொற்கள் உள்ளூர் மொழிக்கு மொழிபெயர்புச்செய்யப்பட்டிருக்கின்றது என்பதிலுள்ள சவால்களினாலும், சில பல்தேர்வு வினாக்களுக்கான பதில்களான ‘சிலசமயங்களில்’, ‘எப்போதாவது ஒருதடவை’ போன்றவற்றின் தெளிவற்றதன்மை போன்றவற்றினாலும், முழுமையாகப் பூர்த்திசெய்யப்படாத, இக்கற்கையில் உள்ளடக்கப்பட முடியாத பல கருத்தாய்வுகள் காணப்பட்டன. பதிலளித்தோரில் சிலர் வழங்கப்பட்டிருந்த பதில்களிலிருந்து தெரிவுசெய்யாமல் தாமாகவே பதில்களை எழுதியிருந்தனர். அதனால் இறுதியான அளவுசார் பகுப்பாய்வில் இக் கேள்விகளுக்குரிய பதில்களை உள்ளடக்கிக்கொள்ள முடியவில்லை.

# கண்டுபிடிப்புக்கள்

இந்த அறிக்கையின் ஆரம்பத்திலுள்ள கண்டுபிடிப்புக்களின் மேலோட்டத்தில் குறிப்பிடப்பட்டது போல, உருவான பிரதான தலைப்புக்கள் ஒன்றுடனொன்று தொடர்புபட்டதாகவும், அவை அவ்வாறு சிறப்பாக விளங்கிக்கொள்ளக்கூடியவகையிலும் அமைந்துள்ளன. ஆயினும் பின்வரும் தலைப்புக்களைப் பயன்படுத்தியும் கண்டுபிடிப்புக்களை அணுகமுடியும்:

1) இணையப் பாவனை மற்றும் இணையவழி வெளிப்பாடு;


2) சமூகம் மற்றும் வாழ்வாதாரத்தினைக் கண்டுபிடித்தல்;

3) அணுகக்கூடியதன்மையும் விதிமுறைகளும்

# பதிலளித்தோர் யார்?

## வயது

எமது பதிலாளர்கள் பெரும்பாலும் 18–44 வரையான வயதுடையவர்களாகவும், சராசரியாக 28 வயதினைக் கொண்டவர்களாகவும் இருந்தனர். முப்பது வீதமான பதிலாளர்கள் 25 வயதிற்கு குறைந்தோராகவும், முப்பத்துநான்கு வீதமானோர் 25–35 வயதிற்குட்பட்டோராகவும் இருந்தனர். ஒன்று தொடக்கம் பத்து வரையான அளவீட்டில் (10 அதிகமானதாக இருக்கையில்) 100, ல் 35 பதிலாளர்கள் இணையத்தை சுயவெளிப்பாட்டிற்கான முக்கியமான தளமாக கருதி 10இனை வழங்கியிருந்தனர். அதில் 23 பதிலாளர்கள் 30 வயதானவர்களாகவோ அல்லது அதைவிட வயது குறைந்தவர்களாகவோ இருந்தனர் (71%).




*உரு 1: உங்களுக்கு எத்தனை வயது?*




46 வயதுடைய சிஸ் பால்நிலை தன்பாலீர்ப்பு ஆணான மெலனி, அதேஅளவீட்டில் இணையத்தினை சுய-வெளிப்பாட்டிற்கான தளமாக 5இனைக் கணித்திருந்தார். அவர் 10 வருடங்களுக்கு முன் இணையப்பாவனையை தொடங்கியிருந்தார். 20வருடங்களாக drag ஆக நடத்தைவெளிப்பாட்டினைமேற்கொண்டுவருகின்றார். அதன் பெயராலேயே அவர் அறியப்படுகின்றார். அவருக்கு தன்னை வெளிப்படுத்தும் வெளிகளில் அல்லது இடங்களில் இணையமும் ஒரு வெளியாக இருக்கின்றதேயன்றி, மிகவும் முக்கியமான இடமாக இருக்கவில்லை. அதேவேளை, தன்னை இருமையற்றவராக அடையாளம் காணும் 30 வயதான விரான் அவர்கள், சிறுபிள்ளையாக இருந்த காலத்திலிருந்தே இணையத்தைப் பயன்படுத்திவருகின்றார். இணையத்தினூடாகவே தான் அவர்கள் தன்



அடையாளத்தினை விளங்கிக்கொண்டு, அதனை அரவணைத்திருக்கின்றார்கள். அத்துடன் அவர்கள் அவர்களாகவே இருக்கக்கூடிய வெளியாகவும் அது இருந்தது. அதனால் அவர் 10இனைக் கணித்திருந்தார். தம்மை வெளிப்படுத்துவதில் மெலனி மற்றும் விரானின் இணையப்பாவனையையும், அனுபவத்தினையும் வெளிப்படுத்தும் ஒரே காரணி அவர்களின் வயது மட்டுமல்ல. அவர்கள் எந்த வயதில் இணையப்பயன்பாட்டினை மேற்கொள்ள ஆரம்பித்தார்கள் என்பதுவும், எவ்வாறு அவர்கள் வெளிப்பாட்டிற்கான வெளியாக இணையத்தை உள்வாங்கிக்கொண்டார்கள் என்பதில் தாக்கம் செலுத்துகின்றது

## தொழில்

பதிலளித்தோரில் 39.8% ஆனவர்கள் அரசுசாரா நிறுவனங்களில் பணியாற்றுபவர்கள் அல்லது செயற்பாட்டாளர்கள் ஆவர். பதிலளித்தோரில் 60□ ஆனவர்கள் வேறு துறைகளைச் சேர்ந்தவர்களாவர். இது கவனிக்கப்படத்தக்கதாகும். ஏனெனில், இணையத்தில் LGBTQ+ மக்களின் அனுபவங்களைச் செயல்வாதம் மற்றும் ஆதரித்து வாதாடல் செயற்பாடுகளுக்கு அப்பால் ஆவணப்படுத்த வேண்டும் என்பதற்காக நாம் அரசுசாரா நிறுவனங்களுக்குப் புறம்பாகவும் பதிலாளர்களைக் கண்டுபிடிக்கத் தீர்மானித்திருந்தோம். 7.8% ஆன பதிலாளர்கள் தொழிலற்றவர்கள். "ஏனையவை" என குறிப்பிட்டவர்களில் அநேகர் "தற்போது வேலை செய்யவில்லை" அல்லது "தற்போது தொழிலில்/ஈடுபடவில்லை" எனக் கூறியதுடன், "தொழிலற்றோர்" என்பது தம்முடைய தொழில் நிலையை துல்லியமாகக் குறிக்கப் போதுமானதல்ல எனவோ அல்லது அவர்கள் அப் பதத்துடன் தம்மை தொடர்புபடுத்திக்கொள்ள முடியவில்லை எனவோ குறிப்பிட்டனர்.



***உரு 2: தொழில்***


- சுயாதீனமாக பணிபுரிபவர் 5.8%
- மாணவர் 5.8%
- வேலையற்றவர் 7.8%
- தனியார் துறை 5.8%
- மனித உரிமைகள் செயற்பாட்டாளர்/ ஆதரித்து வாதாடுபவர் 2.9%
- கலைஞர் 6.8%
- அரசசார்பற்ற அமைப்பு 36.9%
- அரசஅமைப்பு 7.8%
- கல்வி அல்லது ஆராய்ச்சி நிறுவகம் 6.8%
- ஏனையவை 11.7%

## பாலியல் நாட்டம் மற்றும் பால்நிலை அடையாளமும் வெளிப்பாடும் (SOGIE)

முதற்பார்வையில், பதிலளித்தோரில் அநேகர் சிஸ் பால்நிலை பெண்களாகவும், எதிர்ப்பாலீர்ப்பாளர்களாகவும் இருப்பது போல் தோன்றினாலும், இதனை கருத்தாய்வினை பூரணப்படுத்தும் போது அவர்கள் எதிர்கொண்ட சவால்கள் மற்றும் மட்டுப்பாடுகளைக் கருத்தில் கொண்டே புரிந்துகொள்ள வேண்டும். இதன்போது சத்திரசிகிச்சை செய்துகொண்டவர்கள் உள்ளடங்கலாக சிலர், சிஸ் அல்லது ட்ரான்ஸ் என்கின்ற தெரிவுகளுக்குள் ஒன்றினைத் தீர்மானிப்பதென்பது மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட தெரிவாகத் தாம் உணர்வதாக கூறியதுடன், அவர்கள் பெண் அல்லது ஆண் என தம்மை இலகுவாக அடையாளப்படுத்தினர். அதனால் சிலர் பிறப்பின் போது அடையாளப்படுத்தப்பட்ட பால்நிலை எதுவாயினும் சிஸ் இனையே தெரிவுசெய்தனர். எதிர்ப்பாலீர்ப்புடையவர்களாக அடையாளப்படுத்தும் அநேகரையும் இந்த சூழமைவினைக் கருத்திற்கொண்டே புரிந்துகொள்ள வேண்டும். பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட அந்தப் பதத்தின் வரைவிலக்கணத்திற்கிணங்க, பலர் சிஸ் பால்நிலையாக இல்லாதிருப்பதற்கான சாத்தியத்துடனேயே இதனையும் புரிந்து கொள்ள வேண்டும். பதிலளித்தோரில் சிலரது பாலியல் நடத்தை அவர்களின் பாலியல் நாட்டத்திற்கான பதில்களுடன் புரிந்துகொள்ளப்படக்கூடாது என்பதுவும் ஒரு குறிப்பிடத்தக்க விடயமாகும். சிலரின் பாலியல் நாட்டத்திற்கான பதில்களில் 'ஏனையவை' என்ற பதிலானது, உணர்வு ரீதியான நெருக்கம் இருப்பவர்களுடன் ஏற்படும் பாலியலீர்ப்பு/மனோரம்மியம், ஈர்பாலீர்ப்பிற்கான சாத்தியமுண்டு மற்றும் ட்ரான்ஸ்/ஸ்ரைட் (trans/ straight) போன்றனவற்றினைக் குறிப்பிட்டிருந்தது.

### பாலியல் நாட்டம்


| | |
|---|---|
| எதிர்ப்பாலீர்ப்புடையவர்/ஸ்ரைட் | 51.3% |
| தன்பாலீர்ப்புடைய ஆண் | 8.0% |
| தன்பாலீர்ப்புடைய பெண் | 6.2% |
| ஈர்பாலீர்ப்பாளர்கள்/பான்செக்ஸ்சுவல் | 12.4% |
| குயர் | 8.0% |
| ஏனையவை | 4.4% |
| கூற விரும்பவில்லை | 9.7% |



*உரு 3: பாலியல் நாட்டம்*

### பால்நிலை அடையாளம்

| | |
|---|---|
| சிஸ்பெண் | 52.4% |
| சிஸ்ஆண் | 17.5% |
| திருநங்கை | 15.5% |
| திருநம்பி | 1.9% |
| இருமையல்லாதவர் | 2.9% |
| பால்நிலை குயர்/பால்நிலை நிச்சயப்படுத்தாதவர் | 1.9% |
| ஏனையவை | 4.9% |
| கூற விரும்பவில்லை | 2.9% |




*உரு 4: பால்நிலை அடையாளம்*

## பிரதேசம்/இடம்

கருத்தாய்வில் பதிலளித்தோரின் பிரதேசங்களினை அவர்களின் மாவட்டம் மற்றும் மாகாணத்தின் அடிப்படையில் குறிப்பிடுமாறு கேட்கப்படவில்லையாயினும், நாம் ஒழுங்குசெய்த மற்றும் இணைந்துகொண்ட சமூகஒன்றுகூடல்கள் மேல் மற்றும் கிழக்கு மாகாணங்களில் நடைபெற்றன. மேல் மாகாணம், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பங்குபற்றுனர்கள் இதில் கலந்துகொண்டனர். நாட்டினுள் இடம்பெற்ற உள்நாட்டு இடப்பெயர்வினைக் கருத்திற்கொண்டால் விசேடமாக, மேல்மாகாணத்திலிருக்கும் சில பங்குபற்றுனர்கள் வேறு மாகாணங்களைச் சேர்ந்தவர்களாயிருக்க வாய்ப்புண்டு. நேரம் மற்றும் வளங்களின் பற்றாக்குறையினைக் கருத்திற்கொண்டு இணையவழிக் கருத்தாய்வு விநியோகத்தினைத்தவிர நேரில்சென்று அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கிக்கொள்வதற்கு எம்மால் இயலவில்லை. ஆயினும், மேல் மாகாணம், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை எமது நோக்கத்தினடிப்படையிலேயே தேர்வுசெய்தோம். தலைநகரமானது மேல்மாகாணத்தில் அமைந்திருக்கின்றமை, நகர்ப்புறத்தில் இணையத்தினைப் பெற்றுக்கொள்ளக்கூடிய தன்மை, அன்றாட இணையப்பாவனையுடன் நகர்ப்புற வாழ்க்கைமுறை நெருக்கமாக தொடர்புற்றிருக்கின்றமை, ஆய்வுக்குழுவினர் மட்டுமன்றி பல குயர் குழுக்கள் தலைநகரத்திலேயே வசிக்கின்றமை போன்ற காரணங்களால் நாம் மேல் மாகாணத்தைத் தேர்வுசெய்தோம். ஆயினும், வேறு மாகாணத்தைச்சேர்ந்தவர்கள் எவ்வாறு இணையத்தினைப் பயன்படுத்துகின்றார்கள் என்பதில் இன, கலாசார, மொழியியல்சார் மற்றும் புவியியல் ரீதியான தனித்துவங்கள் காணப்படுகின்றன. விசேடமாக, பிரதானமாக தமிழ் பேசுகின்ற வடக்கு மற்றும் கிழக்கினைச் சேர்ந்தவர்களிடம், அரச கண்காணிப்பு மற்றும் அதிகரித்த இராணுவ நடமாட்டம் போன்றன 2019 ஈஸ்டர் குண்டுத்தாக்குதலின் பின்னரான அதிகரிப்பு உள்ளடங்கலாக, தொடர்ச்சியாக அதிகரித்துக் காணப்படுகின்றன. அதேவேளை, மேற்குறிப்பிட்ட தனித்தன்மைகளினாலும், நாட்டில் தன்பாலியல்பு தண்டனைக்குரியகுற்றமாக்கப்பட்டிருக்கின்றமையினாலும், பாதிக்கப்பட்ட நிலையிலேயே குயர் அமைப்பாக்கம் காணப்படுகின்றது



*உரு 5: இடம்*





*குறிப்பு: ஏனையவை அனைத்தும் பறங்கியர், மலாய், இலங்கைச் செட்டி, பரத மற்றும் ஏனைய இனங்களை உள்ளடக்குகின்றது.*

*உரு 6: மாகாண மற்றும் இனத்துவ அடிப்படையில் சனத்தொகை 2012*

# ஒன்லைன் (Online) எதிர் ஓவ்லைன் (Offline): பொய்யான இருமைநிலையா இல்லையா?

## நாம் offline வாழ்வில் காண்கின்ற அதே வன்முறைகள் இணையவழியிலும் மேற்கொள்ளப்படுகின்றன




*உரு 7: நாம் Offline உலகில் காண்கின்ற அதே வன்முறைகள் இணையவழி மேற்கொள்ளப்படுகின்றன.*

பதிலளித்தோர், இணையவழியினையும் offline இனையும் இருமையாகவா அல்லது ஒரே தொடர்ச்சியின் இரு பகுதிகளாகவா பார்க்கின்றார்கள் எனக் கருத்தாய்வில் குறிப்பாகக் கேட்கப்படாவிட்டாலும், மேலுள்ளது போன்ற சில கேள்விகள் அவற்றை இருமையாகக் கருதுவதற்கு அவர்களை நிர்ப்பந்தித்தன. நேர்காணல்களின்போது பதிலளித்தோரில் பலர், இணையவழி மற்றும் offline உலகிற்கிடையிலான கோட்டினை தெளிவற்றதாகக் காண்பதாகவும், இவற்றினைத் தம்மை வெளிப்படுத்தக்கூடிய, விசேடமாக அவர்களுடைய பால்நிலை அடையாளம், பாலியல்பு போன்றவற்றை வேறுபட்ட தந்திரோபாய வழிகளில் வெளிப்படுத்தக்கூடியவகையிலான வெவ்வேறான வெளிகளாகப் பயன்படுத்துவதற்கு அவர்கள் பிரக்ஞைபூர்வமான முடிவுகளை மேற்கொண்டார்களெனவும் நாம் அறிந்துகொண்டோம்.



சிஸ் பால்நிலை தன்பாலீர்ப்பு ஆணான ஹிரண் இணையவழி மற்றும் offline இனைத் தெளிவான இருமைகளாக உள்வாங்கிக்கொள்ளவில்லை. ஆனால் அவர் offline இனைவிடவும் இணையவழியில் தன்னை வெளிப்படுத்திக்கொள்வதில் மிகக்குறைந்தளவான எச்சரிக்கையுடனேயே இருந்தார் என்பது தெளிவாயிருந்தது. அவர் இளம்பராயத்திலிருந்தே ஒரு நடிகராக வர விரும்பினார். ஆனாலும் அவர் பாடசாலையில் குறைந்தளவிலான சுயவிளம்பரத்தினைப் பேணுவதற்குத்தீர்மானித்தார். அத்துடன் சிறு பாத்திரமேற்று நடித்ததைத்தவிர அவர் வேறு எந்த ஆற்றுகை உருவாக்கங்களிலும் பங்குபற்றவில்லை. அவர் வெளிப்படையாக ஆண்தன்பாலீர்பாளராக தெரியாவிட்டாலும் எதிர்ப்பாலீர்ப்பாளராகவும் அவர் தெரிந்துகொள்ளப்படவில்லை. அவரது பாதுகாப்பு தொடர்பான கரிசனைகளே இத்தகைய குறைந்தளவிலான கவனத்தைஈர்க்கும் தன்மைக்குக் காரணமாகும். ஆனால், இதே காரணங்கள் அவர் ஒரு Youtube சனல் ஒன்றினை உருவாக்கித் தனது முதலாவது காணொளியினைப் பதிவேற்றியபோது அவருக்கு இருக்கவில்லை. பாடசாலை நாடகம் அவருக்குப் பெற்றுத்தரக்கூடிய பார்வையாளர்களை விடவும் இணையம் அவருக்கு பரந்தளவிலான பார்வையாளர்களைப் பெற்றுக்கொடுத்த அதேவேளை, மெய்நிகர் (Virtual) பார்வையாளர்களில் உடல்ரீதியான அருகாமையின்மை என்பது உள்ளார்ந்த பாதுகாப்புணர்வினைக் கொடுத்தது. ஒரு காணொளியைப் பதிவேற்றுவது எத்தகைய விளைவுகளைக் கொண்டிருக்கும் எனவும், திடமான எதிர்பார்ப்புக்கள் எதுவுமல்லாது அதனைச் செய்வது குறித்தும், அப்போது தான் உண்மையில் சிந்தித்திருக்கவில்லை என அவர் ஏற்றுக்கொண்டார்.

சிஸ் பால்நிலை எதிர்ப்பாலீர்ப்பு ஆணான விஜய்க்கு, நிஜ உலகில் தொடர்புகளைக் கட்டியெழுப்புவதற்கு இணையம் சவாலானதாக அமைகின்றது. "உண்மையான சமூகத்துடன்" ஈடுபட அது ஒரு தடையாக இருக்கின்றது. "நான் சில வேளைகளில் ஒரு அறையில் இருந்துகொண்டு வெளியில் செல்லாமலேயே அனைத்தையும் செய்யமுடியும் என உணர்கின்றேன். அதனால் இணையம் உண்மையான சமூகத்துடன் ஈடுபடுவதற்கான தடை என நான் நினைக்கின்றேன். எனவே என்னைப்பொறுத்தவரையில் அது எல்லாவற்றிலுமிருந்து திசைதிருப்புகிறதோ என சிலவேளைகளில் சிந்திப்பேன்" எனக் கூறினார். அவரது கருத்தின்படி, இது இணையத்தின் மிகமோசமான பண்புகளுள் ஒன்று எனக்கூறுகிறார்





சிஸ்பால்நிலை பெண்ணான செல்வி, அவரது பாலியல் நாட்டம் குறித்து பகிர்ந்துகொள்ள விரும்பவில்லை. இணையவழி உலகிற்கும், "நிஜவாழ்க்கை" க்கும் இடையிலான வேறுபாடு என்னவென்றால், நிஜவாழ்வில் நேருக்கு நேர் மக்களை சந்திப்பதால் அவர்கள் எதைக்கூற வருகின்றார்களோ அதை அப்படியே எல்லா சமயங்களிலும் அவர்கள் சொல்வதில்லை அல்லது அவர்கள் யாரையாவது தொல்லைசெய்யவோ, துஷ்பிரயோகம் செய்யவோ விரும்பினால் எப்போதும் போலீசால் கைதுசெய்யப்படலாம் என்கின்ற சாத்தியமும் உள்ளது. ஆனால், முகநூலில் உதாரணமாக, போலிக்கணக்கின் பின் மறைந்துகொள்ளலாம் அல்லது அவர்களுக்கு ஒரு நபரை தெரியாதபோது அவர்கள் விரும்புவதை சொல்லவும், இலகுவில் பெண்கள், trans மற்றும் ஏனையவர்களையும் துஷ்பிரயோகம் செய்யவும், வெட்கமோ தயக்கமோ இல்லாதிருக்கின்றார்கள்.




சிஸ்பால்நிலை ஈர்பாலீர்ப்பு குயர் பெண்ணான சாரா, இணையவழி மற்றும் offline இருமையா (அல்லது இருமையற்றவையா) தொடர்பில் மற்றுமொரு கண்ணோட்டத்தினைப் பகிர்ந்துகொண்டார். அவர் "இணையவழிச் செயற்பாட்டாளர்" "இணையவழிப் பெண்ணிலைவாதி" போன்றவை எத்தகைய எதிர்மறையான பொருளைக்கொண்டிருக்கின்றன என்பது குறித்தும், உங்களது அரசியலினைப் பிரதானமாக இணையவழியில் கற்றுக்கொள்வதானது சிலரால் போதாமையுடையதாகப் பார்க்கப்படுகின்ற காரணத்தினால் அடிக்கடி மரியாதையின்றியும் விமர்சனத்துடனும் இவை எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பது குறித்தும் பேசினார். பெரும்பாலும், முழுமையாக இணையவழியிலேயே தனது பெண்ணிலைவாத அரசியற் கற்கையையும், குயர் கோட்பாட்டினையும் கற்றுக்கொண்ட ஒருவராக சாராவிற்கு அத்தகையதோர் தெளிவான பிரிவினை இணையவழி மற்றும் offline இற்கிடையில் இருப்பதில்லை எனவும், அவை ஒன்றிணைந்து தனது யதார்த்தத்தினை தோற்றுவிப்பதாகவும் கூறினார். (Straight ஆகத் தன்னை அடையாளப்படுத்திய





ஈர்பாலீர்ப்புடையவராகவும் இருக்கக்கூடிய சாத்தியப்பாடுள்ள சிஸ்பால்நிலையைக் கொண்ட) கிறிஷானி (சிஸ்பால்நிலையைக் கொண்ட ஈர்பாலீர்ப்பு பெண்ணான) திவ்யா இருவரும் டிஜிட்டல் அடிமையாதலின் ஆபத்து குறித்தும், இணையவழி மற்றும் offline இற்கிடையிலான தெளிவற்ற கோடு தொடர்பில் தமது விசனத்தைத் தெரிவித்து எவ்வாறு இணையவழி அல்லது டிஜிட்டல் எமது வாழ்வினை மேலும் மேலும் எடுத்துக்கொள்கின்றது என்பது குறித்தும் பேசினார்கள்.

ஆகையால், பதிலளித்தோரில் பலர் இணையம் வழங்குகின்ற இந்த முரண்பாட்டினை நிரப்புவதுபோல் தோன்றுகின்றது. ஒரு புறம் கஸ்ரெல்ஸ்ஸின் வலையமைப்பு சமூகக்கோட்பாட்டின் படி, நேரம் மற்றும் வெளியானது, தொழில்நுட்பத்தின் மூலம் மேம்படுத்தப்படுகின்றதான உணர்வு ஏற்படுகின்றது (Castells, 2000), அதனுடைய விளைவுகள் சாதகமாகவும் பாதகமாகவும் பார்க்கப்படுகின்றன. மறுபுறம் வேறு சுயங்களாக இருக்கக்கூடிய வாய்ப்பு அல்லது ஏனைய இணையவழி உலகங்களை நிரப்புதல் போன்றன, இணையவழி மற்றும் offline இற்கிடையில் தெளிவான எல்லையை வரையறுக்கின்றன. அடுத்து வருகின்ற பகுதியில் எடுத்துக்காட்டப்படுகின்றதுபோல, இது பால்நிலை, பாலியல்பு உள்ளடங்கலாக வேறுபட்ட அடையாளங்கள் எங்கு எப்படி வெளிப்படுத்தப்படுகின்றன என்பது குறித்து தேர்வுசெய்யக்கூடியவகையிலும், தந்திரோபாயமான முறையில் பயன்படுத்தக்கூடியவகையிலும் இருப்பதனால் பயனுள்ளதாக இருக்கமுடியும்.




# இணையப்பாவனையும் இணையவழி வெளிப்பாடும்

*அடையாளம், வெளிப்பாடு, நடத்தைவெளிப்பாடு*

## பால்நிலை அடையாளம் மற்றும் பாலியல்பு


இணையத்தினைப் பயன்படுத்தும் விதமானது, அவர்களின் பால்நிலை மற்றும் பாலியல் அடையாளம் போன்றவற்றினால் பாதிக்கப்படுகின்றதா என பதிலளித்தோரிடம் கேட்கப்பட்டபோது, சிறுஅளவிலானவர்கள் 'நிச்சயமாக' என குறிப்பிட்டிருந்தார்கள். அநேகர் 'சிலசமயங்களில்' என குறிப்பிட்டிருந்தனர்.



**உங்களது பால்நிலை அடையாளம் நீங்கள் இணையத்தினைப் பயன்படுத்தும் முறையினைப் பாதித்துள்ளதா?**

| | |
|---|---|
| நிச்சயமாக | 27.2% |
| இல்லை | 19.4% |
| சிலவேளைகளில் | 37.9% |
| எனக்குத் தெரியாது | 15.6% |

*உரு 8: உங்களது பால்நிலை அடையாளம் நீங்கள் இணையத்தினைப் பயன்படுத்தும் முறையினைப் பாதித்துள்ளதா?*



**உங்களது பாலியல் அடையாளம் நீங்கள் இணையத்தினைப் பயன்படுத்தும் முறையினைப் பாதித்துள்ளதா?**

| | |
|---|---|
| நிச்சயமாக | 17.5% |
| இல்லை | 24.3% |
| சிலவேளைகளில் | 35.9% |
| எனக்குத் தெரியாது | 22.3% |


*உரு 9: உங்களது பாலியல் அடையாளம் நீங்கள் இணையத்தினைப் பயன்படுத்தும் முறையினைப் பாதித்துள்ளதா?*

பதிலளித்தோரில் 50% இற்கும் அதிகமானோர் தம்முடைய இணையத்தினை அணுகக்கூடியதன்மையானது, அவர்கள் எவ்வாறு பால்நிலை மற்றும் பாலியல்பு தொடர்பில் புரிந்துகொண்டிருந்தார்கள் என்பதையும், வேறுபட்ட பால்நிலைகளையும், பாலியல்புகளையும் எவ்வாறு தெரிந்துகொண்டிருக்கிறார்கள் என்பதையும், மாற்றியிருப்பதாக உற்சாகமாக ஏற்றுக்கொண்டனர்.



திருநம்பியான ஷாமல் தனக்கு பிறப்பின் போது அடையாளப்படுத்தப்பட்ட பால்நிலையுடனான போராட்டத்தினை சிறப்பாகப் புரிந்துகொள்ள இணையம் உதவியாக இருந்ததாக குறிப்பிட்டார். அவர் இணையத்தில் பால்நிலை அடையாளங்கள் தொடர்பிலும், நிலைமாற்றத்திற்குரிய செயல்முறை குறித்தும் பயனுள்ள தகவல்களைக் கண்டுபிடித்தார். ஆனால் அவர் இது குறித்து தேடிய காலப்பகுதியில் கிடைத்த அனைத்துத் தகவல்களுமே இலங்கைக்கு வெளியிலிருந்து கிடைக்கப்பெற்றனவாகவே இருந்தன. அவர் அத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடியளவிற்குப் போதுமான ஆங்கிலத்தினைப் புரிந்து கொண்டாலும், அது சவாலானதாகவே இருந்தது. மருத்துவ மாணவனாக இருக்கின்ற ஒரு நண்பரூடாகவே அவர் தேசிய திருநர் வலையமைப்பு மற்றும் வெனச போன்றவற்றை அறிந்துகொண்டு இந்த அமைப்புக்களூடாகவே திருநம்பிகளுக்கான சத்திரசிகிச்சை இலங்கையில் மேற்கொள்ளப்படுகின்றது என்பதனைக் கண்டுபிடித்தார்.


**இணையத்தை அணுகக்கூடியதன்மையானது வேறுபட்ட பால்நிலை மற்றும் பாலியல் அடையாளங்களினைக் கொண்டிருப்போர் பற்றிய உங்களது புரிதலில் ஏதாவது மாற்றத்தினை உண்டுபண்ணியதா?**



| | |
|---|---|
| நிச்சயமாக | 53.4% |
| இல்லை | 13.6% |
| சிலவேளைகளில் | 19.4% |
| எனக்குத் தெரியாது | 13.6% |

*உரு 10: இணையத்தை அணுகக்கூடியதன்மையானது வேறுபட்ட பால்நிலை மற்றும் பாலியல் அடையாளங்களினைக் கொண்டிருப்போர் பற்றிய உங்களது புரிதலில் ஏதாவது மாற்றத்தினை உண்டுபண்ணியதா?*

**இணையத்தை அணுகக்கூடியதன்மையானது பால்நிலை மற்றும் பாலியல் அடையாளம் பற்றிய உங்களது புரிதலில் ஏதாவது மாற்றத்தினை உண்டுபண்ணியிருக்கின்றதா?**



| | |
|---|---|
| நிச்சயமாக | 53.4% |
| இல்லை | 15.5% |
| சிலவேளைகளில் | 23.3% |
| எனக்குத் தெரியாது | 7.8% |

*உரு 11: இணையத்தை அணுகக்கூடியதன்மையானது பால்நிலை மற்றும் பாலியல் அடையாளம் பற்றிய உங்களது புரிதலில் ஏதாவது மாற்றத்தினை உண்டுபண்ணியிருக்கின்றதா?*



சிஸ்பால்நிலை எதிர்ப்பாலீர்ப்பு பெண்ணான ஹாசினி, தன்னுடைய பால்நிலை மற்றும் பாலியல்பு குறித்து புரிந்துகொள்வதில் இணையம் குறிப்பிடத்தக்க பங்காற்றியிருப்பதாகத் தான் கருதவில்லை எனவும், எவ்வித பங்களிப்புமே செய்யவில்லை என்பதற்கு 1, 10இற்கு ஆகக்கூடியளவு என்ற அளவுகோலில், 4இனை வழங்கலாம் எனக்கூறினார். பால்நிலை மற்றும் பாலியல்பு, சிஸ் பால்நிலையாகவும் எதிர்ப்பாலீர்ப்பாகவும் இல்லாதிருக்கும் போது தன்னிச்சையாகவே புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கின்றதென்பது குறிப்பிடத்தக்கவிடயமாகும். இந்த அடையாளங்களைக் கேள்விக்குட்படுத்துபவரைத் தவிர ஒரு சிஸ்-எதிர்ப்பாலீர்ப்பு உடையவருக்கு இக் கேள்வியானது அநேகமாக பொருத்தமற்றதாக இருந்தது. இவர் அதனைக் கேள்விக்குட்படுத்தவில்லை. ஆயினும் ஹாசினி, அறிவுவிருத்தியுடன் தொடர்புடைய மாற்றுத்திறனாளியான தனது சகோதரி எதிர்கொள்ளக்கூடிய அல்லது எதிர்கொள்கின்ற பால்நிலை மற்றும் பாலியல்பு தொடர்பிலான பிரச்சனைகளைப் புரிந்துகொள்வதற்கு இணையம் உதவியதாகக் கூறினார்.

பதிலளித்தோர் இணையத்திற்கும், பால்நிலை மற்றும் பாலியல்பிற்குமிடையிலான உறவினைக் குறித்தும் அவர்களின் புரிந்துணர்விற்கு உதவியாக இருக்கின்ற இணையத்தின் பெறுமதி குறித்தும் தெளிவாக இருக்கின்றபோதும், அடுத்துவரும் பகுதியில் இவ்வுறவானது இணையத்தில் தன்னிச்சையாகவே சுதந்திரமான வெளிப்பாடாக மாறுவதில்லை என்பதனை விவரிக்கின்றது.

**பதிலளித்தோரில் 50% இற்கும் அதிகமானோர் தம்முடைய இணையத்தினை அணுகக்கூடியதன்மையானது, அவர்கள் எவ்வாறு பால்நிலை மற்றும் பாலியல்பு தொடர்பில் புரிந்துகொண்டிருந்தார்கள் என்பதையும், வேறுபட்ட பால்நிலைகளையும், பாலியல்புகளையும் எவ்வாறு தெரிந்துகொண்டிருக்கிறார்கள் என்பதையும், மாற்றியிருப்பதாக உற்சாகமாக ஏற்றுக்கொண்டனர்.**

## சுய-வெளிப்பாடும் சுய-தணிக்கையும்

சுய-வெளிப்பாடு தொடர்பிலான எமது கேள்விகள் பால்நிலை அடையாளம் மற்றும் பாலியல்புகளின் வெளிப்பாடு மற்றும் நடத்தைகளுடன் மட்டுமே மட்டுப்படுத்தப்படவில்லை. இப்பகுதி இணையத்தில் வெவ்வேறுபட்ட வடிவங்களில் இடம்பெறும் வெளிப்பாடுகள் தொடர்பில் கவனஞ்செலுத்துகின்றது.

முப்பத்தியிரண்டு வீதமான சிஸ்பெண்களும் 50% வீதமான திருநங்கைகளும் அவர்களது சுயவெளிப்பாட்டில் இணையத்தின் பங்கினை 10ஆகக் கணிப்பிட்டனர் (1–10 வரையான அளவீட்டில் 10 உயர்வானது). அதேவேளை இதே கேள்விக்குப் பதிலளித்த 22 வீதமான சிஸ் ஆண்கள் மட்டுமே இணையத்தின் பங்கு தொடர்பில் 10இனைக் கணிப்பிட்டிருந்தனர். அதே அளவீட்டில் பதிலளித்தோரில் 100இல் 35 பேர் சுய-வெளிப்பாட்டிற்கு அவசியமான தளமாக இருப்பதில் இணையத்திற்கு 10இனைக் கணித்தனர். இதில் 23 பேர் 30 வயதானவர்களாகவோ அல்லது அதைவிடக் குறைந்தவர்களாகவோ இருந்தனர் (71%). ஆயினும் இணையப்பாவனை எவ்வளவு பிரியத்துக்குரியதாக இருந்தது என்பதற்கு, அனைத்து வயதுக்குழுக்களையும் சேர்ந்த அதிகளவிலானவர்கள் 1 தொடக்கம் 10 வரையிலான அளவீட்டில் 5இனைக் கணித்திருந்தனர் -அதாவது பதிலளித்தோரில் 100இற்கு 25 பேர், இவர்களில் 48வீதமானவர்கள 30 அல்லது அதை விடக்குறைந்த வயதுடையவர்களாக இருந்தனர். கீழே விளக்கப்படத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதுபோல இணையப்பாவனையினால் ஏற்பட்ட அனுபவத்திற்குப் பெறப்பட்ட கணிப்பீடுகள் கலந்து காணப்படுகின்றன. ஏனைய பதில்கள் பெரும்பாலும் அளவீட்டில் 6இற்கும் 10இற்குமிடையில் சமனாக பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன.

**வயதினடிப்படையில் சுயவெளிப்பாட்டிற்கு இணையப்பாவனையின் அவசியம் 1-10 வரையான அளவீட்டில்**




*உரு 12: வயதினடிப்படையில் சுயவெளிப்பாட்டிற்கு இணையப்பாவனையின் அவசியம் 1-10 வரையான அளவீட்டில்*

**1-10 வரையான அளவீட்டில் இணையத்தினைப் பயன்படுத்துவது எந்தளவிற்கு மகிழ்வானது? (வயதினடிப்படையில்)**




*உரு 13: வயதினடிப்படையில் இணையத்தினைப் பயன்படுத்துவது எந்தளவிற்கு மகிழ்வானது?*

< 25 | 25–30 | 31–35 | 36 – 40 | > 40

நேர்காணலில் பங்குபற்றியோரிடமிருந்து பெற்றுக்கொண்ட பதில்கள், இணையத்தில் சுய-வெளிப்பாட்டிற்கும்/அல்லது சுய-தணிக்கைக்குமான காரணங்கள் சிக்கலானதாகவும், ஒருவருக்கொருவர் அவர்களின் அடையாளங்கள், அவற்றுடன் குறுக்குவெட்டும் சலுகைகள், ஒடுக்குமுறைகள் மற்றும் ஏற்றத்தாழ்வுகளுக்கேற்ப வேறுபட்டதாகவும் இருக்கின்றது என்பதனைக் காட்டியது. உதாரணமாக ஒரு திருநராயிருப்பதை விடவும், வெளிப்பாட்டிற்கான வெளி சிஸ்பால்நிலைக்குரியவருக்கு அதிகமானதாக இருக்கலாம். சிஸ்பால்நிலையிலும், நீங்கள் ஆணா பெண்ணா என்பதைப் பொறுத்து உங்களுக்கு வேறுபட்ட அளவுகளில் வெளிப்படுத்துவதற்கு ஏதுவான நிலை காணப்படும்.



சிஸ் பால்நிலை பெண்ணான ஹாசினி, தன்னை வெளிப்படுத்த விரும்பினால் இணையத்தில் அநேக மக்களுக்குத் தன்னை வெளிப்படுத்துவதை விடவும் நேருக்கு நேரான உரையாடல்களையே தன்னுடைய கண்ணோட்டத்தினை வெளிப்படுத்த விரும்புவதாக குறிப்பிட்டார். நேருக்கு நேரான உரையாடல்களின்போது அவர் பாதுகாப்பாக உணர்கின்றார். அதேவேளை சிஸ்-எதிர்ப்பாலீர்ப்பு ஆணான, இனச்சிறுபான்மையை சேர்ந்தவரான விஜய் தனது இனத்துவமானது, இணையத்தினை அணுகுவதற்கான தன்மையை, விசேடமாக சிஸ் எதிர்ப்பாலீர்ப்புடையவராய், அவருக்கிருக்கும் சலுகைகளுடன் நோக்கும்போது, பாதிக்கவில்லை எனக்கருதுகிறார்.

*“நான் என்ன சொல்கிறேன் என்றால், என்னுடைய எந்தவொரு அடையாளத்திற்காகவும் நான் இணையத்தினைப் பயன்படுத்துவதை யாரும் தடைசெய்யவில்லை”*

ஆனால் அரசு தடையைக் கொண்டுவரும்போது அது அனைவருக்குமானது. அனைவரும் பாதிக்கப்படுகின்றார்கள். எனவே, தனிப்பட்ட ரீதியில் எதுவும் பாதிக்கப்படவில்லை என்றே நான் கூறுவேன். விஜய்க்கு, இணையவழியில் தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வேகம், அவ்வேகம் எவ்வாறு தூரத்தினால் ஏற்படும் தடைகளை உடைத்து துரிதமான தொடர்பாடலுக்கு வழிவகுக்கின்றது என்பன போன்றவை இணையத்தில் அதிகளவு வெளிப்பாட்டினை மேற்கொள்வதற்கு உகந்த காரணிகளாகும்.





ஹிரன் ஒரு பிரபல்யமான Youtuber ஆகும். இவர் தனது Channel இனை ஆரம்பித்ததிலிருந்தே தன்னுடைய குயர்த்தன்மை குறித்து வெளிப்படையாக இருந்துவருகிறார். அவருடைய பால்நிலை அடையாளமும், பாலியல்பும் எவ்வாறு இணையத்தினால் பாதிக்கப்பட்டிருக்கின்றது என்பது குறித்து வினவியபோது, அவர் தன்னுடைய அடையாளத்தினை ஏற்றுக்கொள்வதையும், சௌகரியத்துடன் முழுமையாக அவருடைய அடையாளத்தினை வெளிப்படுத்துவதையும் வேறுபடுத்தினார். வளரும்போதே தன்னுடைய பாலியல்பு பற்றி அவர் அறிந்து அதனை ஏற்றுக்கொண்டிருந்தாலும், தனது Youtube காணொளிகளுக்கும், சமூகவலைத்தள வருகைக்கும் கிடைத்த பதில்களே தன்னுடைய அடையாளத்தினை வெளிப்படுத்துவதில் அவரை சௌகரியமாக உணரச்செய்ததாகக் கூறினார்.

எதிர்ப்பாலீர்ப்புடைய பெண்ணாக தன்னை அடையாளப்படுத்துகின்ற லக்ஷ்மி, உதாரணமாக, முகநூலில் பெண்ணாக அவரது அடையாளம் அந்த தளத்தினைப் பயன்படுத்துவதை சிரமமானதாக்குவதாகக் கூறினார். அவர் மற்றைய பெண்கள் விரும்புவதைப் போல தானும் தன்னுடைய மேலும் பல படங்களைப் பதிவிட விரும்புவதாகக் கூறினார். ஆனால் அவரும், அவருக்குத் தெரிந்த ஏனைய பெண்களும், அவர்கள் எதிர்கொள்ள நேர்கின்ற கருத்துக்கள் மற்றும் தாக்குதல்கள் காரணமாக அவ்வாறு செய்வதில்லை எனக் கூறினார். அவர் ஒரு படத்தினைப் பதிவேற்ற முன் பல தடவைகள் அது தொடர்பாக சிந்திக்கவேண்டி இருக்கின்றது. அவர் தன் ஆர்வத்தினைத் தூண்டுகின்ற பெண்ணிலைவாத அரசியல் தொடர்பிலான கட்டுரைகளைப் பகிர்ந்துகொண்டால், அவர் அநேக “தேவையற்ற கருத்துக்களைப்” பெறுகின்றார்.

*“சிலவேளைகளில் அத்தகைய கருத்துக்களைத் தவிர்ப்பதற்காக, நான் முகநூலில் எதையும் பகிர்ந்துகொள்வதில்லை. ஆனால் இத்தகைய தேவையற்ற கருத்துக்களைத்*





**“எனக்கு மெதுவான பதகளிப்பு இருக்கின்றதென நினைக்கின்றேன். எனவே என்னால் பிறரிடமிருந்து வருகின்ற பதில்களை அல்லது கருத்துக்களை எதிர்கொள்ள முடியாது அதனால் நானே என்னை மட்டுப்படுத்திக்கொள்கின்றேன். இதனால் முன்பின்னான பதில்களையோ, விடயங்கள் மக்களால் எவ்வாறு உள்வாங்கிக்கொள்ளப்படுகின்றன என்பதையோ எதிர்கொள்ளத்தேவையில்லை.”**

*தவிர்ப்பதற்காக சில விடயங்களைப்பற்றி நான் எழுதாவிட்டாலும், எப்படியோ முகநூலில் தொடர்ச்சியாக எழுதிக்கொண்டிருக்கின்றேன்.”*

லக்ஷ்மி, இணையம் சுயவெளிப்பாட்டிற்கு உதவுவதாக நினைக்கின்றார். ஆனால் அவர் தன்னை வெளிப்படுத்துகின்ற ஒரே தளம் அதுமட்டுமல்ல. அவர் குழுஉரையாடல்கள் போன்ற நேருக்கு நேரான உரையாடல்களை அதிகம் விரும்புகின்றார். ஏனெனில், அங்கு அவர் தெளிவாகவும், நம்பிக்கையுடனும் தன்னை வெளிப்படுத்தமுடியுமென உணர்கின்றார்.

பிரதானமாக ஆங்கிலத்திலேயே பேசுகின்ற, ஆங்கிலத்திலேயே இணையத்தையும் பயன்படுத்துகின்ற ஹாசினி, மூன்று காரணங்களுக்காக தன் இணையப்பாவனையை மட்டுப்படுத்துவதாகக் கூறுகின்றார்: “ஏனெனில் நான் ஒரு பெண், நான் ஒரு சிறிய நகரத்தில் வாழ்கின்றேன், சிறுபிள்ளைகளை உள்ளடக்குகின்றதான ஓர் தொழிலைச் செய்கின்றேன்”. மேலும் அவர் கூறும்போது, இதற்கான ஒட்டுமொத்தமான பிரதான காரணம் எதுவென்றால், பதகளிப்பினைக் கையாண்டு வருகின்ற ஒரு நபராக தனது உளசுகாதாரத்தினை மோசமாக்குகின்ற ஒரு வெளியாக தான் இணையத்தினைக் காண்பதாகவும், அதனால் அவர் தன்னுடைய இணையப்பாவனையையும், ஈடுபாட்டினையும் மட்டுப்படுத்துவதாகவும் கூறினார்.

“எனக்கு மெதுவான பதகளிப்பு இருக்கின்றதென நினைக்கின்றேன். எனவே என்னால் பிறரிடமிருந்து வருகின்ற பதில்களை அல்லது கருத்துக்களை எதிர்கொள்ள முடியாது. அதனால் நானே என்னை மட்டுப்படுத்திக்கொள்கின்றேன். இதனால் முன்பின்னான பதில்களையோ, விடயங்கள் மக்களால் எவ்வாறு உள்வாங்கிக்கொள்ளப்படுகின்றன என்பதையோ எதிர்கொள்ளத்தேவையில்லை. அத்துடன் மக்கள் நீங்கள் என்ன சொல்ல முயற்சிக்கின்றீர்கள் என்பதைப்புரிந்துகொள்வதுமில்லை - நீங்கள் காலணித்துவத்திற்கெதிரான ஏதாவதொன்றினைப் பதிவிட்டால், அவர்கள் அப்ப நீங்கள் வெள்ளைக்காரரை வெறுக்கின்றீர்களா? என்று கேட்பார்கள். சிலவேளைகளில் அதற்குப் பதிலெழுதக்கூடியளவில் நான் இருப்பதில்லை.



*"கருத்துக்கள் மேலோட்டமானவையாக இருக்கக்கூடும் மக்கள் அதைப்பற்றிக்கவலைப்படுவதில்லை. ஆனால் மக்கள் என்னை எவ்வாறு விளங்கிக்கொள்கின்றார்கள், மக்கள் என்ன நினைக்கின்றார்கள், அவற்றின் விளைவுகள் என்ன என்பனவற்றை நான் உள்வாங்கிக்கொள்கின்றேன் என நினைக்கின்றேன். நான் ஒரு பெண், நான் எங்கு வசிக்கிறேன் என்பது அவர்களுக்கு தெரியும், எனவே இப்படி நடந்தால் என்னவாகும்? அப்படி நடந்தால் என்னவாகும்? என என்னுடைய பதட்டத்திற்கு இவை தீனிபோடும். இதனால் என்ன நடக்குமென்றால், நான் எதையாவது பதிவேற்றும் போது என்னுடைய மனதில் தேவையற்ற சுமை ஏற்படும். அதனால் நான் அவற்றைக் குறைத்துக்கொள்கின்றேன்"*

அதற்குமாறாக திவ்யா, தான் இணையவழியில் சந்தித்த சில சமூகங்களுடன், தன்னை மிகவும் நலிவடைந்தநிலையில் வெளிப்படுத்தக்கூடியளவிற்கு சௌகரியத்துடன் தன்னைப்பற்றி அதிகம் பேசக்கூடியவாறான ஒரு நிலையை அடையவேண்டுமென விரும்புகின்றார். மூடப்பட்ட குழுக்களில், இணையவழியில், ஒத்துணர்வும் ஆதரவும் பெறமுடியும் என அவர் கண்டுணர்கின்றார். அவர் ஒரு தனிப்பட்ட அனுபவத்தினைப் பகிர்ந்துகொண்ட பின்னர், மூன்றாம் நபராக இருந்தபோதும், யாரோ ஒருவர் தன்னை அணுகி, எந்த அளவிற்கு அது உதவியாக இருந்தது எனக்கூறியிருக்கிறார். அவர் ஒரு மூடிய குழுவில் பதிவிடும் போது தீர்ப்பிடப்படுவதற்கான சாத்தியம் குறைவாக இருப்பதாகவும், மாறாக ஒத்துணர்வு மற்றும் ஆதரவினைப்பெறுவதற்கான சாத்தியம் அதிகம் இருப்பதாகவும் கூறுகிறார். ஆயினும் தனது Profile ஒன்று அண்மைக்காலத்தில் தவறுதலாக செயல்முடக்கம் செய்யப்பட்டபோது, "இதுதான் வாழ்க்கையில் நடக்கக்கூடிய மிகமோசமான விடயம்" என்ற உணர்வினைத் தனக்குள் ஏற்படுத்தியது என்பதை விபரித்து, தான் இணையவழி வாழ்க்கையில் தங்கியிருப்பது தொடர்பில் ஓரளவிற்குப் போராடவேண்டியிருந்ததாகவும் கூறினார்.



*"நான் புத்தியிழந்த நிலைக்கே போய்விட்டேன் - எனக்கு நடக்கக்கூடிய மிக மோசமான விடயம் இதுவாகத்தான் இருக்கும் - இன்னுமொருதடவை அத்தகைய முயற்சிகளனைத்தையும் செய்து மீண்டும் என்னால் நண்பர்களைக் கண்டுபிடிக்கமுடியாது என நினைத்தேன் - என்னுடைய கருத்துக்கள் மற்றும் விடயங்களைக் கூட காப்புப்பிரதி (Backup) செய்துவைக்கவில்லை என்பதை உணர்ந்தேன் - எனது Profileஇனை மீளப்பெற்றபோது, அது குழப்பப்பட்டிருந்தமையைக் கண்டபோது, அது எத்தகைய மோசமானது எனவும் உணர்ந்தேன் - இந்த தங்கியிருக்கும்தன்மை எனக்கு பயத்தினை உண்டுபண்ணியது"*



இணையவழியில் கருத்தாய்வினைப் பூர்த்திசெய்கையில் சுய-வெளிப்பாட்டிற்கான தளமாக இணையத்தின் முக்கியத்துவத்தினை 5ஆகக் கணித்த செல்வி, ( 1, லிருந்து 10வரையான அளவீட்டில்) பின்னர் மேற்கொண்ட நேர்காணலின் போது அவருடன் பேசுகையில், அதனை 3 ஆகக் குறைத்துக்கொண்டார். இணையம் ஒருவர் தன்னை சுதந்திரமாக வெளிப்படுத்துவதற்குக் கடினமான இடம் எனக் கூறினார். முகநூலில் தனக்கு இருக்கின்ற அனைத்து நண்பர்களும் நிஜவாழ்வில் தன்னுடைய நண்பர்களாக இருக்கவேண்டிய அவசியமில்லையெனவும், அதுபோல "நிஜ-வாழ்வில்"நண்பர்களாயிருக்கின்றவர்கள் அனைவரும் முகநூலில் நண்பர்களாக இல்லையெனவும் கூறினார். அதனால் அவர் நேரில் தன்னை அதிகம் வெளிப்படுத்துவதாகவும், இணையம் அவருக்கு சுயவெளிப்பாட்டிற்கான தளமாக பெரியளவில் முக்கியத்துவமற்றதாகவும் அதனால் இணையத்தில் பதிவுகளையும் தகவல்களையும் பகிர்ந்துகொள்வதைக் குறைத்துக்கொண்டதாகவும் கூறினார்.



சிஸ் பால்நிலை எதிர்ப்பாலீர்ப்புடைய பெண்ணான கிறிஷானிக்கு, சுதந்திரமென்பது தான் சிரத்தையுடன் தெரிவுசெய்த குறிப்பிட்டளவான நபர்களின் வட்டத்தினுள் தான் இருக்கின்றதென தெரிகின்றபோதும், Offline வாழ்வில் அனுபவிக்காத வெளிப்பாட்டிற்கான சுதந்திரத்தினை, இணையவழியிலான வெளி வழங்குவதாகக் கூறுகின்றார். தான் கூறும் சில விடயங்களால் தனக்குத்தெரிந்த சிலர் தாம் அவமதிக்கப்படுவதாகக் கருதக்கூடும் என்பதனால் தான் offline வாழ்வில் தணிக்கை செய்துகொள்ளப் பழகியதாகவும், ஆனால் இணையவழியில் அந்தளவிற்குச் செய்யவேண்டியதில்லை எனவும் கூறினார் -அவரது timeline இல் அவர் என்ன கூறுகிறார் என்பதை அவரால் கட்டுப்படுத்தக் கூடியதாயுள்ளது, அவர் விரும்பினால் சில விடயங்களை எதிர்க்கவும் முடியும்.



*"எனக்கென ஒரு குரல் உள்ளது. பொதுவெளியில் என்னை நான் வெளிப்படுத்துவதனைவிடவும், இணையத்தில் என்னை நான் அதிகளவில் வெளிப்படுத்துகின்றேன். இணையவழியில் என்னுடைய முகநூல் பக்கத்தில் எதையாவது பகிர்தல் அல்லது சிந்தித்து எதையாவது சொல்லுதல் ஒருவகையில் மிகவும் இலகுவானதாகவும் குறைந்தளவு அபாயத்தைக் கொண்டதாகவும் இருக்கின்றது. இதன்போது குறைந்தளவிலான எதிர்வினைகளே ஏற்படுகின்றது."*

எவ்வாறாயினும் அவரது முகநூல் பக்கத்திற்கு வெளியில், அவர் அதிகளவிலான எதிர்வினைகளை எதிர்கொள்ள நேரிடக்கூடும் என்பதையும் அவர் அறிந்திருக்கின்றார். ஆர்யா தான் கண்காணிக்கப்படுகிறாரா என்பது குறித்து நிச்சயமற்றவராக இருக்கின்றார். தனது கணக்கு ஊடுருவப்படலாம் என்கின்ற பயத்தினால் அவர் எந்தத் தகவலையும் தனது தொலைபேசியில் சேமித்து வைப்பதில்லை. அதனால் அவற்றை அகற்றி விடுகின்றார். அவர் whatsapp பாவனையையும் மட்டுப்படுத்திக்கொண்டதுடன், அத்தளத்தில் அதிகளவிலான தகவல்களையும் பகிர்ந்துகொள்வதில்லை. பாதுகாப்பு காரணங்களுக்காக அவரும் ஏனைய திருநர்களும் நேரடியாக சந்தித்து அவர்களுக்கிருக்கின்ற ஏதாவது பிரச்சனைகளை அல்லது அவர்கள் பேசவிரும்புகின்ற விடயங்களைப் பேசிக்கொள்ளவே விரும்புகின்றார்கள்.

*"அது உண்மையில் மிகவும் கடினமானது. நாம் தொலைபேசியினூடாகவோ, இணையத்தின்வாயிலாகவோ தகவல்களைப் பகிர்ந்துகொள்ள முடியாத காரணத்தினால், நாம் நேரில் சந்திக்கும்வரை காத்திருப்போம். அனைவரும் ஓரிடத்தில் சந்திப்பதற்கு நேரத்தை ஒதுக்க வேண்டியிருப்பதால் அப்படி சந்திப்பதற்கு நேரமெடுக்கும். இது மாற்றப்பட வேண்டும். பாதுகாப்பான பேச்சு சுதந்திரம் இருக்க வேண்டும்"*



விஜய், தனிநபர் பாதுகாப்பினைப் பாதிக்கின்ற இணையவழி வெளிகளைக் கட்டுப்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் தொடர்பில் பேசினார். அவர் இக் கட்டுப்பாட்டினை "அரசியல் அல்லது வேறுவகையிலானவை" எனவும், அனைத்தும் பதிவுசெய்யப்படுவதாகவும், கண்காணிக்கப்படுவதாகவும்,

**"அது உண்மையில் மிகவும் கடினமானது. நாம் தொலைபேசியினூடாகவோ, இணையத்தின்வாயிலாகவோ தகவல்களைப் பகிர்ந்துகொள்ள முடியாத காரணத்தினால், நாம் நேரில் சந்திக்கும்வரை காத்திருப்போம். அனைவரும் ஓரிடத்தில் சந்திப்பதற்கு நேரத்தை ஒதுக்க வேண்டியிருப்பதால் அப்படி சந்திப்பதற்கு நேரமெடுக்கும். இது மாற்றப்பட வேண்டும். பாதுகாப்பான பேச்சு சுதந்திரம் இருக்க வேண்டும்"**



இதை அனைத்து அதிகாரிகளும் தெரிந்துகொள்வார்கள்” எனவும் அடையாளம் காண்கின்றார். இதன்காரணமாக அவர் இணையவெளியைப் பயன்படுத்தும் விதமானது அவராகவே இணையவழியில் சுய-தணிக்கை செய்துகொள்வதாக மாற்றமடைந்திருக்கின்றது.

*“நான் இணையவெளிகளில் மிகவும் கவனமாக இருக்கின்றேன். பாலியல்பு தொடர்பிலான பிரச்சனைகளென்று வரும்போது இணையத்தில் பல பாதுகாப்பான வெளிகள் இருப்பதாக நான் உணர்கின்றேன். ஆனால் அரசியலுடன் தொடர்புடைய விடயங்களென்று வரும்போது இணையம் பாதுகாப்பற்றதென உணர்கின்றேன்.”*

இணையத்தில் இருப்பதையும், அதனைப் பயன்படுத்துவதையும் மட்டுப்படுத்தும் காரணங்களில் ஒன்றாக அடிக்கடி குறிப்பிடப்பட்டவற்றில் குடும்பமும் ஒன்றாகும். எதிர்ப்பாலீர்ப்புடைய திருநங்கையான ஆர்யாவிற்கு, அவருடைய பெற்றோர் மற்றும் இப்போது அவருடைய காதலர் போன்றோரே இணையவழியில் அவருடைய இணையப்பாவனையை மட்டுப்படுத்தக்காரணமாக இருக்கின்றனர். ஹாசினிக்கு -



*“என்னுடைய துணையின் உறவினர்கள் சமூகவலைத்தளங்களில் இருக்கின்றார்கள். அவர்கள் என்னைப்போல் தாராளவாதிகளில்லை. எனவே ஏதாவது நடந்தால் அவர்கள் வேறு ஏதாவது நினைப்பார்கள் - அட கடவுளே இவள் மிகவும் வாய்க்காறி, அட கடவுளே இவள் என்ன ஒரு செயற்பாட்டாளரா”.*

திவ்யா அவரது குடும்பத்தினர் Twitter இலும் Tumblr இலும் இல்லையென்கின்ற காரணத்தினால், இத்தளங்களில் மிகவும் சௌகரியமாக உணர்கின்றார். அதனால் அவரது பாலியல் நாட்டமான ஈர்பாலீர்ப்பு உள்ளடங்கலாக, அவரது அடையாளம் தொடர்பில் மிகவும் சுதந்திரமாக இருக்கமுடியும். அவரது குடும்பத்தினர் முகநூல் மற்றும் Instagram போன்ற தளங்களில் இருப்பதனால், அத் தளங்களை இவர்





பகுதியளவில் முடக்கிவைத்திருப்பதுடன், அவர் ஒரு பார்வையாளரைப் போல உணர்கின்றார் - நிராகரிக்கப்படக்கூடுமென்ற பயத்தின் காரணமாக, அவரைப்பற்றி எவ்வித பதிவுகளையும் இடுவதற்கோ, முழுமையாக அவரை வெளிப்படுத்துவதற்கோ இயலாது. அவர் LGBTQ+ மக்களுடைய பிரச்சனைகள் தொடர்பில் சேவையாற்றுகின்றார் என்பது அவருடைய குடும்பத்தினருக்குத் தெரியும். ஆயினும் அவரே தன்னை ஒரு ஈர்பாலீர்ப்பாளராக அடையாளப்படுத்துகின்றார் என்பது அவர்களுக்குத் தெரியாது.



எதிர்ப்பாலீர்ப்புடைய திருநங்கையான ஷிராணி, குடும்பத்தினைக் குறித்து ஆர்யாவினுடைய கவலைகளைப் பகிர்கின்றார். அவர் முகநூலில் நிலைமாற்றத்திற்கு முன் சிஸ் ஆணாக இருந்தார். அவர்நிலைமாற்றத்திற்குள்ளாக ஆரம்பித்தபோது அவர் எப்போதாவது தனது சேலையணிந்த புகைப்படத்தினைப் பதிவிடுவார். எது எவ்வாறாயினும், அவர் தன்னுடைய பால்நிலை அடையாளத்தை வெளிப்படுத்தியமைக்காக எதிர்மறையான கருத்துக்களையே பெற்றார். இதில் குறிப்பிடத்தக்க விடயமென்னவென்றால் அவற்றில் அநேகமானவை குயர் சமூக அங்கத்தவர்களிடமிருந்தே வந்திருந்தது. இவற்றுடன், தன்னுடைய பால்நிலை அடையாளத்தின் மேல் அதிகளவிலான கவனத்தினைக் குவிப்பது தன் கணவனுடைய குடும்பத்திற்கு அவப்பெயரினை ஏற்படுத்தக்கூடும் என்கின்ற அவரது ஆட்சேபனையும் இணைந்து, அவரை அவரது தற்போதைய முகநூல் கணக்கில் தணிக்கை செய்துகொள்ள நிர்ப்பந்தித்தது. அவர் HIV சிகிச்சை மற்றும் திருநர் உரிமைகள் தொடர்பிலான அவரது பணிநிமித்தமான விடயங்களைப் பகிர்ந்துகொள்ள முகநூலினைப்பயன்படுத்துகின்ற அதேவேளை, எதிர்மறையான கருத்துக்களுக்கு இட்டுச்செல்லக்கூடிய தன்னுடைய தனிப்பட்ட புகைப்படங்களைப் பகிர்ந்துகொள்வதனைத் தவிர்த்து வருகின்றார்.

நேர்காணல் செய்யப்பட்டவர்களில் சிலர், தமது இனத்துவம் இணையவழி வெளிகளில் செல்வாக்குச் செலுத்திய அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டிருந்தபோதும், இக் கற்கையின் வரையறைகளில் ஏற்கனவே



விவரிக்கப்பட்டுள்ளது போல கருத்தாய்வில் இனச்சிறுபான்மையினராக அடையாளம் காணப்படுவதென்பது இலகுவில் புரிந்துகொள்ளக்கூடியவகையில் பிரதிபலிக்கப்படவில்லை. திவ்யா முகநூலில் இருந்தபோது அவருடைய பெயரின் மூலம் அவரை தமிழராக அடையாளங்காண்பது தொடர்பில் அசௌகரியமாக உணர்ந்ததினால், அவர் தனது Profile பெயரினை மாற்றினார். ஏனெனில் அவர் அதனை தனது முழுமையானதொரு அடையாளமாக உணரவில்லை.



இலங்கையின் கிழக்குப்பகுதியைச் சேர்நத செல்வி தமிழராக தனது இனத்துவ அடையாளம் எவ்வாறு இணையவழி உரையாடலொன்றில் ஈடுபடுத்தப்பட்டது என்பது குறித்து ஒரு உதாரணத்தினை வழங்கினார். 2018இல் திகனவில் இடம்பெற்ற முஸ்லிம்களுக்கெதிரான கலவரத்தின்பின்னர், அவர் முஸ்லிம்களுக்கெதிரான வன்முறை குறித்து இணையவழிப் பதிவொன்றில் கேள்வியெழுப்பினார். தமிழ் மக்கள் அந்தப் பக்கத்தில் கருத்துத்தெரிவித்ததுடன், தனிப்பட்டரீதியில் உள்பெட்டியிலும் ஏன் இவர் முஸ்லிம்களுக்கு ஆதரவாக இருக்கின்றார் என கேள்வியெழுப்பியதுடன், அதற்காக அவர் இணையவழியில் தாக்குதலுக்கும் ஆளாக்கப்பட்டார். அண்மையில் முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்திருத்தம் கோரி, தமிழ் மற்றும் முஸ்லிம் செயற்பாட்டாளர்கள் ஒன்றிணைந்து நிகழ்த்திய போராட்டத்தில் இவரும் பங்குபற்றியபோது எடுக்கப்பட்ட அந்திகழ்வின் புகைப்படங்களை இணையத்தில் பதிவிட்டார். இதற்காக இரண்டு சமூகங்களிடமிருந்தும் எதிர்வினையை பெற்றுக்கொண்டார்.

> *“சில தமிழர்கள் நான் ஏன் முஸ்லிம்களின் விடயத்தில் தலையிடவேண்டும், அது என்னுடைய வேலையல்ல எனக் கூறினார்கள். சில முஸ்லிம்களும் இதையே தான் என்னிடம் கேட்டார்கள்”.*



கிறிஷானி தான் இணையவழியில் விடயங்களை எவ்வாறு கூறுகின்றார் என்பது குறித்து கவனமாக இருக்கின்றார் ஆயினும், அவர் தான் ஒரு சிங்கள நபராக இருப்பது சாதகமானதாக இருக்கக்கூடும் என உணர்கின்றார். உதாரணமாக, போருக்குப் பின்னரான நல்லிணக்கம் தொடர்பில் இணையவழியில் பகிரப்பட்ட காணொளி ஒன்றில் வெளிப்படையாக தன்னால் பேசக்கூடியதாக இருந்ததாக உணர்கின்றார். அவருடன் தனிப்பட்ட ரீதியில் பேசிய தமிழ், முஸ்லிம் நண்பர்கள் தமது இனத்துவ அடையாளத்தினடிப்படையில் இணையவழியில் தாக்குதலுக்குள்ளாகலாம் என்ற பயத்தின் காரணமாக தம்மால் இவ்வாறு பேசமுடியவில்லை எனக்கூறினர்.

## வெளிப்பாடு மற்றும் நடத்தை வெளிப்பாடு

நேர்காணல்களின்போது, பதிலளித்தோரில் சிலர் விழுமியங்கள் தொடர்பிலும் இணையத்தில் வெளிப்படுத்தப்படுபவை நடத்தைகளாக மாறும் போது ஏற்படும் சவால்கள் - அல்லது சில வெளிப்பாட்டு வடிவங்கள் உண்மையில் நடத்தைகளே என்கின்ற உண்மை தொடர்பிலும் பிரதிபலிப்புக்களை மேற்கொண்டனர்



திவ்யா இணையவழியில் 'ஒருவரை எப்போதும் திருத்தத்திக்கொள்வதற்கு ஏதுவாக இருக்கும் நிலை' யானது, offline வாழ்விலும் பரவுதல் தொடர்பில் பேசினார்.

*"யாராவது ஒருவர் இருக்கும்போது, நீங்கள் எதையாவது சிறப்பாக தோற்றவைக்கிறீர்கள் அல்லது மோசமானதாக்குகின்றீர்கள் - உங்களை யாரோ பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதால் நீங்கள் அதிகமுயற்சியை மேற்கொள்கிறீர்கள். அந்த மாற்றமேதுமற்ற நிலையான இணையவழி மதிப்பீடு offlineஇலும் உங்கள் ஆளுமையைப் பாதிக்கின்றது. நிஜவாழ்வில் யாராவது ஒருவருடன் பேசும்போது தொடர்ச்சியாக நீங்கள் உங்களை சரி பிழை பார்த்து திருத்திக்கொள்கின்றீர்கள். நாம் பிரக்ஞையுடன் அது குறித்து சிந்திப்பதில்லையாயினும், அது அப்படித்தான் இருந்துகொண்டிருக்கின்றது".*

விரானுடைய இருமையல்லாத அடையாளத்தினை offline இல் திசைப்படுத்துவதிலும் பார்க்க இணையவழியில் திசைப்படுத்திக்கொள்வதற்கு குறைந்தளவிலான சிக்கலே உள்ளது என இவர் திவ்யா கூறியதற்கு மாறான பிரதிபலிப்பினை மேற்கொண்டார். அனைத்து பால்நிலை வெளிப்பாடுகளுமே நடத்தை வெளிப்பாடுகள் தான், இந்த நடத்தை வெளிப்பாடுகளை மிகவும் நேர்மையாக மேற்கொள்வதற்குரிய வெளியினை இணையம் வழங்கமுடியும் அதேவேளை offline இல் நீங்கள் நடத்தை வெளிப்பாடுகளை மேற்கொள்ளும் போது அநேகமாக சமூகத்தில் வேறுபட்டுத்தெரிவதற்காக அன்றி, சமூகத்துடன் ஒத்துப்போவதற்காக அதைச் செய்கின்றீர்கள் என்பதனை






**"பால்நிலை நடத்தை வெளிப்பாடுகள் நிஜவாழ்வில் தேர்ந்தெடுக்கப்படக்கூடியவையல்ல, அவை தப்பிப்பிழைத்திருப்பதற்கான தேவையிலிருந்து உருவாகின்றவை"**

அவதானித்து, "பால்நிலை நடத்தை வெளிப்பாடுகள் நிஜவாழ்வில் தேர்ந்தெடுக்கப்படக்கூடியவையல்ல, அவை தப்பிப்பிழைத்திருப்பதற்கான தேவையிலிருந்து உருவாகின்றவை", என அவர்கள் கூறினர்.


ஆகையால், பதிலளித்தோர் தனிப்பட்ட ரீதியில் அவர்களுடைய பால்நிலை மற்றும் பாலியல் அடையாளங்களைப் புரிந்துகொள்வதிலும்/அல்லது மற்றையவர்களுடைய பால்நிலை மற்றும் பாலியல் அடையாளங்களைப்பற்றிய கருத்துக்கள் அல்லது புரிந்துணர்வுகளை மாற்றிக்கொள்வதிலும், இணையத்தினதும் இணையவழி வெளிகளினதும் பெறுமதியினைக் கண்டடைந்திருக்கின்றார்கள். அவர்களுடைய அனுபவங்கள் அவர்கள் இணையவழியில் தம்மை வெளிப்படுத்துவதற்கு எந்தளவிற்கு சுதந்திரத்தை உணர்கின்றார்கள் என்பதைப் பொறுத்து குறிப்பிடத்தக்களவு வேறுபடுகின்றது. பலர் பாதுகாப்பு காரணங்களுக்காகவோ, மன அமைதிக்காகவோ அவற்றை சமரசம் செய்துகொள்ள வேண்டியிருக்கின்றது (இந்நிலை இனத்துவம் போன்ற ஏனைய காரணிகளாலும் செல்வாக்குச்செலுத்தப்படுகின்றது). பின்வரும் பகுதியில் உரையாடப்படுவதைப்போல பதிலளித்தோர் தம்மை வெளிப்படுத்துவதற்கான விருப்பமானது, அவர்களது வன்முறை அனுபவங்களுடனும், தொல்லைகள் மற்றும் துஷ்பிரயோகங்களுடனும் நெருக்கமாக பிணைந்திருக்கின்றது.



# இணையப்பாவனையும் இணையவழி வெளிப்பாடும்

*வன்முறை, தொல்லை, துஷ்பிரயோகம்*

இலங்கையில் முகநூல் பக்கங்களை சிங்கள, தமிழ், மற்றும் ஆங்கில மொழிகளில் கண்காணித்த கோஷா மற்றும் Groundviews and Hashtag Generation இனால் 2019இல் வெளியிடப்பட்ட அறிக்கையானது, LGBTQ+ மக்களையும், பெண்களையும் நேடியாகவும், மறைமுகமாகவும் தொல்லைக்குள்ளாக்குகின்ற வகையிலான பாலினவாத, தன்பாலீர்ப்பு மற்றும் திருநர்களுக்கெதிரான பயத்தினை உண்டாக்கும் வகையிலான பேச்சு போன்றவற்றின் போக்குகளை அவதானித்தது. தண்டனைச்சட்டக்கோவை உள்ளடங்கலாக, நடைமுறையில் இருக்கின்ற சட்டங்கள் இத்தகைய வன்முறைகளை எதிர்கொள்ளப் பயன்படுத்தப்படமுடியும் (இணைப்பு 3), அதே தண்டனைச்சட்டக்கோவை தான் LGBTQ+ மக்களை குற்றமானவர்களாக்குகின்றது, அதனால் சட்ட மற்றும் சட்ட அமுலாக்க அதிகாரத்தினை விடுதலைக்கும் ஆறுதலடைவதற்குமான வழியல்லாததாக்குகின்றது. பதிலளித்தோரில் 62% ஆனவர்கள் துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கும் வகையிலான கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளுமிடத்திலிருந்து வந்திருக்கின்றனர். இது அதிக வீதத்திலான வன்முறைகள் முறையிடப்பட்டிருப்பதனைப் பிரதிபலிக்கின்றது. இரண்டாவது இடத்தில் (56%) இருக்கின்ற வன்முறை வடிவமாக, தேவையற்ற பாலியல் விளக்க அல்லது வன்முறையினூடாக பெண்களை இழிவுபடுத்துகின்ற வகையிலான படங்களைப் பெறுதல் காணப்பட்டது.



**துஷ்பிரயோகத்திற்குட்படுத்துகின்ற விதத்திலான கருத்துக்கள்**

- ஆம் 62.1%
- இல்லை 37.9%

*உரு 14: துஷ்பிரயோகத்திற்குட்படுத்துகின்ற விதத்திலான கருத்துக்கள்*

**சம்மதமின்றி தனிப்பட்ட தகவல்களைப் பகிர்தல்**

- ஆம் 39.8%
- இல்லை 60.2%


*உரு 15: சம்மதமின்றி தனிப்பட்ட தகவல்களைப் பகிர்தல்*

**பெண்களை இழிவுபடுத்துகின்ற விதமான நாகரீகமற்ற வன்முறையான படங்களைப் பயன்படுத்தல்**

- ஆம் 56.3%
- இல்லை 43.7%

*உரு 16: பெண்களை இழிவுபடுத்துகின்ற விதமான நாகரீகமற்ற வன்முறையான படங்களைப் பயன்படுத்தல்*

**பெண்கள் மட்டுமே இணையத்தில் தொல்லைகளுக்குட்படுத்தப்படுகின்றார்கள்**




*உரு 17: பெண்கள் மட்டுமே இணையத்தில் தொல்லைகளுக்குட்படுத்தப்படுகின்றார்கள்*



மேலுள்ள கூற்றினை அவர்களுடைய தனிப்பட்ட அனுபவம் மற்றும் அறிவினடிப்படையில் அளவிடுமாறு கேட்டபோது, பதிலளித்தோரில் 50% இற்கும் அதிகமானவர்கள் பெண்கள் மட்டுமே இணையவழியில் தொல்லைகளுக்காளாவதில்லை என ஏற்றுக்கொண்டனர். ஆயினும் ஏறக்குறைய 20□ ஆனவர்கள் அது சிலவேளைகளில் சாத்தியமாயிருக்கலாம் என நினைத்தார்கள். இணையவழியில் தான் காண்கின்ற பெண்களுக்கெதிரான வன்முறையானது, அன்றாட offline வாழ்விலுள்ள வன்முறைகளின் பிம்பமாகும் என விஜய் கூறினார். அவருடைய பெண்தோழிகள் இது குறித்து பேசுவதாகவும் அவர்கள் தாம் இணையவழியில் முகங்கொடுக்கும் வன்முறைகளுக்கு உதவிகோருவதாகவும், அவர் தகவல் தொழில்நுட்பப் (IT) புலத்தில் பணிபுரிவதால் தன்னிடம் உதவிகோரி வருவதாகவும், அவர்கூறினார்.

*"இணையத்தில் பெண்கள் தொல்லைகளை எதிர்கொள்வதென்பது உண்மை தான், அது நன்றாகத் தெரிந்த உண்மை. இது பாலியல் அல்லது பால்நிலை அடிப்படையிலான சிறுபான்மைக் குழுக்களுக்கும் நடக்கின்றது. அத்தகைய சூழ்நிலைகளில் சட்ட உதவியினைப் பெற்றுக்கொள்ள நாம் உதவிபுரிந்துள்ளதுடன் சாத்தியமான அனைத்து வழிகளிலும் ஆதரவளித்துள்ளோம்".*

ஹாசினியைப் பொறுத்தவரை, அவரது மொழிநடையில், "சலுகையின் அளவு" குறையும் போது மக்கள் எதிர்கொள்ளும் தொல்லையும் அதிகரிக்கின்றது. இது பெண்களால் மட்டுமே எதிர்கொள்ளப்படுகின்ற ஒரு விடயமல்ல. அவர் இணையவழியில் ஒருவரை எரிச்சலூட்டும் நோக்கத்துடன், அவமதிக்கும் வகையிலான செய்திகளைப் பதிவிடுதல்களையும், துன்புறுத்தல்களையும் துஷ்பிரயோகங்களையும் கையாள்வதற்கு இயலாதவர்களைக் குறித்தும் கவலையடைந்தார்.





லக்ஷ்மி தன்னுடைய இணையவழி அவதானங்களின்படி ஆண் அல்லது பெண் என்கின்ற இருமைக்கு அப்பாலான பால்நிலை வெளிப்பாடுகளை கொண்டிருக்கின்ற அல்லது எதிர்பாலீர்ப்பு அல்லாத பாலியல் நாட்டத்தினைக் கொண்டிருக்கின்ற மக்கள் அவற்றை இணையவழியில் வெளிப்படுத்தும்போது, குறிப்பிடத்தக்க அளவிலான தொல்லைகளுக்கும், விமர்சனங்களுக்கும் முகங்கொடுக்கின்றார்கள் எனக்கூறினார். “சிலவேளைகளில் உங்களால் பார்த்துத்தாங்கிக்கொள்ள முடியாதளவிற்கு அவை மிகவும் மோசமானவை”, என அவர் கூறினார். அவரது அனுபவத்தில் இத்தகைய சந்தர்ப்பங்களில் அனைத்துவிதமான எதிர்மறையான கருத்துக்களும் ஆண்களாலேயே உருவாக்கப்பட்டிருந்தன. லக்ஷ்மியைப் பொறுத்தவரை இணையத்தினுடைய மிக மோசமான பகுதி எதுவென்றால், பெண்கள் அதில் முகங்கொடுக்கும் தொல்லைகளாகும். துஷ்பிரயோகக் கருத்துக்களைத் தடுப்பதற்கான ஏதாவதொரு வழி அல்லது அவ்வெளிகளை பாதுகாப்பானதாக்குகின்ற இறுக்கமான கொள்கைகள் இருக்கவேண்டுமென அவர் விரும்புகின்றார்.



தன்னுடைய குயர்தன்மை குறித்து தனது channel இல் வெளிப்படையாக இருக்கின்ற இலங்கையில் பிரபலமான Youtuber ஹிரன், தனது ஆரம்பகால காணொளிகள் பெரியளவில் நேர்மறையானதாகவும் ஊக்கமளிக்கக்கூடிய வகையிலும் பார்வையாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும், அவருடைய பார்வையாளர்களின் அளவு அதிகரித்தபோதே எதிர்மறையான கருத்துக்கள் அதிகரித்ததாகவும் குறிப்பிட்டார். முதலில் அவர் அத்தகைய எதிர்மறையான கருத்துக்களை தனிப்பட்ட ரீதியில் எடுத்துகொண்டு தனது Channel மூடுவது குறித்து கருத்திலெடுக்குமளவிற்கு ஊக்கமிழந்திருந்தார். ஆனால் மெதுமெதுவாக அவர் எதிர்மறையான மற்றும் துஷ்பிரயோகத்திற்குட்படுத்துகின்ற வகையிலான கருத்துக்களிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டதுடன், தற்போது அவருடைய ரசிகர்கள் அவருக்காக பதிலளித்து போராடக்கூடிய வகையில் ஒரு நிலையை அடைந்திருக்கின்றார். தன்னுடைய ரசிகர்கள் தம்முடைய சுயவிருப்பின் பேரில் இதைச்செய்கின்றார்கள் என்பதனைக் குறிப்பிட்டு “நான் எதுவும் சொல்லவேண்டியதில்லை” என்கிறார் ஹிரன்.

தளங்களைப் பொறுத்தவரை பதில்களில் வேறுபாடுகள் இருப்பதனை ஹிரன் அவதானித்திருக்கின்றார். மக்கள் தன்பாலீர்ப்பு மற்றும் திருநர்களுக்கெதிரான அச்சத்தை உண்டுபண்ணும் வகையிலான கருத்துக்களை அவரது காணொளிகளில் இடம்பெறச்செய்தல் உள்ளடங்கலாக, அவரது அனுபவத்தில் முகநூலிலும் Youtubeஇலுமே அதிகளவிலான எதிர்மறையான கருத்துக்கள் இடம்பெற்றிருந்தன. அவர் தனது தனிப்பட்ட வாழ்க்கை நிகழ்வுகளைப் பகிர்ந்துகொள்கின்ற, Instagramஆனது இவற்றிலிருந்து வேறுபட்டிருப்பதாகவும், அங்கு எதிர்மறையாகக் கருதப்படக்கூடிய கருத்துக்கள்கூட பண்பான மொழிநடையில் இருப்பதாகவும் கண்டுகொண்டார். Instagramஇல் இணைவதற்கு முடிவெடுத்தமை குறித்து ஹிரண் இவ்வாறு விவரிக்கின்றார் “அது வெளிப்படையான சிந்தனையுடையவர்களுக்கான சமூகவலைத்தளம் என நான் நினைத்தேன்”.



திவ்யா (ஆங்கிலத்திலும் தமிழிலும் பதிவுகளை இடுபவர் - ஏறக்குறைய 40% ஆன கருத்துக்கள் தமிழிலேயே உள்ளன) துன்புறுத்தல்களையும், ஒருவரை குறைத்துப் பேசுவதையும் கண்டிருக்கின்றார் -குறிப்பாக பெண்களைக் குறித்து - ஆண்களால் ஆதிக்கம் செலுத்தப்படுகின்ற சில பக்கங்களில், பொதுவாக ஆண்களுக்கிடையில் மிகவும் பிரபலமாக இருக்குமென கருதப்படுகின்ற தலைப்புக்களில் - சித்திரக்கதைகள் போன்றவற்றில்.

> *“நான் அங்கத்தவராக இருந்த ஒரு பக்கம் இருந்தது, நீங்கள் அதனுடன் தொடர்புடைய எதையாவது பதிவிட்டால் அதிலுள்ள அநேகமான ஆண்கள் துன்புறுத்துவார்கள் அல்லது மனதை நோகடிப்பார்கள் - அதை நான் அதிகதடவைகள் பார்த்திருக்கின்றேன். அவர்கள் பெண்களைப் பொறுத்தவரை மிகவும் கேவலமாக நடந்துகொள்வதுடன் ‘இது குறைபாடுள்ளது’ என்பார்கள். அந்தப் பக்கம் ஒத்த சிந்தனையுடையவர்களைச் சந்திக்கக்கூடியதென்றும், தகவல்களைப் பெறக்கூடியதும், சிறப்பானதென்றும் நினைத்தேன்”.*

ஆயினும் சில வேளைகளில் ஆண்களும் அந்தப் பக்கத்தில் தொல்லைகளை எதிர்கொண்டதாக திவ்யா சுட்டிக்காட்டினார், தன்பாலீர்ப்பு ஆணாகவோ



**“பால்நிலை சமத்துவத்திற்கு ஆதரவளிக்கும் மக்களை எனக்குத் தெரியும். ஆனால் அவர்கள் இணையவழியில் அதைச் செய்வதில்லை. ஏனெனில் அவர்களுக்கு எதிர்வினை இருக்கும் என்பது தெரியும். என்னுடைய குயர் நண்பர்கள் இணையவழியில் எதையும் பதிவிடுவதில்லை அதனால் அவர்கள் அதன்மூலம் ஏற்படக்கூடிய பாரபட்சத்தையோ வன்முறையையோ எதிர்கொள்வதில்லை.**

அல்லது பெண்ணாகவோ இருப்பதென்பதே ஒருவரை தொல்லைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய, நலிவடைந்த நிலைக்கு இட்டுச்சென்றதுடன், அது அவர்கள் எதனைப் பதிவிடுகின்றார்கள் என்பதிலும் தங்கியிருந்தது.

> *“பால்நிலை சமத்துவத்திற்கு ஆதரவளிக்கும் மக்களை எனக்குத் தெரியும். ஆனால் அவர்கள் இணையவழியில் அதைச் செய்வதில்லை. ஏனெனில் அவர்களுக்கு எதிர்வினை இருக்கும் என்பது தெரியும். என்னுடைய குயர் நண்பர்கள் இணையவழியில் எதையும் பதிவிடுவதில்லை அதனால் அவர்கள் அதன்மூலம் ஏற்படக்கூடிய பாரபட்சத்தையோ வன்முறையையோ எதிர்கொள்வதில்லை. திருநர்கள் - என்னுடைய ஆய்வுக்கட்டுரைக்காகப் பேசியபோது அவர்கள் ‘ நீங்கள் உங்களை எவ்வாறு வெளிப்படுத்துகின்றீர்கள் என்பதைப்பொறுத்தது - சில திருநர்கள் கவனத்தினை ஈர்க்கக்கூடியவர்கள், நாசூக்கானவர்கள் என கூறினார்கள் - நீங்கள் கவனத்தினைஈர்க்கக்கூடியவராக இருந்து, மற்றையவர்களுக்கு அதனைப் பெருமையுடன் வெளிப்படுத்தியிருந்தால், அதிகளவிலான தொல்லைகளுக்கு முகங்கொடுத்திருந்திருப்பீர்கள் - நான் அதனுடன் உடன்படவில்லை, ஆனாலும் அது தான் உண்மை. ஒருவர் தன்னுடைய அடையாளம் தொடர்பில் எந்தளவிற்கு செயற்தன்மைமிக்கவராக இருக்கின்றாரோ அல்லது வெளிப்பாடுடையவராக இருக்கின்றாரோ அதற்கேற்ப அவர்கள் தொல்லைகளுக்குள்ளாகும் வாய்ப்பும் அதிகம்.”*

திவ்யா தனது இனத்துவ அடையாளத்தின் காரணமாக மட்டுமே ஆற்றப்பட்ட எந்தவொரு எதிர்வினையையும் காணவில்லை, ஆனால் எதிர்மறையான பதில்களை மக்களிடையே தூண்டுகின்றவையாகத் தெரிகின்ற தெளிவான பிரச்சனைகள் இருக்கின்றன என்கிறார். அவர் தான் பதிவிடும் கருத்துக்களினடிப்படையில் எதிர்வினையாற்றப்படுவதைக் கண்டிருக்கின்றார். உதாரணமாக, பாலியல் மற்றும் இனவிருத்தி சுகாதாரம் தொடர்பிலான விடயங்கள், LGBTஇனருடைய பிரச்சனைகள், பெண் பாலுறுப்பு சிதைப்பு போன்றவை. குறிப்பிடத்தக்க அளவிலான எதிர்வினைகள் சமயத்துடனும், கலாசாரத்துடனும் தொடர்புடையவை - ‘இது கடவுளுக்கு விரோதமானது’ அல்லது ‘இது ஒழுக்கக்கேடானது’ அல்லது ‘நாம்



செய்யவேண்டியது இதுவல்ல'. தான் இப் பதிவுகளை தமிழில் போடும்போது வரும் சில எதிர்வினைகள் அவருடைய சமூகத்தைப் பற்றி எதிர்மறையாகப் பேசுவதால் வருவன என அவர் கூறினார் - "ஏனெனில் நான் இதுகுறித்துப் பேசும் 'எம்மில்' ஒருவர்". அவர் தனிப்பட்ட எந்த விடயங்களையும் தமிழில் பதிவிடுவதில்லை.


இளைஞர் குழுக்களுடன் தான் செய்யும் வேலையின் பகுதியாக, பாலியல் நாட்டத்துடனோ அடையாளத்துடனோ தொடர்புடைய பதிவுகளைப் பகிர்ந்துகொள்ளும் போது செல்வி, தன்னுடைய பெண்ணென்கின்ற அடையாளத்தினால் இணையவழியில் தாக்குதலுக்குள்ளானதாக கூறுகின்றார், மக்கள் இணையவழியில் அவரிடம் 'நீ ஏன் இதைப் பதிவேற்றினாய; உன்னுடைய பாலியல் அடையாளம் மற்றும் நாட்டமென்ன; நீ என்னுடன் படுப்பதற்கு வர விரும்புகின்றாயா?' போன்ற பின்னூட்டங்களினூடாகப் பதிலளிப்பார்கள். அவர் சிலவற்றைக் கண்டுகொள்ளாமல் விட்டதன் மூலம் அவற்றிற்குப் பதிலளித்தார். சில தருணங்களில் பொலிசாரிடம் முறையிட்டதன் மூலமும், சிலவேளைகளில் எதிர்வினையாற்றுபவருடன் ஆக்கபூர்வமாக ஈடுபடுவதற்கான வெளியை உணர்ந்தால் அவர் அதையும் செய்திருக்கின்றார்.



வன்முறைகளுக்கு இத்தகைய பதிலளிப்பதில் செல்வி மட்டும் தனியானவர் இல்லை. வன்முறைகளை எதிர்கொள்ளும்போது பதிலளித்தோரில் பெரும்பாலானோர், தாம் வன்முறையை எதிர்கொண்ட தளத்திலேயே அறிக்கையிட அல்லது முறையிட விரும்புகின்றார்கள் என்பதை நாம் கண்டுகொண்டோம். மிகவும் சிலரே தமக்கு இணையவழியில் நடந்த வன்முறையினைச் சட்டக் கட்டமைப்பிற்கு அறிக்கையிட முடிவுசெய்திருந்தார்கள். அவர்கள் ஏன் இவ்வாறு செய்தார்கள் என்பதற்கான பல காரணங்கள் எமது உரையாடலின் போது வெளிப்பட்டன; இணயவழியில் நிகழும் வன்முறைகள் அறிக்கையிடுமளவிற்குப் பாரதூரமானவையாகக் கருதப்படாமை, இணையவழி வன்முறைகளை எமது சட்டங்களின மூலம் எதிர்கொள்ளமுடியுமென்ற போதுமான விழிப்புணர்வின்மை, சட்டக் கட்டக்கட்டமைப்புக்களின் மீது நம்பிக்கையின்மை, முன்னாள் காதல் அல்லது பாலியல் உறவின் பின்னணியில் வன்முறை நிகழ்ந்திருந்தால் அதை முறையிடுவதில் தயக்கம் மற்றும் பயம்.

பொலீசாரிடம் அறிக்கையிட்டால் அதே தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் கைதுசெய்யப்படலாம் என்கின்ற பயமும் காணப்பட்டது. வன்முறைகளுக்குப் பதிலளிக்கும் ஏனைய முறைகளுள், துஷ்பிரயோகத்திற்குட்படுத்துபவர்களை முடக்குதலும் காணப்பட்டது.

**துஷ்பிரயோகத்திற்கெதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**



**புறக்கணித்தேன்**

ஆம் 46.6%

இல்லை 53.4%

*உரு 18: புறக்கணித்தேன்*

**அந்தத் தளத்திற்கு அறிக்கையிட்டேன்**

ஆம் 58.3%

இல்லை 41.7%

*உரு 19: அந்தத் தளத்திற்கு அறிக்கையிட்டேன்*

**சட்டக்கட்டமைப்பொன்றிற்கு அறிக்கையிட்டேன்**

ஆம் 9.7%

இல்லை 90.3%

*உரு 20: சட்டக்கட்டமைப்பொன்றிற்கு அறிக்கையிட்டேன்*

**மறுத்துப்பதிலளித்தேன்**

ஆம் 27.2%

இல்லை 72.8%

*உரு 21: மறுத்துப்பதிலளித்தேன்*



**அவர்கள் எனது பதிவினது திரையினைப் படம் எடுத்து எனது தொலைபேசி இலக்கம் தெரியும்படி, எனது புகைப்படத்துடன் இணையவழியில் பதிவேற்றினார்கள். ஒருவர் என்னைக் கெட்டவார்த்தைகளால் கேவலமாக திட்டியிருந்தார். இந்தப் பதிவு 140பேரால் பார்வையிடப்பட்டும், 30பேரால் பகிர்ந்துகொள்ளப்பட்டும் இருந்தது. நான் என்னுடைய profile படத்தினை வேறு ஏதாவதாக மாற்ற வேண்டியிருந்தது (தொல்லைகளிலிருந்து என்னை தூரப்படுத்திக்கொள்ள)"**



'பெயரிடும் மற்றும் வெட்கத்திற்குள்ளாக்கும்' கலாசாரம் பற்றி கிறிஷானி பேசினார் - ஒருவர் ஒரு பதிவினது திரையினைப் படம்பிடிக்கவோ அல்லது அவர்களுக்கு அந்தப் பதிவு பிடிக்கவில்லையென கருத்துப்பதிவிட்டு அதனை இணையவழியில் பதிவேற்றவோ முடியும் - இது அவர் அனுபவித்த தனிப்பட்ட அனுபவமும் கூட.

> *"எனக்குத் தெரிந்த ஒருவருக்கு whatsappஇல் ஒரு அரசியற் கருத்தொன்றினைப் பகிர்ந்து கொண்டேன். நான் ஒன்றாக பாடசாலை சென்ற ஒருவருக்கு தனிப்பட்ட ரீதியில் அதை அனுப்பியிருந்தேன். அவர்களுடன் அதற்கு முதல் நான் உரையாடியதில்லை என்பதை நான் உணர்ந்திருக்கவில்லை, ஆனால் அவர்கள் என்னுடைய தொடர்பு பட்டியலில் இருந்தார்கள். அவர்கள் என்னுடைய இலக்கத்தினை அடையாளம் கண்டுகொள்ளாமல் 'யார் இது, நான் இதனை முறைப்பாடு செய்யப்போகின்றேன்' என்றார். அவர்கள் எனது பதிவினது திரையினைப் படம் எடுத்து எனது தொலைபேசி இலக்கம் தெரியும்படி, எனது புகைப்படத்துடன் இணையவழியில் பதிவேற்றினார்கள். ஒருவர் என்னைக் கெட்டவார்த்தைகளால் கேவலமாக திட்டியிருந்தார். இந்தப் பதிவு 140பேரால் பார்வையிடப்பட்டும், 30பேரால் பகிர்ந்துகொள்ளப்பட்டும் இருந்தது. நான் என்னுடைய profile படத்தினை வேறு ஏதாவதாக மாற்ற வேண்டியிருந்தது (தொல்லைகளிலிருந்து என்னை தூரப்படுத்திக்கொள்ள)"*

முந்திய பகுதியில் உரையாடப்பட்டது போல இத்தகைய அனுபவங்கள் இணையப் பயன்பாடு மற்றும் இணையத்தில் வெளிப்பாட்டினைப் பாதிக்கின்றது. ஒரு பெண்ணாக செல்விக்கு "பாலியல்பு, ஒரு பெண்ணாக பாலியல் உறவினை எப்படிப் பார்க்கின்றோம், பாலியற் கல்வி, பெண்களது உடலைப் பற்றிய பதிவுகள்" போன்றவற்றினைப் பகிர்ந்து கொள்வதற்கு மிகக் குறைந்தளவிலான வெளியே இருக்கின்றது.

*“நான் முகநூலில் இவற்றைப் பகிர்ந்துகொள்ள விரும்புகின்ற போதும், பெண்ணாக இருக்கின்ற காரணத்தினால் என்னால் இவற்றைப் பகிர்ந்துகொள்ள முடியாது. எனக்குத் தெரிந்த சில பெண்கள் இவற்றைப் பகிர்ந்திருக்கின்றார்கள். அதன்பின் அவற்றின் திரை படம்பிடிக்கப்பட்டு, போலிக் கணக்குகளினூடாக பகிரப்பட்டதுடன், அந்தப் பெண்கள் இணையத்தில் தொல்லைகளுக்குட்படுத்தப்பட்டார்கள்.”*


*தொல்லைகளை தடுக்கவும் நிறுத்தவும் உதவுவதற்காக செல்வி போலிக்கணக்குகளைப் பயன்படுத்துபவர்களைப் பின்தொடர்ந்து அவர்களை அடையாளம் காண விரும்புகின்றார். இலங்கையின் கிழக்கு மற்றும் வடபகுதிகளில் இதைச் செய்யக்கூடிய அறிவினைக் கொண்டிருக்கின்ற ஒரேயொரு நபரை மட்டுமே தனக்குத் தெரியுமெனவும், ஆனால் அப்படிச்செய்வதற்கு நேரமெடுப்பதுடன் அது இலகுவானதுமல்ல எனவும் செல்வி கூறினார்*

*அத்துடன் கருத்தாய்வில் பதிலளித்தோரிடம் அவர்கள் எப்போதாயினும் தொழில்நுட்பம் தொடர்பிலான வன்முறைகளில் ஈடுபட்டிருக்கிறார்களா என கேட்கப்பட்டது. வன்முறையை எதிர்கொண்டவர்களைவிட எண்ணிக்கையில் குறைந்தளவிலானவர்களாயினும், கீழுள்ள அட்டவணை சிலர் தொல்லை, துஷ்பிரயோகம், வன்முறை ஆகியவற்றில் ஈடுபட்டிருக்கின்றார்கள் என்பதைக் காட்டுகின்றது.*

**துஷ்பிரயோகத்திற்குட்படுத்துகின்ற விதத்திலான கருத்துக்கள்**

ஆம் 14.6%
இல்லை 85.4%


*உரு 22: துஷ்பிரயோகத்திற்குட்படுத்துகின்ற விதத்திலான கருத்துக்கள்*



**பாலியல் அல்லது உடல்ரீதியான வன்முறை அச்சுறுத்தல்கள் உட்பட நேரடி வன்முறை அச்சுறுத்தல்கள் (“நான் உன்னை பாலியல் வன்கொடுமை செய்யப்போகின்றேன்” என்பது போன்ற அச்சுறுத்தல்கள்)**

ஆம் 5.8%
இல்லை 94.2%


*உரு 23: பாலியல் அல்லது உடல்ரீதியான வன்முறை அச்சுறுத்தல்கள் உட்பட நேரடி வன்முறை அச்சுறுத்தல்கள்(“நான் உன்னை பாலியல் வன்கொடுமை செய்யப்போகின்றேன்” என்பது போன்ற அச்சுறுத்தல்கள்)*



**அடையாளத்தினைக் குறிவைத்து நிகழ்த்தப்படும் வெறுப்பு பேச்சு, சமூகவலைத்தள பதிவுகள் மற்றும்/அல்லது மின்னஞ்சல்கள்**

ஆம் 8.7%
இல்லை 91.3%


*உரு 24: அடையாளத்தினைக் குறிவைத்து நிகழ்த்தப்படும் வெறுப்பு பேச்சு, சமூகவலைத்தள பதிவுகள் மற்றும்/அல்லது மின்னஞ்சல்கள்*



**பால்வாத மற்றும் பால்நிலையுடன் தொடர்புடைய கருத்துக்களைப் பயன்படுத்தல் அல்லது பெயர் சூட்டி அழைத்தல்**


ஆம் 5.8%
இல்லை 94.2%

*உரு 25: பால்வாத மற்றும் பால்நிலையுடன் தொடர்புடைய கருத்துக்களைப் பயன்படுத்தல் அல்லது பெயர் சூட்டி அழைத்தல்*



இலக்கு குழு உரையாடல்களில் ஒன்றின்போது, துஷ்பிரயோக கருத்துக்கள் மற்றும் வன்முறை அச்சுறுத்தல்களில் ஈடுபட்டவர்கள் அநேகதருணங்களில், தாம் எதிர்கொண்ட வன்முறைகளுக்குப் பதிலாகவே அவற்றை செய்ததாகக் கூறினர். 'ஒருவர் என்னை ஒரு (சிங்களத்தில் தன்பாலீர்ப்பு ஆணைக்குறிக்கும் இழிவுச்சொல்) எனக் கூப்பிட்டால், நான் அப்படியென்றால் அவர்களும் தான் என எதிர்த்துப் பேசுவேன்' என ஒரு பதிலாளர் உரையாடலொன்றின்போது கூறினார். எவ்வாறாயினும், LGBTQ+ மக்களும் ஏனையவர்களைப்போல, இனத்துவம், சமயம், பால்நிலை, ஏனையவை போன்றவற்றின் அடிப்படையில் வெறுப்புப்பேச்சை நிகழ்த்தக்கூடியவர்களாயிருக்கின்றார்கள். சிலவேளைகளில், அவர்கள் இணையவழியில் கடுமையான விவாதங்களிலும், வாதங்களிலும் ஈடுபட்டிருப்பதைக்காணலாம். பசான் ஜயசிங்கவால் குறிப்பிட்டுக்காட்டப்பட்டபடி, 'அடிக்கடி சிலவேளைகளில் அதிர்ச்சிகரமாக, குயர் மக்களே முஸ்லிம்கள் மீதும், அவர்களுக்காகப் பேசுபவர்கள் மீதும், தன்பாலீர்ப்பின் மீதான அச்சத்தினை உண்டாக்கும் வகையிலான அவதூறுகளை ஏற்படுத்தியவண்ணம் இருக்கின்றார்கள். இது ஒருவேளை அநேக இலங்கையர்களது ஆதிக்கமிக்க அடித்தளமாக இனம் இருக்கின்றதென்கின்ற உண்மையினைப் பேசுவதாக இருக்கின்றது (Jayasinghe, 2019).

**இலக்கு குழு உரையாடல்களில் ஒன்றின்போது, துஷ்பிரயோக கருத்துக்கள் மற்றும் வன்முறை அச்சுறுத்தல்களில் ஈடுபட்டவர்கள் அநேகதருணங்களில், தாம் எதிர்கொண்ட வன்முறைகளுக்குப் பதிலாகவே அவற்றை செய்ததாகக் கூறினர்.**



# சமூகம் மற்றும் வாழ்வாதாரத்தினைக் கண்டுபிடித்தல்

*சமூகத்தினைக் கண்டுபிடித்தல் மற்றும் செயல்வாதத்திற்கான தளத்தினை இனங்காணல்*


பதிலளித்தோரில் ஏறக்குறைய 70% ஆனோர், இணையம் தம்மை மக்களுடன் இலகுவாகத் தொடர்புபடுத்துவதாகக் கூறினர். குறிப்பாக திறன்பேசிகள் எவ்வாறு மக்கள் விரைவாகவும், இலகுவாகவும் இணைப்பினை ஏற்படுத்துவதனைச் சாத்தியமாக்குகின்றன என்பதனைக் கருத்திற்கொண்டால், இது மிகவும் இலகுவாகப் புரிந்துகொள்ளக்கூடிய பதிலாகத் தெரிந்தாலும், சில பங்குபற்றுனர்களுடனான எம்முடைய உரையாடல்கள், அவர்களது பதில்களிலுள்ள பல நுட்பங்களை வெளிப்படுத்தின. இணையவழி விவாதங்களிலும், உரையாடல்களிலும் பல்வகைமையானவர்கள் பங்குபற்றி, அவற்றில் ஈடுபடுகின்றனர் என பதிலளித்தோரில் பெரும்பாலானவர்கள் கூறினர், 63% ஆனோர் இதனை உறுதியாகவும், 29% ஆனோர் சிலவேளைகளில் எனவும் கூறினர். அறிமுகத்தில் கூறப்பட்டது போல, இந்த ஆய்வானது எப்படி LGBTQ+ செயற்பாட்டாளர்கள் இணையத்தினை செயல்வாதத்திற்காகப் பயன்படுத்துகின்றார்கள் என்பதற்கு அப்பால் செல்லவிரும்பினாலும் மாறாக இலங்கையிலுள்ள LGBTQ+ மக்கள் அன்றாடவாழ்வில் எவ்வாறு இணையத்தைப் பயன்படுத்துகின்றார்கள் என்பதையே ஆய்வுசெய்தது. ஆயினும் பதிலளித்தோரில் பலருக்கு, அவர்கள் இணையத்தில் செய்யும் செயல்வாதம் அவர்களின் அன்றாடவாழ்வின் பாரியபகுதியாக உள்ளது. கீழே காட்டப்பட்டுள்ள அவர்களின் அனுபவத்தின்படி மற்றையவர்கள் இணையத்தினூடாகச் சமூகத்தினைக் கண்டடைவதற்கு ஆதரவளித்தலே அவர்களது செயல்வாதத்தின் பிரதான பகுதியாக உள்ளது. பதிலளித்தோரில் அனைவருமே செயற்பாட்டாளர்களாகவோ, செயல்வாதத்தில் ஈடுபடுவதாகவோ கருதவில்லையாயினும் செயல்வாதமும், சமுதாயமும் ஒன்றுடனொன்று பலசமயங்களில் நெருக்கமாகப் பின்னிப்பிணைந்துள்ளதனால் அவற்றையும் நாம் இந்தப்பகுதியிலொன்றாகக் கருதலாம்.

**இணையம் இலகுவாக மக்களுடன் என்னைத் தொடர்புபடுத்துகின்றது.**


| | |
|---|---|
| நிச்சயமாக | 68.0% |
| சிலவேளைகளில் | 20.4% |
| இல்லை | 8.7% |
| எனக்குத் தெரியாது | 2.9% |

**இணையத்தில் வேறுபட்ட மக்கள் உரையாடல்களிலும் விவாதங்களிலும் ஈடுபடுகின்றார்கள்**

| | |
|---|---|
| நிச்சயமாக | 63.1% |
| சிலவேளைகளில் | 29.1% |
| இல்லை | 4.9% |
| எனக்குத் தெரியாது | 2.9% |



*உரு 26: இணையம் இலகுவாக மக்களுடன் என்னைத் தொடர்புபடுத்துகின்றது.*



*உரு 27: இணையத்தில் வேறுபட்ட மக்கள் உரையாடல்களிலும் விவாதங்களிலும் ஈடுபடுகின்றார்கள்*



ஆர்யாவைப்பற்றி முகநூல்வாயிலாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ, கேள்விப்பட்ட வெளிநாடுவாழ் தமிழர்கள் கொழும்பிற்கு வரும் போது, முயற்சிசெய்து அவரைச் சந்திக்கின்றனர். திருநர்களுடன் தொடர்புடைய பிரச்சனைகள் குறித்து அவர்களும் மெதுவாக வெளிப்படையாகப் பேச ஆரம்பிக்கின்றார்கள் என ஆர்யா உணர்கின்றார். ஒப்பீட்டளவில் இது ஒரு புதிய நிகழ்வு. இணையத்தினைத் தன்னுடைய அடையாளத்தை வெளிப்படுத்துவதற்கான தளமாகப் பயன்படுத்துவதென்பது, அதேவிதமாக உணரக்கூடிய மற்றையவர்கள் தாமாக வெளிவந்து இணைப்பினை ஏற்படுத்துவதற்கான தன்னம்பிக்கையை அளிக்கின்றது. அவரைப்பொறுத்தவரை, எதிர்மறையான கருத்துப்பதிவிடல்கள், அவரது அனுமதியின்றி அவரின் புகைப்படத்தை பகிர்ந்துகொள்ளல், அவரது படத்துடன் இயங்கிவரும் போலி முகநூல் கணக்குகள் போன்றன அவரது செயல்வாதத்தினையும், திருநர் சமூகத்திற்கு அவர்புரியும் பணிகளையும் பாதிக்கப்படச்செய்திருக்கின்றன.



திருநர் அடையாளம் மற்றும் அதற்கான செயன்முறைகள் பற்றித்தேடும் மக்கள் அதற்குரிய தகவல்களை உள்ளூர் மொழிகளில் பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்தும்முகமாக ஷாமல் தனது வேலையை சமூகவலைத்தளக் கணக்குகளில் பயன்படுத்துகின்றார். ஷிராணி “சமூகத்திற்கும், என்னுடைய சமுதாயத்திற்கும் தகவல்களை வழங்கக்கூடிய பெரிய வாய்ப்பினை” இணையம் வழங்கியிருப்பதாக கூறினார். அத்துடன் தனது தொலைபேசி இலக்கத்தினைத் தனிப்பட்ட மற்றும் வேலைநிமித்தமான சமூகவலைத்தளக் கணக்குகளில் பெறக்கூடியதாகச் செய்திருக்கின்றார். “நாம் அதிகளவிலான பிழையான தகவல்களைப் பெற்றுக்கொள்வதுண்டு” என்று கூறிய ஷிராணி தானும் தன் சமுதாயத்திலுள்ள ஏனையவர்களும் சரியான தகவல்களை உரியநேரத்திற்கு வழங்குவதற்கு எவ்வளவு சிரத்தை எடுத்தார்கள் என்பதனை வலியுறுத்திக் கூறினார். கொழும்பு மற்றும் நாட்டின்



ஏனைய பகுதிகளைச் சேர்ந்த அதிகளவிலான இளைஞர்கள், தம்முடைய பால்நிலை அடையாளம் பற்றித் தெரிந்து கொள்வதற்கு இணையத்தைப் பயன்படுத்துகின்றார்கள் எனவும், அவர்கள் தவறாகப்புரிந்து கொள்ளாமல் இருப்பதற்கு முன்னெப்போதையும் விட தற்போது மும்மொழிகளின் உதவி இன்றியமையாதது எனவும் கூறினார். பால்நிலை அடையாளம் குறித்த குழப்பம் அல்லது கவலையானது, ஒருவரின் உளநலத்தின் மீது பாரிய தாக்கத்தினை ஏற்படுத்துவதனாலும், அவர்கள் மிகவும் தனிமையாக உணரும்போது சமுதாயத்தினைத் தேடுவதனாலும் அவர் நடுஇரவுகளில் கூட அழைப்புக்களைப்பெற்றுக்கொள்வதுண்டு.



இணையவழியிலும் offline இலும் குயர் மக்களைச் சந்திப்பதற்கு இணையம் திவ்யாவிற்கு உதவியிருக்கின்றது. அது அவர்மீது குறிப்பிடத்தக்களவு விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. அவர் இணையத்தின் மூலம் பிறரை மேலும் புரிந்துகொண்டதாகக் கூறினார். உதாரணமாக பாலியல் ஈர்ப்பற்ற சமூகத்தினைப்பற்றி.

> *“நான் பாலியலீர்ப்பு இல்லாதிருத்தல் என்பது உண்மையல்ல என முதலில் நினைத்தேன் -அவர்கள் ஏதோ காரணத்திற்காக பாலுறவு வைத்துக்கொள்ள விரும்பவில்லை என்றுதான் நான் நினைத்தேன். ஆனால் சில பாலியலீர்ப்பற்றவர்களுடன் நான் இணையவழியில் பேசினேன். அது என்னை மிகவும் ஆச்சரியத்திற்குள்ளாக்கியது! அது உண்மையில் என்னுடைய கண்ணோட்டத்தினை மாற்றியது. அது அதிகளவில் உறவுகளைப்பற்றியதும், சமூகத்திலுள்ள பிளற்டோனிய உறவுகளைப்பற்றியதும் என்பதை நான் புரிந்துகொண்டேன்”*

அத்துடன் அவர், மக்கள் offline, லும் பார்க்க இணையவழியில் தம்மை அதிகளவில் வெளிப்படுத்தும் சுதந்திரத்தினைக் கொண்டிருக்கிறார்கள் என உணர்கின்றார்.

> *“நான் மற்றைய குயர் மக்களை நிஜவாழ்வில் மன்றங்களில் சந்திக்கும்போது உதாரணமாக, ஒரு கருத்தரங்கத்தில், தன்பாலீர்ப்பு சட்டவிரோதமானதாக இருப்பதையும், பாலியல் மற்றும் பால்நிலை அடையாளங்களை அடிப்படையாகக்கொண்ட வன்முறைகள் தொடர்பிலும் பேசுவதோடு உரையாடல் மட்டுப்படுத்தப்படுகின்றது. ஆனால் நீங்கள் மக்களுடன் இணையவழியில் பேசும்போது, அவர்கள் அதைவிட*

*அதிகமாகப் பேசுவார்கள் - தனக்கு ஈர்ப்புள்ள ஒருவருடன் குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட நேரத்தில் சந்திக்கமுடியாத நிலை, பாலியல் மற்றும் பால்நிலை அடையாளங்களை வெளிப்படுத்துவதிலுள்ள பிரச்சனைகள், எந்த ஆடையை உடுத்திக்கொள்வது, tinderஇல் உள்ள பிரச்சனைகள் - நேரில் மக்கள் இவற்றையெல்லாம் பேசுவதை நான் பார்த்ததில்லை. அத்துடன் அது மிகவும் சுவாரஸ்யமாகவும் உள்ளது."*



அவர் மக்களுடன் tumblrஇல் அநாமதேயமாகக் கதைக்கத் தொடங்கினார். ஆனால் குறிப்பிடத்தக்களவு நம்பிக்கையை நிலைநாட்டிய பின் whatsapp மற்றும் Instagramஇலும் சேர்த்துக்கொண்டு உரையாடல் விரிவடைந்தது. அவர் சிலரை offline வாழ்விலும் சந்தித்தார், சிலசமயங்களில் வேறுநாடுகளிலும் சந்தித்தார். அவர்கள் தொடர்பிலிருந்தனர். "நீங்கள் ஒருவரை சந்திக்கும்போது, மீதமிருப்பவர்கள் எப்படியோ உங்களைக் கண்டுகொள்கின்றார்கள்". திவ்யாவிற்கு, தான் சந்திக்கவே முடியாதென்று நினைத்த பல்வேறுபட்ட மக்களை சந்திப்பதென்பது, குறிப்பாக அவரது பிற்போக்கான பின்னணியினை- அதாவது தான் சந்திக்க விரும்புகின்ற பலரை சந்திக்கமுடியாத நிலையினைக் கருத்திற்கொண்டால் அது இணையத்தில் இருப்பதன் மிகச்சிறந்த பகுதியாக உள்ளது. மூடிய குழுக்கள் மற்றும் இணையவழிக் கழகங்களில் அவர் வேறுபட்ட அடையாளங்களைக்கொண்ட நபர்களை சந்தித்திருக்கின்றார். இது அவர் தன்னைப்பற்றி மிகவும் நன்றாகவும், "குறைந்தளவு தனிமை" யாகவும் உணரப்பண்ணியது.

*"நான் நேரில் பேசுவதைவிடவும் இணையவழியில் பேசுவதில், மிகவும் சௌகரியமாக இருக்கின்றேன், திரையினூடாக ஒருவருடன் பேசுவது இலகுவானது. ஏனெனில், நேரில் அது மிகவும் ஆழமானதாக இருக்கும்."*

பால்நிலை மற்றும் பாலியல் அடையாளங்களுடன் தொடர்புடைய பிரச்சனைகளைப் பதிவேற்றியபோது மக்கள் தன்னை அணுகி அவர்களுடையடைய தனிப்பட்ட கதைகளைத் தன்னுடன் பகிர்ந்துகொண்டதாக செல்வி கூறினார். அத்துடன் அந்தவகையில் அவர் மக்களுடன் இணையவழியில் தொடர்பிலிருக்கின்றார். அவர்கள்



**"நீங்கள் ஒருவரை சந்திக்கும்போது, மீதமிருப்பவர்கள் எப்படியோ உங்களைக் கண்டுகொள்கின்றார்கள்".**

பேசுவதற்கு தன்னைப் பாதுகாப்பான ஒரு நபராகக் கருதுவதாக அவர் உணர்கின்றார்.



பால்நிலை மற்றும் பாலியல் அடையாளம் தொடர்பில் தன்னுடைய ரசிகர்கள் மற்றும் தன்னைப் பின்பற்றுவோர் என்ன நினைக்கின்றார்கள் என்கின்ற அவர்களுடைய கருத்தின் மீது, தன்னுடைய காணொளிகள் செல்வாக்குச்செலுத்தியுள்ளன என ஹிரண் நினைக்கின்றார். இலங்கையர்களின் பொது கலாசாரத்தில் LGBTQ+ பாத்திரங்களை எவ்வாறு சித்தரிக்கின்றார்கள் என்பதையும், LGBTQ+ மக்கள் தொடர்பில் மையநீரோட்டத்தைச் சேர்ந்த ஊடகங்களினது எண்ணங்கள் எதிர்மறையானவையாகவும், இழிவுபடுத்தும்வகையிலும் இருப்பதையும் இவர் குறிப்பிட்டார்.



அவரது காணொளிகள் பால்நிலை அடையாளம் மற்றும் பாலியல்பு போன்றவற்றினை மையமாகக்கொண்டதில்லையாயினும், அவர்

வகிக்கும் பாத்திரங்கள், அவரது காணொளிகளின் மையக்கருவாக இருக்கும் அன்றாடப் பிரச்சனைகள் மற்றும் அவர் சில தளங்களில் பகிர்ந்துகொள்ளும் அவரது தனிப்பட்ட வாழ்வின் சில பகுதிகள் போன்றன, பால்நிலை அடையாளம் மற்றும் பாலியல்புடன் தொடர்புபட்ட மக்களின் புரிந்துணர்வில் செல்வாக்குச்செலுத்துவதாக அவர் காண்கிறார். தன்னுடைய காணொளிகளைப் பார்த்தபின் அக்காணொளிகள் LGBTQ+ மக்களுக்கும், திருநர்களுக்கும் நன்மையான வகையில் தம்மில் மனமாற்றத்தினை உண்டுபண்ணியதென தனக்கு எழுதிய ரசிகர்கள் மற்றும் பின்பற்றுனர்கள் பற்றிய உதாரணங்களையும், அவரது காணொளிகளைப் பார்த்தபின்பு சமூகத்தினைக் கண்டடைவதற்காக தன்னைநாடிய, தன்னுடைய பாலுக்குரியதாகக் கருதப்படுகின்ற உடையை அணியாது வேறுபட்ட உடைகளை அணிகின்றவர்கள் பற்றிய உதாரணங்களையும் அவர் பகிர்ந்துகொண்டார்.

இந்த உதாரணங்கள் LGBTQ+ மக்கள் இணையவழியில் பல வழிகளில் சமூகங்களை உருவாக்கி, சமூகங்களைக் கண்டடைந்து, சமூகத்தினைப் பிறருக்கு வழங்குகின்றார்கள் என்பதையும், எப்போதும் அவர்கள் பால்நிலை அடையாளம் மற்றும் பாலியல்பு தொடர்பிலான பிரச்சனைகளை மட்டுமே முன்னிறுத்துவதில்லை என்பதையும் விளக்குகின்றது. எந்தத் தலைப்பிலாயினும், இணையத்தில் தம்மை சுதந்திரமாக வெளிப்படுத்தும் குயர் மற்றும் திருநர்கள், மக்களைப் பார்க்கக்கூடியதாக இருப்பதென்பதே மக்களைச் சமூகத்தினைத் தேடுவதற்கும், அதற்காக பிறரை நாடுவதற்கும் ஊக்கமளிப்பதாக இருக்கின்றது.



**இலங்கையர்களின் பொது கலாசாரத்தில் LGBTQ+ பாத்திரங்களை எவ்வாறு சித்தரிக்கின்றார்கள் என்பதையும், LGBTQ+ மக்கள் தொடர்பில் மையநீரோட்டத்தைச் சேர்ந்த ஊடகங்களினது எண்ணங்கள் எதிர்மறையானவையாகவும், இழிவுபடுத்தும்வகையிலும் இருப்பதையும் இவர் குறிப்பிட்டார்.**




# சமூகம் மற்றும் வாழ்வாதாரத்தினைக் கண்டுபிடித்தல்

*வாழ்வாதாரம்*

## உங்களது வாழ்வாதாரத்திற்கு இணையத்தினைப் பயன்படுத்துகின்றீர்களா?

பதிலளித்தோரில் 30% ஆனோர், தாம் வாழ்வாதாரத்திற்காக ஒருபோதும் இணையத்தினைப் பயன்படுத்தியதில்லை எனக்கூறினர். பெரும்பாலானோர் எப்போதும் அல்லது சிலவேளைகளில் தம் வாழ்வாதாரத்திற்காக இணையத்தினைப் பயன்படுத்துவதாகக்கூறினர். நவீன வேலைத்தளங்கள், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் பாரியளவில் தங்கியிருக்கின்றநிலையில், இது ஒன்றும் ஆச்சரியப்படத்தக்கவிடயமல்ல. ஆயினும், நாம் இணையத்தினை வாழ்வாதாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கான தளமாகவும், வாழ்வாதார விருத்திக்கு ஆதரவாகவும் பயன்படுத்துகின்ற LGBTQ+ மக்களின் அனுபவங்களையும், அவ்வாறு பயன்படுத்துகையில், அவர்கள் எதிர்கொண்ட சவால்கள் மற்றும் வாய்ப்புக்களையும் சிறப்பாகப் புரிந்துகொள்ள விரும்புகின்றோம்.





*உரு 28: நீங்கள் இணையத்தினை வாழ்வாதாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு பயன்படுத்துகின்றீர்களா?*



சிறுவயதிலிருந்தே ஹிரண் ஒரு நடிகராக வந்து நடிப்புத்துறையில் தானும் பங்கேற்க வேண்டும் என்ற கனவினைக் கொண்டிருந்தார். ஆயினும், அவர் பாடசாலையில் தன்னைப்பற்றிய சுயவிபரத்தினைக் குறைந்தளவிலேயே பேணினார். அத்துடன் சில சிறிய பாத்திரங்களையேற்று நடித்ததைத்தவிர அவர் பாடசாலையில் நாடகத்தயாரிப்பு போன்றவற்றில் ஈடுபடவில்லை. பின்னர் அவர் பல பாரம்பரியமான ஒன்பது மணிதொடக்கம் தொடக்கம் ஐந்து மணிவரை செய்யப்படுகின்ற பல தொழில்களை முயன்றார். ஆயினும் அத்தகைய நடைமுறை அவருக்கு சவாலாக இருப்பதனைக் கண்டார். அவருடைய பார்வை திரைப்படத்துறையில் தானும் ஒருவராக வேண்டும் என்பதை நோக்கியே அப்போதும் இருந்தபடியினால் திரைப்படத்தயாரிப்பு தொடர்பில் ஒரு டிப்ளோமாவினை மேற்கொண்டார். எந்தநோக்கங்களும் இல்லாதபோது தனது அடுத்தபடி என்னவாக இருக்கும் என்று தெரியாத நிலையில்தான் அவர் youtube channelஇனைத் தொடங்கி லில்லி சிங்கிற்கு கிடைத்த விருப்பக்குறியீடுகளினால் (Likes) பிரபலமாக்கப்பட்ட பாத்திர நகைச்சுவைக்குறுநாடகவடிவில் (Character skits) தனது முதலாவது காணொளியினை வெளியிடத் தீர்மானித்தார். அவரின் channel ஓர் இரவிலேயே பிரபலமானது. இது இத்தகைய காணொளியானது இலங்கையில் வெளிவருவது இதுவே முதல்தடவை என்பதனாலாகக்கூட இருக்கலாம். Youtube வருமானத்தின் மூலம் அவர் தனது channel பகுதியளவிலான, அதேவேளை ஓர் நிலையான வருமானத்தைத் தரக்கூடியதாக விருத்திசெய்திருக்கின்றார்.

ஹிரண் தன்னுடைய கருத்துக்கள் மையநீரோட்டத்தைச் சென்றடையவேண்டுமென்று விரும்புகின்றார். அதன்மூலம் அவருடைய youtube channelஇனை முழுநேரமாக இயக்கவும், அதிகவருமானத்தினைப் பெற்றுத்தரக்கூடிய தொழிற்குறியீட்டு ஒப்புதலினைப் பெற்றுக்கொள்ளவும் முடியும். ஆயினும் பாலியல் இருமையுள்ளோரின் வெளிப்பாடுகள் மற்றும் நடத்தை வெளிப்பாடுகளுடன் ஒப்பிடும்போது அத்தகைய வாய்ப்பினைப் பெறுவதென்பது தனக்கு கடினமானதாகவே இருப்பதாக அவர் உணர்கின்றார். இலங்கையிலுள்ள அநேகமானவர்கள் “சேலையில் ஒரு ஆண்” இனது படத்துடன் சௌகரியமாக உணர்வதில்லை என அவர் கூறினார். ஹிரண் நம்பிக்கையுடன் இருக்கின்றார். இணையவழியில் அவரது வெற்றியானது திரைப்பட உலகில் இணைவதிலிருந்து அவரின் கவனத்தினைத் தற்காலிகமாக திருப்பியிருக்கின்றது. இலங்கையிலுள்ள youtube தளங்களில் தான் தனியொரு இடத்தினைப்பிடித்திருப்பதாகவும், அது அவருக்கு நன்மையைக் கொடுக்கின்றதெனவும் அவர் உணர்கின்றார்.



இணையத்தில் சுயவெளிப்பாட்டிற்காக உருவாக்கப்பட்டிருக்கின்ற வெளியானது ஆர்யாவிற்கு குறிப்பிடத்தக்க அளவு நேர்மறையான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொடுத்திருக்கின்றது. அதனூடாக அவர் சில வெளிநாட்டுப் பயிற்சிகளுக்கான வாய்ப்புக்களைப் பெற்றுக்கொண்டதுடன், குழுக்களில் பேசுதல் மற்றும் அவற்றினூடாக அவர் அவர் மேலதிகமாகக் கற்றுக்கொள்வதற்கும் அவருக்கு உதவியது. இணையமானது இணையவெளிகளை வழங்குகின்ற போதும், அவர் சாத்தியமானவரை நேருக்குநேர் உரையாடல்களையே விரும்புகின்றார்-

> *“அவர்களது முகங்களை என்னால் விளங்கிக்கொள்ள முடியுமென்பதால் அத்தகைய வெளிகளில் நான் என்னை அதிகளவில் வெளிப்படுத்துவேன். அவர்கள் புரிந்துகொண்டாலோ அல்லது கேள்விகேட்டாலோ, அப்போது என்னால் தெளிவுபடுத்த முடியும். அதனால் நேருக்குநேர் என்னை அதிகம் வெளிப்படுத்துவதற்கு சௌகரியமானதாக இருக்கின்றது.”*

இணையமானது, பாலியல் தொழிலிலும் ஆழ்ந்த தாக்கத்தினைச் செலுத்தியிருக்கின்றது. இலக்கு குழு உரையாடல்களிலும், நேர்காணல்களிலும் நாம் பேசிய பாலியல் தொழிலாளர்கள் அடிப்படைவசதிகளைக் கொண்ட ஒரு திறன்பேசியைத் தம்மால் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தபோதும்கூட தாம் இணையத்தளங்களையும் whatsapp, viber போன்றவற்றினையும் பயன்படுத்தக் கற்றுக்கொண்டதாகவும், இணையமானது, நேரில் வாடிக்கையாளர்களை அழைப்பதனைப் பெருமளவில் மாற்றீடு செய்திருப்பதாகவும் ஏற்றுக்கொண்டனர். இலங்கையில் பாலியல் தொழில் வெளிப்படையாகக் குற்றமாக்கப்பட்டிருக்காவிட்டாலும்கூட சட்டத்தின்படி, பொதுவெளிகளில் பாலியலுறவுக்கு அழைத்தல் மற்றும் பாலியல் தொழிலுக்கான விடுதிகளை நடத்தல்

என்பன சட்டத்தின்படி குற்றமானவையாகும் (Lanka Standard, 2012). LGBTQ+ மக்களின் அடையாளங்கள் குற்றமாக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினால், அவர்கள் மேலும் பாரபட்சத்திற்குள்ளாகின்றனர். சட்டத்திலிருந்து தம்மைக் காப்பாற்றி பாலியல் தொழிலினூடாக வருமானத்தைப் பெற்றுக்கொள்வதில் இணையம் தமக்கு எவ்வாறு உதவுகின்றது என்பது குறித்தும் அவர்கள் சில பிரதிபலிப்புக்களை மேற்கொண்டனர்.

பெண் பாலியல் தொழிலாளர்கள்(சிஸ் பால்நிலை மற்றும் திருநங்கைகள்), வாடிக்கையாளர்கள் தம்மை நேரடியாகத்தொடர்பு கொள்ளக்கூடிய ஒரு திறன்பேசியை வைத்திருத்தல் மற்றும் அதனூடாக தம்முடைய நீண்டகால வாடிக்கையாளர்களுடன் தொடர்பிலிருத்தல் போன்றவை பொதுவெளிகளில் வாடிக்கையாளர்களை தேடுவதைக் குறைக்கச்செய்திருக்கின்றது என்பதை எம்முடன் பகிர்ந்துகொண்டனர். திறன்பேசிகளில் செய்திகளை அனுப்பக்கூடிய செயலிகள் இருப்பதனால் நேரில் தம் உடலைக்காட்டும் போது உண்டாகும் அபாயங்கள் ஏதுமின்றி அவர்களுடைய புகைப்படங்களையும், காணொளிகளையும் வாடிக்கையாளர்களுக்கும், வாடிக்கையாளர்களாகக்கூடிய சாத்தியமுடையவர்களுக்கும் அனுப்புவது சாத்தியமாகியுள்ளது. இணையத்தைப் பயன்படுத்தி மேற்கொள்கின்ற எந்தவகையான தொடர்பாடல்களிலும் உள்ள எண்மின்(டிஜிட்டல்) தடயங்களைப்பற்றி(பாலியல் தொழிலிலோ அல்லது ஏனையவற்றாலோ) ஓரளவிற்கு விழிப்பாயிருக்கின்ற அதேவேளை, பாலியல் தொழிலாளர்கள் அபாயங்களிளிலும் பார்க்கத் தமது வாழ்வாதாரத்தினை நடாத்திச்செல்வதில் அதிகரித்த தன்னாட்சி காணப்படல் போன்ற இணையத்தின் நன்மைகளையே கருத்தில் கொள்கின்றனர். அவர்களுடைய நிலைப்பாடு அண்மையிலளிக்கப்பட்ட தீர்ப்பொன்றின் மூலம் மீளவலியுறுத்தப்படுகின்றது (Colombo Times, 2020). அதன்போது அந்த நீதிபத, "காலணித்துவ காலத்திலிருந்தே தன்வாழ்வாதாரத்திற்காகத் தன்னிச்சையாக விபச்சாரத்திலீடுபடும் ஒரு பெண்ணுக்கெதிராக இலங்கையில் எந்தச் சட்டமும் இருந்ததில்லை" எனக் கூறுகின்றார்.




**பெண் பாலியல் தொழிலாளர்கள்(சிஸ் பால்நிலை மற்றும் திருநங்கைகள்), வாடிக்கையாளர்கள் தம்மை நேரடியாகத்தொடர்பு கொள்ளக்கூடிய ஒரு திறன்பேசியை வைத்திருத்தல் மற்றும் அதனூடாக தம்முடைய நீண்டகால வாடிக்கையாளர்களுடன் தொடர்பிலிருத்தல் போன்றவை பொதுவெளிகளில் வாடிக்கையாளர்களை தேடுவதைக் குறைக்கச்செய்திருக்கின்றது என்பதை எம்முடன் பகிர்ந்துகொண்டனர்.**

சிஸ் பால்நிலை தன்பாலீர்ப்பு ஆணான மெலனி, 10 வருடத்திற்கு முன் இணையத்திற்கு வந்ததிலிருந்து படிப்படியாக பாலியல் தொழிலாளராக அவரது தொழிலை இணையவழிக்கு மாற்றிக்கொள்ளக்கூடியதாக இருந்ததாகவும், தற்போது 100% ஆன நேரங்களில் அவரது வாடிக்கையாளர்கள் அவரை இணையவழியிலேயே கண்டுபிடிப்பதாகவும் கூறினார். அவர் இணையவழியில் பலவழிகளில் வாடிக்கையாளர்களைத் தேடுவதுண்டு. அவர் பல உள்ளூர் விளம்பர வலைத்தளங்களில் தனது சேவைகளை விளம்பரப்படுத்துகின்றார். இக் கருத்தாய்வில் பங்குபற்றியவர்களினதும், அந்த தளத்தினை பயன்படுத்தும் ஏனையவர்களினதும் ரகசியத்தன்மையினைப் பேணும்முகமாக நாம் இந்த அறிக்கையில் அவ்வலைத்தளங்களின் பெயர்களைக் குறிப்பிடவில்லை. ஒரு மாத விளம்பரத்திற்கு இலங்கை ரூபா. 500செலவாகும்(ஏறக்குறைய 2.75 அமெரிக்கடொலர்கள்). மெலனிக்கு அவரது வருமானம் இந்தச் செலவினை ஈடுசெய்துவிடும். அத்துடன் இத்தளங்களில் வாடிக்கையாளர்களாகக்கூடிய சாத்தியமுள்ளவர்களுடைய விளம்பரங்களைப் பார்த்து, அதற்கும் இவர் பதிலளிப்பதுடன் ஒவ்வொரு வலைத்தளங்களிலும் அவர்களது வாடிக்கையாளர்கள் தொடர்பில் அவர்களது வயது, வர்க்கம் மற்றும் ஏனையவை குறித்தும் அவதானிக்கின்றார். மெலனி தான் முகநூ லில் இருக்கும் போது கூட வாடிக்கையாளர்களாகக்கூடிய சாத்தியமுடையவர்களுடன் தொடர்பினை ஏற்படுத்தியதுடன், அவரது முந்திய முகநூல் கணக்கில்(இது கம்பனியினுடைய உண்மையான பெயர் கொள்கையின்படி முடக்கப்பட்டது, இது "அரசினதும் இணையத்தளங்களினதும் விதிமுறைகள்"என்கின்ற பகுதியினுள் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது) ஏறக்குறைய 4000 நண்பர்களைக் கொண்டிருந்ததுடன், அது பெரிய வலையமைப்பினைப் பெற்றுக்கொள்ளவும் வாய்ப்பளித்தது. வலைத்தளங்களுக்கு மேலதிகமாக, அவர் புகைப்படங்களைப் பகிர்ந்து கொள்ளவும், வாடிக்கையாளர்களுடன் தொடர்புகொள்ளவும் செய்திப்பரிமாற்ற செயலிகளையும் பயன்படுத்துகின்றார்.

அதனால், ஏனைய இணையப்பாவனையாளர்களைப்போல LGBTQ+ மக்களும் இணையத்தினை வாழ்வாதாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கான கருவியாக அல்லது இடமாகப் பயன்படுத்துகின்றார்கள். அத்துடன் அவ்வாறு பயன்படுத்துவதில் அவர்களின் பால்நிலை அடையாளத்திற்கும், பாலியல்பிற்குமே உரித்தான சவால்களும் வாய்ப்புக்களும் அதில் உள்ளன. ஆயினும், விசேடமாக நேர்காணல்களில் பங்கேற்றவர்கள் பயன்படுத்துகின்ற தளங்களை எடுத்துக்கொண்டால், அவையனைத்துமே 3ம் தரப்பினரால் உரிமைகொண்டாடப்பட்டு, இயக்கப்பட்டு, கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றன. அந்த 3ம் தரப்பினரின் கொள்கைகள் சிலவேளைகளில் திட்டமிட்டவகையிலோ, அல்லாமலோ LGBTQ+ மக்களுக்குப் பாரபட்சமானதாக இருக்கமுடியும் என்பனவற்றினைக் குறிப்பாகக் கருத்திற்கொண்டால், இணையத்தைச் சார்ந்திருக்கின்ற வாழ்வாதாரத்தில் ஒரு நிச்சயமற்ற தன்மை உள்ளது.

**அதனால், ஏனைய இணையப்பாவனையாளர்களைப்போல LGBTQ+ மக்களும் இணையத்தினை வாழ்வாதாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கான கருவியாக அல்லது இடமாகப் பயன்படுத்துகின்றார்கள். அத்துடன் அவ்வாறு பயன்படுத்துவதில் அவர்களின் பால்நிலை அடையாளத்திற்கும், பாலியல்பிற்குமே உரித்தான சவால்களும் வாய்ப்புக்களும் அதில் உள்ளன.**




# சமூகம் மற்றும் வாழ்வாதாரத்தினைக் கண்டுபிடித்தல்

*விடயங்கள்: நுகர்வோரும் உற்பத்தியாளர்களும்*

இணையத்தைப் பயன்படுத்துவதில் பெண்ணிலைவாதிகளின் கொள்கைகளின் படி “பெண்களுக்கும் குயர் நபர்களுக்கும் குறியீடிடல், வடிவமைத்தல், தகவமைத்துக்கொள்ளல், விமர்சனபூர்வமாகவும், நீண்டுநிலைத்திருக்கத்தக்கதாகவும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தல் போன்றவற்றிற்கும், தொழில்நுட்பத்தினை ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கும், வெளிப்பாட்டிற்குமான தளமாக மீளக்கோரவும், அனைத்து வெளிகளிலும் பால்வாதமான மற்றும் பாரபட்சமான கலாசாரத்தினைச் சவாலிடவும் உரிமையுண்டு.” நாம் நுகரும் அளவிற்கு, விடயங்களை உற்பத்திசெய்யவும் எமக்கு உரிமையிருக்கின்ற அதேவேளை, இலங்கையிலிருக்கும் LGBTQ+ மக்கள் உண்மையில் இந்த உரிமையினைப் பிரயோகிக்கக்கூடியவாறாக தமக்கு ஏற்பட்ட அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டனர்.


பதிலளித்தோரில் அநேகர் (82%) தம்மை அன்றாட நுகர்வோராகப் பார்க்கின்றமை சுவாரஸ்யமானதாக இருக்கின்ற அதேவேளை பலர் (30%) தம்மை அன்றாட விடயத்தயாரிப்பாளர்களாகப் பார்க்கவில்லை. இது அவர்கள் செயலற்றவகையில் விடயங்களை நுகர்கின்றார்களா, ஏன் அவ்வாறு நுகர்கின்றார்கள், அத்துடன் விடய உருவாக்கம் அல்லது தயாரிப்பு குறித்து அவர்கள் எவ்வாறாக உள்வாங்கிக்கொண்டிருக்கின்றார்கள், எவ்வாறு புரிந்துகொண்டிருக்கின்றார்கள் போன்ற கேள்விகளை எழுப்புகின்றன. நேர்காணல்களின்போது எமக்குப் பதிலளித்தோர், இவை குறித்த பிரதிபலிப்புக்களை மேற்கொண்டனர். தம்மை விடயத்தயாரிப்பாளர்களாகக் கருதியவர்கள், அவர்களாகத் தாமே கலைச்செயற்பாடுகளை/பொருட்களைத் தயாரித்ததினால் அல்லது சமூகப் பெறுமதி இருக்கின்றவை அல்லது சமூகநன்மைக்கானவையை உருவாக்கியதனால் அவர்கள் தம்மை அவ்வாறு கருதினர்.

**இணையத்தில் விடயங்களை நுகர்வோராக எத்தனை தடவை இணையத்தினை பயன்படுத்துகின்றீர்கள்?**




*உரு 29: இணையத்தில் விடயங்களை நுகர்வோராக எத்தனை தடவை இணையத்தினை பயன்படுத்துகின்றீர்கள்?*

**இணையத்தில் விடயங்களை உருவாக்கு-வோராக எவ்வளவு காலத்திற்கொருமுறை இணையத்தினைப் பயன்படுத்துகின்றீர்கள்?**





*உரு 30: இணையத்தில் விடயங்களை உருவாக்குவோராக எவ்வளவு காலத்திற்கொருமுறை இணையத்தினைப் பயன்படுத்துகின்றீர்கள்?*



Youtube நட்சத்திரமான ஹிரண், தான் ஒரு விடயத்தயாரிப்பாளர் என்பதில் தெளிவாக இருக்கின்றார். அவர் முதல்முதலில் youtubeஇல் வெளியிட்ட காணொளி விரைவாகப் பரப்பப்பட்டது. அவர் இதனை, இலங்கையில் இத்தகைய காணொளிகள் வெளியிடப்படுவது இது தான் முதல் தடைவ என்கின்ற உண்மையுடன் தொடர்புபடுத்துகின்றார். வெளிப்படையாக ஆண்தன்பாலீர்ப்பாளராகவும், அடையாளப்படுத்தப்பட்ட பாலுக்குரியதாகச் சமூகத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஆடைகளை அணியாமல், வேறுபட்ட உடைகளை அணியும் நபராகவும், ஆற்றுகைசெய்பவராகவும் இருப்பதனால் ஹிரண் லில்லி சிங்கினால் தயாரிக்கப்படும் விடயங்களால் செல்வாக்குச்செலுத்தப்பட்டார். அத்துடன் இலங்கையில் அப்போதையகாலங்களில் மிகவும் பிரபலமான youtube நட்சத்திரங்களான ஜிஹானஆர் மற்றும் ஹப்பியா போன்றவர்கள் சிஸ்பால்நிலை எதிர்ப்பாலீர்ப்புடைய ஆண்களாக இருந்ததனையும் நினைவுமீட்டார். அவர் தனது முதற்காணொளி உருவாக்கம் பற்றி நினைவுபடுத்தியதுடன், அவர் அதற்கென பிரத்தியேகமாகத் திட்டமிடவில்லையெனவும் அந்தநேரத்தில் அவர் எவ்வாறு உணர்ந்தாரோ “எதுவும் செய்யாமலிருப்பதை நிறுத்தவேண்டும். ஏதோஒன்றினை எதுவுமாக மாற்றவேண்டும” அதன்வழி சென்றதாகவும் குறிப்பிட்டார். அவர் தனது மடிக்கணினியின் வலைநிழலியின் (webcam) உதவியுடன் அக்காணொளியினைத் தயாரித்ததுடன் இன்றுவரை மிகவும் பிரபலமான காணொளியாகவும் அது இருக்கின்றது.

இணையத்தில் எத்தகைய கேள்வியாயினும் அதற்குப் பதில் கண்டுபிடிப்பது சாத்தியமாகின்றது, உங்களுக்கு நீங்களே புதிய திறன்களைக் கற்றுக்கொடுப்பது சாத்தியமாகின்றது போன்ற காரணங்களினால் ஆர்யாவைப்பொறுத்தவரை, அவருக்கு தேடல்இயந்திரங்கள் தான் இணையத்தின் சிறப்பான பகுதியாகும். “ஆரம்ப காலங்களில் எவ்வாறு இணையத்தில் ஒரு உரையாடலில் ஈடுபடுவது என்று கூட எனக்குத் தெரியாது. ஆனால் பின்னர் எனக்கு நானே இணையத்தைப் பயன்படுத்திக் கற்றுக்கொடுத்தேன். அதுபோல இணையத்தின் மூலம் நீங்களாகவே கற்றுக்கொள்ளக் கூடிய பல விடயங்கள் உள்ளன. அத்துடன் கூகிள் வரைபடங்கள் (Google map) நான் எங்காவது செல்லவேண்டுமாயின் நான் அந்த செயலியை இயக்கி தெரியாத இடங்களுக்குக் கூட மிக இலகுவாக செல்லலாம்.

**சமூகத்தால் விலக்கப்பட்டதாகக் கருதப்படுகின்ற அல்லது பிரச்சனைக்குரியதாகக் கருதப்படுகின்ற தலைப்புக்கள் தொடர்பிலான தகவல்களை இணையத்தில் கண்டுபிடிக்க முடியும்.**




*உரு 31: சமூகத்தால் விலக்கப்பட்டதாகக் கருதப்படுகின்ற அல்லது பிரச்சனைக்குரியதாகக் கருதப்படுகின்ற தலைப்புக்கள் தொடர்பிலான தகவல்களை இணையத்தில் கண்டுபிடிக்க முடியும்.*

*“திருநர்களுக்காக ஒரு செயலியினை உருவாக்க நான் விரும்புகின்றேன். அதனை எவ்வாறு செய்வது என்பதைக் கற்றுக்கொள்ள நான் விரும்புகின்றேன். அது தொடர்பில் எனக்கு எந்த அறிவும் இல்லை. எனவே என்னை எது தடைசெய்கின்றது என்று பார்த்தால், யாரிடம் இவற்றைக் கேட்டுத்தெரிந்துகொள்வதென்பது எனக்குத் தெரியாது. அத்துடன் வகுப்புக்களுக்குப் பணம் கொடுக்கவும் என்னிடம் பணம் இல்லை.”*



விரான் தினமும் இணையத்தில் விடயங்களை நுகர்கின்றார். ஆனால் அரிதாகவே தான் விடயங்களை உருவாக்குவதாகக் கூறுகின்றார். அவர்களுடைய விடய நுகர்வு, மற்றையவர்கள் உருவாக்கும் விடயத்துடன் ஈடுபடுதல் மற்றும் எப்போதாவது இடும் tweet போன்றவற்றை உள்ளடக்கியிருக்கின்றது. ஆனால் ஒரு கலைஞராக இத்தகைய செயற்பாடுகளை எந்தவகையிலும் விடய உருவாக்கமாக அவர்கள் கருதுவதில்லை. அவர்களைப் பொறுத்தவரையில் தான் அரிதாக வரைந்து Instagramஇல் பதிவிடும் ஓவியங்கள் தான் அவர்கள் உருவாக்கும் விடயம். “ஒரு ஓவியரின் நோக்குநிலையில், உருவாக்குதல் என்பது நீங்களாக உருவாக்குவது”, என விரான் கூறுகின்றார். இணையத்தில் எதனை அதிகம் செய்யவிரும்புகின்றீர்கள் எனக் கேட்கப்பட்டபோது அவர் மீண்டும் ஓவியத்தினையே குறிப்பிட்டார். அவர்கள் பால்நிலை உள்ளடங்கலாகப் பல தலைப்புக்களை ஆராய்கின்ற அதிகளவிலான ஓவியங்களை உருவாக்கித் தவறாது பதிவேற்ற விரும்புகின்றனர். “நான் விரும்புகின்ற அளவிற்கு ஓவியம் வருமானத்தைத் தருவதில்லை. அது ஏனெனில் நான் அதற்குத் தேவையான நேரத்தையும், சக்தியினையும் அதில் போடவில்லை. அவர்கள் பகுதியளவில் நகைச்சுவையாக முதலாளித்துவம் தான் அதைச் செய்யாமல் தடுப்பதாகக் குறிப்பிட்டனர். ஆனாலும் அது நகைச்சுவையல்ல. அவர்கள் ஒரு முழு நேர ஆக்கபூர்வமான துறையில் இருக்கின்றனர். அது அவர்களின் பெரும்பாலான நேரத்தினையும், சக்தியினையும் எடுத்துக்கொள்ளும். அதற்கு என்ன அர்த்தமென்றால் அவருக்குக் கிடைக்கும் நேரத்தில் ஓவியத்தினை உருவாக்குவதற்குத் தேவையான செயலூக்கம் அங்கு இல்லை. அதற்கு மற்றுமொரு காரணம் அவர்கள் தற்போது ஓவியத்தினை உருவாக்கும் பிரதான சாதனமாகத் தொலைபேசி இல்லை. விரான் தற்போது ஒரு ipad வாங்குவதற்காக சேமித்து வருகின்றார். அதனூடாக அவர்களுடைய அன்றாடப் பயணத்தின் போது ஓவியத்தினை

**இணையத்தில் எதனை அதிகம் செய்யவிரும்புகின்றீர்கள் எனக் கேட்கப்பட்டபோது அவர் மீண்டும் ஓவியத்தினையே குறிப்பிட்டார். அவர்கள் பால்நிலை உள்ளடங்கலாகப் பல தலைப்புக்களை ஆராய்கின்ற அதிகளவிலான ஓவியங்களை உருவாக்கித் தவறாது பதிவேற்ற விரும்புகின்றனர்**

உருவாக்கமுடியும். எனவே இணையப்பாவனை தொடர்பில் பெண்ணிலைவாதிகளின் கொள்கை விரானுக்கு உண்மையாக இருக்கின்ற அதேவேளை, சாதனங்களின் விலை மற்றும் நேரம் போன்ற காரணிகள் இவ்வுரிமையை முழுமையாகப் பிரயோகிப்பதற்குத் தடைகளாகவும் இருக்கின்றன.



விஜய் தன்னை விடயங்களை உருவாக்குபவராகப் பார்க்கின்றார் – (blogging)வலைப்பதிவிடல், மொழிபெயர்ப்பு வேலைகளைச் செய்தல், இசை மற்றும் இலக்கியம் அமைத்தல் போன்றவை மேற்கொள்ளப்பட்டு அவை இணையவழியில் பகிர்ந்துகொள்ளப்படும். அவர் விக்கிப்பீடியா (Wikipedia) மற்றும் நூலகம் போன்றவற்றிற்கும் விடயப் பங்களிப்பினை/உருவாக்கத்தினைச் செய்கின்றார்.

இணையத்தினூடாக முகநூல், இணையத்தளங்கள் மற்றும் youtubeஇனைப் பயன்படுத்தி பாலியல்பு மற்றும் பால்நிலை தொடர்பிலான பிரச்சனைகள் குறித்த தெளிவினைப்பெற லக்ஷ்மிக்கு இயலுமாக இருந்தது. அவர் கற்றுக்கொண்டதன் அடிப்படையில் சில விடயங்களைத் தமிழில் உருவாக்கியிருக்கின்றார். அவர் தன்னை விடயங்களை உருவாக்குபவராகக் கருதுவதுடன் சமூகத்தில் நிலவும் பாரபட்சம் மற்றும் அடக்குமுறைகள் பற்றிய முகநூல் போன்ற தளங்களிலிடும் பதிவுகளே இவ் விடயங்கள் எனவும் விபரித்தார். அவர் தான் பதிவிடும் படங்களையும் - அநேகமானவை இயற்கை குறித்தவை, தன்னுடைய படங்களையும் விடயங்களாகக் கருதுகின்றார்.



இணையவழியில் பெண்களின் உரிமைகள் தொடர்பில் அநேக விடயங்களைக் கற்றுக்கொண்டதாகக் கிறிஷானி கூறுகின்றார். அத்துடன் LGBTQ+ சமூகத்தைப்பற்றி அநேகவிடயங்களை அறிந்துகொள்ளவும் இணையம் அவருக்கு உதவியதாகக் கூறினார். அவர் தன்னை விடயங்களை உருவாக்கும் ஒருவராகப் பார்க்கவில்லை அல்லது அவர் முகநூ ல் போன்ற தளங்களில் தான் இடும் பதிவுகளையும் விடயங்களாகக் கருதவில்லை. அவரைப்பொறுத்தவரை காணொளிகளை உருவாக்கும் Instagram மூலம் செல்வாக்குச்செலுத்துபவர்கள், வலைத்தளங்களை வைத்திருப்போர், அல்லது தனிப்பட்டரீதியிலோ தொழில்ரீதியாகவோ விடயங்களை உருவாக்குபவர்களே தயாரிப்பாளர்கள், ஊடக நிறுவனங்களுக்கு விடயங்களை தயாரிப்பவர்கள் அல்ல.



*“எனது கருத்தின்படி தயாரிப்பாளர்கள் என்போர்- காணொளிகளை உருவாக்கும் Instagram மூலம் செல்வாக்குச்செலுத்துபவர்கள், வலைத்தளங்களை வைத்திருப்போர் அல்லது தனிப்பட்டரீதியாகவோ தொழில்ரீதியாகவோ விடயங்களைத் தமது தொழிலாக உருவாக்குபவர்களே தயாரிப்பாளர்கள். ஆனால் ஒரு இடத்திற்கோ அல்லது ஊடக நிறுவனங்களுக்காகவோ உருவாக்குபவர்கள் அல்ல”*

ஸாராவிற்கும் தான் எவ்வாறு விடயத்தயாரிப்பினை வரையறைசெய்கின்றார் என்பது குறித்த கருத்துக்கள் உண்டு. அவர் ட்விட்டரில் அநேக threadகளைத்(த்ரெட்) தவறாமல் இடுவதுண்டு. ஆனால் அவர் அவற்றை விடயங்களாக கருதுகின்றாரா என அவருக்குத் தெரியாது. “விடயம் என்பது மக்கள் மற்றையவர்கள் பார்ப்பதற்காகத் தயாரிப்பது. ஈடுபடுதல் என்பதே விடயத்தின் முக்கியஅம்சமாகும். எனக்கு கவனஈர்ப்பு அவசியமானதொரு தேவையில்லை.” இந்த வரைவிலக்கணத்தில் அவருடைய அநேக threads தன்னுடைய பிரக்ஞையின் நீரோடையாக அல்லது தனது ஆழமான உணர்வுகளை வெளியேற்றுவதற்கான ஒரு வழியாக இருப்பதனால் ஸாரா தன்னை விடயத்தயாரிப்பாளராக கருதவில்லை. ஆயினும், மற்றையவர்கள் தன்னை விடயத்தயாரிப்பாளராக நினைப்பதாகவும் ஸாரா குறிப்பிட்டார். அவர் தொடர்ச்சியாக தன்னுடைய பூனைகளின் படங்களை Instagramஇல் பதிவிடுவார். அப் புகைப்படங்கள் அவரால் எடுக்கப்பட்டு அதற்கான தலைப்புக்களும் அவராலேயே அளிக்கப்படுகின்றபோதும், அதை விடயத்தயாரிப்பென அழைக்கலாமா என்பது குறித்து மீண்டுமொருமுறை அவருக்கு நிச்சயமற்றநிலையே காணப்படுகின்றது. விடயத்தயாரிப்பாளராகக் கருதுவதில் ஸாராவுக்குள்ள தயக்கமானது, விடயத்தயாரிப்பென்பது Instagram மூலம் செல்வாக்குச்செலுத்துபவர்களைப்போல குறிப்பிடத்தக்க பெறுமதி அல்லது சமூகப்பெறுமதியுடன் தொடர்புபட்டது என்கின்ற கிறிஷானியின் வரைவிலக்கணத்துடன் ஒத்துப்போவதாக உள்ளது.



ஹாசினி தன்னை ஒரு விடயத்தயாரிப்பாளராகக் கருதவில்லை. அத்துடன் சுயமான எழுத்துக்களையும், வலைப்பதிவுகளையும், விடயங்களையும் பதிவிடுபவர்களே தயாரிப்பாளர்களாகும் எனக் கூறினார். ஒரு சுவாரஸ்யமான கட்டுரையைப் பகிர்ந்து கொள்ளுதல் விடயத் தயாரிப்பாகாது. ஆயினும் அக் கட்டுரை தொடர்பில் ஒரு கருத்தினைப் பகிர்தல் என்பது விடயத்தயாரிப்பாகும் எனக் கூறினார்.




பால்நிலை மற்றும் பாலியல்பு தொடர்பிலான வேறுவழிகளில் இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியாத அல்லது அது குறித்து பேசக்கூடிய யாருடனும் தொடர்பற்ற திவ்யாவிற்கு, இணையமானது அத்தகைய தலைப்புக்களில் தெளிவினைப் பெற்றுக்கொடுத்தது. ஆயினும், பிரதானமாகத் தமிழில் படித்து, தமிழ் பேசும் வீட்டுச்சூழலில் வளர்ந்த திவ்யாவிற்கு அவர் மிகவும் இளையவராக இருக்கும் போது எதிர்கொண்ட சவால் என்னவென்றால், அதிகளவிலான தகவல்கள் ஆங்கிலத்திலேயே பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது. அவர் தொழில்நுட்பச் சொற்களைப் புரிந்து கொள்வதில் சவால்களை எதிர்கொண்டார். இன்றும் கூட தமிழில் தகவல்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இருப்பதாகவும் ஆங்கிலத்தினைக் கற்றுக்கொண்டதனால் முன்னரைவிட சிறப்பாக விடயங்களைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பதாகவும் கூறினார். அவர் தன்னை ஒரு தயாரிப்பாளராகக் கருதுகின்றார் - தயாரிப்பதென்பது எதையும் சுயமாக எந்த வடிவத்திலும் உருவாக்குவதென்பதாகும். அவர் இணையவழித்தளங்கள் மற்றும் வலைத்தளங்கள் (Blog) தனக்கு அறிமுகமானதன் மூலம் அவற்றில் எழுதத்தொடங்கினார். நேரில் பின்னூட்டங்களைப் பெறுவதை விடவும் அவர் இணையவழியில் பின்னூட்டங்களைப் பெறுவதை விரும்புகின்றார். இணையவழியில் பிரசுரிப்பது தொடர்பில், ஒரு word ஆவணமாகவோ அல்லது ஒரு குறிப்புப் புத்தகத்திலோ இருப்பதை விடவும் “அங்கே வெளியில் இருக்கிறது” என்பது போல் தான் உணர்வதாகவும் கூறினார்.



செல்வி தான் ஒரு விடயத்தயாரிப்பாளரா என உண்மையில் சிந்தித்ததில்லை எனக் கூறினார். அவர் வெவ்வேறான விடயங்கள் தொடர்பிலான பதிவுகளையும், தனது புகைப்படங்களையும் பகிர்ந்துகொள்வார். தான் பகிர்ந்து கொள்வது தனக்குச்சொந்தமான தனிப்பட்ட விடயங்கள் என்பது குறித்து அவர் சிந்திக்கவில்லை.



இந்த உரையாடல்களிலிருந்து இலங்கையில் இணையத்தைப் பயன்படுத்தும் LGBTQ+ மக்கள் இணையவழியில் விடயங்களை உருவாக்குவதில் ஓரளவிற்குத் தம் செயலாளுமையை பிரயோகிக்கிப்பதாகத் தோன்றுகின்ற அதேவேளை, பலர் அத்தகைய செயற்பாடுகளை விடயஉருவாக்கம் அல்லது தயாரிப்பாக அடையாளம் காண்பதையும், ஏற்றுக்கொள்வதையும் தவிர்க்கின்றார்கள் என்பது தெளிவாகின்றது. ஆயினும் இணையத்தளப் பொருளாதாரத்தில் (platform economy) ஒவ்வொரு அழுத்துதலும் (Click), உருட்டுதலும் (Scroll) எம்மைப்பற்றிய தகவல்களையும், நுண்ணறிவினையும் உருவாக்குவதுடன், அத் தளங்களுக்கு வருவாயையும் ஈட்டித்தருகின்றன. தமது இணையப்பயன்பாடு என்ன அர்த்தத்தினைக் கொடுக்கின்றது, எதனை விளைவாகத்தருகின்றது என்பதை விமர்சனபூர்வமாக மதிப்பிடுவதற்கான மக்களின் திறனை வலுப்படுத்துதல் அவசியமாகும்.



# அணுகக்கூடியதன்மையும் விதிமுறைகளும்

*அணுகக்கூடியதன்மை*


சனத்தொகையில் 40% ஆனோர் மட்டுமே டிஜிட்டல் அறிவினைக் கொண்டிருப்பதாகக் கருதப்படுவதுடன் இலங்கையில் இணையத்தினை அணுகக்கூடியதன்மையானது குறைவாகவே உள்ளது (Galpaya et al., 2019). 2017 அளவில் 34% ஆனவர்கள் மட்டுமே இணையத்தினைப் பயன்படுத்தியிருக்கின்றனர் (சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியம், 2017). அணுகக்கூடியதன்மை என்பது ஒரு பரந்துபட்ட உரையாடலுக்கான தலைப்பாகும். இலங்கையிலுள்ள LGBTQ+ மக்கள் இணையத்தினைப் பயன்படுத்துவதை எவ்வாறு அதன் அணுகக்கூடியதன்மை பாதிக்கின்றது என்பது தொடர்பில் நாம் உரையாடிய சில பகுதிகள் பின்வருமாறு.

- சாதனங்கள் மற்றும் இணையத்தின் மீதான கட்டுப்பாடும், அதற்கான காரணங்களும்
- சாதனங்களின் விலையும், இணையஇணைப்பும்
- அரசினதும் இணையத்தளங்களினதும் விதிமுறைகள்
- மொழி (மொழி மற்றும் துறைச்சொற்கள் எனும் பின்னருள்ள பகுதியில் உரையாடப்பட்டுள்ளது)

## கட்டுப்பாடு

இணையத்தை அணுகுவதற்கான பிரதான சாதனமாக பதிலளித்தோரில் 88% ஆனோர் தமது கைத்தொலைபேசியினையும், குறைந்த வீதமானோர் தமது மடிக்கணினியினையும் பயன்படுத்துகின்றனர். திறன்பேசிகளே இலங்கையில் இணையப்பாவனையை நடாத்திச்செல்வதாக ஆய்வுகள் காட்டுகின்றன (Galpaya et al., 2019). அது இக்கருத்தாய்வின் கண்டுபிடிப்பினை மேலும் உறுதிசெய்கின்றது.

**இணையத்தினுள் நுழைவதற்கு நீங்கள் அதிகளவில் உபயோகிக்கின்ற சாதனம் எது?**




| | |
|---|---|
| மடிக்கணினி | 88.1% |
| தொலைபேசி | 8.9% |
| Tablet | 1.0% |
| Desktop computer | 1.0% |
| ஏனையவை | 1.0% |

*உரு 32: இணையத்தினுள் நுழைவதற்கு நீங்கள் அதிகளவில் உபயோகிக்கின்ற சாதனம் எது?*

**இணையப் பயன்பாட்டிற்கு நீங்கள் பயன்படுத்தும் உங்களது பிரதான சாதனத்தின் மீது எந்தளவிற்கு கட்டுப்பாட்டினைக் கொண்டிருக்கின்றீர்கள்?**

- முழுமையான கட்டுப்பாடு 62.7%
- பதிலளிக்கப்படவில்லை 30.4%
- ஓரளவிற்கு 6.9%



*உரு 33: இணையப் பயன்பாட்டிற்கு நீங்கள் பயன்படுத்தும் உங்களது பிரதான சாதனத்தின் மீது எந்தளவிற்கு கட்டுப்பாட்டினைக் கொண்டிருக்கின்றீர்கள்?*

ஒரு தொழில்நுட்பவழுவின் காரணமாக இக்கேள்வி தவிர்க்கப்பட்டு வேறொரு கேள்வி மீளக்கேட்கப்பட்டிருந்தபடியினால், பதிலளித்தோரில் 30பேரளவினரால் இக்கேள்வி பதிலளிக்கப்படாமல் இருந்தது. பதிலளித்தோரில் 60% இற்கும் அதிகமானவர்கள் தாம் இணையத்தினை அணுகுவதற்குப் பயன்படுத்தும் பிரதான சாதனத்தின்மீது தாம் முழுமையான கட்டுப்பாட்டினைக் கொண்டிருப்பதாகக் கூறியபோதும், அதனால் ஒரு போக்கினை/பாங்கினை புரிந்துகொள்வது சிரமமானது. மிககுறைந்தபட்சம் மேற்கூறிய கண்டுபிடிப்புக்கள் ஒன்றாக எடுத்துக்கொள்ளப்பட்டால், பதிலளித்தோரில் அநேகமானவர்கள் தமக்குச் சொந்தமாக கைப்பேசியினைக் கொண்டிருப்பதையும் அதன் மீது கட்டுப்பாட்டினைக் கொண்டிருப்பதனையும் சுட்டிக்காட்டுகின்றன.



ஆர்யாவினுடைய இணையத்தை அணுகக்கூடியதன்மையானது, திருநங்கையாக அவரது அடையாளத்தினால் கட்டுப்படுத்தப்படுகின்றது - அவரது பெற்றோரினாலும், அவரது பாடசாலையினாலும், அவரது குடும்பத்திற்குத்

தெரிந்த நபர்கள் அவரது சமூகவலைத்தளப் பக்கங்களை கண்காணிப்பதன் மூலமும் - தற்போது அவரின் காதலராலும். அவர் இளமையாக இருக்கும்போதே அவரது தொலைபேசி அவரின் பெற்றோரினால் பறிக்கப்பட்டு நீண்டகாலமாக சமூகவலைத்தளங்களை அணுகக்கூடியநிலையினை அவர் கொண்டிருக்கவில்லை. என்ன பதிவேற்றப்படுகின்றது என்பதில் தற்போது அவருக்கு அதிக கட்டுப்பாடிருக்கின்றது. ஆனால் அவரின் காதலரிடமே password இருக்கின்றது. மட்டுப்படுத்தப்பட்ட அணுகக்கூடியதன்மையின் விளைவாக, அவரது பயன்பாடும் மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது - பதிவேற்றப்படுகின்ற குறைந்தளவிலான பதிவுகள் கூட ஊடகங்களிடமிருந்து வருபவை உள்ளடங்கலாக எதிர்மறையான எதிர்வினைகளையே வரவழைத்தன. சிறிதளவில் சுயதணிக்கையும் இங்கு காணப்பட்டது.

> *“நாங்கள் எமது பக்கத்தில் எதைப்பதிவிடுகின்றோம் என்பது குறித்து கவனமாக இருக்கின்றோம். அங்கு சுதந்திரமில்லை. அதனால் நாம் மூடியகுழுக்களில் மட்டுமே தகவல்களைப் பகிர்ந்து கொள்கின்றோம். பொதுவெளிகளில் அல்ல. நான் விரும்புவது போல என்னுடைய புகைப்படத்தினைப் பதிவேற்றக் கூட எனக்கு எவ்வித சுதந்திரமுமில்லை.”*

அவர் அடையாளத்திருட்டிற்கு முகங்கொடுத்திருக்கின்றார். அதன்போது அவருடைய புகைப்படம் தரவிறக்கப்பட்டு சேதத்தை உண்டுபண்ணக்கூடிய விடயங்களைப் பதிவிடும் போலி முகநூல் கணக்கொன்றில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. “சமூகத்தில் என்னைப்பற்றிய பிம்பம் பாதிப்பிற்குள்ளாகச்செய்யப்படுகின்றது” என்கிறார் ஆர்யா.



**அவர் இளமையாக இருக்கும்போதே அவரது தொலைபேசி அவரின் பெற்றோரினால் பறிக்கப்பட்டு நீண்டகாலமாக சமூகவலைத்தளங்களை அணுகக்கூடியநிலையினை அவர் கொண்டிருக்கவில்லை. என்ன பதிவேற்றப்படுகின்றது என்பதில் தற்போது அவருக்கு அதிக கட்டுப்பாடிருக்கின்றது. ஆனால் அவரின் காதலரிடமே password இருக்கின்றது.**



லக்ஷ்மி இணையவழி வெளிகளை எவ்வாறு பயன்படுத்துகின்றார் என்பதை அவரது அடையாளம் பாதித்திருக்கின்றபோதும், விஜயும், லக்ஷ்மியும் தம்முடைய சாதனங்களினூடாக இணையத்தினை அணுகுவதற்கான தன்மையானது தமது அடையாளத்தினால் பாதிக்கப்படவில்லை என உணர்கின்றார்கள். செல்வி தான் பயன்படுத்தும் அனைத்து செயலிகளும், அவரது தரவுகளை எடுத்துக்கொள்வதால் தனது சாதனத்தின் மீது எவ்வித கட்டுப்பாடும் தனக்கு





இல்லையென்று தான் உணர்வதாகவும், அதனால் பாதுகாப்பென்று எதுவும் அங்கு இல்லையெனவும் கூறுகின்றார். செயலிகளினால் விதிக்கப்படும் விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அவர் தனக்கிருக்கும் அநேக கட்டுப்பாடுகளை விட்டுக்கொடுக்கவேண்டும் என்பதே அர்த்தமாகும். ஆனால் அவர் இன்னும் அத்தளங்களைப் பயன்படுத்துகின்றார். அவர் இதனால் முழுமையாக மகிழ்ச்சியற்றிருப்பதாகக் கூறுவதுடன் தனியாள் தரவுகள் தவறாகப் பயன்படுத்தப்படாதவாறு மாற்றீடுகள் இருக்கவேண்டும் என நினைப்பதாகவும் கூறினார்.

## விலை

இலக்கு குழு உரையாடல்களின்போது சாதனங்களின் விலை மற்றும் இணையஇணைப்பிற்கான செலவு போன்றவை, பங்குபற்றுனர்களால் இணையத்தை அணுகுவதற்கான பிரதான தடையாகக் கூறப்பட்டது. இது 1GB இணையத்தினது விலையினை சனத்தொகையில் 60% ஆனோருக்கு செலுத்தக்கூடியதாக இல்லை என்கின்ற ஆய்வின்மூலம் ஆதரவளிக்கப்படுகின்றது (Galpaya et al., 2019). பங்குபற்றுனர்களில் அநேகர் முற்கட்டண தொலைபேசி இணைப்புக்களைப் பயன்படுத்துவதாகவும், Data முடிவடையும் போது மீள்நிரப்ப அவர்களிடம் பணம் இல்லையாயின் அவர்களது அணுகக்கூடியதன்மையானது பணிபுரியும் இடங்கள் போன்ற WIFI இருக்கும் இடங்களோடு மட்டுப்படுத்தப்படுவதாகவும் அவர்கள் பகிர்ந்துகொண்டனர். காணொளி போன்ற விடயங்களை நுகர்வது போன்ற இன்பத்திற்காகப் பலர் இணையத்தினைப் பயன்படுத்துகின்ற அதேவேளை, அது அவர்களுடைய அநேக தரவுகளையும் எடுத்துக்கொள்கின்றது என்கின்ற உண்மையினைக் குறித்த அறிவினையும் கொண்டிருக்கின்றனர். இது மெலனியுடைய அனுபவத்தினை ஒத்திருக்கின்றது. “நான் data அட்டைகளைப் பயன்படுத்துகின்றேன். Data என்று வரும்போது அடிக்கடி காசுப்பிரச்சனைகள் ஏற்படும்” என்பதுடன் இணையத்தை அணுகக்கூடியதன்மையானது அவரால் data வினை மீள்நிரப்பக்கூடியதாக இருக்கின்றதா அல்லது அவருடைய நண்பரொருவரால் உதவமுடியுமா என்பதில் தங்கியிருப்பதாகவும் விவரித்தார்.

**பங்குபற்றுனர்களில் அநேகர் முற்கட்டண தொலைபேசி இணைப்புக்களைப் பயன்படுத்துவதாகவும், Data முடிவடையும் போது மீள்நிரப்ப அவர்களிடம் பணம் இல்லையாயின் அவர்களது அணுகக்கூடியதன்மையானது பணிபுரியும் இடங்கள் போன்ற WIFI இருக்கும் இடங்களோடு மட்டுப்படுத்தப்படுவதாகவும் அவர்கள் பகிர்ந்துகொண்டனர்.**

தேற்காசியாவில் 4G mobile internetஇனை 2012இல் முதன்முதலில் அறிமுகப்படுத்திய நாடு இலங்கையாகும். ஆனால் நாடுமுழுவதும் 4G செயற்பாட்டு எல்லை அதிகரித்துக்கொண்டிருக்கின்றபோதும் 4Gஇற்கான சந்தாதாரர் ஊடுருவல் 2020இன் 1ம் காலாண்டளவில் 14.66 வீதத்திலிருப்பதாகவும், 2025ம் ஆண்டளவில் 33.1வீதத்திற்கு அதிகரிக்கலாமெனவும் எதிர்பார்க்கப்படுவதாக செய்தி அறிக்கைகள் காட்டுகின்றன (Daily news, 2020). கட்டுப்படியாகாத இணையத்தொடர்பு மற்றும் சாதனங்களே இத்தகைய குறைந்த அளவிலான சந்தாதாரர் ஊடுருவலுக்குக் காரணங்களாகும். அதேவேளை அரச மற்றும் தனியார் துறைகள் நாட்டிற்கு 5G உட்கட்டமைப்பில் முதலீடுசெய்ய ஆரம்பித்துள்ளன (Sunday Observer, 2020), விலை தொடர்பிலான இச் சவால்கள் எதிர்கொள்ளப்படாதவிடத்தில் இதுவும் மக்கள் எவ்வாறு இணையத்தை அணுகுகின்றார்கள், பயன்படுத்துகின்றார்கள் என்பதிலுள்ள சமத்துவமின்மையை மேலும் அதிகரிப்பதற்கு இட்டுச்செல்லும்.



# அரசினதும் இணையத்தளங்களினதும் விதிமுறைகள்

தெற்காசியா உட்பட உலகம் முழுவதும் தற்போது இணையமுடக்கமானது ஒரு பொதுவான நிகழ்வாகிவிட்டது (Access Now, 2020). இணையமுடக்கம் என்பது நாடுமுழுவதிலுமான ஒட்டுமொத்த இணைய முடக்கம் அல்லது குறிப்பிட்ட சில இணையத்தளங்களையும், செயலிகளையும் முடக்குதல் என வரையறுக்கப்படுகின்றது. அவை அடிக்கடி நடப்பதுடன் நீண்டகாலத்திற்கு நிலைத்திருக்கும் வகையிலும் இடம்பெறுகின்றன. இலங்கையில் 2019ம் ஆண்டு மே மாதத்தில் முஸ்லிம்களுக்கெதிரான கலவரங்களின் போது நாடளாவியரீதியில் குறைந்தது மூன்று இணையமுடக்கங்கள் (Access Now, 2020) செய்யப்பட்டிருந்தன. Facebook, WhatsApp, Instagram, YouTube, Viber, Snapchat மற்றும் Facebook Messenger மற்றும் Twitter உட்பட பல சமூகவலைத்தளப் பக்கங்கள் இவ்விணைய முடக்கங்களின் போது முடக்கப்பட்டிருந்தன என NetBlocks அறிக்கையிட்டது. அத்துடன் மார்ச் 2018இல் ஏற்பட்ட இணையமுடக்கங்களால் நாட்டிற்கு 30,000,000 அமெரிக்கடொலர்கள் பொருளாதார இழப்பு ஏற்பட்டிருக்கலாம் எனவும் NetBlocks மதிப்பிட்டது. அத்தகைய முடக்கங்களைத் தவிர விசேடமாக செய்தி இணையத்தளங்கள் மற்றும் Blog போன்ற குறிப்பிட்ட இணையத்தளங்களை முடக்குதல் மற்றும் தணிக்கைசெய்தல் என்பன பல வருடங்களாக நடந்துவருகின்றன.

எனவே உங்களுடைய வாழ்வாதாரம் இணையத்தில் தங்கியிருக்குமாயின் அத்தகைய இணையமுடக்கங்கள் உங்களுடைய மாதவருமானத்தில் தாக்கத்தை உண்டுபண்ணமுடியும். 2010-2015 வரையான காலப்பகுதியில் தனது சேவைகளை விளம்பரம் செய்திருந்த சில இணையத்தளங்கள் அரசாங்கத்தினால் முடக்கப்பட்டிருந்தபோது மெலனி இதனை அனுபவித்திருந்தார். அவர் இவ் இணையமுடக்கங்கள் ஏற்படுத்தப்பட்டமைக்கு, வயதுகுறைந்தவர்கள் இப் பக்கங்களில் தமது சேவைகளை விளம்பரம் செய்தமை தான் காரணம் என நினைக்கின்றார். இருப்பினும் அது அவரைப்போன்ற மக்களையும் பாதித்திருக்கின்றது. 2015இல் அரசாங்கம் மாறிய பின்பு தான் இப் பக்கங்கள் முடக்கநீக்கம் செய்யப்பட்டன. ஆனால் இலங்கையில் அண்மையில் ஒரு அரசாங்க மாற்றம் ஏற்பட்டது என்பதனைக் கருத்தில்கொள்ளும்போது, அவர் சில தளங்கள் முடக்கப்பட வாய்ப்பிருப்பதாக நினைக்கின்றார். சட்ட அமுலாக்கம் மற்றும் பொலிஸாருக்கு, பாலியல் தொழிலாளர்கள் வாடிக்கையாளர்களைக் கண்டுபிடிக்க இணையத்தினைப் பயன்படுத்துவது தெரிந்திருக்கின்ற போதும், வயதுகுறைந்தவர்களின் விடயத்தைத்தவிர அவர்கள் இதில் தலையிடுவதற்கு முயற்சிசெய்ததில்லை எனவும் மெலனி பகிர்ந்துகொண்டார்.



செல்விக்கு, தேசிய பாதுகாப்பு காரணங்களுக்காக தற்போதுள்ள அரசியலாட்சியில் இணையத்தினை அணுகக்கூடியதன்மையானது மட்டுப்படுத்தப்படக்கூடும். அது அவரது வேலை மற்றும் செயல்வாதத்தின் மேல் பாதிப்பினை உண்டுபண்ணமுடியும். ஆனால் தற்போது அவர் இணையத்தினை அணுகும்தன்மையில் எந்தவொரு தனிப்பட்ட கட்டுப்பாடுகளையும் எதிர்கொள்ளவில்லை. கொழும்பிலிருக்கின்ற கிறிஷானி மற்றும் திவ்யா இருவரும் இணையத்தினை அணுகும்தன்மையில் எந்தவொரு மட்டுப்பாடுகளையும், தடைகளையும் எதிர்கொள்ளவில்லை. அத்துடன் திவ்யா இளம்வயதிலிருந்தே இந்த அணுகும்தன்மையினை அனுபவிக்கின்றார்.

முகநூல் மற்றும் whatsapp போன்ற, சுயவெளிப்பாட்டிற்காக விரும்பப்படுகின்ற தளங்கள் பயனர்கள் அதிக கட்டுப்பாடுகளைக் கொண்டிருக்கின்ற தளங்களல்ல என்பது கருத்தாய்வின் பதில்களிலிருந்து உறுதியாகின்றது. பதிலளித்தோரில் அநேகர் பயனர்களுக்கு அதிக தன்னாட்சியைக் கொடுக்கின்ற தளங்களைப் பயன்படுத்தாத(மாற்றுவழிகள் பற்றிய தகவல்கள் குறைவாக இருக்கின்றமை, மாற்றுத்தளங்களில் பயனர்களின் பெருக்கம் குறைவாக இருத்தல் மற்றும் பல்வேறுபட்ட தளங்களுக்கான வெளியானது சாதனத்தில் பற்றாக்குறையாக இருத்தல் போன்ற பல காரணங்களினால் பயன்படுத்தவில்லை) அதேவேளை, அவர்களில் பலருக்கு சாதனத்தின் மீது முழுமையான கட்டுப்பாட்டினைக் கொண்டிருப்பதென்பது, இச்சாதனங்களின் மூலம் அவர்கள் பயன்படுத்தும் தளங்களின்மீது பகிர்ந்துகொள்ளப்படும் தரவுகள் மீது தமக்கு முழுமையான கட்டுப்பாடிருக்கின்றது

என்கின்ற அர்த்தமாகாது என்கின்ற விழிப்பு உண்டு.

லக்ஷ்மி dataவின் மீது செயலிகளுக்கும், பக்கங்களுக்கும் இருக்கின்ற கட்டுப்பாடு குறித்து பேசினார். அது அவருக்குப் பிடிக்கவில்லை. ஆகவே அவர் தான் எங்கு தன்னுடைய தகவல்களைப் பகிர்ந்துகொள்கின்றார் என்பதை மிகவும் தெரிவுசெய்தே மேற்கொள்கின்றார்.




*“எனது சாதனத்தின் மீதும் இணையப்பயன்பாட்டின் மீதும் எனக்குக் கட்டுப்பாடிருக்கின்றதென்றே நான் நினைக்கின்றேன். நான் அதைப் பயன்படுத்த நினைத்தால் பயன்படுத்துவேன். அதில் எவரும் தலையிடுவதில்லை. அத்துடன் எனது சாதனத்தினை நான் மட்டுமே பயன்படுத்துகின்றேன். அதேவேளை நான் சில தேடல்இயந்திரங்களைத் திறக்கும்போது அல்லது சில செயலிகளை தரவிறக்குவதற்கு, நாம் எம்முடைய மின்னஞ்சலினை அல்லது தொலைபேசி இலக்கத்தினை வழங்க வேண்டும். அந்த இடங்களில் நான் அவற்றைக் கொடுப்பதில்லை. நான் அந்த செயலியினை விட்டுச்சென்றுவிடுவேன் அல்லது வேறு ஏதாவதைப் பயன்படுத்துவேன். அது தான் கட்டுப்பாடென நான் நினைக்கின்றேன். அதனால் நான் அவற்றைப் பயன்படுத்தவதில்லை. நான் மற்றைய செயலிகளையும் என்னுடைய தனிப்பட்ட தகவல்களை வழங்காமலே முகாமைசெய்கின்றேன்”*

முகநூலினுடைய உண்மையான பெயர்க் கொள்கையினால் எதிர்கொண்ட சில சவால்களை மெலனி பகிர்ந்துகொண்டார் (The Verge, 2018). முன்னர் குறிப்பிடப்பட்டதுபோல அவருக்கு 4000அளவிலான முகநூல் நண்பர்களைக் கொண்ட செழிப்பான வலையமைப்பு உண்டு. அவருடைய முகநூல் பக்கத்தில் வைக்கப்பட்டிருந்த அவருடைய படத்தில் சிஸ்பால்நிலை ஆணாக இருந்த அதேவேளை, அவருடைய முகநூல் பக்கத்தில் அவருடைய பெயர் சமூகத்தால் அடையாளம் காணப்பட்ட பாலுக்குரியதல்லாத ஆடைகளை அணியும் (Female drag/Crossdresser) தனது பெயராகவே இருந்தது. அவர் இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக அன்றாடம் இந்தப் பெயராலேயே அனைவராலும் அறியப்படுகின்றார். ஒரு நாள் அவர் தனது கணக்கினுள்



நுழைந்தபோது இத்தளத்தின் உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய அறிக்கையினை மீறியதாகக்கருதி முகநூல் அவரது கணக்கினை முடக்கியிருப்பதாக தெரிவிக்கப்பட்டது. அவர் எந்தப் பிரிவினை மீறியிருக்கின்றார் என்பது குறித்த எந்தத் தகவலும் அவருக்கு அளிக்கப்படவில்லை. அவரது வாழ்வாதாரத்திற்கான பிரதான தொடர்பாடற் தளமே முகநூல் தான். எனவே அதனை மீளப்பெறுவதற்கான ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. முகநூலின் உண்மையான பெயர்க்கொள்கையில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களினால் தற்போது பயனர்கள் ‘தாம் அன்றாட வாழ்வில் அழைக்கப்படுகின்ற பெயரினை’ பயன்படுத்த அனுமதிக்கின்றபோதும், அக் கணக்கினை மீளப்பெறுவதற்கு சட்டபூர்வ அடையாள ஆவணங்களை அல்லது இணையத்தில் பயன்படுத்துகின்ற பெயரால் முகவரியிடப்பட்ட பற்றுச்சீட்டு போன்ற வேறு ஏதாவது ஆவணங்களைக் காட்டவேண்டும். தனது சட்டபூர்வமான பெயரை மாற்றவேண்டும் என்ற எந்த நோக்கமும் இல்லாத அதேவேளை அவரது அடையாள ஆவணங்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய அனைத்துமே அவரது சட்டபூர்வ பெயரில் இருக்கையில், மெலனிக்கு இது ஒரு தெரிவாக இருக்கவில்லை. மெலனி தன் முகநூல் கணக்கினை எப்போதாவது மீளப்பெறலாம் என்கின்ற நம்பிக்கையினை கைவிடவேண்டி இருந்தது. அவர் புதிய கணக்கொன்றினைத் திறந்து அதனூடாக தன்னுடைய வலையமைப்பினை மீளக்கட்டியெழுப்ப முயற்சித்துக்கொண்டிருக்கின்றார்.

நாடுமுழுவதிலுமுள்ள பலருக்கு இணையத்தினை அணுகுவது பொதுவான சவாலாக இருக்கின்ற அதேவேளை LGBTQ+ மக்கள் எதிர்கொள்கின்ற, அச்சமூகத்திற்கு மட்டுமே உரியதான பிரச்சனைகளும் உண்டு என்பதும், அவற்றின் விளைவுகள் அவர்களது வாழ்விலும், வாழ்வாதாரத்திலும் நேரடியான தாக்கத்தினை உண்டுபண்ணக்கூடும் என்பதும் தெளிவாகின்றது.



# அணுகக்கூடியதன்மையும் விதிமுறைகளும்

*விரும்பப்படுகின்ற தளங்களும் பயனர் கலாசாரமும்*

இக் கருத்தாய்வானது, பதிலளித்தோர் விரும்புகின்ற தளங்களினையும், அத் தளங்களில் அவர்களுடைய பயனர் நடத்தைகளையும் பல வழிகளில் ஆராய்கின்றது.

a) நீங்கள் இணையத்தினை அதிகளவில் எதற்குப் பயன்படுத்துகின்றீர்கள்?
b) நீங்கள் பயன்படுத்தும் அனைத்துத் தளங்களிலும் எந்தத் தளம் வெளிப்படுத்துவதற்கான அதிகவெளியினை உங்களுக்குத் தருவதாக நீங்கள் நினைக்கின்றீர்கள்?
c) இணையத்தைப் பயன்படுத்துவதில் உங்களுக்குள்ள திறனை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்?

பதிலளித்தோர் எவ்வாறு இணையத்தைப் பயன்படுத்துகின்றார்கள், அவர்களுடைய அத்தகைய தெரிவுகளுக்கான காரணங்கள் என்ன என்பது தொடர்பில் பல பரிமாணங்களை இக்கேள்விகளுக்கான பதில்கள் எமக்கு வழங்கின.

இக்கேள்விக்கான பதில்களானவை, பதிலளித்தோரில் ஒவ்வொருவரும் அக் கேள்வியினை வெவ்வேறுவிதமாக வியாக்கியானம் செய்திருக்கின்றார்கள் என்ற அறிவுடன் புரிந்துகொள்ளப்படவேண்டும். அது இணையத்திலிருக்கும் போது மக்கள் எதனை அதிகம் செய்கின்றார்கள் மற்றும் எதற்காக மக்கள் இணையத்திலிருக்கின்றார்கள் என்கின்ற இரண்டு முறையிலும் வியாக்கியானம் செய்யப்பட்டிருந்தது. உதாரணமாக சுகாதாரம் குறித்த தகவல்கள் என வரும் போது சிலர் தாம் இணையத்திலிருக்கும் போது சிலவேளைகளில் செய்யும் ஒன்றாக வியாக்கியானம் செய்திருந்த அதேவேளை, ஏனையவர்கள் இதைப்பார்ப்பதற்கென எப்போதும் இணையத்தைப் பயன்படுத்துவதாவும் வியாக்கியானம் செய்திருந்தனர்(அதற்கு அவர்கள் ஒருபோதும் offlineஐப் பார்க்கமாட்டார்கள்). மேலதிக குழப்பங்களும் அங்கு இருந்தன. ஏனெனில் பட்டியலில் இருந்த சில செயற்பாடுகள் முழுமையாக இணையவழிச் செயற்பாடுகளாகவும் (உதாரணமாக சமூக வலையமைப்பாக்கம், video streaming, மின்னஞ்சல்

**நீங்கள் இணையத்தை அதிகளவில் எதற்குப் பயன்படுத்துகின்றீர்கள்?**

நான் இணையத்தைப் பயன்படுத்துவது

| | எப்போதும் | சிலவேளைகளில் | ஒருபோதுமில்லை |
|---|---|---|---|
| வங்கிக் கொடுக்கல்வாங்கல்கள் | 16.5% | 49.5% | 34% |
| Blogs | 37.9% | 36.9% | 25.2% |
| அழைப்புக்கள் | 58.3% | 38.8% | 2.9% |
| சட்டிங்(அளவளாவுவதற்கு) | 52.4% | 37.9% | 9.7% |
| டேட்டிங் | 13.6% | 42.7% | 43.7% |
| மின்னஞ்சல்கள் | 65% | 20.4% | 14.6% |
| அமைப்புக்கள் | 33% | 47.6% | 19.4% |
| விளையாட்டுக்கள் | 21.4% | 44.7% | 34% |
| சுகாதார தகவல்கள் | 37.9% | 45.6% | 16.5% |
| உடனடி செய்திப்பரிமாற்றம் | 61.2% | 30.1% | 8.7% |
| வாழ்வாதாரம் | 22.3% | 46.6% | 31.1% |
| ஆபாசப்படங்கள் | 19.4% | 51.5% | 29.1% |
| ஆராய்ச்சி | 55.3% | 32% | 12.6% |
| தேடல் இயந்திரங்கள் | 58.3% | 32% | 9.7% |
| செக்ஸ்டிங் | 12.6% | 42.7% | 44.7% |
| பாலியல் இன்பம் | 12.6% | 49.5% | 37.9% |
| சமூக வலையமைப்பு | 55.3% | 35.9% | 8.7% |
| வீடியோ ஸ்ரீமிங் | 44.7% | 37.9% | 17.5% |
| வேலை | 59.2% | 34% | 6.8% |

ஏனையவை), அதேவேளை ஏனையவை இணையவழியிலும் offlineஇலும் இடம்பெறலாம்(உதாரணமாக ஆராய்ச்சி, வேலை, சுகாதார தகவல்கள், ஏனையவை). வேலை மற்றும் வாழ்வாதாரத்திற்கிடையிலான வேறுபாடு அல்லது chatting மற்றும் உடனடி செய்திப்பரிமாற்றம் ஆகியவற்றிற்கிடையிலான வேறுபாடு போன்றவாறான சில செயற்பாடுகளுக்கிடையிலான தெளிவற்றதன்மையும் அங்கே காணப்பட்டது. Gaming போன்ற செயற்பாடுகள் video games விளையாடுவதுடன் தம்மை விளையாட்டாளர்களாக அடையாளம் காண்பவர்களைப் பற்றியதெனப் புரிந்துகொள்ளப்பட்டிருந்தது. ஏனைய மின்னணு விளையாட்டுக்களை (electronic games) விளையாடுபவர்கள் ‘எப்போதும்’ என்ற தெரிவை மேற்கொள்ளாமலும் இருக்கலாம் என்பதே இதன் அர்த்தமாகும். பதிலளித்தோர் ஒரு குழுவாக இதையே எம்மிடம் சொல்வதாகத் தோன்றியது

- நான் blogs, emails, instant messaging, research, search engines, social networking, அழைப்புக்களை ஏற்படுத்த, chatting, மின்னஞ்சல், உடனடித் தகவல்களை அனுப்ப, ஆராய்சி, தேடல் இயந்திரங்கள், சமூகவலையமைப்புக்களை ஏற்படுத்த, video streaming, வேலை போன்றவற்றிற்காக எப்போதும் இணையத்தைப் பயன்படுத்துவேன்

- Dating மற்றும் sextingஇற்கு நான் ஒருபோதும் இணையத்தைப் பயன்படுத்தியதில்லை

- நான் சிலவேளைகளில் வங்கிப்பரிமாற்றங்கள், *blogs*, மன்றங்கள்/அமைப்புக்கள், சுகாதார தகவல்கள், வாழ்வாதாரம், கிளர்ச்சியம் (porn) மற்றும் பாலியல் இன்பம் போன்றவற்றிற்காக இணையத்தினைப் பயன்படுத்துவேன்

46 வயதான மெலனி, முதன்முதலாக 2010இல் இணையத்தினைப் பயன்படுத்தத் தொடங்கினார். அவர் இலங்கையின் வடமேல் மாகாணத்திலுள்ள ஒரு சிறிய நகரைச்சேர்ந்தவர். இவர் பல காலமாகத் தன்னுடைய தன்பாலீர்ப்புடைய தன்மையை மனநோய் என நினைத்திருந்திருக்கின்றார். அவரைச் சுற்றியிருந்தவர்களிடமிருந்தும், அவர் கேட்கக்கூடியதாக இருந்த ஊடகங்களிலிருந்தும், அவர் இத்தகைய ஒரு தகவலையே பெற்றிருந்தார். அவர் தனது பணியின்



**அத்துடன் இலங்கையிலுள்ள தன்பாலீர்ப்பு ஆண்களுடனும், தனது பாலுக்குரியதாக கருதப்படுகின்ற ஆடையை அணியாது வேறு உடை-களை அணிகின்ற சமூகத்திலுள்ள ஏனையவர்களுடனும் தொடர்பினை ஏற்படுத்தவும், இணையம் அவருக்கு பயனுள்ளதாக இருந்தது.**

காரணமாக இணையத்தைப் பயன்படுத்தத் தொடங்கினார். எச்ஐவி மற்றும் எயிட்ஸ் தொடர்பிலான தகவல்களைத் தேடத்தொடங்கினார். இதுவே அவர் பின்னர் பால்நிலை, பாலியல் நாட்டம் போன்றவை குறித்த தகவல்களை இணையத்தில் தேடிப்பெற்றுக்கொள்வதற்கும், அவரது அடையாளம் அவருடைய ஒரு பகுதி என்பதை ஏற்கொள்வதற்கும், அவரது அடையாளம் எப்படி குற்றச்செயலாக்கப்பட்டிருக்கின்றது என்பதைக் குறித்து மேலும் அறிந்துகொள்வதற்கும் திறவுகோலாக இருந்துள்ளது. அத்துடன் இலங்கையிலுள்ள தன்பாலீர்ப்பு ஆண்களுடனும், தனது பாலுக்குரியதாக கருதப்படுகின்ற ஆடையை அணியாது வேறு உடைகளை அணிகின்ற சமூகத்திலுள்ள ஏனையவர்களுடனும் தொடர்பினை ஏற்படுத்தவும், இணையம் அவருக்கு பயனுள்ளதாக இருந்தது. தற்போது மின்னஞ்சல், chatting, ஆய்வு மற்றும் சமூகவலையமைப்பினை உருவாக்கல் போன்றவற்றிற்காகவே தற்போது அதிகளவில் இணையத்தைப் பயன்படுத்துகின்றார். விசேட



தருணங்களின் போது அவர் அவ்வப்போது விடயங்களைப் பதிவேற்றுவார் ஆயினும், காணொளிகளைப் பார்த்தல், Gossip lanka, சமூகவலைத்தளங்களில் கருத்துக்களைப் பதிவிடல் மற்றும் தான் முக்கியமானவை எனக் கருதும் விடயங்களை மீளப் பகிர்ந்துகொள்ளல் போன்றவையே இணையத்தில் அவரது அன்றாட நடத்தைகளாகும். அவர் குறிப்பிட்ட மிகவும் அண்மைக்கால உதாரணம் எதுவென்றால், பாதுகாக்கப்பட்ட கண்டல் பிரதேசத்தில் விளையாட்டு மைதானம் கட்டுவதற்கான அரசாங்க அமைச்சர்களின் திட்டத்திற்கெதிராக மாவட்ட வனபரிபாலன அதிகாரியொருவர் எதிர்ப்புத்தெரிவித்திருந்தார். அந்தக் காணொளி மிகவேகமாகப் பரவியது. அந்த காணொளியினை மேற்கோள்காட்டி வெளிவந்த “பரிஸ்ஸர லேடி(சூழலியல் பெண்)” ஆகும்.




ஷாமல், dating அல்லது sextingஇற்கு ஒருபோதும் இணையத்தினைப் பயன்படுத்தியதில்லை. ஒரு உறவினை உருவாக்குவதற்குத் தேவையான உணர்வுரீதியான இணைப்பினை dating செயலிகளில் கண்டுபிடிக்கமுடியாதென அவர் நம்புகின்றார் எனவும், அவருக்கு dating சாதாரண செயற்பாடுகளில் ஒன்றாக இல்லை எனவும் விபரித்தார். அவரும் இணையவழியில் தன் அந்தரங்கம் தொடர்பில் மிகவும் கவலையாக இருந்ததுடன், தனிப்பட்ட தனது புகைப்படங்களையோ அல்லது வேறு ஏதாவது தனிப்பட்ட தகவல்களையோ அவர் அரிதாகவே பகிர்ந்துகொள்கின்றார். எனவே, பாலியல் விளக்கக் குறுஞ்செய்திகளையோ, புகைப்படங்களையோ அனுப்புவதென்பது அவர் சௌகரியமாக உணரக்கூடிய ஒரு விடயமல்ல. அவர் சில வேளைகளில் ஆபாசக்காணொளிகளைப் பார்ப்பதற்கு இணையத்தைப்பயன்படுத்துகின்றார். ஆனால் தான் ஒருபோதும் பாலியல் இன்பத்திற்கு இணையத்தைப் பயன்படுத்தியதில்லை எனவும் கூறினார். இந்த இரட்டைநிலைப்பாடானது, இணையப் பயன்பாட்டிலிருந்து பெற்றுக்கொள்ளும் பாலியல் இன்பமானது இருபக்கத் தொடர்பாடலினைக் கொண்டிருக்கின்ற விடயம் என்கின்ற புரிதலிலிருந்து உருவாகின்றது. இலக்குகுழு உரையாடல்களிலும், நேர்காணல்களிலும் நாம் பேசியவர்களில் பதிலளித்த அநேகர், தகவல்களைக் கையாள்கின்ற தொழில்களில் ஈடுபடுகின்ற அறிவுசார் தொழிலாளர்களாவர். இது அவர்கள் எவ்வாறு இணையத்தினைப் பயன்படுத்துகின்றார்கள் என்பதுடன் ஒத்திசைவதாக உள்ளது: 65% ஆனவர்கள் தாம் மின்னஞ்சலுக்காகவே எப்போதும் இணையத்தினைப் பயன்படுத்துவதாகவும், 10%ஆனவர்கள் மட்டும் மின்னஞ்சல் தமக்கு வெளிப்பாட்டுக்கான வெளியினை வழங்குவதாகவும் தெரிவித்தனர். ஆயினும், ஒரு பாலியல் தொழிலாளர்களின் குழுவுடன் நிகழ்ந்த இலக்கு குழு உரையாடலொன்றின்போது, அவர்கள் தொழில்நிமித்தமும், அவர்களது தனிப்பட்ட வாழ்விற்காகவும், தாம் மிகவும் விரும்புகின்ற தொடர்பாடல் முறையானது இக் கருத்தாய்வில் உள்வாங்கப்படவில்லை என கேள்வியெழுப்பினர். அது தொலைபேசி அழைப்புக்களாகும். இணையப்பாவனையை மையமாகக்கொண்ட ஒரு ஆய்வானது, தொலைபேசி அழைப்புக்களையும், குறுஞ்செய்திகளையும் உள்ளடக்காதது புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கின்ற அதேவேளை, இப் பின்னூட்டத்தின் மூலம் அதனை இணையத்திற்கு மட்டுமானதாக அணுகாமல் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்திற்குரியதாக அணுகும் போது அதிகளவானோரின் அனுபவங்கள் ஆவணப்படுத்தப்படுவதை அது உறுதிப்படுத்தும் என்பதைக் காட்டுகின்றது. பாலியல் தொழிலாளர்கள் செயலிகளையும், இணையத்தளங்களினையும் வாடிக்கையாளராகக் கூடியவர்களுடன் தொடர்புகொள்ளப் பயன்படுத்துகின்ற அதேவேளை, அக்குழுவானது தொலைபேசி அழைப்புக்கள் வாடிக்கையாளர்களால் விரும்பப்படுகின்ற ஒரு தொடர்பாடல் முறையாகத் தொடர்ந்துவருவதனையும் குறிப்பிட்டனர்.

திருநங்கையும் செயற்பாட்டாளருமான ஷிராணியும், தொலைபேசி அழைப்புக்களின் தொடர்ச்சியான முக்கியத்துவத்தினைக் குறிப்பிட்டார். அவர் தனது தனிப்பட்ட வாழ்வினைப் பற்றிய பல தகவல்களை சமூகவலைத்தளங்களில் பகிர்ந்துகொள்ளாதபோதும், திருநர்களின் உரிமைகளுக்காக செயற்படுகின்ற அவருடைய அமைப்பினது முகநூல் பக்கத்தில் அவருடைய தொலைபேசி இலக்கமும் நிரற்படுத்தப்பட்டுள்ளது. மக்கள் விசேடமாக இளம் வயதினர் அவரையும் அவரது அமைப்பினையும் இணையவழியில் கண்டடைந்தாலும் தொலைபேசி அழைப்பினுடைய ஒப்பீட்டளவிலான அநாமதேயத்தன்மை அவர்களுக்கு அந்தரங்கமான உரையாடலுக்குரிய வெளியினை வழங்குவதனால் அவர்கள் அவ் அமைப்பினைத்



தொடர்புகொள்ள தொலைபேசியினையே விரும்புகின்றார்கள் என்பதை அவதானித்து, "நள்ளிரவுகளிலும் எனக்கு தொலைபேசி அழைப்புக்கள் வருவதுண்டு. என்னைத்தொடர்புகொள்கின்ற அனைவரிடமும் பேசுவதற்கு நான் மிகவும் முயற்சிசெய்வேன்" என்கின்றார் ஷிராணி. அப்போது தான் பெரும்பாலும் மக்கள் தனிமையையும், எளிதில் பாதிக்கப்படத்தக்க நலிவுற்றநிலையிலிருப்பதையும் உணர்கின்றார்கள். அத்துடன் அவர்கள் பால்நிலை மற்றும் பாலியல்பு தொடர்பிலான தகவல்களைப்பற்றி பேசும் போது வீட்டிலிருக்கும் ஏனையவர்கள் அவர்கள் பேசுவதைக் கேட்கக்கூடும் என பின்னிரவுகளில் வரும் அழைப்புக்கள் குறித்து அவர் ஒத்துணர்வுடன் பேசினார். எனவே இணையவழிப் பயனர் நடத்தை மற்றும் கலாசாரத்தினை பரந்துபட்ட ஏனைய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வீச்சிற்குள் கருதவேண்டியது அவசியமாகும். முன்னர் குறிப்பிடப்பட்டதுபோல இலங்கையிலுள்ள ஏறத்தாள அனைத்து இணையப்பாவனையாளர்களுமே சமூகவலைத்தளப் பாவனையாளர்கள் என ஆய்வுகள் காட்டுகின்றன (Galpaya et al., 2019). எமது கருத்தாய்வில் பதிலளித்தோரும் முகநூல், Whatsapp, Instagram, IMO மற்றும் Twitter போன்ற வெளிப்பாட்டிற்கான வெளியினை அதிகமாக வழங்குகின்ற தளங்களின்மீது அதிக விருப்பத்தினைக் காட்டினர். அவர்களுடைய இவ்விருப்பத்திற்கான சில காரணங்களும், இத் தளங்களைப் பற்றிய சில கருத்துக்களும் கீழே தரப்பட்டுள்ளன

**நீங்கள் பயன்படுத்தும் அனைத்து தளங்களுக்குள்ளும் சுயவெளிப்பாட்டிற்கான வெளியினை அதிகளவில் வழங்கும் தளம் என நீங்கள் கருதுவது எது? உங்களது பதிலை சுருக்கமாக வழங்கவும்**




*உரு 34: நீங்கள் பயன்படுத்தும் அனைத்து தளங்களுக்குள்ளும் சுயவெளிப்பாட்டிற்கான வெளியினை அதிகளவில் வழங்கும் தளம் என நீங்கள் கருதுவது எது? உங்களது பதிலை சுருக்கமாக வழங்கவும்*

## முகநூல்

- பதிவுகள்/காணொளிகள்/புகைப்படங்கள் சென்றடைவது அதிகம், விசேடமாக முகநூல் பக்கங்களை முகாமை செய்யும்போது.
- Desktopஇலும் (டெஸ்க்டொப்பிலும்), திறன்பேசி செயலிகளிலும் சௌகரியமாகப் பயன்படுத்தலாம்.
- சிங்களத்தைப் பயன்படுத்தமுடியும்.
- பாவனைக்கு மிகவும் இலகுவானது.
- முகநூல் மற்றும் Blog. இவ்விரு தளங்களிலும் நான் எழுதுவதை மக்கள் வாசிக்கின்றார்கள் ஏனையவற்றிலும் இவை சென்றடையும்.
- என்னுடைய கருத்துக்களை வெளிப்படுத்த மிகவும் பயன்படுகின்றது.
- முகநூலிலுள்ள மொழிபெயர்ப்பு அம்சம் எனக்கு மிகவும் பிடித்திருக்கின்றது.
- முகநூல் ஒரு எதிர்மறையான வெளியாகவும் இருக்கமுடியும். முகநூலில் நாம் நுகர்வோரல்ல, நாமே உற்பத்திகள். மக்கள் அது தொடர்பில் விழிப்பாகவும், கவனமாகவும் இருக்கவேண்டும்.
- சில வருடங்களுக்கு முன்னர், நான் முகநூல் செயலியில் இருக்கும்போது அங்கே அநேக பால்வாத விடயங்கள் காணப்பட்டன. நீங்கள் பால்நிலை தொடர்பில் எந்தப் பதிவுகளையும் இடமுடியாது. நீங்கள் கோபத்தில் பேசுகின்றீர்களோ, செய்திகளை பகிர்ந்து கொள்கின்றீர்களோ, மக்கள் எரிச்சலடைகின்றார்கள். எதிர்மறைக்கருத்துக்கள் அங்கு காணப்படும்.

## Instagram (இன்ஸ்ராகிராம்)

- Instagram, என்னுடைய அடையாளத்தினை வெளிப்படுத்தமுடியும் என நான் உணர்கின்ற இடமாகும் - ஒரு நபராக நான், என்னுடைய ஈடுபாடுகள், நான் பெருமையாக வெளிப்படுத்த விரும்புகின்ற என்னுடைய குயர்த்தன்மை.
- அது பாதுகாப்பானது. மிகவும் நேர்மறையானது, யார் தொடர்கின்றார்கள் என்பதை நேருக்கு நேர் சந்திக்காமலேயே தேர்ந்தெடுப்பதற்கு அனுமதிக்கின்றது.
- கலையை வெளிப்படுத்துவதற்கு நல்லது.
- இலங்கையில் விமர்சனரீதியான சிந்தனையைப்பற்றி பேசுவதேயில்லை. Instagram மூலம் செல்வாக்குச்செலுத்துபவர்கள் கூட - கம்பனிகள் தம் பொருட்களை எம்மிடம் விற்பதற்கே முயற்சிசெய்கின்றன.
- நான் Instagramஇல் இணையவிரும்புகின்றேன். ஆனால், அங்கு அநேக விடயங்கள் உள்ளன. அவை எனக்கு வேண்டுமா எனவும் எனக்குத் தெரியாது. Instagram ஒரு மேலதிக சுமையாக இருக்கும் - மக்கள் எப்போதும் பதிவிட்டுக்கொண்டே இருக்கின்றார்கள். உங்களை எப்போதும் ஈடுபாட்டுடன் வைத்திருக்கக்கூடிய வகையிலேயே Instagram இயங்குகின்றது.

## Twitter (டுவிட்டர்)

- Twitter பேச்சுச் சுதந்திரத்தினை சுருக்கமான முறையில் வழங்குகின்றதென நான் நினைக்கின்றேன். நீங்கள் அதிகம் எழுதத் தேவையில்லை அல்லது அதிகம் முறையிடத் தேவையில்லை.
- Twitter சம்பாஷனைக்கான மிகச் சிறந்த இடமென நான் நினைக்கின்றேன், அங்கு எந்த தலைப்பிலும், எல்லாவிதமான தலைப்பிலும், மிகவும் பல்வகைமையான குழுவினரிடமிருந்து அவர்களுடைய கண்ணோட்டத்தினை அறிந்துகொள்ளமுடியும்.
- நான் பிரதானமாக Twitter மற்றும் Instagramஇல் இருக்கின்றேன். நச்சுச் சூழலிலிருந்து என்னை விடுவித்துக்கொள்வதற்காக, முகநூல் மற்றும் Tumblr கணக்குகளை முடக்கிவிட்டேன்.
- இலங்கை Twitter பாவனையாளர்களின் பொதுவான பயனற்றவிடயங்களனைத்தும் இருக்கின்றபோதும். உறுதியான தொடர்பாடல் செய்கின்ற அற்புதமான குயர்களின் பிரசன்னம். பலமான குயர் சமூகம் மற்றும் உரையாடல் இவையனைத்தும்
- என்னுடைய குடும்பத்தினர் (Tumblr மற்றும்) Twitterஇல் இல்லை. அதனால் அங்கு என்னை வெளிப்படுத்துவதில் நான் மிகவும் சௌகரியமாக உணர்கின்றேன்.

## டிக்டொக் (TIKTOK)

- அங்கு கேளிக்கைக்கான வெளி அதிகம் உண்டு.

## Tumblr (ரம்ல)

- அங்கு எல்லோருமே வித்தியாசமானவர்கள். ஏனைய தளங்களில் புனிதமென்று எதுவுமில்லை ஆனால் Tumblr அதை எப்போதும் உண்மையாகவே வைத்திருக்கும்.
- என்னைப்போன்ற வேறுபட்ட அடையாளங்களைக் கொண்ட மக்கள் சந்திக்கவும் உரையாடவும் அது ஒரு நல்ல தளம்.
- என்னுடைய குடும்பத்தினர் Tumblr (மற்றும் Twitter) இல்லை. அதனால் அங்கு என்னை வெளிப்படுத்துவதில் நான் மிகவும் சௌகரியமாக உணர்கின்றேன்.
- Tumblr மற்றும் blogs போன்றவற்றினால்த்தான் நான் எழுத ஆரம்பித்தேன். மேலும் விடயங்களை உருவாக்க நான் ஊக்குவிக்கப்பட்டேன்.

## கூகிள்


- தகவல்களைத் தேட, அறிவுக்காக. ஓய்விற்காக

## REDDIT (ரெட்இற்)

- ஏனெனில், அது அநாமதேயமானது.


## இணையத்தைப் பயன்படுத்துவதில் உங்களுக்குள்ள திறனை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்?

### இணையத்தளமொன்றினை உருவாக்க முடியும்




*உரு 35: இணையத்தளமொன்றினை உருவாக்க முடியும்*

### நிரலாக்கம் செய்ய முடியும் (coding)




*உரு 36: நிரலாக்கம் செய்ய முடியும்*

### தேடல் இயந்திரங்களைப் பயன்படுத்த முடியும்




*உரு 37: தேடல் இயந்திரங்களைப் பயன்படுத்த முடியும்*

### சமூக வலையமைப்புக்களில் பங்குபற்ற முடியும்




*உரு 38: சமூக வலையமைப்புக்களில் பங்குபற்ற முடியும்*

### வலைப்பதிவிட முடியும்



*உரு 39: வலைப்பதிவிட முடியும்*

### இணையத்தில் அமைப்புக்களிலும் குழுக்களிலும் பங்குபற்ற முடியும்




*உரு 40: இணையத்தில் அமைப்புக்களிலும் குழுக்களிலும் பங்குபற்ற முடியும்*

இக்கேள்விக்கான பதில்கள், நீங்கள் இணையத்தை அதிகளவில் எதற்குப் பயன்படுத்துகின்றீர்கள், வெளிப்படுத்துவதற்கான அதிகவெளியினை வழங்கும் தளம் எது என்கின்ற இதற்கு முந்திய பகுதிகளுடன் ஒத்திருக்கின்றது. பங்குபற்றுனர்களில் பலர் சமூகவலையமைப்புக்கள், மன்றங்கள், தேடல் இயந்திரங்களைப் பயன்படுத்துதல், blogging போன்றவற்றில் ஈடுபடுவதற்கான தமது திறனினை அதிகம் எனக் கணிப்பிட்டிருந்தனர். இறுதியில் பதிலளித்தோரில் சிலர், குயர் மக்களாக தமது சுயவெளிப்பாட்டிற்கு blogging தளமான Tumblr முக்கியமானதென குறிப்பிட்டிருந்தமை சுவாரஸ்யமானதாகும்(தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பதிலளித்தோர்). ஆயினும், பதிலளித்தோரில் குறிப்பிடத்தக்களவினர் bloggingஇல் அவர்களுடைய திறனை 1(முன்னேப்போதும் செய்ததில்லை) எனவும் குறிப்பிட்டிருந்தனர். இது சிலவேளைகளில் சமூகவலைத்தளங்கள் பிரபலமாகி வருவதாலும் அவை micro-blog பண்ணுவதற்கு வழியமைத்திருப்பதாலும் blogging பிரபலம் குறைந்த ஊடகமாக மாறிவருவதானாலுமாகக்கூட இருக்கலாம் (Blog Tyrant, 2020).

பதிலளித்தோரில் பலர் தாம் ஒரு போதும் நிரலாக்கம்(Coding) செய்ததில்லை எனவும், ஒரு இணையத்தளத்தினை உருவாக்கியதில்லை எனவும் சுட்டிக்காட்டினர். இவை இன்னுமே நிபுணத்துவமிக்க திறன்களாக கருதப்படுவதனைக் கருத்திற்கொண்டால், இதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை எனலாம். ஆயினும் குறைந்த நிரலாக்கத்திற்குரிய தளங்கள் பிரபலமாதல் (Gineers Now, 2020) மற்றும் மொழியறிவினைப் போன்று நிரலாக்க அறிவும் எதிர்காலத்தில் சகல இடங்களிலும் தேவைப்படலாம் (Davis, 2019) என்ற எதிர்பார்ப்பு போன்ற காரணங்களினால், இத் திறன்களை விருத்திசெய்துகொள்ள வேண்டிய தேவையானது விசேடமாக, தொழிற்சந்தையினுள் நுழையும் இளையோருக்குக் கிட்டிய எதிர்காலத்திலேயே அதிகரிக்கும். முந்தைய பகுதிகளில் காட்டப்பட்டது போல, பதிலளித்தோரில் பலர் அவர்களது சாதனங்கள் மீது கட்டுப்பாட்டினைக்கொண்டிருக்கின்றனர். ஆனால், இணையத்தளங்களால் அவர்கள் அடிக்கடி சுய தணிக்கைக்கோ அல்லது கட்டுப்பாட்டிற்கோ இட்டுச்செல்லப்படுவதால், இணையத்தளங்களில் அனுபவிக்கும் தன்னாட்சி மிகவும் குறைவானதே. இது விசேடமாக LGBTQ+ சமூகத்தினருக்கு உண்மையானதாகும். அத்துடன் இணையத்தில் தன்னாட்சியுடைய தளங்களை

## இணையத்தில் தன்னாட்சியுடைய தளங்களை உருவாக்குவதற்கான அல்லது இணைஉருவாக்கம் செய்வதற்கான திறன்களை விருத்திசெய்தலானது குறிப்பாக அவர்களை வலுப்படுத்துவதாக அமையலாம்

உருவாக்குவதற்கான அல்லது இணைஉருவாக்கம் செய்வதற்கான திறன்களை விருத்திசெய்தலானது குறிப்பாக அவர்களை வலுப்படுத்துவதாக அமையலாம் என்பதையும் காட்டுகின்றது. 2019ம் ஆண்டின் தேசிய டிஜிட்டல் கொள்கை (இலங்கையின் டிஜிட்டல் உட்கட்டுமானம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்திற்கான முகவர் அமைச்சு, 2019) “டிஜிட்டல் அறிவினையும் வாழ்நாள்முழுதுமான கற்றல் திறன்களை, முதியோர், மாற்றுத்திறனாளிகள், பெண்கள் மற்றும் விளிம்புநிலைக் குழுக்கள் போன்றோரில் விருத்திசெய்வதனை ஊக்குவிக்க” வேண்டிய தேவையினையும் குறிப்பிடுகின்றது. பாலியல்பு, பால்நிலை அடையாளம் மற்றும் பாலியல் நடத்தை போன்றவற்றினடிப்படையில் விளிம்புநிலைக்குத்தள்ளப்பட்டவர்களின் தேவைகளை அவை சட்டத்தினால் குற்றமாக்கப்பட்டிருக்கும் வரை வினைத்திறனான முறையில் பூர்த்திசெய்வதென்பது சாத்தியமானதல்ல.



# மொழியும் கலைச்சொற்களும்/ பதங்களும்

*மொழியும் துறைச்சொற்களும்*

மொழி தொடர்பாடலுக்கான ஒரு கருவியாக மட்டுமே ஒருபோதும் இருந்ததில்லை. இது இலங்கையிலும் உண்மையானதே. இலங்கையில் மொழி மற்றும் துறைச்சொற்கள் தொடர்பான பிரச்சனைகள் சிக்கலானவையாகவும், வரலாற்றுரீதியாகவும் அவ்வாறே இருந்துவந்துள்ளன (Perera, 2011), அத்துடன் நீண்டகால சமூக, அரசியல் மற்றும் பொருளாதார விளைவுகளைக் கொண்டவையாகும். மிகவும் அண்மைக்காலத்தில் நிகழ்ந்த தேசியளவிலான பிரச்சனை எதுவென்றால், 2020ம் ஆண்டு சுதந்திரதினக் கொண்டாட்டங்களின்போது தமிழில் தேசியகீதம் பாடுவதில்லை என்ற புதிய அரசாங்கத்தின் முடிவு ஆகும் (Al Jazeera, 2020). இணையத்திலும் மொழியரசியல் இடம்பெறுகின்றது. ஜனாதிபதி ஊடக பிரிவு (Gopikrishna, 2020), அரச தகவல் திணைக்களம் மற்றும் இலங்கை அரசின் அதிகாரபூர்வ செய்திக்கான இணையவாயில் (Aingkaran, 2019) போன்றவை சிங்களம் மற்றும் ஆங்கிலத்தில் மட்டுமே தகவல்களை வழங்குவதாக பிரஜைகள் அடிக்கடி சுட்டிக்காட்டுகின்றனர்.

> *"எப்படி மொழி அசமத்துவம் போன்ற சிறிய பிரச்சனையாகத்தோன்றுகின்ற ஒரு விடயமானது, ஒருவரின் அன்றாட வாழ்வில் சேவைகளைப் பெற்றுக்கொள்வதிலும் நீதிக்கான தேடலிலும் தடங்கலை ஏற்படுத்தும் என்பதை ஏற்றுக்கொள்வது இன்றியமையாததாகும்." (De Sayrah, 2017).*


இலங்கையில் இனத்துவம், புவியியல், வகுப்பு போன்றவற்றினடிப்படையில் மொழி எவ்வாறு மக்களுடைய அன்றாடவாழ்வினைப் பாதிக்கின்றது என்பது அவர்களது அனுபவங்களின் மூலம் ஆவணப்படுத்தப்பட்டிருக்கின்ற அதேவேளை, பாலியல் நாட்டம் மற்றும் பால்நிலை அடையாளங்களின் குறுக்குவெட்டுதன்மை போன்றவை ஆவணப்படுத்தப்படவில்லை. இந்தப்பகுதி பதிலளித்தோர் சிலர் பகிர்ந்துகொண்ட அவர்களின் அனுபவங்களையும் அவதானங்களையும் ஆவணப்படுத்துகின்றது.

ஆராய்ச்சி முறைமைகள்/நுட்பங்கள் மற்றும் மட்டுப்பாடுகள் பகுதியில் முன்னர் குறிப்பிடப்பட்டதைப் போல, இக் கருத்தாய்வானது, ஆங்கிலம், தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் இருந்தது. பதிலளித்தோரால் பின்வருவன போன்று அது பூர்த்திசெய்யப்பட்டது. இக்கருத்தாய்வின் பகுதியாக நடத்தப்பட்ட இலக்குகுழு உரையாடல்களில் இரண்டு சிங்களத்திலும், இரண்டு தமிழிலும், ஒன்று சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் நடாத்தப்பட்டன.

மொழியும் துறைச்சொற்களும் இக்கற்கையில் பின்வரும் வழிகளில் ஆராயப்படுகின்றன.

**கருத்தாய்வு பூர்த்திசெய்யப்பட்டது**

| | |
|---|---|
| தமிழில் | 42.7% |
| ஆங்கிலத்தில் | 35.9% |
| சிங்களத்தில் | 21.1% |



*உரு 41: கருத்தாய்வு பூர்த்திசெய்யப்பட்டது*


- பதிலளித்தோர் இணையத்தில் பயன்படுத்துகின்ற பிரதான மொழிகள் எவை?
- சிங்களம் மற்றும் தமிழ் போன்ற உள்ளூர் மொழிகளில் இணையத்தைப் பயன்படுத்தும் அனுபவம் எவ்வாறிருந்தது?
- ஆங்கிலம் எதிர் தமிழ் மற்றும் சிங்களத்தில் பால்நிலை மற்றும் பாலியல்பு தொடர்பிலான துறைச்சொற்களை திசைப்படுத்துவதிலிருந்த சிக்கல்கள் எவை?

## இணையத்தில் பயன்படுத்தப்பட்ட மொழிகள்

இக் கருத்தாய்வில் பதிலளித்தோர் பேசுகின்ற மொழி எதுவெனவும், அவர்கள் இணையத்தில் பயன்படுத்துகின்ற மொழிகள் எவையெனவும் கேட்கப்பட்டிருந்தது.

பதிலளித்தோரில் 20% ஆனவர்கள் தாம் மும்மொழியாற்றலுடையவர்களெனக் கூறினர்(ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ்). ஆனால் 2% ஆனவர்கள் மட்டுமே இணையத்தில் அனைத்து மொழிகளையும் பயன்படுத்தினர். பதிலளித்தோரில் அநேகர் தம் அன்றாட வாழ்விலும், இணையத்திலும் இருமொழி பயன்படுத்துபவர்களாக இருந்தனர். பதிலளித்தோரில் 30% இற்கும் அதிகமானோர் இணையத்தில் ஆங்கிலத்தை மட்டுமே பயன்படுத்தினர். இலக்கு குழு உரையாடல்கள் மற்றும் நேர்காணல்களில் பதிலளித்தோர், சிங்களம் மற்றும் தமிழ் தட்டச்சுப்பலகைகள் எளிதில் கையாளமுடியாதவையாக இருக்கின்ற காரணத்தினால், இணையத்தில் சிங்கள மற்றும் தமிழ் உச்சரிப்புக்களுக்கு ஆங்கிலத்தினைத் தேர்வுசெய்திருந்ததனைக் காணக்கூடியதாக இருந்தது. அதனால் இணையத்தில் ஆங்கிலம் அதிகளவில் பயன்படுத்தப்படுவது மொழி ரீதியாக மட்டுமன்றி தமிழிலும் சிங்களத்திலும் தொடர்பாடுவதற்கும் ஆங்கில எழுத்துக்கள்(லத்தின்) பயன்படுத்தப்படுவதனை புரிந்துகொள்ள வேண்டும்.

**பேசுகின்ற மொழிகள் மற்றும் இணையத்தில் பயன்படுத்தப்படுகின்ற மொழிகள்**




*உரு 42: பேசுகின்ற மொழிகள் மற்றும் இணையத்தில் பயன்படுத்தப்படுகின்ற மொழிகள்*



பதிலளித்தோரில் பலர் அவர்களின் இணையப்பயன்பாட்டில் மொழியினது தாக்கம் தொடர்பில் பிரதிபலித்தனர். மெலனி மற்றும் ஷிராணி, இணையத்தில் ஆங்கிலப்பயன்பாடு தவிர்க்கமுடியாதது ஆனால் தம்மை முழுமையாகவும் வினைத்திறனுள்ள வகையிலும் வெளிப்படுத்துவதனை அது சவாலுக்குட்படுத்துகின்றது எனக் கூறினார்கள். சிங்கள யுனிகோட் மற்றும் கூகிள் மொழிபெயர்ப்பில் சிங்களம் - ஆங்கிலம், ஆங்கில - சிங்கள மொழிபெயர்ப்புக்கள் போன்றவற்றில் ஏற்பட்டிருக்கின்ற முன்னேற்றங்கள் போன்றன ஒரு செயற்பாட்டாளராக ஷிராணிக்கு பாரிய மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளன. "நான் ஜெனிவாவிற்கு சிங்களத்தில் ஒரு மின்னஞ்சலினை அனுப்பமுடியும்", என்பதனை, எவ்வாறு சர்வதேச மட்டத்தில் மனிதஉரிமைகள் ஆதரித்து வாதாடல் செயற்பாடுகளுடன் இணைப்பினை ஏற்படுத்திக்கொள்வதனை இணையவழியிலான மொழிபெயர்ப்புக் கருவிகள் சாத்தியமாக்கியுள்ளன என்பதுடன் தொடர்புபடுத்திக் கூறினார்.



மொழிதொடர்பிலான எமது உரையாடலில் மீண்டும் மீண்டும் பேசப்பட்ட ஒரு விடயம் என்னவெனில், இணையவழியிலுள்ள அநேக வளங்கள் இன்னமும் ஆங்கிலத்தில் மட்டுமே உள்ளன என்பதே ஆகும். நாம் பேசியவர்களில் தமது பிரதான மொழியாக ஆங்கிலத்தினைக் கொண்டிராதவர்கள் இதனைச் சமாளிப்பதற்கு வேறு வழிகளைக் கண்டுபிடிக்கவேண்டி இருந்தது. அத்துடன் சிலர் பெறக்கூடியதாயிருக்கின்ற வளங்களை மொழிபெயர்ப்புச் செய்து அவ்வளங்களை மற்றையவர்களுக்குப் பல மொழிகளிலும் கிடைக்கச்செய்வதை தமது பணியாக எடுத்துக்கொண்டிருக்கின்றார்கள். லக்ஷ்மி கூறியதைப்போல இணையத்தில் ஆங்கிலத்தில் தேடும் போது வெள்ளப்பெருக்கு ஏற்படுவதைப்போன்று அதிகளவிலான தகவல்கள் உருவாகும். ஆனால், தமிழில் ஏதாவது இருந்தால் கூட அவற்றினளவு மிகக்குறைவானதாகவே இருக்கும். ஹாஸினி ஆங்கிலத்தில் இணையத்தினைப் பயன்படுத்துவதில் பல நன்மைகள் உண்டு எனவும், பிரதானமாக ஆங்கிலத்தில் அதிகளவிலான தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் மற்றையவர்கள் கூறியதையே அவரும் எதிரொலித்தார்.







பால்நிலை மற்றும் பாலியல்பு தொடர்பிலான பிரச்சனைகள் குறித்து இணையத்தில் தேடிய பின்னரே அதிகம் தெரிந்துகொண்டதாக ஆர்யா கூறினார். இலங்கையில் ஆங்கிலம் பேசாதவர்களுக்கு அநேக விடயங்கள் ஆங்கிலத்தில் இருப்பதென்பது ஒரு சவாலான விடயமாகும். இது அவர்களுடைய பயன்பாட்டினையும் விடயங்களை அணுகும் தன்மையினையும் பாதிக்கின்றது.

*"பொருத்தமான கட்டுரைகளோ அல்லது சுவாரஷ்யமான விடயங்களோ, பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே உள்ளன. அவற்றைப் புரிந்துகொள்வதற்கு நான் கூகிள் மொழிபெயர்ப்பினைப் பயன்படுத்துவேன். ஆனால் அதிலுள்ள சவால் எதுவென்றால், அந்த மொழிபெயர்ப்புக்கள் துல்லியமானவையல்ல. சிலவேளைகளில் அவை முற்றுமுழுதாகவே தவறானவை. ஆகவே ஆங்கிலம் தெரியாமலிருப்பது அல்லது சரியான மொழிபெயர்ப்பினைக் கொண்டிராதது ஒரு சவாலான விடயமாகும். நான் ஆங்கிலத்தில் சரளமாக இல்லையென்பதால் ஆங்கிலத்தில் தேடுவதென்பதும் சவாலான விடயமாகும்."*

எவ்வாறாயினும், பயனர்களுக்கு இணையத்தளங்கள் உள்ளூர்மொழிகளைப் பயன்படுத்த முயற்சிசெய்யும் சில தருணங்களில், எந்த உள்ளூர் மொழி இயல்பாகத் தேர்வுசெய்யப்பட்டிருக்கின்றதென்பது மேலும் சவால்களை அதிகரிப்பதாக உள்ளது. விஜய் Google மற்றும் Microsoft தளங்களைப் பயன்படுத்திய தன்னுடைய அனுபவங்களைப்பற்றி அவை சிங்கள மொழியில் மட்டுமே இருந்ததாகவும் மற்றைய உள்ளூர் மொழியான தமிழினைக் கொண்டிருக்கவில்லை எனவும் கூறினார்:

*"கூகிளைப் பயன்படுத்தும் போது, மொழி தொடர்பில் ஒரு முக்கியமான பிரச்சனை உள்ளது. நான் ஒரு புதிய சாதனத்தினை வாங்கினேன். அதில் கூகிளைத் திறந்தபோது அது முற்றுமுழுவதுமாக சிங்களத்தில் இருந்தது. கூகிள்*



*நாட்டில் பெரும்பான்மையானவர்கள் பயன்படுத்துகின்ற மொழியைப் பயன்படுத்துகின்றது. ஆனால் மற்றையவர்களும் இந்த நாட்டில் உள்ளனர். வேறுபட்டவர்களும் இந்தப் பக்கத்தினை அணுகுகின்றார்கள். கூகிள் இவை எதனையுமே கருத்தில்கொள்ளவில்லை. கூகிளும் அதனைக் கருத்தில் கொள்ளவில்லை. மைக்கிறோசொவ்ற்றும் அந்த வகையிலேயே செயற்படுகின்றது."*

இணையவழியில் வேறுபட்ட மொழிகளைப்பயன்படுத்துவதென்பது சிறப்பாகவும், நெருக்கமாகவும், வேறுபட்ட குழுக்களைச் சேர்ந்த மக்களுடன் தொடர்பாடலினை மேற்கொள்வதற்கான ஒரு வழியாகப் பார்க்கப்படுகின்றது. கருத்தாய்வில் காட்டப்பட்டதைப் போல பதிலளித்தோரில் பலர் இணையவழியில் தமிழ் அல்லது சிங்களத்துடன், ஆங்கிலத்தினைப் பயன்படுத்துகின்ற இருமொழிப்பாவனையாளர்களாக இருந்தனர்.



மும்மொழிப்பாவனையாளரான திருநங்கை ஷிராணி, அவரது பால்நிலை அடையாளம், சத்திரசிகிச்சை மற்றும் ஹோர்மோன்களின் பக்கவிளைவுகள் போன்றவை பற்றிய விடயங்களினை அதிகளவில் இணையத்திலேயே தேடினார். ஆயினும், அவரும் உள்ளூர் மொழிகளில் தகவல்கள் பற்றாக்குறையாக இருப்பதைக் கண்டார். அவரை சமூகத்திலுள்ள ஏனைவர்களிடம் இட்டுச்செல்வதற்கு உதவிய தகவல்களை அவரால் கண்டுபிடிக்கக்கூடியதாக இருந்திருந்தாலும், அவர் ஆங்கிலத்தில் கற்காதவர்களுக்கு ஏற்படுகின்ற தகவல்களைப் பெற்றுக்கொள்வதிலுள்ள இடைவெளி தொடர்பில் தான் நன்றாகவே விழிப்புடன் இருப்பதாகவும், தகவல்களைப் பகிர்ந்துகொள்ளும் தனது பணியில் இவ்விடைவெளியினைக் குறைப்பதற்கு தன்னாலானவற்றைச் செய்வதாகவும் கூறினார்.

*"அதிகளவிலான இளையோர் கொழும்பிலிருந்தும், கொழும்பிற்கு வெளியிலிருந்தும் தற்போது வெளிவருகின்றனர். அவர்களுக்குச் சரியான தகவல்களை மூன்று மொழிகளிலும் வழங்கவேண்டியது முக்கியமானதாகும்"*



**"கூகிளைப் பயன்படுத்தும் போது, மொழி தொடர்பில் ஒரு முக்கியமான பிரச்சனை உள்ளது. நான் ஒரு புதிய சாதனத்தினை வாங்கினேன். அதில் கூகிளைத் திறந்தபோது அது முற்றுமுழுவதுமாக சிங்களத்தில் இருந்தது. கூகிள் நாட்டில் பெரும்பான்மையானவர்கள் பயன்படுத்துகின்ற மொழியைப் பயன்படுத்துகின்றது. ஆனால் மற்றையவர்களும் இந்த நாட்டில் உள்ளனர். வேறுபட்டவர்களும் இந்தப் பக்கத்தினை அணுகுகின்றார்கள்.**



தமிழராகத் தன்னை அடையாளப்படுத்திய விஜய்க்கு, சிங்கள மொழியினைப் பயன்படுத்துவது சிங்கள மொழிபேசும் சமூகத்துடனும், இணையவழிக் குழுக்களுடனும் நல்லமுறையில் இணைப்பினை ஏற்படுத்துவதற்கும், அதுபோல முறையே தமிழ் மற்றும் ஆங்கிலத்தினைப் பயன்படுத்துவது ஏனைய குழுக்களுடன் இணைப்பினை ஏற்படுத்துவதற்கும் உதவியிருக்கின்றது. செல்வியும் மக்களுடன் நல்லமுறையில் தொடர்புகொள்வதைப்பற்றி அதேவிதமாகவே உணர்ந்தார். சிங்களத்தில் பதிவுகளைப் பகிரும்போது, சிங்கள சமூகத்துடன் இணைப்பை ஏற்படுத்தவும் வலையமைப்பினை ஏற்படுத்திக்கொள்ளவும் உதவியதாகவும், தான் வேலைசெய்வதற்கான வெளியினை அதிகரித்ததாகவும் கூறினார். இணையவழி வெளிகளில் மொழிப்பயன்பாடு தொடர்பில் காண்கின்ற சவாலானது, தொழில்நுட்பரீதியானது: அனைவருமே தம் சொந்த மொழிகளில் தட்டச்சுச் செய்வதற்கு தெரிந்திருக்கமாட்டார்கள்(தமிழ்/சிங்களம்). ஏனெனில், அவர்களுக்கு அந்தத்தெரிவு இல்லை. ஏனைய மொழிகளிலும் அவர் விடயங்களை நுகரக்கூடியளவிற்கு அதிக இணையத்தளங்களில் மேலும் மொழிபெயர்ப்பதற்கான வசதிகள் ஏற்படுத்தப்படவேண்டும் என விரும்புகின்றார்



லக்ஷ்மி பால்நிலை மற்றும் பாலியல்பு தொடர்பில் ஆங்கிலத்தில் எழுதும் போது வந்த கருத்துக்கள் தமிழில் எழுதும்போது வந்த கருத்துக்களைவிட வரவேற்கக்கூடியவகையில் இருந்நதாகவும், அங்கு அதிகளவில் மக்களைச் சென்றடையக்கூடிய தன்மை காணப்படுவதாகவும், தனது அனுபவத்தினைக் கூறினார். அது சிலவேளைகளில் விடயங்கள் பிரதானமாக ஆங்கிலத்திலேயே இருப்பதனாலும், இத்தகைய விடயங்கள் தொடர்பிலான அறிவு மற்றும் பிரச்சனைகள் தமிழில் மட்டுப்படுத்தப்பட்டவையாக இருக்கின்றபோதிலும், இவ்விடயங்களை ஆங்கிலத்தில் நுகர்பவர்கள் இவை தொடர்பில் மிகவும் விழிப்பாயிருக்கின்ற காரணத்தினாலுமாக இருக்கக்கூடும் எனக் கூறினார்

*“எனக்குத் தெரியாது. ஆனால் வேறுபாடு இருக்கின்றது. நான் தமிழினைப் பயன்படுத்துகின்றேன். அது என்னுடைய மொழி. அதனால் அது எழுதுவதற்கு இலகுவானது. அதேவேளை நான் ஏனைய சமூகப் பிரச்சனைகளை தமிழில் எழுதும் போது நான் யாருக்கு அதைச் சொல்ல விரும்புகின்றேனோ அது அவர்களைச் சென்றடைகின்றது. சிலவேளைகளில் அது அப்பிரச்சனை குறித்து ஓர் உரையாடலைத் தோற்றுவிக்கின்றது. அதனால் அது உதவியானது. ஆனால், ஆங்கிலத்தில் எழுதும் போது அது சென்றடைபவர்களின் எண்ணிக்கை அதிகம்.”*

**மொழிப்பயன்பாடு தொடர்பில் காண்கின்ற சவாலானது, தொழில்நுட்பரீதியானது: அனைவருமே தம் சொந்த மொழிகளில் தட்டச்சுச் செய்வதற்கு தெரிந்திருக்கமாட்டார்கள்(தமிழ்/ சிங்களம்). ஏனெனில், அவர்களுக்கு அந்தத்தெரிவு இல்லை.**

செல்வியும் அதுபோன்ற அனுபவங்களையே கொண்டிருந்தார். தமிழில் பதிவிடும் போது தொல்லைகள் அதிகம். அத்துடன் பிறரின் கருத்துக்கள் துஷ்பிரயோகத்திற்குட்படுத்துவனவாக இருந்தன. ஆனால் ஆங்கிலத்தில் அவர் பதிவிடும்போது அதிகளவிலான விருப்பக்குறியீடுகளும், அதிகளவானோர் அவற்றை பகிர்வதும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.



## பால்நிலை மற்றும் பாலியல்பு தொடர்பிலான சொற்களைத் திசைப்படுத்தல்

ஆராய்ச்சி முறைமைகள் மற்றும் மட்டுப்பாடுகள் பகுதியில் முன்னர் குறிப்பிடப்பட்டது போல, கருத்தாய்வினை ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கும், சிங்களத்திற்கும் மாற்றும் செயன்முறையானது, பல செயற்பாட்டாளர்களும், பாலியல் நாட்டம், பால்நிலை அடையாளம் மற்றும் வெளிப்பாடு தொடர்பில் இலங்கையில் பணிபுரியும் ஏனையவர்களும், முகங்கொடுக்கவேண்டி இருந்த அதே சவாலினை உண்டுபண்ணியது(ஆங்கிலம் முதல் மொழியாக அல்லாத நாடுகளிலும்): பூகோள LGBTQ+ செயல்வாத பேரகராதியிலுள்ள பல துறைச்சொற்கள் நன்கு நிறுவப்பட்டு தரமானவையாகவும் காணப்படுகின்றன. இவை மொழிபெயர்ப்பின்போது பொருத்தப்பாட்டினை அல்லது அர்த்தத்தினை இழந்துவிடுகின்றன. உதாரணமாக ஸ்த்ரீ புருஷ சமாஜபாவய gender இனுடைய சிங்கள மொழிபெயர்ப்பாகும் அல்லது பால்நிலை gender இற்கான தமிழ்மொழிபெயர்ப்பாகும். இவை genderஇனை பெண், ஆண் என்கின்ற இருமையினடிப்படையில் விபரிப்பனவாக மட்டுமே அமைந்திருக்கின்றன. இவ்வகையில் பயன்படுத்தினால், நாம் இக்கருத்தாய்வின் மூலம் முன்னுரிமைப்படுத்தவிரும்புகின்ற அனுபவங்களுக்கும், வெளிப்பாடுகளுக்குமுரிய பலர் உள்வாங்கப்படாமல் தவிர்க்கப்படுவார்கள். குயர் போன்ற பதமானது, ஆங்கிலம் பேசும் நாடுகளில் அது உருவான விதம்/அதன் பாதை போன்றன உள்ளூர்ச்சூழலில் பொருத்தமானதாக இல்லை. அவை மொழிபெயர்ப்பில் மட்டும் சவாலினைக் கொண்டிருக்கவில்லை. எமது அடையாளத்துடனும் வேரூன்றியிருப்பதால் உணர்வுரீதியாகவும், சவாலுக்குட்படுத்துவனவாக உள்ளன. பாலியல் நாட்டம், பால்நிலை அடையாளம் மற்றும் வெளிப்பாடு போன்ற குடைப்பதங்கள் சிலவேளைகளில் சமூகநியமங்களுடன் பொருந்தாத பாலியல்பு மற்றும் பாலியல் நடத்தைகளைக் கொண்டிருப்போரின் உதாரணமாக, பாலியல் தொழிலாளர்கள் போன்றோரின் அனுபவங்களைப் புறந்தள்ளக்கூடும்.

**குயர் போன்ற பதமானது, ஆங்கிலம் பேசும் நாடுகளில் அது உருவான விதம்/அதன் பாதை போன்றன உள்ளூர்ச்சூழலில் பொருத்தமா-னதாக இல்லை. அவை மொழிபெயர்ப்பில் மட்டும் சவாலினைக் கொண்டிருக்கவில்லை. எமது அடையாளத்துடனும் வேரூன்றியிருப்பதால் உணர்வுரீதியாகவும், சவாலுக்-குட்படுத்துவனவாக உள்ளன.**

இக்கண்டுபிடிப்புக்கள் பால்நிலை அடையாளம் மற்றும் பாலியல் நாட்டம் போன்றவைக்குரிய பெரும்பாலான மேற்குலக சொல்வகைகள், உள்ளூர் புரிதல்கள் மற்றும்

நடைமுறைகளுடன் பொருந்திப்போகாத்தன்மையினைக் காட்டுவதுடன், இவை இலங்கையில் செய்யப்பட்ட ஏனைய கல்விசார் ஆய்வுகளிலும் ஆராயப்பட்டுள்ளன: உதாரணமாக, இலங்கையைச் சேர்ந்த நாச்சி அவர்கள் பால்நிலை அடையாளம், பாலியல்பு மற்றும் விருப்பம் போன்றவற்றை உணர்வதிலுள்ள சிக்கலான தன்மையின் காரணமாக திருநர் வகையினுள் இறுக்கமாக தம்மைப் பொருத்திக்கொள்வதில்லை (Miller and Nichols, 2012) அல்லது இலங்கையிலுள்ள 'பொருட்களைத் தெரிவுசெய்தல், பால் பங்குபாத்திரங்கள், பால் செயற்பாடுகள் போன்றவற்றில் பாய்மைத்தன்மையை/திரவத்தன்மையை காட்டுகின்ற' எதிர்ப்பாலீர்ப்பல்லாதவர்களின் மற்றும் திருநர்களின் அனுபவங்கள் (Ellawala, 2018, p. 1321), நிலையான ஒழுங்குமுறையிலமைந்த அடையாளங்கள் பற்றிய கோட்பாட்டுரீதியான கருத்து சிதைக்கப்பட்டுவிட்டது என்கின்ற வாதத்திற்கு வலுச்சேர்க்கின்றது.

மக்களை வகைகளாகப் பிரிக்கின்ற அல்லது எம்மைப் பெட்டிகளுக்குள் அடையாளமிடுவதற்கு நிர்ப்பந்திக்கின்ற, கொள்கைப்பிரச்சாரங்கள் மற்றும் செயற்பாடுகளைக் கருத்திற்கொண்டே LGBTQ+ மொழியரசியல் நோக்கப்பட வேண்டும். (I)அரசுசாரா அமைப்புக்கள் தொழிற்துறைக் கூட்டானது (NGO Industrial Complex), குயர்விடுதலை என்பதை வகுப்பு, சாதி, இயலுமை, இனம் மற்றும் ஏனைய பொருளாதார சூழலிய மற்றும் சுற்றாடல் போன்ற பரிமாணங்களைக் கருத்தில் கொள்கின்ற அதன் குறுக்குவெட்டுத்தன்மை இல்லாமல் அடையாளத்தினை மையப்படுத்திய ஒன்றானதாகக் கதையை உருவாக்கி அதனைத் திசைதிருப்பியிருக்கின்றது. சொற்கள் மற்றும் மொழிகளின் வரலாறுகள் குறித்த தேடலானது, எமது செயல்வாதத்தினையும், அதன் அரசியலையும் மட்டுமே பலப்படுத்துவதில்லை. அது அடையாள அரசியலை அடக்குமுறைக்கும், தமது சந்தைப்படுத்தல் மற்றும் வியாபார நோக்கங்களுக்காகவும் பயன்படுத்துகின்ற பெருநிறுவனங்களின் அதிகாரத்தினையும், அதிகரித்துவரும் பிற்போக்குவாதத்தினையும், தீவிரவாதத்தினையும், நவதாராளவாதப்பொருளாதாரக் கொள்கைகளையும் சவாலுக்குட்படுத்துவதாக அமையும்.
எனவே நாம் இலக்கு குழு உரையாடல்களை LGBTQ+ மொழியரசியல் தொடர்பில் உரையாடுவதற்கான ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி, ஏன் சில பதங்களுடைய அழகியலுக்கு முன்னுரிமையளிக்கப்படுகின்றது என அறியத்திட்டமிட்டோம். அவ்வுரையாடல்கள் கேள்விக்குட்படுத்துவதற்கும், அரசுசாரா அமைப்புக்களின் செயற்பாடுகளின் மூலம் வழங்கப்பட்ட சொற்களைத்திறந்து பார்ப்பதற்குமான வெளியினை மட்டுமே உருவாக்கவில்லை. உள்ளூரில் அதிகம் பயன்படுத்தப்படுகின்ற சொற்களின் மூலம், மொழியினை எமது சூழமைவுக்கேற்றதாக்குவதற்கும், எமது வரலாற்றுக்குரியதாக்குவதற்குமான வெளியினையும் வழங்கியது.

- LGBTQ+ மக்களாக நாம் பயன்படுத்தும் மொழிக்கு இரண்டு பக்கங்கள் உண்டு. வேலை மற்றும் செயல்வாதத்தில் நாம் பயன்படுத்தும் துறைச்சொற்கள் உள்ளன(பெண்தன்பாலீர்ப்பாளர், ஆண்தன்பாலீர்ப்பாளர், குயர், ஏனையவை). அடுத்ததாக, அன்றாட வாழ்வில் நபர்களுக்கிடையில் பயன்படுத்தும் மொழி உள்ளது(அபே கட்டிய, கொமியுனிட்டி ஏக, உள்ளூர் தொடக்கம் வேறுபட்ட இடங்கள் வரை "எங்களுடைய மக்கள்" "சமூகம்"என மொழிபெயர்க்கப்படக்கூடிய சொற்கள், ஏனையவை).

- மொழிசார் சமூகமயமாக்கமென்று வரும்போது, துறைச்சொற்கள் பயனுள்ளவை. இவை இரு முனையுடையவை. ஒரு புறம் பெண்தன்பாலீர்ப்பாளர், ஆண்தன்பாலீர்ப்பாளர், திருநர் போன்ற சொற்களை நிலைக்கச்செய்திருக்கின்றமையானது, LGBTQ+ சமூகத்தைச் சேர்ந்தவர்களை அடையாளம் காண்பதற்கும், அவர்களுடன் இணைப்பினை ஏற்படுத்துவதற்கும் இலகுவானதாக இருக்கின்றது. ஆயினும், மிகநன்றாகத் தெரிந்த சொற்களுடன் இணைந்திருக்கின்ற, சமூகத்தினால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற களங்கமானது, அவர்களுடன் தொடர்புகொள்வதில் தயக்கத்தினை ஏற்படுத்தலாம் அல்லது மிகவும் இறுக்கமான வரைவிலக்கணங்கள், பாலியல்பு தொடர்பிலான தமது அனுபவங்களை அவ் வரைவிலக்கணங்களுக்குள் பொருத்திப்பார்ப்பதை சிரமமானதாக்கலாம்.

- பங்குபற்றியவர்களில் ஒருவர் Gay என்ற சொல்லினை ஆங்கிலத்தில் தான் தெரிந்து கொண்டது எவ்வளவிற்கு விடுதலையளிக்கும் உணர்வாக இருந்தது எனவும் அவ்வாறு அடையாளப்படுத்துகையில் அவர் எவ்வாறு சுதந்திரமாக உணர்ந்தார் எனவும்

பகிர்ந்துகொண்டார். ஏனெனில் தரம் 7 சுகாதாரமும் உடற்பயிற்சியும் பாடப்புத்தகத்தில், சமலிங்கிக செயற்பாடுகள் எச்ஐவி/எயிட்ஸ் இனை உண்டாக்கும் என்று குறிப்பிடப்பட்டிருப்பதால் அவர் அதுவரை தன்பாலீர்ப்பு என்பதற்கான சிங்கள பதமான சமலிங்கிக என்கின்ற பதத்தினூடாக தன்னை அடையாளம் காண்பதில் சிரமத்தை உணர்ந்ததாக கூறினார்

- சமூகத்தைச்சென்றடைதலென்று வரும்போது LGBTQ+ குறித்த பதங்களின் மட்டுப்பாடுகள் தொடர்பில் மற்றுமொரு பங்குபற்றுனர் பகிர்ந்திருந்தார். 2011இல் வடமத்திய மாகாணத்திலுள்ள குயர் மக்களை படக்கணிப்பிடுதல் (Mapping) நடத்தப்பட்டது. அதன்போது gay, தன்பாலீர்ப்பு போன்ற பதங்களைப் பயன்படுத்துபவர்களைக் கண்டடைவது மிகவும் சவாலானதாக இருந்ததனைக்கண்டனர். நகரத்திலிருந்தவர்கள் தமது சமூகத்திலுள்ள குயர் மக்களை “கல்யாணவீடுகளில் சமைப்பவர்” அல்லது “மணப்பெண் அலங்காரம் செய்பவர்” என்கின்ற விவரணங்களினூடாக அடையாளம் கண்டனர்.

- தமிழில் நிகழ்ந்த உரையாடல்களின்போது, Transgender என்பதற்குப் பொதுவாக பயன்படுத்தப்படும் தமிழ்மொழிபெயர்ப்பான - மாற்றுப்பாலினர் என்பது சிலரால் ஏற்றுக்கொள்ளமுடியாததாகக் கருதப்பட்டது. ஏனெனில் பெண் அல்லது ஆண் என்பதற்கான “மாற்று” பால்நிலை என்பதைக் குறிப்படுகின்றது. இதன் அர்த்தம் என்னவென்றால் மிகவும் நடுநிலையான பதம் தேவையாக உள்ளது என்பதாகும். தற்போது திருநர், திருநங்கை, திருநம்பி போன்ற பதங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

- தாம் இணையத்தில் தம்மைக் குறிப்பதற்குப் பயன்படுத்தும் சொற்கள் offline,ல் தாம் பயன்படுத்தும் சொற்களிலிருந்து சிலவேளைகளில் வேறுபட்டதாக இருக்கக்கூடும் எனவும் பங்குபற்றுனர்கள் கூறினர்.

  உதாரணமாக சிலர், Grindrஇல், Jonse மற்றும் Nachchi என்கின்ற பதங்களை மேல், கீழ் என்பதுடன் தொடர்புடையதாக அநேகர் புரிந்துகொள்ள மாட்டார்கள். அதனால் offlineஇல் அச்சொற்களைப் பயன்படுத்தினாலும் கூட அநேகரால் புரிந்துகொள்ள முடியாது. எனவே, Dating மற்றும் Hookup செயலிகளைப் பயன்படுத்தும் போது மேல், கீழினைப் பயன்படுத்தக் கற்றுக்கொண்டிருந்தனர்.

- துறைச்சொற்கள் அல்லது பதங்கள் அதிகாரத்தைப்பற்றியவையுங்கூட. விசேடமாக அத்தகைய சொற்களை எடுத்துக்கொள்ளல் அல்லது பயன்படுத்துவதென்பதன் அடிப்படையில், சேவைகள், நன்மைகள், அமைப்புக்களைப் பதிவுசெய்தல் போன்றவற்றை அணுகக்கூடியநிலை உள்ளது எனும்போது பாலியல்பு, பாலியல் நாட்டம், பால்நிலை அடையாளம் போன்றவற்றைக் குறிக்கும் பதங்களை அல்லது விவரணங்களைக் கொண்டிருத்தல் என்பது குறிப்பிடத்தக்களவு அதிகாரத்தினையும் குறிப்பிடுகின்றது.
  - திட்டநன்கொடைகளினூடாக திருநர்கள், பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதார சேவைகளைப் பெற்றுக்கொள்ளவேண்டியிருக்குமாயின், அவர்கள் ஒரு வைத்திய அதிகாரியினூடாக தாம் திருநர் என்பதனை உறுதிப்படுத்த வேண்டும். சமூகக் காரணங்களுக்காக Trans மக்கள் தம்மை சிஸ் ஆக காட்டிக்கொள்ளவேண்டிய சந்தர்ப்பங்கள் இருப்பதனால், வைத்தியர்கள் அவர்களை நம்புவதற்கும், அதை உறுதிப்படுத்திக் கடிதம் வழங்குவதற்கும், அவர்கள் திருநராக இருக்கும் புகைப்படங்களை வைத்தியர்களுக்குக் காட்டவேண்டும். பதங்கள் தொடர்பிலான மட்டுப்படுத்தப்பட்ட புரிந்துணர்வானது, பால்நிலை அடையாளம் மற்றும் பால்நிலை வெளிப்பாட்டினைப் பற்றிய குழப்பத்திற்கிட்டுச்செல்கின்றது.

- பதங்கள் உள்ளூருக்குரியவையோ அல்லது வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டவையோ, அவை எப்போதும் வலுவிழக்கச்செய்வனவாக இல்லை. அவை தந்திரோபாயத்துடன் பயன்படுத்தப்படமுடியும்.

  - குயர் என்பதற்கான சிங்கள மற்றும் தமிழ் மொழிபெயர்ப்பு இல்லை. சில செயற்பாட்டாளர்கள், இந்தப்பதத்தினை நாம் எமது உரிமைக்கான போராட்டத்திற்கான உத்தியாகத் தற்காலிகமாகப் பயன்படுத்தமுடியும், அத்துடன் இந்தப்போராட்டம் என்றென்றைக்கும் இருக்கப்போவதில்லை போன்ற காரணங்களினால், அத்தகைய மொழிபெயர்ப்புத் தேவையில்லை எனக் காண்கின்றனர்.
  - திருநர் சமூகத்துடனான உரையாடலின்

போது பங்குபற்றுனர்கள் தமக்குள் மட்டுமே பயன்படுத்துகின்ற சில சொற்கள்/பதங்கள் இருப்பதாகக் கூறினர். அவற்றில் சில அவர்களது சொந்த அடையாளத்தினைக் குறிப்பதாக உள்ளன. இச் சொற்கள் அவர்களின் சமூகத்திற்குள் தமது பாதுகாப்புக் காரணங்களுக்காக, ஒருவருக்கொருவர் சமிக்ஞை செய்வதற்குரிய ஒரு வழியாகவும் பயன்படுத்தப்படுகின்றன. அத்தகைய சில சொற்களை இவ்வறிக்கையில் பயன்படுத்தாமல் ரகசியம் காக்கும்படி நாம் கேட்கப்பட்டோம்.

நாம் தொழில்நிமித்தம் பயன்படுத்தும் பதங்கள் உள்ளன. நாம் உள்ளூரில் முறைசாராவிதத்தில் பயன்படுத்தும் பதங்கள் உள்ளன. எமக்கு எதிராக எம்மை இழிவுபடுத்தும் வகையில் வன்முறையான விதத்தில் பயன்படுத்தப்படும் சொற்கள் உள்ளன. இத்தகைய சொற்கள் எமது சமூகத்திற்குள் பயன்படுத்தப்படுவதில்லை. அவை புறம்பானவை. ஆனால் தன்பாலீர்ப்பிற்கெதிரான அச்சத்தினை உண்டாக்கும் விதத்தில் மொழியினைப்பயன்படுத்துதலானது, சவாலுக்குட்படுத்தப்படும் அல்லது மீளக்கோரப்படும் சந்தர்ப்பங்களையும் நாம் காண்கின்றோம்.

- பங்குபற்றுனர்கள் 2017இல் நிகழ்ந்த ஒரு சம்பவத்தினைப் பற்றி பேசினார்கள். அமைச்சர் மங்கள சமரவீர இன்னொரு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரால் திணிக்கப்பட்ட தன்பாலீர்ப்பிற்கெதிரான அவதூறொன்றிற்கு பதிலளிக்கும்போது "ஒரு கொள்ளைக்காரனாயிருப்பதைவிடவும், திருடனாயிருப்பதைவிடவும், அல்லது கொலைகாரனாயிருப்பதைவிடவும்" அந்த அவதூற்றில் கூறப்பட்டது போல இருப்பேன் என்றார் (Weerawardhana, 2017). பங்குபற்றியவர்களில் அநேகர், பொதுவெளியில் அவர் ஒரு நிலைப்பாட்டினை எடுத்தமையினையிட்டு அவர்கள் பெருமைப்படுவதாகக் கூறினர். அவருடன் அரசியல்ரீதியாக அணிசேராதவர்கள் கூட இதில் உடன்பட்டனர்
- முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன "சமனலயா"(வண்ணத்துப்பூச்சி என்பதற்கான சிங்களச் சொல்)இனை தன்பாலீர்ப்பிற்கெதிரான அச்சத்தினை ஏற்படுத்தும் விதத்தில் பயன்படுத்தியபோது, LGBTQ+ மக்கள் இதற்கெதிராக மட்டும் போராடவில்லை. "ஜனநாயகத்திற்கான வண்ணத்துப்பூச்சிகள்" என்கின்ற பதாகையின், கீழ் போராட்டத்தினை ஒழுங்குபடுத்தி அப்பதத்தினையும் மீளக்கோரினார்கள். முன்னர் குறிப்பிடப்பட்ட அதே அமைச்சர் சமரவீர "நான் அட்டையாக இருப்பதை விடவும் வண்ணத்துப்பூச்சியாக இருப்பேன் திரு.ஜனாதிபதி அவர்களே" எனக்கூறி அவர்களுடன் இருப்பதை tweet மூலம் வெளிப்படுத்தினார் (Samaraweera, 2018).

**திருநர் சமூகத்துடனான உரையாடலின் போது பங்குபற்றுனர்கள் தமக்குள் மட்டுமே பயன்படுத்துகின்ற சில சொற்கள்/பதங்கள் இருப்பதாகக் கூறினர். அவற்றில் சில அவர்களது சொந்த அடையாளத்தினைக் குறிப்பதாக உள்ளன.**

உள்ளூர் மொழிக்கும், புவியியற் பிரதேசங்களுக்கும் உரிய சுதேச பதங்களானவை, LGBTQ+ சமூகத்தின் உறுப்பினர்கள் சந்திப்பதற்கும், பழகுவதற்கும், ஒன்றுதிரள்வதற்குச் சந்தர்ப்பங்கள் கிடைக்கும்போதும், தமக்கிடையில் தொடர்பாடல் செய்வதற்கான வழிகளை விருத்திசெய்யும்போதும் விருத்தியடைகின்றன. சிஸ்பால்நிலை தன்பாலீர்ப்பு ஆண்கள், அவர்களின் பால்நிலை நாட்டத்தின்

காரணமாக பாரபட்சத்திற்குட்படுத்தப்பட்டாலும், சிஸ்பால்நிலையுடையவர்களாக, அவர்களின் பால்நிலை அடையாளம் மற்றும் பால்நிலை வெளிப்பாட்டின் காரணமாக, கொழும்பிற்குள்ளும் வெளியிலும் தம்மை ஒழுங்குபடுத்திக்கொள்ளவும், சமூகமயமாகவும் அவர்களுக்கு வாய்ப்புக்கள் உண்டு. இதன் காரணமாக தன்பாலீர்ப்பு ஆண்களுக்கு சமூகத்தில் பல உள்ளூர்ப் பதங்களையும் வழக்குமொழிச்சொற்களையும் காணலாம். ஒப்பீட்டளவில் சந்தித்துக்கொள்வதற்கும், சமூகமயமாவதற்கும் ஆண்கள் அளவிற்கு சுதந்திரமும், தன்னாட்சியுமற்ற பெண்தன்பாலீர்ப்பாளர்கள், ஈர்பாலீர்ப்பாளர்கள், குயர் போன்றோருக்கு அநேக சொற்கள் சூட்டப்படவில்லை

மேற்குறிப்பிட்ட உரையாடலானது, இலங்கையில் பால்நிலை மற்றும் பாலியல் அடையாளம் தொடர்பிலான சொற்களைக்கொண்ட வளமான உள்ளூர் பேரகராதியொன்றினை சிங்களத்திலும், தமிழிலும் வெளிப்படுத்தியது. இவ்வறிக்கையில் ஏற்கனவே குறிப்பிடப்பட்டது போல, இந்த உரையாடல்களிலிருந்து கூட்டுச்சேகரத்தின் மூலமாகப் பெற்றுக்கொண்ட சொற்களையும், வரலாறுகளையும் ஒன்றுதிரட்டி "தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலத்தில், பால்நிலை அடையாளம் மற்றும் பாலியல் நாட்டம் தொடர்பிலான சொற்களஞ்சியம்" ஒன்றினை உருவாக்க ஆரம்பித்துள்ளோம். கடந்தகாலங்களில் சில சொற்களஞ்சியங்கள் இருந்துள்ளபோதும், இச்சொற்களஞ்சியமானது, இலாபநோக்கமற்ற அல்லது திட்டப் பின்னணிக்கு வெளியில், மொழிபெயர்ப்புக்களுடனும், சமூகத்திலுள்ள அநேகர் ஒருவருக்கொருவர் மற்றையவர்களுடைய பதங்களைத் தெரிந்துகொள்ளக்கூடியவாறு உச்சரிப்பு வழிகாட்டிகளுடனும் ஒன்றாக வெளிவருகின்றது. காலணித்துவநீக்கமென்பது பழைய நினைவுகளின் ஏக்கத்தில் செய்யப்படுகின்ற செயற்பாடல்ல என்பதை ஏற்றுக்கொண்டு, நாம் இன்று எங்கிருக்கின்றோமோ அங்கு நம்மை அழைத்துச்சென்ற காலணித்துவத்தையும் உள்ளடக்கியதாக ஆனால் அதனுடன் மட்டும் மட்டுப்படுத்தப்படாமல், குறுக்குவெட்டும் அரசியல், வரலாறுகள் மற்றும் பின்னணிகள் போன்றவை குறித்த அறிவுடன் அது தற்போதைய யதார்த்தங்களிலிருந்து கட்டியெழுப்பப்படவேண்டிய கூட்டு முயற்சியாகும் என்பதனை ஏற்றுக்கொள்கின்ற இச் சொற்களஞ்சியமானது, மொழியையும், சொற்களையும் உள்ளூர்மயப்படுத்தும் ஒரு முயற்சியாகும்.

# பரிந்துரைகள்

இலங்கை முழுவதிலுமுள்ள LGBTQ+ மக்கள் தொழில்நிமித்தமும், வாழ்வாதாரம், கல்வி, தகவல்களைப் பெற்றுக்கொள்ளல், இன்பத்தினை அனுபவித்தல், நண்பர்களைக் கண்டுபிடித்தல், சமூகத்தினைக் கண்டுபிடித்தல் போன்றவற்றிற்காகவும், ஏனையவற்றிற்காகவும் இணையத்தினைப் பயன்படுத்துகின்றனர். அவர்களுடைய செயல்வாதமோ அல்லது அவர்கள் அனுபவிக்கின்ற வன்முறைகளோ தான் அநேகமானசமயங்களில் வெளித்தெரிபவையாக இருப்பினும், அவர்களுடைய ஒட்டுமொத்த அனுபவங்களும் கொள்கைகள் உருவாக்குபவர்களாலும், இணையத்தளங்களாலும், டிஜிட்டல் உரிமைகள் மற்றும் வெளிப்பாட்டிற்கான சுதந்திரம் தொடர்பில் செயற்படுபவர்கள் உள்ளடங்கலாக மனித உரிமை செயற்பாட்டாளர்களாலும் கருத்திற்கொள்ளப்பட வேண்டும்.

இந்தக் கற்கையின் கண்டுபிடிப்புக்களினடிப்படையில் பிரதான அரச மற்றும் சிவில் சமூக அமைப்புக்களுக்கான எமது பரிந்துரைகள் பின்வருமாறு.

## அரசுதரப்பினருக்கான பரிந்துரைகள்



- **பாலியல்பு, பால்நிலை, பாலியல் நடத்தை போன்றவற்றினடிப்படையில் மக்களைக் குற்றவாளிகளாக்குகின்ற சட்டங்களை ரத்துச்செய்து சட்டத்திருத்தத்தினை மேற்கொள்ள வேண்டும்.** LGBTQ+ மக்கள் தம் அன்றாட வாழ்வில் இணையத்தினை சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும், இன்பம்தரக்கூடியவகையிலும் பயன்படுத்துவதை இயலச்செய்யக்கூடிய கொள்கைகள், திட்டங்கள் மற்றும் ஏனைய முயற்சிகள் போன்றவை அவர்களுடைய அடையாளங்கள் குற்றஞ்சுமத்தப்பட்டு, களங்கப்படுத்தப்பட்டு, பாரபட்சப்படுத்தப்பட்டு இருக்கும்வரை முழுமையாக அடையமுடியாதவையாகின்றன.

- **தேசிய தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் கொள்கை உருவாக்க செயன்முறைகளில் LGBTQ+ மக்களை உள்வாங்குதல்.** பொதுக் கொள்கைகள் மற்றும் திட்டங்கள், பாலியல்பு மற்றும் பால்நிலை அடிப்படையில் விளிம்புநிலைக்குத்தள்ளப்பட்ட மக்களின் தேவைகள் மற்றும் அனுபவங்களால் அறிவுறுத்தப்பட்டிருப்பதனை உறுதிப்படுத்த வேண்டும். இது டிஜிட்டல் பொருளாதாரம், டிஜிட்டல் அறிவு மற்றும் LGBTIQ+ மக்கள் இணையத்தினை அணுகக்கூடியதன்மை போன்றவற்றினை ஊக்குவிக்கின்ற திட்டங்களையும், பயிற்சிகளையும் கொண்டிருக்க வேண்டும்.

- **சமூகத்தால் வழிநடத்தப்படுகின்ற தொலைத்தொடர்பு உட்கட்டுமான வலையமைப்புக்களை விருத்திசெய்தல்:** இணையசெயற்பரப்பு/செயலெல்லையானது, இணையத்தினை அணுகும்தன்மைக்குச் சமனாகாது. இணைய நடுநிலைமையினை விட்டுக்கொடுக்காமல், இணையத்தினை அணுகக்கூடிய தன்மையினை அதிகரிப்பதற்குக் கட்டுப்படியாகக்கூடிய அல்லது இலவசமான சாதனங்கள் மற்றும் இணையஇணைப்புக்கள் இன்றியமையாதவையாகும். விலை மற்றும் அணுகும்தன்மைமை சார்ந்த பிரச்சனைகளை எதிர்கொள்வதற்கான ஒரு முறை, சமூகத்தால் வழிநடத்தப்படுகின்ற தொலைத்தொடர்பு வலையமைப்புக்களாகும். அத்தகைய வலையமைப்புக்களை நிறுவுவதிலும், செயற்படுத்துவதிலும் சவால்கள் காணப்படினும், கட்டுப்பாடு மற்றும் விலை போன்றவற்றின் மூலம் பெறப்படும் நன்மைகள், இணையத்தினை அணுகும்தன்மையாக குறிப்பாக விளிம்புநிலைக்குத்தள்ளப்பட்ட குழுக்களுக்கு மாற்றப்படலாம் என ஆய்வுகள் காட்டுகின்றன (Bidwell & Jensen, 2019).

- **தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய வன்முறைகளைக் கையாள்கின்ற சட்ட அமுலாக்கம் மற்றும் ஏனைய முன்னணி தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அதிகாரிகள் போன்றோரின் திறன்களை வலுப்படுத்தல்.** இது தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய வன்முறைகளை அடையாளம்காணுதல் மற்றும் அவற்றை வன்முறைகளாகக்கருதி கையாளுதல், பாதிக்கப்பட்டவரை குற்றங்கூறாத

தீர்ப்பிடலற்ற முறைகளில் சம்பவங்களினைக் கையாள்வதற்குப் பயிற்சியளித்தல், தீங்கிற்குப்பதிலாக, இணக்கம் மற்றும் அந்தரங்கம் போன்றவற்றினடிப்படையிலான சட்டகத்தினைப் பயன்படுத்தல், பால்நிலை மற்றும் பாலியல்பு தொடர்பில் உரிமைசார் கண்ணோட்டத்தில் கூருணர்வினை ஏற்படுத்தல் போன்றவற்றினை உள்ளடக்குகின்றது.



**வெறுப்பு பேச்சு மற்றும் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய வன்முறைகளுக்கு அரசு பதிலிறுக்கும்போது, பாதிக்கப்பட்ட/உயிர் பிழைத்திருப்பவருக்கு தீர்வுகளை மேற்கொள்வதற்கான தெரிவுகள் இருக்கவேண்டும்.** அவை

- தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய மற்றும் இணையவழியில் இடம்பெறும் வன்முறைகளைப் பரந்தளவில் கையாள்வதற்கேற்றவாறு இருக்கின்ற சட்டங்களை, அரச மற்றும் மனித உரிமைகள் கடப்பாடுகளுடன் ஒத்திருக்கின்ற வகையில் எடுத்துக்கூறல் மற்றும் சட்டத்திருத்தத்தினை மேற்கொள்வதன் மூலம் அவற்றை முழுமையாக நடைமுறைப்படுத்தல்.
- தீர்ப்பிடலற்ற இலவசமான உளநல மற்றும் சமூகஉளவியல்சார் ஆதரவினைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாயிருத்தல்.
- தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய வன்முறைச் சம்பவங்கள் குறித்து எவ்வாறு அறிக்கையிடமுடியும், சிவில் சமூக அமைப்புக்களை எவ்வாறு அணுகமுடியும், எவ்வாறு சட்ட உதவியினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பது குறித்த தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாயிருத்தல் போன்றவற்றினை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும்

**டிஜிட்டல் பாதுகாப்பு, ஊடக அறிவு மற்றும் விரிவான பாலியற் கல்வி/உறவுகள் தொடர்பான கல்வி தொடர்பில் பாடசாலைமட்ட நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைத்தலும், நடைமுறைப்படுத்தலும்.** இது ஒருவர் தன்னை சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும், இன்பமாக வழிகளிலும் வெளிப்படுத்துவதற்கு அடிப்படையான விடயங்களான சம்மதம், அந்தரங்கம், உடல்ரீதியான தன்னாட்சி போன்ற கருத்தியல்களை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும்.




**இணையமுடக்கம் என அறியப்படுகின்ற திட்டமிடப்பட்டமுறையில் இணையம் அல்லது இரத்திரனியல் தொடர்பாடல் தடங்கல்களை ஏற்படுத்தல் நிறுத்தப்பட வேண்டும்.** இவை தற்காலிகமாக ஏற்படுத்தப்படும் தடங்கல்களையும், குறிப்பிட்ட பிரதேசத்தில் ஏற்படுத்தப்படும் தடங்கல்கள் அல்லது குறிப்பிட்ட இணையத்தளங்களில் ஏற்படுத்தப்படும் தடங்கல்கள் போன்றவற்றினையும் உள்ளடக்குகின்றது. இணைய முடக்கங்கள் தகவலறியும் உரிமையை மீறுதலாகும். அத்துடன் இது மக்களின் வாழ்வில் பொருளாதார மற்றும் சமூக விளைவுகளினை ஏற்படுத்தமுடியும்.

**தொலைத்தொடர்பாடலுடன் தொடர்புடைய பொதுச்சேவை அதிகாரிகள் உத்தியோகபூர்வ மொழிக்கொள்கையை முழுமையாக செயற்படுத்தவேண்டும். அனைத்து தகவல்களும், சேவைகளும் மும்மொழிகளிலும் இருப்பதனை உறுதிப்படுத்த வேண்டும்**

## சிவில்சமூக தரப்பினருக்கான பரிந்துரைகள்

- **பாலியல்பு, பால்நிலை, பாலியல் நடத்தை போன்றவற்றினடிப்படையில் மக்களைக் குற்றவாளிகளாக்குகின்ற சட்டங்களையும, கொள்கைகளையும் ரத்துச்செய்வதற்காக ஆதரித்துவாதாடல்.**



- **சிங்களத்திலும் தமிழிலும் பாலியல் மற்றும் மீளுற்பத்தி சுகாதார உரிமைகள், பாலியல்பு, பால்நிலை போன்றவை தொடர்பில் இணையவழி தகவல்களையும், வளங்களையும் உருவாக்குதல்.** தம்முடைய மற்றும் ஏனையவர்களது - பால்நிலை மற்றும் பாலியல்பு உள்ளடங்கலாக, பாலியல் மீளுற்பத்தி சுகாதார உரிமைகள் குறித்த தெளிவினைப் பெற்றுக்கொள்வதற்கு மக்கள் இணையத்தினைப் பயன்படுத்துகின்றார்கள். ஆனால் LGBTQ+ மக்கள் உட்பட ஏனையவர்களும் இணையவழியில் ஆதரவினைக்கண்டடையக்கூடிய விதத்தில் உள்ளூர் மொழிகளில் அதிக தகவல்களைக்கொண்ட வளங்களும், இவற்றை இணையவழியில் பகிர்ந்துகொள்வதற்கும் உரையாடுவதற்கும் ஏதுவான சூழலும் தேவையாக இருக்கின்றது என்பது தெளிவாகின்றது.

- **LGBTQ+ மக்கள் தமது தனிப்பட்ட கதைகளைக் கூறுவதற்கான வளங்களை ஒதுக்கீடு செய்தல் வேண்டும்.** இது அவர்களுடைய சொந்த மொழியில் அவர்களுக்கான அறிவினை உருவாக்கிக்கொள்வதையும் அதனைப் பகிர்ந்து கொள்வதற்கு ஆதரவு வழங்குவதனையும் உள்ளடக்குகின்றது.



- **LGBTQ+ மக்களுக்கு டிஜிட்டல் பொருளாதாரம், டிஜிட்டல் கல்வியறிவு, இணையத்தினை அணுகக்கூடியதன்மை போன்றவற்றை ஊக்குவிக்கின்ற தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர்களுடனான நிகழ்வுகள் உட்பட பயிற்சிகளுக்கும், நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் ஆதரவளித்தல்.**


- **வெறுப்பு பேச்சு மற்றும் வன்முறைகளை எதிர்கொள்கின்ற சந்தர்ப்பங்களில் தீர்வினைப்பெறுவதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காகவும் இணையவழியில் அவர்களின் உரிமைக்காகவும்** LGBTQ+ **மக்களின் அறிவையும் விழிப்புணர்வையும் வலுப்படுத்தல்.**

- **சிவில் சமூக அமைப்புக்கள், பால்நிலையை அடிப்படையாகக் கொண்ட வன்முறைகள் என்பதன் மூலம்** எதைக் கருதுகின்றன என்பது தொழில்நுட்பரீதியான வன்முறைகளையும் உள்வாங்குவதன் மூலம் அதன் எல்லையை விரிவுபடுத்தி அவர்களுடைய ஆதரித்து வாதாடல் பிரச்சாரம் மற்றும் பாதிக்கப்பட்டு உயிர்பிழைத்திருப்பவர்களுக்கான ஆதரவு வழங்குதல் செயற்பாடுகளிலும் இதனை உள்வாங்க வேண்டும் அல்லது சிவில்சமூக அமைப்புக்களின் ஆதரித்து வாதாடல் பிரச்சாரங்களில் ஈடுபடல்இ

உயிர்பிழைத்தோர் ஆதரவினை வழங்கல் செயற்பாடுகளில் தொழில்நுட்ப ரீதியான வன்முறையை உள்ளடக்கக்கூடியவகையில சிவில் சமூக அமைப்புக்கள்இ பால்நிலைசார் வன்முறையாகக் கருதுபவற்றின் எல்லையை விரிவுபடுத்தல்

- **வெறுப்பு பேச்சு மற்றும் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய வன்முறைகளுக்கு பதிலிறுக்கும்போது:**
  - அரச மனித உரிமை கடப்பாடுகளுடன் ஒத்திருக்கின்றவகையில், தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய மற்றும் இணையவழி வன்முறைகளைப் பரந்தளவில் எதிர்கொள்வதற்கேற்றவாறு இருக்கின்ற சட்டங்களை எடுத்துக்கூறுவதன்மூலமும் சட்டத் திருத்தங்களை மேற்கொள்வதன் மூலமும் சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்காக ஆதரித்து வாதாடல்.
  - தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய வன்முறைகளால் பாதிக்கப்பட்ட/உயிர் பிழைத்திருப்பவர்களுக்கு தீர்ப்பிடலற்ற, இலவசமான உளநல மற்றும் சமூகஉளவியல்சார் ஆதரவினைப் பெற்றுக்கொள்வதற்கான ஆதரவளித்தல்.
  - தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய வன்முறைச் சம்பவங்கள் குறித்து எவ்வாறு அறிக்கையிடமுடியும், இவ் விடயம் தொடர்பில் செயற்படுகின்ற சிவில் சமூக அமைப்புக்களை எப்படி அணுகமுடியும், எப்படி சட்ட உதவியினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பது குறித்த தகவல்களை உருவாக்கி வழங்குதல்

- **டிஜிட்டல் பாதுகாப்பு, ஊடக அறிவு மற்றும் விரிவான பாலியற் கல்வி/உறவுகள் தொடர்பான கல்வி தொடர்பில் பாடசாலைமட்ட நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைக்கக்கோரி ஆதரித்துவாதாடல் மற்றும் அத்தகைய நிகழ்ச்சித்திட்ட வடிவமைப்பிற்கு ஆதரவளித்தல்**



- **பாதுகாப்பான டிஜிட்டல் உரிமைகளுக்காகவும் அவை மீறப்படும்போது தீர்வினைப் பெற்றுக்கொள்ளவும் ஆதரவளித்தல் அதற்கான சட்ட வளங்களினைப் பலப்படுத்தல்**

## இணையத்தளங்களுக்கான பரிந்துரைகள்

- **வெளிப்பாட்டிற்கான சுதந்திரம் தொடர்பில் மனிதஉரிமைகள் தரநிலையுடன்** ஒத்துப்போகின்ற அதேவேளை வெறுப்புப் பேச்சு மற்றும் ஏனைய தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய வன்முறைகளுக்குப் பதிலிறுக்கக்கூடியவாறான தெளிவான சமூகவழிகாட்டல்களையும், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளையும் உள்வாங்கிக்கொள்ளல்.

- **தமிழிலும் சிங்களத்திலும் விடயங்களை மிதமாக்குவதற்கான திறனை இணையத்தளங்கள் கொண்டிருக்க வேண்டும்.** அத்துடன் LGBTQ+ மக்களுக்கெதிரான வன்முறைகள் உள்ளடங்கலாக இணையத்தளங்களுக்கு முறைப்பாடுசெய்யப்படும் வன்முறைச்சம்பவங்களை எதிர்கொள்வதற்கான வலுவான செயன்முறைகளையும், திறன்களையும் அவை கொண்டிருக்க வேண்டும்



## ஊடகங்களுக்கான பரிந்துரைகள்

- **இணையவழியிலுள்ள அனைத்து (டிஜிட்டல் மற்றும் ஏனைய) ஊடகநிறுவனங்களும் LGBTQ+ மக்கள் ஊடகத்தளங்களில் எவ்விதமாக பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றார்கள், எவ்விதமாக அறிவிக்கப்படுகிறார்கள் என்பதில் அவர்களுக்கெதிரான பாரபட்சமின்மையை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.** அவர்கள் “பதிப்பகங்கள் ஒருவருடைய இனம், நிறம், சமயம், பால் அல்லது எதுவிதமான உடல் அல்லது உளரீதியான நோய் அல்லது குறைபாடுகள் தொடர்பிலான முற்கற்பிதமான அல்லது இழிவுபடுத்தும் வகையிலான மேற்கோள்களைப் பயன்படுத்துவதனைத் தவிர்க்க வேண்டும்” என்கின்ற இலங்கை பதிப்பாளர் சங்கத்தினுடைய ஒழுக்கக்கோட்பாட்டினை உள்வாங்கிக்கொள்ள வேண்டும். பால்நிலை அடையாளம் மற்றும் பாலியல்பு போன்றவற்றிற்கான மேற்கோள்கள் கூட இவ்வழிகாட்டியில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அனைத்து ஊடக நிறுவகங்களும் இவ்வழிகாட்டியினைப் பின்பற்றுவதனையும், அதனை நடைமுறைப்படுத்துவதனையும் உறுதிப்படுத்தவேண்டும்.

## கல்வியியலாளர்களுக்கான பரிந்துரைகள்

- **கருத்தாய்வுகள் மற்றும் ஆராய்ச்சிகளை உள்ளூர்மயமாக்கல் என்பது மொழிபெயர்ப்பிற்கும் அப்பால் உள்ளூர்** மொழிக்குச் செல்ல வேண்டும். எந்த சமூகத்தின் அனுபவங்கள் ஆவணமாக்கப்படுகின்றனவோ, அவர்களின் ஆலோசனைகளை உள்ளடக்கியதாக, உள்ளூரில் பயன்படுத்தப்படுகின்றதும, புரிந்துகொள்ளக்கூடியதுமான துறைச்சொற்கள் பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான நேரத்தினையும் ஏனைய வளங்களினையும் ஒதுக்கீடுசெய்ய வேண்டும்

- **இக் கருத்தாய்வினுடைய நோக்கப்பரப்பினை விரிவுபடுத்தல்.** இக் கருத்தாய்வினை மேலும் பல இடங்களில் மீளச்செய்வதன் மூலம், சனத்தொகையின் இணையப்பாவனை தொடர்பில், LGBTQ+ நபர்களுக்கிடையில் உதாரணமாக கிராம, நகர மற்றும் வளப்பகிர்வு போன்ற மேலதிக காரணங்களுடன் அறிந்துகொள்ளல்.

- இந்தக் கற்கையின் நோக்கங்களுக்குப் புறம்பான, **LGBTIQ+ மக்களின் உளசுகாதாரத்திற்கும் இணையத்திற்கும் இடையிலான தொடர்புகள் குறித்து மேலும் ஆராயப்படவேண்டும்.** பதிலளித்தோரில் சிலர், அவர்களது உளநலத்தில் இணையம் எத்தகைய நன்மைகளையும், கேடுகளையும் விளைவிக்கின்றது என்பது தொடர்பில் பேசியபோதும், இத் தலைப்பானது இந்த ஆய்வின் நோக்கங்களினுள் எம்மால் ஆழமாக ஆராயப்படவில்லை. வெளிப்பாடு, அடையாளம், சமூகத்தைக் கண்டடைதல், ஏனையவை போன்ற பகுதிகள், இலங்கையில் LGBTIQ+ மக்கள் மத்தியில் இணையத்திற்கும், உளசுகாதாரத்திற்கும் இடையிலான இடைத்தொடர்புகள் குறித்து ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவையினைக் காட்டுகின்றன



- **பாலியல் வெளிப்பாடு, இடைத்தொடர்புகள் மற்றும் பாலியல் தொழில் போன்றவற்றிற்கான வெளியாக இணையம் இருப்பது தொடர்பிலான மேலதிக ஆய்வுகள்.** இது ஆபாசப்படங்களினை அணுகக்கூடியதன்மை, உருவாக்கக்கூடியதன்மை மற்றும் பகிர்ந்துகொள்ளக்கூடியதன்மை மற்றும் hook-up கலாசாரம், பாலியல் பரிமாற்றம், பல தளங்களைப் பயன்படுத்தல் போன்றவற்றை உள்ளடக்குகின்றது. இவையனைத்துமே சட்டரீதியாக குற்றமாக்கப்பட்டிருக்கின்ற அதேவேளை சமூகக்களங்கமாக கருதப்படுகின்ற பின்னணியில் கருத்தில்கொள்ளப்படவேண்டும்

- **துறைச்சொற்களின் (நவ)தாராளவாத அடிப்படையினையும், அதன்மூலம் ஏற்படுகின்ற சவால்களையும் ஆராய்தல்.** உதாரணமாக, இலங்கையிலுள்ள LGBTQ+ சமூகத்தினரால் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்ற மற்றும் கட்டமைக்கப்படுகின்ற துறைச்சொற்கள் எவ்வாறு காலணித்துவ அதிகாரப்படிநிலைகளை மீளுருவாக்கம் செய்கின்றன மற்றும் தற்போது நடப்பிலிருக்கும் காலணித்துவநீக்க செயற்பாடுகள் எப்படி இவற்றை சவாலுக்குட்படுத்துகின்றன போன்றவை.

# உசாத்துணைகள்

Access Now. (2020). TARGETED, CUT OFF, AND LEFT IN THE DARK. The #KeepItOn report on internet shutdowns in 2019. https://www.accessnow.org/cms/assets/uploads/2020/02/KeepItOn-2019-report-1.pdf

Aingkaran. [@Aingkaran]. (2019, December 11). The official news portal of Government of Sri Lanka @newsdotlk has tweeted 65 times since Mr. @GotabayaR became the President. Not a single tweet in Tamil. Lack of resources, @ErandaGinige? [Tweet]. https://twitter.com/AingkaranK/status/1204731566796267520?s=20

Al Jazeera. (2020, February 4). Sri Lanka scraps Tamil national anthem at Independence Day. https://www.aljazeera.com/news/2020/02/sri-lanka-scraps-tamil-national-anthem-independence-day-200204103334093.html

Blog Tyrant. (2020). Is blogging finally dead?. https://www.blogtyrant.com/is-blogging-finally-dead/

Bidwell, N.J., & Jensen, M. (2019). Bottom-up connectivity strategies: Community-led small-scale telecommunication infrastructure networks in the global South. Association for Progressive Communications. https://www.apc.org/sites/default/files/bottom-up-connectivity-strategies_0.pdf

Castells, M., (2000). Materials for an exploratory theory of the network society. British Journal of Sociology, 51(1), pp.5–24.

Chamara, S. (2019, November 10). Out of the closet, onto the discussion table. Ceylon Today. https://ceylontoday.lk/news-more/8924

Code of Professional Practice (Code of Ethics) of the Editors Guild of Sri Lanka and Free Media Movement. https://freemediasrilanka.wordpress.com/code-of-ethics/

Colombo Times. (2020, February 19). Colombo court rules prostitution is not punishable offence. http://colombotimes.net/colombo-court-rules-prostitution-is-not-punishable-offence/

Davis, M. (2019, June 14). Will coding become a basic life skill? Yes and no, say experts. Big Think. https://bigthink.com/technology-innovation/coding-life-skill

De Sayrah, A. (2017). Lost in Translation: Shortfalls in the implementation of Sri Lanka's official languages policy. Groundviews. https://groundviews.org/2017/02/20/lost-in-translation-shortfalls-in-the-implementation-of-sri-lankas-official-languages-policy/

Deshapriya, P., Mendis, M., Wijewardena, S., Wijesiriwardena, S., Kottegoda, S., & Brown, S. (2017). Disrupting the Binary Code: Experiences of LGBT Sri Lankans Online. Women and Media Collective. https://womenandmedia.org/wp-content/uploads/2018/02/Disrupting-the-Binary-Code-_-for-web.pdf

Ellawala, T.I. Mismatched Lovers: Exploring the Compatibility Between LGBTQ+ Identity Theories and Gender and Sexual Plurality in Sri Lanka. Sexuality & Culture 22, 1321–1339 (2018). https://doi.org/10.1007/s12119-018-9528-0

Feminist Principles of the Internet. https://feministinternet.org/en/principle/usage

Galpaya, H., Zainudeen, A., & Amarasinghe, T. (2019). AfterAccess: ICT access and use in Sri Lanka and the Global South (Presentation). LIRNEasia. https://lirneasia.net/2019/05/afteraccess-ict-access-and-use-in-sri-lanka-and-the-global-south-presentation/

Ghosha, Groundviews, & Hashtag Generation. (2019). Opinions, B*tch: Technology Based Violence Against Women in Sri Lanka. https://groundviews.org/2019/06/27/opinions-btch-technology-based-violence-against-women-in-sri-lanka/

Gineers Now. (2020). Everything You Need to Know About Low-Code Development Platforms. https://gineersnow.com/engineering/software/everything-you-need-to-know-about-low-code-development-platforms

Gopikrishna, K. [@KanagaGopi]. (2020, April 18). Waiting for the PMD to post an English or Tamil version of the PR so that I can fully understand what's happening in my country. [Tweet]. https://twitter.com/KanagaGopi/status/1251507733515235328?s=20

GSMA Intelligence. (2020, April 16). Groundwork being laid for Sri Lanka's foray into 5G. Daily News. http://www.dailynews.lk/2020/04/16/local/216485/groundwork-being-laid-sri-lanka%E2%80%99s-foray-5g

Human Rights Watch. (2016). "All Five Fingers Are Not the Same" Discrimination on Grounds of Gender Identity and Sexual Orientation in Sri Lanka. https://www.hrw.org/report/2016/08/15/all-five-fingers-are-not-same/discrimination-grounds-gender-identity-and-sexual

Human Rights Watch. (2020). Sri Lanka: Security Agencies Shutting Down Civic Space. https://www.hrw.org/news/2020/03/03/sri-lanka-security-agencies-shutting-down-civic-space

Ivarsson, C.H., (2019). Lion's blood: social media, everyday nationalism and anti-Muslim mobilisation among Sinhala-Buddhist youth. Contemporary South Asia, 27:2, 145-159, DOI: 10.1080/09584a935.2018.1528210

Jayasinghe, P. (2019). Pride Under Emergency. Groundviews.
https://groundviews.org/2019/06/28/pride-under-emergency/

Jayasuriya, S. (2020, February 23). 5G to be rolled out in Sri Lanka soon. Sunday Observer.
https://www.sundayobserver.lk/2020/02/23/business/5g-be-rolled-out-sri-lanka-soon

Kadirgamar, A. (2013). Second Wave of Neoliberalism: Financialisation and Crisis in Post-War Sri Lanka. Economic and Political Weekly.
https://www.epw.in/journal/2013/35/web-exclusives/second-wave-neoliberalism-financialisation-and-crisis-post-war-sri

Kastrenakes, J. (2018, February 12). German court says Facebook's real name policy is illegal. The Verge.
https://www.theverge.com/2018/2/12/17005746/facebook-real-name-policy-illegal-german-court-rules

Lanka Standard. (2012, December 6). Call to protect Sharmila Seyyid's right to free speech.
http://www.lankastandard.com/2012/12/call-to-protect-sharmila-seyyids-right-to-free-speech/

Miller, Jody., & Nichols, Andrea., (2012). Identity, Sexuality and Commercial Sex among Sri Lankan Nachchi. Sexualities 15(5/6) 554–569. DOI: 10.1177/1363460712446120

Ministry of Digital Infrastructure and Information Technology (MDIIT) & Information and Communication Technology Agency of Sri Lanka (ICTA). (2019). National Digital Policy for Sri Lanka 2020-2025.
http://www.mdiit.gov.lk/index.php/en/what-we-diliver/publications/action-plan/send/6-legislation/76-national-digital-policy

NetBlocks. (2018). Counting the cost of Sri Lanka's internet shutdown. https://netblocks.org/reports/sri-lanka-internet-shutdown-economic-impact-VxyM7EAZ

NetBlocks. (2019). Sri Lanka blocks social media for third time in a month. https://netblocks.org/reports/sri-lanka-blocks-social-media-for-third-time-in-one-month-M8JRjg80

Perera, J. (2016). Ethno-Religious Nationalism Raises Its Head in Sri Lanka. The Citizen. https://www.thecitizen.in/index.php/en/NewsDetail/index/5/9359/Ethno-Religious-Nationalism-Raises-Its-Head-in-Sri-Lanka

Perera, S. (2011). Reflections on Issues of Language in Sri Lanka: Power, Exclusion and Inclusion. Groundviews. https://groundviews.org/2011/10/24/reflections-on-issues-of-language-in-sri-lanka-power-exclusion-and-inclusion/

Samaraweera, M. [@MangalaLK]. (2018, November 5). I would rather be a butterfly than a leech Mr.President !!! @MaithripalaS #CoupLK #ConstitutionalCrisisSriLanka #FakePM #illegalgovernment #lka [Tweet]. https://twitter.com/MangalaLK/status/1059461522416558082?s=20

Sri Lanka Brief. (2014-2017). LGBT Rights. https://srilankabrief.org/tag/lgbt-rights/

Weerawardhana, C. (2017, May 8). Standing Up For The Gay Politician: Mangala Samaraweera On Right Track? Colombo Telegraph. https://www.colombotelegraph.com/index.php/standing-up-for-the-gay-politician-mangala-samaraweera-on-right-track/

Wickramasinghe, K. (2020, January 3). When conservatism gets in the way of sex education. Daily Mirror. http://www.dailymirror.lk/news-features/WHEN-CONSERVATISM-GETS-IN-THE-WAY-OF-SEX-EDUCATION-Comprehensive-Sexuality-Education-in-SL/131-180620

Wijesiriwardena, S. (2017). Where have all the queer women gone?. GenderIT.org. https://www.genderit.org/editorial/editorial-where-have-all-queer-women-gone

Women and Media Collective. (2016). Submission on LGBTIQ Persons and Transitional Justice Mechanisms. Groundviews. https://groundviews.org/2016/08/25/submission-on-lgbtiq-persons-and-transitional-justice-mechanisms/

World Telecommunication/ICT Indicators Database. (2019). https://www.itu.int/en/ITU-D/Statistics/Pages/publications/wtid.aspx

# இணைப்புக்கள்

# இணைப்பு 1 - சொற்களஞ்சியம்

**LGBTQ+**

பெண்தன்பாலீர்ப்பாளர், ஆண்தன்பாலீர்ப்பாளர், திருநர், குயர், ஏனைய பால்நிலை அடையாளங்கள் மற்றும் வெளிப்பாடுகள், பாலியல்பு மற்றும் பாலியல் நடத்தைகளைக் கொண்ட மக்களைக் குறிப்பிடுகின்றது

**பால்நிலை**

பால் என்பது உயிரியல் ரீதியான ஆண்தன்மை, பெண்தன்மையையும், பால்நிலை என்பது பெண்மை ஆண்மையின் நீட்சியான நடத்தை, சமூக, கலாசார மற்றும் ஏனைய விடயங்களைக் குறிக்கின்றது.

**பாலியல் அடையாளம்**

ஆண்மை, பெண்மை அல்லது ஏனைய பால்நிலை குறித்த ஒரு நபரின் உணர்வு

**பால்நிலை வெளிப்பாடு**

பால்நிலை மற்றும் பால்நிலைப் பங்குபாத்திரங்கள் தொடர்பிலான விடயங்களை உடற்தோற்றத்தின் மூலம் வெளிப்படுத்தல் உள்ளடங்கலாக, ஒரு நபர் தன்னை வெளிப்படுத்துகின்ற விதம். பால்நிலை வெளிப்பாடானது, ஒரு நபரின் பால்நிலை அடையாளத்துடன் எப்போதும் தொடர்புபட்டதாக அல்லாமலும் இருக்கலாம்.

**சிஸ்பால்நிலை**

பிறப்பின்போது வழங்கப்பட்ட அதே பால் பால்நிலையுடன் அடையாளப்படுத்துதல்

**திருநர்**

பிறப்பின்போது அடையாளப்படுத்தப்பட்ட பால்நிலையிலிருந்து வேறுபட்ட பால்நிலையுடன் அடையாளப்படுத்தல்

**பாலியல்பு**

பாலியல்பென்பது பால், பால்நிலை அடையாளங்கள் மற்றும் பங்குபாத்திரங்கள், பால்நிலை வெளிப்பாடு, பால்நிலை நாட்டம்,பாலியல் கிளர்ச்சி, இன்பம், நெருக்கம்/அந்தரங்கம் போன்றவற்றினை உள்ளடக்குகின்றது. பாலியல்பு சிந்தனைகளினூடாகவும, கற்பனைகளினூடாகவும், விருப்பங்களினூடாகவும், நம்பிக்கைகளினூடாகவும், மனப்பாங்குகளினூடாகவும், விழுமியங்களினூடாகவும், பழக்கவழக்கங்களினூடாகவும், பங்குபாத்திரங்களினூ டாகவும், உறவுகளினூடாகவும் உணரப்பட்டு வெளிப்படுத்தப்படும். பாலியல்பு அத்தகைய அனைத்து பரிமாணங்களையுமே உள்ளடக்குகின்ற அதேவேளை, இவை அனைத்தும் எப்போதுமே உணரப்படுவதோ அல்லது வெளிப்படுத்தப்படுவதோ இல்லை. பாலியல்பானது உயிரியல், உளவியல், சமூக, பொருளாதார, அரசியல், கலாசார, சட்டம், வரலாறு, சமயம், மற்றும் ஆன்மீக காரணிகளால் செல்வாக்குச்செலுத்தப்படுகின்றது

**பாலியல் நாட்டம்**

உணர்வுரீதியான அல்லது பாலியல்ரீதியான அந்தரங்கமான உறவினை அதே பால்/பால்நிலை அல்லது வேறு பால்/பால்நிலை அல்லது பல பால்நிலைகள்/பால்கள் போன்றோருடன் ஏற்படுத்திக் கொள்வதற்கான விருப்பம் அல்லது பாலியல் விருப்பமே அற்றிருக்கும் தன்மை

**பெண்தன்பாலீர்பாளர்**
பெண்ணாக தன்னை அடையாளப்படுத்துமொருவர் உணர்வு ரீதியாகவும, மனோரம்மியம் மற்றும்/அல்லது பாலியல் ரீதியாகவும் பெண்ணென தன்னை அடையாளப்படுத்தும் ஏனையவர்களுடன் ஈர்க்கப்படுதல்

**ஆண்தன்பாலீர்ப்பாளர்** (Gay)
தன்னை ஆணாக அடையாளப்படுத்தும் ஒருவருக்கு உணர்வுரீதியாகவும், மனோரம்மியம் மற்றும்/அல்லது பாலியல் ரீதியாகவும் ஆணாக தன்னை அடையாளப்படுத்தும் ஏனையவர்களுடன் ஈர்ப்பு ஏற்படல். தம்மை ஆண்தன்பாலீர்ப்பாளராக அடையாளப்படுத்தும் அனைத்து ஆண்களும் "தன்பாலீர்ப்பு நடவடிக்கைகளில்" ஈடுபடுவதில்லை. சில சமயங்களில் பால்நிலை எதுவாக இருப்பினும் எதிர்ப்பாலீர்ப்பாக தம்மை அடையாளம் காணாத எவரையும் குறிப்பதற்கு இப்பதம் பயன்படுத்தப்படுகின்றது.

**குயர்**
இது எதிர்ப்பாலீர்ப்பாலீர்ப்பு, ஓர்தார மணமுறையைக் கொண்டிருக்கின்ற பெரும்பாலானோர் அற்ற ஏனைய பல பாலியல் தேர்வுகளையும், நாட்டங்களினையும், பழக்கவழக்கங்களினையும் அரவணைக்கின்ற ஓர் குடைச்சொல்லாகும். குயர் என்பது பெண்தன்பாலீர்ப்பு, ஆண்தன்பாலீர்ப்பு, ஈர்பாலீர்ப்பு, திருநர்கள், பால்பல்வகைமையினர், பாலியல்சார்மாற்றத்தைக்கோருகின்ற சமூகங்கள் மற்றும் தமது பாலியல்பு தொடர்பில் தேடலில் இருக்கின்ற அனைவரையுமே இது உள்ளடக்குகின்றது. இது சிலவேளைகளில் எதிர்ப்பாலீர்ப்பு அல்லாதவர்கள் தாம் யாரைநோக்கி ஈர்க்கப்படுகின்றார்கள் என்பதைக் குறிப்பிடாமல் இருப்பதற்கான ஒரு வழியாகவும் பயன்படுத்தப்படுகின்றது. ஆங்கிலம் பேசப்படும் நாடுகளில் ஆரம்பத்தில் வெறுமனே இழிவுச்சொல்லாக இது பயன்படுத்தப்பட்டு பின்னர் கடுமையான விமர்சனங்களை மேற்கொண்ட குழுக்களால் அர்த்தமுள்ளவகையில் மீளக்கோரப்பட்டது.

**ஈர்பாலீர்ப்பு**
ஒன்றிற்கு மேற்பட்ட பால்நிலைகளின் மேல் உணர்வுரீதியாகவும், பாலியல்ரீதியான மற்றும்/மனோரம்மியமான ஈர்ப்பு ஏற்படல்

**பான்செக்சுவல்** (Pansexual)
ஒன்றிற்கு மேற்பட்டவர்களின் மேல் அவர்கள் எந்த பால்நிலையைச் சேர்ந்தவர்களாயிருப்பினும், உணர்வுரீதியாகவும், பாலியல்ரீதியாக மற்றும்/அல்லது மனோரம்மியமான ஈர்ப்பு ஏற்படல்

**இருமையல்லாதவர்**
ஆண், பெண் எனப்படுகின்ற இருமையுடன் தம்மை அடையாளப்படுத்தாதவர்கள் பயன்படுத்தும் பால்நிலை அடையாளம்

**பன்மைத்துவமான பால் அடையாளங்களைக் கொண்டிருப்போர/பால் பல்வகைமையினர்**
இப் பதம் நிறமூர்த்தங்கள், ஹோர்மோன்கள், உள்ளக பாலுறுப்புக்கள் மற்றும் பெண் அல்லது ஆணுக்கென எதிர்பார்க்கப்படுகின்ற பாலுறுப்புக்களிலிருந்து வேறுபட்ட பாங்கினைக் கொண்டிருக்கின்ற பாலுறுப்புக்கள் போன்றவற்றின் சேர்க்கையினைக் குறிப்பிடுகின்றது

**சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விழுமியங்களுக்குட்பட்ட எதிர்ப்பாலீர்ப்பு**
தனிநபர்களிடமும் நிறுவகங்களிடமும் காணப்படும், அனைவரும் எதிர்ப்பாலீர்ப்புடையவர்கள் அத்துடன் எதிர்ப்பாலீர்ப்பே பாலியல் நாட்டங்களுள் மிகவும் உயர்ந்தது என்கின்றதான ஊகம்

**வெளிவருதல்**
ஒரு நபர் முதன் முறையாக தன்னுடைய பாலியல் நாட்டத்தினை அல்லது பால்நிலை அடையாளத்தினை புரிந்து, அதனை ஏற்றுக்கொண்டு, அதனை ஊக்குவிப்பதுடன் மற்றையவர்களுடனும் அதனைப் பகிர்ந்துகொள்ள ஆரம்பித்தல்

**தன்பாலீர்ப்பு அச்சம்**

எதிர்ப்பாலீர்ப்பு அல்லாதவர்களிடம் ஏற்படும் பயம் மற்றும் வெறுப்பு அல்லது அசௌகரியம்

**திருநர்களுக்கெதிரான அச்சம்/பயம்**

திருநர்களிடம் ஏற்படும் பயம் மற்றும் வெறுப்பு அல்லது அசௌகரியம்

**இனத்துவம்**

கலாசாரப் பிணைப்பு, கடந்தகால மொழிப்பாரம்பரியம், சமயத்தொடர்புகள், வாரிசுமுறை அல்லது சில உடல்ரீதியான பண்புகள் போன்றவற்றினடிப்படையில் தோன்றும் ஒரு பொதுவான மூதாதையரைக் கொண்டிருக்கும் உணர்வு

**தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய வன்முறைகள்**

தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய வன்முறைகள் என்பன பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ தொலைபேசி, இணையம், சமூகவலைத்தளங்கள் மற்றும் மின்னஞ்சல் போன்ற தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் பால்நிலையை அடிப்படையாகக் கொண்டு நிகழ்த்தப்படுகின்ற அல்லது அவ்வாறான செயற்பாடுகளை ஊக்குவிக்கின்ற நடவடிக்கைகளை உள்ளடக்குகின்றது

# இணைப்பு 2 -அளவுசார் கருத்தாய்வு

1. இடம்*

பின்வருவனவற்றில் ஒரு பதிலைத் தெரிவுசெய்யவும்

தயவுசெய்து பின்வருவனவற்றில் ஒன்றினை மட்டுமே தெரிவுசெய்யவும்

- ○ வங்காளதேசம்
- ○ நேபாளம்
- ○ இலங்கை

2. நீங்கள் என்ன செய்துகொண்டிருக்கின்றீர்கள்?*

பின்வருவனவற்றில் ஒரு பதிலைத் தெரிவுசெய்யவும்

தயவுசெய்து பின்வருவனவற்றில் ஒன்றினை மட்டுமே தெரிவுசெய்யவும்

- ○ அரசசார்பற்ற அமைப்பு
- ○ கல்வி அல்லது ஆராய்ச்சி நிறுவகம்
- ○ மாணவர்
- ○ சுயாதீனமாக பணிபுரிபவர்
- ○ கலைஞர்
- ○ மனித உரிமைகள் செயற்பாட்டாளர்/ஆதரித்து வாதாடுபவர்
- ○ அரசதுறை
- ○ தனியார் துறை
- ○ வேலையற்றவர்
- ○ ஏனையவை

3. வயது*

4a. பால்நிலை*

உங்களுக்கு பொருத்தமான அனைத்தையும் தெரிவுசெய்யவும்

- ○ சிஸ்பெண் (பிறப்பின்போது அடையாளப்படுத்தப்பட்ட அதே பால்நிலையுடன் தன்னை அடையாளப்படுத்தும் பெண்)
- ○ ஆண் (பிறப்பின்போது அடையாளப்படுத்தப்பட்ட அதேபால்நிலையுடன் தன்னை அடையாளப்படுத்தும் ஆண்)
- ○ திருநங்கை (இப் பதம் பிறப்பின்போது ஆணாக அடையாளப்படுத்தப்பட்ட பெண்ணைக் குறிப்பிடுகின்றது)
- ○ திருநம்பி (இப் பதம் பிறப்பின்போது பெண்ணாக அடையாளப்படுத்தப்பட்ட ஆணைக் குறிப்பிடுகின்றது)
- ○ பன்மைத்துவமான பால் அடையாளங்களைக் கொண்டிருப்போர்/பால் பல்வகைமையினர் (இப் பதம் நிறமூர்த்தங்கள், ஹோர்மோன்கள், உள்ளக பாலுறுப்புக்கள் மற்றும் பெண் அல்லது ஆணுக்கென எதிர்பார்க்கப்படுகின்ற பாலுறுப்புக்களிலிருந்து

வேறுபட்ட பாங்கினைக் கொண்டிருக்கின்ற பாலுறுப்புக்கள் போன்றவற்றின் சேர்க்கையினைக் குறிப்பிடுகின்றது)

- இருமையல்லாதவர் (ஆண், பெண் என்கின்ற இருமையுடன் தம்மை அடையாளப்படுத்திக்கொள்ள விரும்பாதவர்களால் பயன்படுத்தப்படுகின்ற பால்நிலை அடையாளத்தினைக் குறிக்கும் சொல்)
- ஜென்டர் குயர்/பால்நிலை நிச்சயப்படுத்தாதவர் (ஆண், பெண் என்கின்ற இருமையுடன் தம்மை அடையாளப்படுத்திக்கொள்ள விரும்பாதவர்களால் பயன்படுத்தப்படுகின்ற பால்நிலை அடையாளத்தினைக் குறிக்கும் சொல்)
- கூற விரும்பவில்லை
- ஏனையவை

4b. பாலியல் நாட்டம்/பாலியலீர்ப்பு*

பொருத்தமான அனைத்தையும் தெரிவுசெய்யவும்

- எதிர்ப்பாலீர்ப்பு/ஸ்ரைட்(எதிர்ப்பாலீர்ப்பு என்பது ஏனைய பால்நிலை அல்லது பால் அடையாளத்தினைக் கொண்டவருடன் ஏற்படும் ஈர்ப்பு ஆகும்)
- தன்பாலீர்ப்புடைய ஆண்(தன்னுடைய பால் அல்லது பால்நிலையைக் கொண்டவர்களுடன் மட்டும் அல்லது பெரும்பாலும் ஈர்ப்பு ஏற்படுபவர்கள் சிலரால்(அனைவரும் அல்ல) பயன்படுத்தப்படும் பாலியல் அடையாளச் சொல்)
- தன்பாலீர்ப்புடைய பெண்(பெண்களுடன் மட்டும் அல்லது பெரும்பாலும் பெண்களுடன் ஈர்ப்பு ஏற்படும் பெண்கள் சிலரால்(அனைவரும் அல்ல) பயன்படுத்தப்படும் பாலியல் அடையாளச் சொல்)
- ஈர்பாலீர்ப்பாளர்கள்/பான்செக்ஸ்சுவல்(ஈர்பாலீர்ப்பு என்பது ஆண், பெண் மற்றும் இருமையல்லாதவர்களை நோக்கி ஏற்படும் ஈர்ப்பினைக் குறிக்கின்றது. அது சமமான அளவிலான ஈர்ப்பினைக் குறிப்பிடுவதில்லை. குறிப்பிடத்தக்களவிலான ஈர்ப்பு அனைவரிலுமோ அல்லது இரண்டு பால்நிலைகளுக்கு மேற்பட்டவர்களிலோ இருக்கும்)
- குயர்
- கூற விரும்பவில்லை
- சுயமாக விபரிக்க விரும்புகின்றேன்

4c. ஏனையவை*

பொருத்தமான அனைத்தையும் தெரிவுசெய்யவும்

- மாற்றுத்திறனாளிகள்
- இனச்சிறுபான்மையினர்
- பழங்குடியினத்தைச் சேர்ந்த நபர்
- புலம்பெயர்ந்தவர்
- சாதி அடிப்படையில் விளிம்புநிலைக்குத் தள்ளப்பட்டோர்
- இன அடிப்படையில் விளிம்புநிலைக்குத் தள்ளப்பட்டோர்
- கூற விரும்பவில்லை
- பொருத்தமில்லை
- ஏனையவை

5. மின்னஞ்சல்/தொடர்பு விபரங்கள்(கட்டாயமானதல்ல)

6. பேசுகின்ற மொழிகள்

7. இணையத்தில் பயன்படுத்துகின்ற மொழிகள்

8. இணையத்தினை எங்கு அணுகுகின்றீர்கள்?

பொருத்தமான அனைத்தையும் தெரிவுசெய்யவும்

- O வீட்டில்
- O வேலையிடத்தில்
- O பயணிக்கும் போது
- O இணையமையத்தில்
- O ஏனையவை

9. இணையத்தினுள் நுழைவதற்கு நீங்கள் அதிகளவில் உபயோகிக்கின்ற சாதனம் எது?

பின்வரும் பதில்களில் ஒன்றினைத் தேர்வுசெய்யவும்

- O மேசைக்கணினி
- O மடிக்கணினி
- O தொலைபேசி
- O ரப்லட் (Tablet)
- O ஏனையவை

10. பின்வருவன தொடர்பில் உங்களுடைய திறன்களை 1 தொடக்கம் 10 வரையான அளவுகோலில் எவ்வாறு மதிப்பிடுவீர்கள்?

இலகுவாக செய்யமுடியும் என்பதற்கு 10 புள்ளியும் ஒருபோதும் செய்ததில்லை என்பதற்கு 1 புள்ளியும் வழங்கவும்

- O இணையத்தளமொன்றினை உருவாக்க முடியும்
- O நிரலாக்கம் செய்ய முடியும்
- O தேடல் இயந்திரங்களைப் பயன்படுத்த முடியும்
- O சமூக வலையமைப்புக்களில் பங்குபற்ற முடியும்
- O வலைப்பதிவிட முடியும்
- O இணையத்தில் அமைப்புக்கள்/குழுக்களில் பங்குபற்ற முடியும்

11. நீங்கள் மேலே 9இல் குறிப்பிட்ட உங்களது பிரதான சாதனத்தின் மீது எந்தளவிற்கு கட்டுப்பாட்டினைக் கொண்டிருக்கின்றீர்கள்? உங்களுக்கு மிகவும் பொருத்தமாக இருக்கும் கூற்றினைத் தெரிவுசெய்யவும்*

பின்வருவனவற்றில் ஏதாவது ஒன்றினைத் தெரிவுசெய்யவும்

- இணையத்தளமொன்றினை உருவாக்க முடியும்
- நிரலாக்கம் செய்ய முடியும்
- தேடல் இயந்திரங்களைப் பயன்படுத்த முடியும்
- சமூக வலையமைப்புக்களில் பங்குபற்ற முடியும்
- வலைப்பதிவிட முடியும்
- இணையத்தில் அமைப்புக்களிலும் குழுக்களிலும் பங்குபற்ற முடியும்

12. தொலைபேசியில் ஒரு செயலியினை அல்லது கணினி மென்பொருளொன்றினை தரவிறக்குவதற்கு முன்பாக எத்தனை தடவைகள் விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் வாசிப்பீர்கள்?

பின்வரும் பதில்களில் ஒன்றினைத் தேர்வுசெய்யவும்

- எப்போதும்
- அடிக்கடி
- சிலவேளைகளில்
- ஒருபோதுமில்லை

13. உங்களது பால்நிலை அடையாளம் நீங்கள் இணையத்தினைப் பயன்படுத்தும் முறையினைப் பாதித்துள்ளதா?

பின்வரும் பதில்களில் ஒன்றினைத் தேர்வுசெய்யவும்

- நிச்சயமாக
- சிலவேளைகளில்
- அவ்வாறு கூற முடியாது
- எனக்குத் தெரியாது

14. உங்களது பாலியல் அடையாளமானது நீங்கள் இணையத்தினைப் பயன்படுத்தும் முறையினைப் பாதித்துள்ளதா?

பின்வரும் பதில்களில் ஒன்றினைத் தேர்வுசெய்யவும்

- நிச்சயமாக
- சிலவேளைகளில்
- அவ்வாறு கூற முடியாது
- எனக்குத் தெரியாது

15. இணையத்தை அணுகக்கூடியதன்மையானது பால்நிலை மற்றும் பாலியல் அடையாளம் பற்றிய உங்களது புரிதலில் ஏதாவது மாற்றத்தினை உண்டுபண்ணியதா?

பின்வரும் பதில்களில் ஒன்றினைத் தேர்வுசெய்யவும்

- ○ நிச்சயமாக
- ○ சிலவேளைகளில்
- ○ அவ்வாறு கூற முடியாது
- ○ எனக்குத் தெரியாது

16. இணையத்தை அணுகக்கூடியதன்மையானது, வேறுபட்ட பால்நிலை மற்றும் பாலியல் அடையாளங்களினைக் கொண்டிருப்போர் பற்றிய உங்களது புரிதலில் ஏதாவது மாற்றத்தினை உண்டுபண்ணியதா?

பின்வரும் பதில்களில் ஒன்றினைத் தேர்வுசெய்யவும்

- ○ நிச்சயமாக
- ○ சிலவேளைகளில்
- ○ அவ்வாறு கூற முடியாது
- ○ எனக்குத் தெரியாது

17. 1 தொடக்கம் 10 வரையான அளவுகோலில் இணையப்பாவனை உங்களது சுயவெளிப்பாட்டிற்கு எந்தளவிற்கு முக்கியமானதெனக் குறிப்பிடவும்.10 இன்றியமையாதது/மிகமுக்கியம் 1 முக்கியமில்லை

ஏன்?*

18. ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான பதிலைத் தேர்வு செய்யவும்

| | எப்போதும் | சிலவேளைகளில் | அரிதாக | ஒருபோதுமில்லை |
|---|---|---|---|---|
| வேலை | ○ | ○ | ○ | ○ |
| ஆராய்ச்சி | ○ | ○ | ○ | ○ |
| வாழ்வாதாரம் | ○ | ○ | ○ | ○ |
| டேட்டிங் | ○ | ○ | ○ | ○ |
| ச்சட்டிங் | ○ | ○ | ○ | ○ |
| அழைப்புக்களை மேற்கொள்ளல் | ○ | ○ | ○ | ○ |
| வங்கி/நிதிப் பரிவர்த்தனைகள் | ○ | ○ | ○ | ○ |
| பணப்பரிமாற்றங்கள் | ○ | ○ | ○ | ○ |
| செக்ஸ்ட்டிங் | ○ | ○ | ○ | ○ |
| பாலியல் காணொளிகள் | ○ | ○ | ○ | ○ |

| | | | | |
|---|---|---|---|---|
| விளையாட்டு | ○ | ○ | ○ | ○ |
| சமூகவலையமைப்பாக்கம் | ○ | ○ | ○ | ○ |
| பாலியல் மற்றும் இனவிருத்தி சுகாதாரம் உள்ளடங்கலாக சுகாதாரத் தகவல்கள் (கர்ப்பகால மற்றும் மாதாந்த, ரத்தப்போக்கிற்குரிய செயலிகள்) | ○ | ○ | ○ | ○ |
| காணொளி ஸ்ரீமிங் | ○ | ○ | ○ | ○ |
| வலைத்தளம் | ○ | ○ | ○ | ○ |
| தளங்கள்/மன்றங்கள் | ○ | ○ | ○ | ○ |
| மின்னஞ்சல் | ○ | ○ | ○ | ○ |
| செய்திப்பரிவர்த்தனை | ○ | ○ | ○ | ○ |
| பாலியல் இன்பம் | ○ | ○ | ○ | ○ |
| தேடல் இயந்திரங்கள் மற்றும் ஏனைய இணையத்தளங்கள் | ○ | ○ | ○ | ○ |

19a. இணையத்தில் விடயங்களை நுகர்வோராக எத்தனை தடவை இணையத்தினை பயன்படுத்துகின்றீர்கள்

19b. இணையத்தில் விடயங்களை உருவாக்குவோராக எவ்வளவு காலத்திற்கொருமுறை இணையத்தினைப் பயன்படுத்துகின்றீர்கள்? (வலைப்பதிவு, விலொக்ஸ், மீம்ஸ், நிரலாக்கம், இன்ஸ்ரகிராம் பதிவுகள் புகைப்படங்களை பதிவேற்றல் ஏனையவை)

20. பின்வரும் கேள்விகளை உங்களது அனுபவத்தினடிப்படையில் கணிப்பிடவும்

| | நிச்சயமாக | சிலவேளைகளில் | அவ்வாறில்லை | எனக்குத் தெரியாது | இல்லை |
|---|---|---|---|---|---|
| இணையத்தில் வேறுபட்ட மக்கள் உரையாடல் களிலும் விவாதங்களிலும் ஈடுபடுகின்றார்கள் | ○ | ○ | ○ | ○ | ○ |
| இணையம் இலகுவாக மக்களுடன் என்னைத் தொடர்புபடுத்துகின்றது. | ○ | ○ | ○ | ○ | ○ |
| சமூகத்தால் விலக்கப்பட்டதாகக் கருதப்படுகின்ற அல்லது பிரச்சனைக்குரியதாகக் கருதப்படுகின்ற தலைப்புக்களில் இணையத்தில் தகவல்களைக் கண்டுபிடிக்க முடியும். | ○ | ○ | ○ | ○ | ○ |
| பெண்கள் மட்டுமே இணையத்தில் தொல்லைகளுக்குட்படுத்தப்படுகின்றார்கள் | ○ | ○ | ○ | ○ | ○ |
| Offlineஇல் நாம் பார்க்கின்ற அதே வன்முறைகள் நிகழ்நிலையிலும் மேற்கொள்ளப்படுகின்றன. | ○ | ○ | ○ | ○ | ○ |

21. பின்வருவனவற்றுள் எதையாவது அனுபவித்திருக்கின்றீர்களா?

பொருத்தமான அனைத்தையும் தெரிவுசெய்யவும்

- பாலியல் அல்லது உடல்ரீதியான வன்முறை அச்சுறுத்தல்கள் உட்பட நேரடி வன்முறை அச்சுறுத்தல்கள்("நான் உன்னை பாலியல் வன்கொடுமை செய்யப்போகின்றேன்" என்பது போன்ற அச்சுறுத்தல்கள்)
- துஷ்பிரயோகத்திற்குட்படுத்துகின்ற கருத்துக்கள்
- தேவையற்ற பாலியல் விளக்க விடயங்களை தேவையற்ற முறையில் பெறுதல்
- ஒருவரைக் குறிவைத்து நிகழ்த்தப்படும் வெறுப்பு பேச்சு, சமூகவலைத்தள பதிவு அல்லது மின்னஞ்சல், (குறிப்பாக ஒரு நபரினது அல்லது குழுவினது இனம், மதம், பால்நிலை அடையாளம் ,பாலியல்பு போன்றவற்றினை தாக்கும் வகையிலான பேச்சு அல்லது வெளிப்பாடு).)
- பால்வாத மற்றும் பால்நிலையுடன் தொடர்புடைய கருத்துக்களைப் பயன்படுத்தல் அல்லது பெயர் சூட்டி அழைத்தல்
- அனுமதியின்றித் தளங்களை அணுகி உங்களது அணுகும் தன்மையினைக் கட்டுபடுத்தல்
- சம்மதமின்றி தனிப்பட்ட தகவல்களைப் பகிர்தல்
- பெண்களை இழிவுபடுத்துகின்ற விதமான, நாகரீகமற்ற, வன்முறையான படங்களைப் பயன்படுத்தல்
- சமூகத்தால் பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப்படாத கருத்துக்களை வெளிப்படுத்தியதற்காக, மக்களுடன் உடன்படாததற்காக, பாலியல் ரீதியான முன்னகர்த்துகைகளை ஏற்றுக்கொள்ளாமைக்காக, பெண்களை வெட்கத்திற்குள்ளாகச் செய்தல் மற்றும் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தல்
- பெண்களைக் கொலைசெய்வதை ஆதரித்துவாதிடல்(பெண்களைக் கொலைசெய்தல் என்பது பெண்களை அவர்கள் பெண்களாக இருக்கின்ற காரணத்தினாலேயே திட்டமிட்டவகையில் கொலைசெய்தல் என்பதைக் குறிக்கின்றது. ஆயினும் பரந்தளவிலான வரைவிலக்கணம் பெண்கள் மற்றும் சிறுமியர்கள் மேல் நடத்தப்படும் அனைத்து கொலைகளையும் உள்ளடக்குகின்றது) (இந்த வரைவிலக்கணம் பால் பன்மைத்துவத்தினரை உள்ளடக்கியதல்ல)
- ஆள் மாறாட்டம் மற்றும் அடையாளத்திருட்டு
- துன்புறுத்துவதற்கான அல்லது தொல்லைப்படுத்துவதற்கான இலக்கினைத் தெரிவு செய்தல் உள்ளடங்கலாக திரளாக தாக்குதல்

22. பின்வருவனவற்றில் எதிலாவது ஈடுபட்டிருக்கின்றீர்களா?

பொருத்தமான அனைத்தையும் தெரிவுசெய்யவும்

- பாலியல் அல்லது உடல்ரீதியான வன்முறை அச்சுறுத்தல்கள் உட்பட நேரடி வன்முறை அச்சுறுத்தல்கள்("நான் உன்னை பாலியல் வன்கொடுமை செய்யப்போகின்றேன்" என்பது போன்ற அச்சுறுத்தல்கள்)
- துஷ்பிரயோகத்திற்குட்படுத்துகின்ற கருத்துக்கள்
- தேவையற்ற பாலியல் விளக்க விடயங்களைத் தேவையற்ற முறையில் பெறுதல்
- ஒருவரைக் குறிவைத்து நிகழ்த்தப்படும் வெறுப்பு பேச்சு, சமூகவலைத்தள பதிவு அல்லது மின்னஞ்சல், (குறிப்பாக ஒரு நபரினது அல்லது குழுவினது இனம், மதம்,பால்நிலை அடையாளம், பாலியல்பு போன்றவற்றினைத் தாக்கும் வகையிலான பேச்சு அல்லது வெளிப்பாடு)
- பால்வாத மற்றும் பால்நிலையுடன் தொடர்புடைய கருத்துக்களைப் பயன்படுத்தல் அல்லது பெயர் சூட்டி அழைத்தல்
- உங்கள் அனுமதியின்றி உங்கள் தளங்களை அணுகி உங்களது அணுகும் தன்மையைக் கட்டுபடுத்தல்
- சம்மதமின்றி தனிப்பட்ட தகவல்களைப் பகிர்தல்
- பெண்களை இழிவுபடுத்துகின்ற விதமான நாகரீகமற்ற வன்முறையான படங்களைப் பயன்படுத்தல்
- சமூகத்தால் பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப்படாத கருத்துக்களை வெளிப்படுத்தியதற்காக, மக்களுடன் உடன்படாததற்காக, பாலியல் ரீதியான முன்னகர்த்துகைகளை ஏற்றுக்கொள்ளாமைக்காக, பெண்களை வெட்கத்திற்குள்ளாகச் செய்தல் மற்றும் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தல்
- பெண்களைக் கொலைசெய்வதை ஆதரித்துவாதிடல் (பெண்களைக் கொலைசெய்தல் என்பது பெண்களை அவர்கள் பெண்களாக இருக்கின்ற காரணத்தினாலேயே திட்டமிட்டவகையில் கொலைசெய்தல் என்பதைக்

குறிக்கின்றது. ஆயினும் பரந்தளவிலான வரைவிலக்கணம் பெண்கள் மற்றும் சிறுமியர்கள் மேல் நடத்தப்படும் அனைத்து கொலைகளையும் உள்ளடக்குகின்றது) (இந்த வரைவிலக்கணம் பால் பன்மைத்துவத்தினரை உள்ளடக்கியதல்ல)

- ஆள் மாறாட்டம் மற்றும் அடையாளத்திருட்டு
- துன்புறுத்துவதற்கான அல்லது தொல்லைப்படுத்துவதற்கான இலக்கினைத் தெரிவு செய்தல் உள்ளடங்கலாக திரளாகத் தாக்குதல்

23. அந்த வன்முறைக்கு உங்களுடைய எதிர்வினை எதுவாக இருந்தது?

பொருத்தமான அனைத்தையும் தெரிவுசெய்யவும்

- அந்தத் தளத்திற்கு அறிக்கையிட்டேன்
- புறக்கணித்தேன்
- பதிலளித்தேன்
- சட்டக்கட்டமைப்பொன்றிற்கு அறிக்கையிட்டேன்
- ஏனையவை

24. இதைப்பற்றி வேறுயாரிடமாவது பேசியிருக்கின்றீர்களா? (கட்டாயமானதல்ல)

பின்வருவனவற்றுள் ஒன்றினைத் தெரிவுசெய்யவும்

- ஆம்
- இல்லை

25. உங்களது இணையப்பயன்பாட்டினது அனுபவத்தினை இன்பமானது என்பதிலிருந்து இல்லை என்பது வரை 1 தொடக்கம் 10 வரையான அளவீட்டில் கணிப்பிடவும் (10 மிகவும் இன்பமானது)

26. நீங்கள் பயன்படுத்தும் அனைத்து தளங்களுக்குள்ளும் சுயவெளிப்பாட்டிற்கான வெளியினை அதிகளவில் வழங்கும் தளம் எது? சுருக்கமாக உங்களது பதிலை வழங்கவும்.

27. இணையப்பாவனை தொடர்பில் உங்களது அனுபவத்தினைப்பற்றி மேலதிகமாக எம்முடன் பேச விரும்புகின்றீர்களா? ஆம் எனில் நாம் உங்களைத் தொடர்புகொள்வதற்கான சிறந்ததோர் வழியினைக் கூறவும்

## இணைப்பு 3 - இரண்டாம்நிலை திறனாய்வு

இணையம் மற்றும் பால்நிலை பாலியல்பு இனமத தேசியவாதம் போன்றவற்றிற்கிடையிலான இடைத்தொடர்புகளை ஆராயும் இலங்கையிலுள்ள இலக்கியங்கள் பற்றிய இரண்டாம்நிலை திறனாய்வு


Bratsbjerg, C. (2018). Image-based cyberviolence against women and girls in Sri Lanka. Key findings from a field study in Sri Lanka. http://www.bakamoono.lk/admin/wp-content/uploads/2016/06/GBCV-Sri-Lanka_-Findings-and-recommendations-sheet_C.-Bratsbjerg.pdf

Deshapriya, P., Mendis, M., Wijewardena, S., Wijesiriwardena, S., Kottegoda, S., & Brown, S. (2017). Disrupting the Binary Code: Experiences of LGBT Sri Lankans Online. Women and Media Collective. https://womenandmedia.org/wp-content/uploads/2018/02/Disrupting-the-Binary-Code-_-for-web.pdf

Fernando, S., Wanniarachchi, S., Vidanapathirana, J. (2018). Montage of Sexuality in Sri Lanka. College of Community Physicians of Sri Lanka/UNFPA. https://srilanka.unfpa.org/sites/default/files/pub-pdf/Montage%20of%20Sexuality.pdf

Ghosha, Groundviews, & Hashtag Generation. (2019). Opinions, B*tch: Technology Based Violence Against Women in Sri Lanka. https://groundviews.org/2019/06/27/opinions-btch-technology-based-violence-against-women-in-sri-lanka/

Kottegoda, S., Emmanuel, S., & Perera, S. (2012). ICT Access for women from the margins. https://idl-bnc-idrc.dspacedirect.org/bitstream/handle/10625/51474/IDL-51474.pdf?sequence=1&isAllowed=y

Wijewardena, S. & Samuel, K. (2015). 3D Things: Devices, Technologies, and Women's Organising in Sri Lanka. https://books.google.lk/books/about/3D_Things.html?id=7pR4nQAACAAJ&redir_esc=y

Women and Media Collective. (2016). Ethno-Religious Nationalism and Sexual and Reproductive Health and Rights in Sri Lanka: A social media, print media and policy review. https://arrow.org.my/wp-content/uploads/2016/08/Interlinkages-Between-Religion-and-SRHR_National-Report_Sri-Lanka.pdf

# இணைப்பு 4 சட்டக்கட்டமைப்பு பற்றிய மேலோட்டம்/பார்வை

தொழில்நுட்பம்சார் வன்முறைகளைக் கையாளும் இலங்கையிலுள்ள சட்டங்கள் குறித்த மேலோட்டம்

தொழில்நுட்பம்சார் வன்முறைகளை நேரடியாகக் கையளாளும் எந்தவொரு விசேட சட்டங்களும் இலங்கையில் இல்லை. ஆனால் தண்டனைச் சட்டக் கோவையின் சில பகுதிகளும் வேறு சில சட்டங்களும் இதற்குப் பயன்படுத்தப்படலாம்.

தண்டனைச் சட்டக் கோவை

பிரிவு 345 பாலியல் தொல்லை

பிரிவு 372 அச்சுறுத்திப் பணம் பெறல்

பிரிவு 483 குற்றவியல் மிரட்டல்

பிரிவு 388 குற்றவியல் நம்பிக்கை மோசடி

பிரிவு 399 ஆள்மாறாட்டத்தின் மூலம் ஏமாற்றுதல்

பிரிவு 286(a) (1) சிறுவர்களுடன் தொடர்புடைய ஆபாச வெளியீடுகள் மற்றும் காட்சிப்படுத்தல்

பிரிவு 288(a) பாலியல் உடலுறவிற்கு ஆட்களைப் பெற்றுத்தருபவர்களாக சிறுவர்களைப் பணிக்கமர்த்தல்

பிரிவு 286(b) மற்றும் (c) சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்தினைத் தடுப்பதற்கு

கணினியின் மூலம் சேவை வழங்குபவரின் கடப்பாடுகள்

கணினி குற்றவியற் சட்டம், No. 24 of 2007

பிரிவு 3 ஒரு கணியினை அங்கீகரிக்கப்படாதவகையில் அணுகுதல் குற்றத்திலிருந்து பாதுகாத்தல்

பிரிவு 7 தரவுகளைக் கையாளுதல்

ஆபாச வெளியீடுகள் (திருத்தச்சட்டம்) சட்டம் (No. 22 of 1983)

வீட்டுவன்முறைத் தடுப்புச் சட்டம், No. 34 of 2005

அலைந்துதிரிதல் கட்டளை

Supported by

APC

AMPLIFYCHANGE